திருச்சிற்றம்பலம்.

தொல்காப்பியம்.

எழுத்ததிகாரம்.

மதுரையாசிரியர் பாரத்துவாசி

நச்சினார்க்கினியாருரையோடும்

யாழ்ப்பாணம்

சி. வை. தாமோதரம்பிள்ளையால்

பலதேசப்பிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து

ஸ்ரீதொண்டமான்புதுக்கோட்டை

நியாயாதிபதி

ம. அண்ணாமலைப்பிள்ளையவர்கள்

திரவியோபகாரசகாயத்தினால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

கரவருஷம் வைகாசிமீ.

(Copyright Registered.)

விளம்பரம்.

☞ இதன் அடியிற் குறித்த புத்தகங்கள் சென்னபட்டணத்தில் வித்தியாநுபாலனயந்திரசாலையில் ந. க. சதாசிவப்பிள்ளையவர்களிடத்துங் கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் ஊ. முத்துக்குமாரசாமிச்செட்டியாரவர்களிடத்துஞ், சிதம்பரத்திற் சைவப்பிரகாசவித்தியாசாலை விசாரணைக்கருத்தர் க. பொன்னுசாமிப்பிள்ளையவர்களிடத்தும், யாழ்ப்பாணத்தில் ஏழாலைச் சைவப்பிரகாசவித்தியாசாலை உபாத்தியாயர் சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளையவர்களிடத்துந், தஞ்சாவூரிற் புத்தகவியாபாரம் தா. திருவேங்கடபிள்ளையவர்களிடத்துங், கோயமுத்தூரிற் புத்தகவியாபாரம் இ. ஒன்னையகவுண்டரவர்களிடத்தும் வாங்கிக்கொள்ளலாம்.

				ரூ.	அ.
	தொல்காப்பியம்	நச்சினார்க்கினியம்	எழுத்ததிகாரம்		
*	ஷை	ஷை	சொல்லதிகாரம் ...	௧	
	ஷை	ஷை	பொருளதிகாரம் ...	௬	௦
†	ஷை	ஷை	முழுவதுஞ்சேர்த்து.	௭	௮
	ஷை	சொல்லதிகாரம்	சேனாவரையம் ...	௨	௦
	நல்லந்துவனார்கலித்தொகை	...	... ...	௩	௮
	தணிகைப்புராணம்	...	... ...	௩	௦
	வீரசோழியம்	...	... ...	௧	௮
	இறையனாரகப்பொருள்	...	... ...	௧	௮
	இலக்கணவிளக்கம்	...	... ...	௫	௦
	சூளாமணி	...	... ...	௧	௮
	ஷை பத்துப் புத்தகமும் ஒருமிக்க வாங்குவோர்க்கு		...	௨௨	௦
	கட்டளைக்கலித்துறை	...	... ...	௦	௧
	நக்ஷத்திரமாலை	...	... ...	௦	௧

* அச்சாகிவருகின்றது. வருஷமுடிவில் வெளிவரும்.

† முழுவதிற்கும் பணஞ் செலுத்துவோருக்குச் சொல்லதிகாரம் வெளிவந்த உடனே அனுப்பப்படும்.

பதிப்புரை.

பேரருட்கயிலாயநாதப்பெருங்குரவன்
சீரடித்துணைசிரத்தினிற்றிருத்திமுத்துக்கு
மாரநற்கவிராசனைவழுத்திமாலயனுந்
தேரகிற்றிருநடேசர்தாள்சிந்தனைசெய்வாம்.

சங்கம் மரீஇய இலக்கியங்களுக்கெல்லாம் இலக்கணமாயுள்ளது தொல்காப்பியம். இதன் உணர்ச்சியில்லார் அவ்விலக்கியங்களின் பொருட் துறைகளை நுண்மையாக உணரப்பெறார். ஆதலாற் தமிழாராய்ச்சியிற் புகுவோர்க்கு இந்நூல் இன்றியமையாப் பெருஞ்சிறப்பிற்றாயது. இஃது அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருட் தலைமை பெற்றவருந் திரணதூமாக்கினியென்னும் இயற்பெயரினை உடையவருமாகிய தொல்காப்பியமகாரிஷியினாற் செய்யப்பட்டு எழுத்துச் சொற் பொருளென்னும் மூன்று அதிகாரங்களை உடையது.

இதற்கு இளம்பூரணர் கல்லாடர் பேராசிரியர் சேனாவரையர் நச்சினார்க்கினியார் என்று ஐவரால் உரையெழுதப்பட்டதாயினும், பூரண உரையாய் நமது காலம் வரைக்கும் வந்திருப்பது நச்சினார்க்கினியாராற் செய்யப்பட்டது ஒன்றுமே. அஃது ஆக்கியோன் பெயரினால் நச்சினார்க்கினியமென வழங்கும். சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மாத்திரம் உரையிட்டனர். இளம்பூரணர் ஆதியுரையாசிரியராதலின் அவர்க்கு உரையாசிரியரென்னுஞ் சிறப்புப்பெயர் கொடுத்தே யாருஞ் சுட்டுவர். அவர் உரையில் எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் பொருளதிகாரத்துச் செய்யுளியலும் ஒழிந்து எஞ்சியபாகம் இக்காலத்து இறந்ததுபோலும். கல்லாடர் பேராசிரியர் உரைகளிற் சிற்சில பின்னங்கள்

மாத்திரம் இங்கும் அங்குஞ் சிதைந்து கிடக்கின்றன. யாதாயினும் ஓர் இயலுக்காவது பூரணமாயிருப்பது தெரியவில்லை.

எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணமுஞ் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையமுஞ் சிறந்தனவாயிருந்தன. ஆயினும் நச்சினார்க்கினியம் மூன்றதிகாரத்து உரையும் ஒருங்கொத்த சிறப்பினையுடையதாய், அனைத்துரைகட்கும் பின்னாக எழுந்து, ஏனையோர்மதங்களை ஆங்காங்குக் கண்டித்ததனால், அவ்வுரையே பிற்காலத்து அனைத்தினும் மேலாக உபயோகப்படுவதாயிற்று.

இதன் எழுத்ததிகாரவுரை சென்னபட்டணம் சகலகலாசாலைத் தமிழ்ப்புலமை நடாத்திய மழவை மகாலிங்கையரால் ஐம்பது வருஷத்தின்முன் அச்சிடுவிக்கப்பட்டிருந்தது. எழுத்திற்கு இளம்பூரணமுஞ் சொல்லிற்குச் சேனாவரையமும் பின் அச்சாயின. ஆதலால் யாதோருரையாயினும் பிரசுரமாகாததும் எழுதுவாரும் படிப்பாருமின்றி மாண்டதசையடைந்ததுமான பொருளதிகாரத்தை முதலில் அச்சிடுவித்தல் அவசியமெனக்கண்டு அதனை நச்சினார்க்கினியாருரையோடு சென்ற பார்த்திப வருடம் பதிப்பித்து வெளிப்படுத்தினேன். பின்னர்ச் சொல்லதிகாரத்தையும் அவருரையுடன் பதிப்பித்துவிட்டாற், தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியாருரை பூரணமாய் யாவர்க்கும் எளிதில் அகப்படற்பாலதாமென்று உட்கொண்டு, பலதேசத்தினின்றும் பிரதிகள் வரவழைத்துப் பரிசோதிக்கையில், என் இஷ்டர் அனேகர் சொல்லதிகாரம் பிரசுரமானபின்னரும் உரை பூரணமாயகப்படுதற்கு எழுத்ததிகாரப்பிரதி கிடையாதென்றும், அதனையும் யான் சேர்த்து அச்சிடாதொழியின், என் பிரதி வாங்குவோர் சொல்லும் பொருளும் பெற்றும் எழுத்தில்லாமற் தலையற்ற உடலையே தாங்கலாகுமென்றும், ஆதலால் எழுத்தையும் யானே சேர்த்து அச்சிடுதல் வேண்டுமென்றுங் கட்டுரைத்தனர். அதனால் ஐயர் பதிப்புச் சென்னபட்டணப்பிரதிகளின் வழிப்பட்டது நோக்கி, அதனைத் தென்றேசப்பிரதிகளோடும் பரிசோதித்துஅச்சிடுவித்தனன்.

புதுக்கோட்டைச் சமஸ்தானம் மகாமன்றத்து நியாயாதிபதிகளில் ஒருவராகிய ம - ௱ - ௱ - ஸ்ரீ ம. அண்ணாமலைப்பிள்ளையவர்கள் இவ்வெழுத்ததிகாரத்தை அச்சிடுவதற்கு மிக்க திரவியோபகாரஞ் செய்தனர். அவருடைய தயாளகுணத்தையும் பிரபுத்துவத்தையும் அதிகநன்றியறிவோடு பாராட்டுகின்றேன்.

ஒருமுறையாயினும் பிறர் பிரசரித்த நூல்களை மீள அச்சிடுவிக்காத எனக்கு இவ்வெழுத்ததிகாரம் ஒரு விலக்காயிற்று. அன்றியும் ஒரு பெருநூலின் முதலிலேயுள்ளதோர் சொற்பபாகத்தைமாத்திரம் ஒருவர் பிரசுரஞ்செய்து காலகதியடைந்துவிட்டாற், பின்னர் அந்நூல் முழுவதையும் அச்சிடுவோர் முதற்பாகத்தையுஞ் சேர்த்து அச்சிடுதல் தவறன்றாம். உலகவழக்கமும் அதுவே.

இப்பொழுது நச்சினார்க்கினியம் சொல்லதிகாரம் அச்சாகி வருகின்றது. எட்டுத்தொகை பரிசோதனையிலிருக்கின்றது. இதிற் புறநானூற்றுரை ஈற்றில் ௧௪0 செய்யுளும் பரிபாடல் பூரண பிரதியும் பதிற்றுப்பத்தில் முதற்பத்துங் கடைசிப்பத்தும் இன்னும் அகப்படவில்லை. இவற்றை வைத்திருக்கும் மகான்கள் யாவராயினுஞ் சிலநாளைக்கு அவற்றை இரவலாக அனுப்புவாராயின் அவர்க்கு மிகக்கடமைப்படுவதுமன்றி அன்னோர் அனுப்பிய பிரதிகளோடுகூட எனது வழக்கப்பிரகாரம் இவ்விரண்டு அச்சுப்பிரதியும் அனுப்புவேன்.

தேடுவாரும் பரிபாலிப்பாருமின்றி ஒன்றொன்றாய் அழிந்துபோகும் அருமையான பழைய தமிழ்நூல்களைப் பாதுகாத்தற்பொருட்டு அடியேன் ஏட்டுப்பிரதிகள் தேடிப் பரிசோதித்து அச்சிடுவதிற், புத்தகங்கள் விலைபோகாமல் நேரிடும் நஷ்டத்தைக்குறித்து வியஹூ ஆடிமீ ஹிந்துபத்திரிகைவாயிலாக ஓர் அபயம் எழுதித், தமிழபிமானமுந் தருமசிந்தையுமுடைய பிரபுக்கள் என் நஷ்டத்தை நன்கொடை முதலிய சகாயஞ்செய்து பரிகரிக்குமாறு வேண்டிக்கொண்டேன். அப்பொழுது எனக்குக் கைகொடுத்து உதவி

செய்த கனவான்களின் பெயருந் தொகையும் அடுத்த சர்வசித்துஹு ஆவணிமீ எனது கலித்தொகைப்பதிப்புரையிற் காட்டியிருக்கின்றேன். அதன் பின்பு சிலபிரபுக்கள் அளித்த உதவியையும் உலகிற்குத் தெரிவிப்பது என்கடனாதலின் அதனை ஈண்டுக் குறிக்கின்றனன்.

சென்னபட்டணம் வித்தியாசாலை விசாரணைகர்த்தரிசி ஸ்ரீ பம்மல் விஜயரங்கமுதலியார் ரூபா ௩௫

கொழும்பு சுப்ரீம்கோர்ட் அத்வக்காத் கி. பி. றிற்றோ துரை ,, ௭௫

திருநெல்வேலி சப்கோர்ட் பழைய நீதிபதி ஸ்ரீ திரு. கனகசபை முதலியார் ,, ௧௨௫

சென்னபட்டணம் வித்தியாபரிபாலகரின் விசேஷ உபகிருதரும் போதனாசிரியவித்தியாசாலைப் பிரதம உபதேசகருமாகிய ஸ்ரீயாழ்ப்பாணம் சிந்தாமணி வேலுப்பிள்ளை ,, ௧௦௦

பாலக்காடு நகராதிகாரமந்திரம் மாகாணவிசாரணைச்சபைகளில் ஒருவராகிய ஸ்ரீ ஐ. சின்னச்சாமிபிள்ளை ,, ௨௫

சென்னபட்டணம் பச்சையப்பமுதலியார் தருமபரிபாலனசபாதிபதி ஸ்ரீ பாளையம் சோமசுந்தரச்செட்டியார்,, ௧௦௦

இம்மகான்களையொப்பப் பிறருந் துணைநின்று தத்தமக்கு இஷ்டமான அளவுக்குத் திரவியசகாயஞ் செய்வாராயின் எட்டுத்தொகை தகடூர்யாத்திரை முதலியன விரைவில் வெளிவரும். எவ்வெவ்முயற்சிக்குந் துணைக்காரணம் பணம். அதன்குறைவினால் எனது முயற்சி மிகத்தாமசப்பட்டு நடை பெறுகின்றது. லோகோபகாரமாய் யான் கையிட்ட இத்தொழிலைத் தற்காலஞ் சர்வகலாசோதனைச் சங்கத்தில் எனக்குவரும் பரீக்ஷாநிவேதனம் ஒன்றைக்கொண்டே நடத்திவருகின்றேன். அது பிரதிகள் தேடி அப்பப்போ யான் செல்லும் பிரயாணங்களுக்கும் பரிசோதனைச்செலவிற்குமே முன்னோபின்னோவென்று கட்டிவருகின்றது.

சென்னபட்டணம் }
கரஹு வைகாசிமீ }

இங்ஙனம்,
சி. வை. தா.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
எசா	கச	பெயரையும்	பெயரைப்
கஉகூ	உரு	கஅ0	ககூ0
கசாரு	கஅ	சில்லகுதிரை	
,,	உ0	சில்ல	
உ.கக	உ	மிகும்தகர	மிகுதகர
உ.ககூ	உஎ	பீர்ங்கோடு	பீர்ங்கொடி
உஉ0	கஎ	அம்மொடு	அம்மொடுஞ்
,,	ககூ	,,	,,
உஎசா	கசா	வயிஞன	வயிஞன =

உரைச்சிறப்பு.

தொல்காப்பியத்திற்றொகுத்தபொருளனைத்தும்
எல்லார்க்குமேற்பவினிதுரைத்தான்—சொல்லார்
மதுரைநச்சினார்க்கினியான்மாமறையோன்கல்விக்
கதிரின்சுடரெறிப்பக்கண்டு.

பச்சைமாலனையமேகம்பவ்வநீர்பருகிக்கான்ற
எச்சினாற்றிசையுமுண்ணுமமிழ்தெனவெழூஉநாவெச்சில
மெச்சிநாளும்விண்ணோர்மிசைகுவர்வேதபோத
நச்சினார்க்கினியானெச்சினறுந்தமிழ்நுகர்வர்நல்லோர்.

தொல்காப்பியமுந்தொடைநடைச்சங்கத்தமிழின்
பல்காப்பியமும்பகுத்துரைத்தான்—ஒல்காக்
கதிரைநச்சினானுங்கலசனுமாம்வேத
மதுரைநச்சினார்க்கினியான்வந்து.

உரைச்சிறப்புப்பாயிரம்.

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொரு ணுண்ணிதி னுணர்ந்து
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
னூற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய ராகிப் பாற்பட
எழுத்துஞ் சொல்லும் பொருளு மிம்மூன்றும்
இழுக்கற வாய்ந்த வழுக்கிறொல் சீர்த்தித்
தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணாக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியு
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியும்
உரையிடை யிட்ட காண்டிகை யுரைத்தும்,
ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டு முணர்பவர்க் கெல்லாம்
உரையற முழுதும் புரைபட வுரைத்தும்,
ஒலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ ருரைக்குங்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப
உள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
இறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்

பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும்,
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்தும்,
நல்லறி வுடைய தொல்பேரா சிரியன்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்துந்,
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்
எண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத்து வாசன்
நான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க் கினியான்
இருவினை கடியு மருவியம் பொதியின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஊழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை யானே.

உரைச்சிறப்புப்பாயிரம் முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்.

தொல்காப்பியம்.

நச்சினார்க்கினியம்.

சிறப்புப்பாயிரம்.

வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவ
னிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவி னான்மறை முற்றிய
வதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

என்பது பாயிரம். எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க என்பது இலக்கணம். என்னை? "ஆயிர முகத்தா னகன்ற தாயினும்—பாயிர மில்லது பனுவ லன்றே." என்றாராகலின்.

பாயிரமென்றது புறவுரையை. நூல்கேட்கின்றான் புறவுரைகேட்கிற் கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமா

றுபோல அந்நூல் இனிதுவிளங்குதலிற் புறவுரைகேட்டல்வேண் டும். என்னை? "பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண் பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்." என்றாராகலின்.

அப்பாயிரந்தான் தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன்போலவும் அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்க ளும் ஞாயிறும்போலவும் நூற்கு இன்றியமையாச்சிறப்பிற்றாயிருத் தலின், அதுகேளாக்காற் குன்றுமுட்டிய குரீஇப்போலவுங் குறிச்சி புக்க மான்போலவும் மாணாக்கன் இடர்ப்படுமென்க.

அப்பாயிரம் பொதுவுஞ்சிறப்புமென இருவகைத்து.

அவற்றுட் பொதுப்பாயிரம் எல்லாநூன்முகத்தும் உரைக்கப் படும். அதுதான் நான்குவகைத்து.

"ஈவோன் றன்மை யீத லியற்கை—கொள்வோன் றன்மை கோடன் மரபென—வீரிரண் டென்ப பொதுவின் றொகையே." என்னும் இதனான் அறிக.

ஈவோர் கற்கப்படுவோருங் கற்கப்படாதோருமென இருவ கையர். அவருட் கற்கப்படுவோர் நான்குதிறத்தார். "மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்ன—குலைவி லுணர்வுடை யோர்."

இதனுள் மலையே, "அளக்க லாகாப் பெருமையு மருமையு— மருங்ககல முடைமையு மேறற் கருமையும்—பொருந்தக் கூறுப பொச்சாப் பின்றி—நிலத்தி னியல்பே நினைக்குங் காலைப்—பொ றையு டைமையொடு செய்பாங் கமைந்தபின்—விளைதல் வண்மை யும் போய்ச்சார்ந் தோரை—யிடுதலு மெடுத்தலு மின்னண மாக— வியையக் கூறுப வியல்புணர்ந் தோரே." "பூவின தியல்பே பொ ருந்தக் கூறின்—மங்கல மாதலு நாற்ற முடைமையுங்—காலத்தின் மலர்தலும் வண்டிற்கு ஞெகிழ்தலுங்—கண்டோ ருவத்தலும் விழை யப் படுதலு—முவமத் தியல்பி னுணரக் காட்டுப." "துலாக்கோ லியல்பே தூக்குங் காலை—மிகினுங் குறையினு நில்லா தாகலு— மையந் தீர்த்தலு நடுவு நிலைமையோ—டெய்தக் கூறுப வியல்புணர்ந் தோரே." என நான்குங் கண்டுகொள்க.

இனிக் கற்கப்படாதோரும் நான்குதிறத்தார். "கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு—குண்டிகைப் பருத்தியோ டிவையென மொழிப."

இதனுட் * கழற்பெய்குடமாவது கொள்வோனுணர்வு சிறிதாயினும், தான் கற்றதெல்லாம் ஒருங்குரைத்தல். † மடற்பனையென்பது பிறராற் கிட்டுதற்கு அரியதாகி இனிதாகிய பயன்களைக் கொண்டிருத்தல். ‡ முடத்தெங்கென்பது ஒருவர் நீர்வார்க்கப் பிறர்க்குப் பயன்படுவதுபோல ஒருவர் வழிபடப் பிறர்க்கு உரைத்தல். ¶ குண்டிகைப்பருத்தியென்பது சொரியினும் வீழாது சிறிது சிறிதாகவாங்கக் கொடுக்குமதுபோலக் கொள்வோனுணர்வு பெரிதாயினுஞ் சிறிதுசிறிதாகக் கூறுதல்.

இனி "ஈத லியல்பே யியல்புறக் கிளப்பிற்—பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்—பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்—புகழ்ந்த மதியிற் பொருந்து மோரையிற்—றிகழ்ந்த வறிவினன் றெய்வம் வாழ்த்திக்—கொள்வோ னுணர்வகை யறிந்தவன் கொள்வரக்—கொடுத்தன் மரபெனக் கூறினர் புலவர்." இதனான் அறிக.

இனிக் கொள்வோருங் கற்பிக்கப்படுவோருங் கற்பிக்கப் படாதோருமென இருவகையர். அவருட் கற்பிக்கப்படுவோர் அறுவகையர்.

அவர்தாந் "தன்மக னாசான் மகனே மன்மகன்—பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே—யுரைகோ ளாளனோ டிவரென மொழிப."

இவர்தன்மை ㅇ "அன்னங் கிளியே நன்னிற நெய்யரி—யானை யானே றென்றிவை போலக்—கூறிக் கொள்ப குணமாண் டோரே." இதனான் அறிக.

---

* "பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றருஞ்—செய்தி கழற்பெய் குடத்தின் சீரே."

† "தானே தரக்கொளி னன்றித் தன்பால்—மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை."

‡ "பல்வகை யுதவி வழிபடு பண்பி—னல்லோரொழித் தல்லோர்க் களிக்குமுடத் தெங்கே."

¶ "அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்—கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை."

ㅇ "பாலு நீரும் பாற்படப் பிரித்த—லன்னத் தியல்பென வறிந்தனர் கொளலே"

"கிளந்தவா கிளத்தல் கிளியின தியல்பே"

"எந்நிறந் தோய்தற்கு மேற்ப தாத—னன்னிறத் தியல்பென நாடினர் கொளலே"

இனிக் கற்பிக்கப்படாதோர் எண்வகையர். "மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வ—னடுநோய்ப் பிணியாள னேுச் சினத்தன்—றடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்—நெடுநூலைக் கற்கலா தார்." என இவர்.

இவர்தன்மை * "குரங்கெறி விளங்கா யெருமை யாடே—தோணி யென்றாங் கிவையென மொழிப." இதனான் அறிக. இவருட் களங்கடியப்பட்டார் "மொழிவ துணராதார் முன்னிருந்து காய்வார்—படிறு பலவுரைப்பார் பல்கா னகுவார்—திரிதரு நெஞ்சத்தார் தீயவை யோர்ப்பார்—கடியப்பட் டாரவையின் கண்."

இனிக் கோடன்மரபு. "கோடன் மரபு கூறுங் காலைப்—பொழுதொடு சென்று வழிபடன் முனியான்—முன்னும் பின்னு மிரவினும் பகலினு—மகலா னாகி யன்பொடு கெழீஇக்—குணத்தொடு பழகிக் குறிப்பின் வழிநின்—றாசற வுணர்ந்தோன் வாவென வந்தாங்—கிருவென விருந்தே டவிழென வவிழ்த்துச்—சொல்லெனச் சொல்லிச் செல்லெனச் சென்று—பருகுவ னன்ன வார்வத்தனாகிச்—சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்—செவிவா யாக நெஞ்சுகள னாகக்—கேட்டவை கேட்டவை வல்ல னாகிப்—போற்றிக் கோட லதனது பண்பே." "எத்திற மாசா னுவக்கு மத்திற—மறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே." "செவ்வன் றெரிகிற்பான் மெய்ந்நோக்கிக் காண்கிற்பான்—பல்லுரையுங் கேட்பான் மிகப்பெரிதுங் காதலான்—றெய்வத்தைப் போல மதிப்பான் றிரிபில்லா—னிவ்வாறு மாண்பு முடையாற் குரைப்பவே—செவ்விதி னூலைத்

"நல்லவை யகத்திட்டு நவைப்புறத் திடுவது—நெய்யரி மாணெனநினைதல் வேண்டும்"

"குழூவுபடூஉப் புறந்தருதல் குஞ்சரத் தியல்பே."

"பிறந்த வொலியின் பெற்றியோர்ந் துணர்தல்—சிறந்த வானேற்றின் செய்தி யென்ப"

* "கல்லா லெறிந்து கருதுபயன் கொள்வோன்—குரங்கெறி விளங்கா யாமெனக் கூறுப"

"விலங்கி வீழ்ந்து வெண்ணீ ருழக்கிக்—கலங்கல்செய் தருந்தல் காரா மேற்றே"

"ஒன்றிடை யார வுறினுங் குளகு—சென்றுசென் றருந்தல் யாட்டின் சீரே"

"நீரிடை யன்றி நிலத்திடை யோடாச்—சீருடை யதுவே தோணி யென்ப"

தெரிந்து." "வழக்கி னிலக்கண மிழுக்கின் றறிதல்—பாடம் போற் றல் கேட்டவை நினைத்த—லாசாற் சார்ந்தவை யமைவரக் கேட் ட—லம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்—வினாதல் வினயவை விடுத்தலென் றின்னவை—கடனாக் கொளினே மடநனி யிகக்கும்." "அனைய நல்லோன் கேட்குவ னாயின்—வினையி னுழப்பொடு பயன்றலைப் படாஅன்" "அனைய னல்லோ னம்மர பில்லோன்—கேட்குவ னாயிற் கொள்வோ னல்லன்" இவற்றான் உணர்க.

இம்மாணாக்கன் முற்ற உணர்ந்தானுமாறு. "ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்—பெருக நூலிற் பிழைபா டிலனே." "முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்." "ஆசா னுரைத்த தமைவரக் கொளினுங்—காற்கூ றல்லது பற்றல னாகும்." "அவ்வினை யாள ரொடு பயில்வகை யொருபாற்—செவ்வி தினுரைப்ப வவ்விரு பாலு—மையறு புலமை மாண்புநனி யுடைத்தே." "பிறர்க்குரை யிடத்தே நூற்கலப் பாகுந்—திறப்பட வுணருந் தெளிவி னோர்க் கே." இவற்றான் அறிக. பொதுப்பாயிரம் முற்றிற்று.

இனிச் சிறப்புப்பாயிரமாவது தன்னால் உரைக்கப்படும் நூற்கு இன்றியமையாதது. அது பதினொருவகையாம். "ஆக்கி யோன் பெயரே வழியே யெல்லை—நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே—கேட்போர் பயனொ டாயெண் பொருளும்—வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே." "காலங் களனே காரண மென்றிம்—மூவகை யேற்றி மொழிநரு முளரே." இப்பதினொன்றும் இப்பாயி ரத்துள்ளே பெறப்பட்டன.

இனிச் சிறப்புப்பாயிரத்திலக்கணஞ் செப்புமாறு. "பாயிரத் திலக்கணம் பகருங் காலை—நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி—யாசிரிய மானும் வெண்பா வானு—மருவிய வகையா னுவ றல் வேண்டும்." இதனான் அறிக.

நூல்செய்தான் பாயிரஞ்செய்தானாயிற் றன்னைப் புகழ்ந்தா னாம். "தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினுந்—தான்றற் புகழ்த றகுதி யன்றே." என்பவாகலின்.

பாயிரஞ்செய்வார் தன் ஆசிரியருந் தன்னோடு ஒருங்குகற்ற ஒருசாலைமாணாக்கருந் தன் மாணாக்கருமென இவர். அவருள் இந் நூற்குப் பாயிரஞ்செய்தார் தமக்கு ஒருசாலைமாணாக்கராகிய பனம் பாரனார்.

இதன்பொருள். வட வேங்கடந் தென் குமரி ஆயிடை = வடக்கின்கண் வேங்கடமுந் தெற்கின்கட் குமரியுமாகிய அவ் விரண்டெல்லைக்குள்ளிருந்து: தமிழ் கூறும் நல் உலகத்து வழக்குஞ் செய்யுளும் ஆ இருமுதலின் = தமிழைச்சொல்லும் நல்லாசிரியரது * வழக்குஞ்செய்யுளுமாகிய அவ்விரண்டையும் அடியாகக் கொள்ளுகையினாலே: செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு = அவர் கூறுஞ் செந்தமிழ் இயல் பாகப்பொருந்திய செந்தமிழ்நாட்டிற்கு இயைந்த வழக்கோடே முன்னையிலக்கணங்கள் இயைந்தபடியை முற்றக்கண்டு: முறைப் பட எண்ணி = அவ்விலக்கணங்களெல்லாஞ் சில்வாழ்நாட் பல் பிணிச் சிற்றறிவினோர்க்கு அறியலாகாமையின் யான் இத்துணை வரையறுத்து உணர்த்துவலென்று அந்நூல்களிற் கிடந்தவாறன்றி அதிகாரமுறையான் முறைமைப்படச்செய்தலை எண்ணி: எழுத் துஞ் சொல்லும் பொருளும் நாடி = அவ்விலக்கணங்களுள் எழுத்தி னையுஞ் சொல்லினையும் பொருளினையும் ஆராய்ந்து: போக்கு அறு பனுவல் = பத்துவகைக் குற்றமுந் தீர்ந்து முப்பத்திரண்டுவகை உத்தியோடு புணர்ந்த இந்நூலுள்ளே: மயங்கா மரபின் எழுத்து முறை காட்டிப் புலந்தொகுத்தோனே = அம்மூவகையிலக்கணமும் மயங்கா முறைமையாற் செய்கின்றமையின் எழுத்திலக்கணத்தை முன்னர்க்காட்டிப் பின்னர் ஏனையிலக்கணங்களையுந் தொகுத்துக் கூறினான்: நிலந் தரு திருவிற் பாண்டியன் அவையத்து = மாற் றாரது நிலத்தைக் கொள்ளும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தி அவையின்கண்ணே: அறங்கரை நாவின் நான்மறைமுற் றிய அதங்கோட்டாசாற்கு அரில் தபத்தெரிந்து = அறமே கூறும் நாவினையுடைய நான்கு வேதத்தினையும் முற்ற அறிந்த அதங்கோ டென்கிற ஊரின் ஆசிரியனுக்குக் குற்றமற ஆராய்ந்துகூறி: மல்கு நீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியனெனத் தன் பெயர் தோற்றி = கடல்சூழ்ந்த உலகின்கண்ணே ஐந்திரவியாகர ணத்தை நிறைய அறிந்த பழைய காப்பியக்குடியினுள்ளோனெனத் தன்பெயரை மாயாமல் நிறுத்தி: பல் புகழ் நிறுத்த படிமை

* சிவஞானமுனிவர் "வழக்கினையுஞ் செய்யுளினையும் ஆராய்ந்த பெரிய காரணத்தானே" என உரைகூறி "நச்சினார்க்கினியார் முத லென்பதனைப் பெயரடியாற் பிறந்த முதனிலைவினைப்பெயராகக் கொண்டு முதலுதலினாலென உரைப்பர்; இருமுதலென்னுந் தொ கைச்சொல் அங்ஙனம் பக்கிசைத்தல் பொருந்தாமை அறிக" என இவ்வாசிரியரைக்கண்டித்தனர். அதனைத் தொல்காப்பியச் சூத்திர விருத்தியுட் கண்டு உணர்க.

யோனே=பலபுகழ்களையும் இவ்வுலகின்கண்ணே மாயாமல் நிறுத்திய தவவேடத்தையுடையோன்: என்றவாறு. இருந்து தமிழைச் சொல்லும் என்க; கொள்ளுகையினுலே பொருந்திய நாடு என்க; கண்டு எண்ணி ஆராய்ந்து தன்னூலுள்ளே தொகுத்தான், அவன் யாரெனின் அவையின்கண்ணே கூறி உலகின்கண்ணே தன்பெயரை நிறுத்திப் புகழைநிறுத்திய படிமையோன் என்க.

இப்பாயிரமுஞ் செய்யுளாதலின் இங்ஙனம் மாட்டுறப்புநிகழக் கூறினுர். இதற்கு இங்ஙனங் கண்ணழித்தல் * உரையாசிரியர் கருத்தென்பது அவருரையான் உணர்க.

இனி மங்கலமரபிற் காரியஞ் செய்வார் வடக்குங் கிழக்கும் நோக்கியுஞ் சிந்தித்தும் நற்கருமங்கள் செய்வாராதலின் மங்கலமாகிய வடதிசையை முற்கூறினுர், இந்நூல் நின்றுநிலவுதல் வேண்டி. தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வார் தெற்கும் மேற்கும் நோக்கியுங் கருமங்கள் செய்வாராதலிற் தென்றிசையைப் பிற்கூறினுர். நிலங் கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகந் தவஞ்செய்து வீடுபெற்ற மலையாதலானும் எல்லாரானும் அறியப்படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினுர். குமரியுந் தீர்த்தமாகலின் எல்லையாகக் கூறினுர். இவ்விரண்டினையுங் காலையே ஓதுவார்க்கு நல்வினையுண்டாமென்றுகருதி இவற்றையே கூறினுர். இவையிரண்டும் அகப்பாட்டெல்லையாயின. என்னை? குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பதுநாடு கடல்கொண்டதாகலின். கிழக்கும் மேற்குங் கடலெல்லையாக முடிதலின் வேறெல்லை கூறாராயினுர். வேங்கடமுங் குமரியும் யாண்டைய என்றால் வடவேங்கடந் தென்குமரியென வேண்டுதலின் அதனை விளங்கக்கூறினுர்.

உலகமென்றது பலபொருளொருசொல்லாகலின் ஈண்டு உயர்ந்தோரையுணர்த்திற்று, உலகம் அவரையே கண்ணுகவுடைமையின். என்னை? "வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே—நிகழ்ச்சி யவர்கட் டாக லான" என மரபியலுட்கூறுதலின். அவ்வுயர்ந்தோராவார் அகத்தியனுரும் மார்க்கண்டேயனுருந் தலைச்சங்கத்தாரும் முதலாயினோர். உலகத்து உலகத்தினுடைய என விரிக்க.

வழக்காவது சிலசொற்பிறந்த அக்காலத்து இஃது அறத்தை உணர்த்திற்று, இது பொருளை உணர்த்திற்று, இஃது இன்பத்தை உணர்த்திற்று, இது வீட்டை உணர்த்திற்று என்று உணர்விப்பது.

* உரையாசிரியரென்றது தொல்காப்பியத்திற்கு ஆதியுரை செய்த இளம்பூரணரை.

செய்யுளாவது "பாட்டுரை நூலே" என்னுஞ் செய்யுளியற்சூத்திரத் தாற் கூறிய ஏழுநிலமும் அறம் முதலிய மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது. முதலினென்றது முதலுகையினாலே என்றவாறு.

எழுத்தென்றது யாதனையெனின், கட்புலனாகா உருவுங் கட்புலனாகிய வடிவுமுடைத்தாக வேறுவேறு வகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியுஞ் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையையாம். கடலொலி சங்கொலிமுதலிய ஓசைகள் பொருளுணர்த்தாமையானும் முற்கு வீளை இலதைமுதலியன பொருளுணர்த்தினவேனும் எழுத்தாகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளாராயினார். ஈண்டு உருவென்றது மனனுணர்வாய்நிற்குங் கருத்துப்பொருளை. அது செறிப்பச்சேறலானுஞ் செறிப்பவருதலானும் இடையெறியப்படுதலானும் இன்பதுன்பத்தையாக்கலானும் உருவுமுருவுங்கூடிப்பிறத்தலானும் உந்திமுதலாகத்தோன்றி எண்வகைநிலத்தும்பிறந்து கட்புலனாந்தன்மையின்றிச் செவிக்கட்சென்று உறும் ஊறுடைமையானும் விசும்பிற்பிறந்து இயங்குவதோர் தன்மையுடைமையானுங் காற்றின்குணமாவதோர் உருவாம். வன்மை மென்மை இடைமை கோடலானும் உருவேயாயிற்று. இதனைக் காற்றின்குணமேயென்றல் இவ்வாசிரியர் கருத்து. இதனை விசும்பின் குணமென்பாரும் உளர். இவ்வுரு "உருவுருவாகி" எனவும் "உட்பெறுபுள்ளி யுருவாகும்மே" எனவுங் காட்சிப்பொருட்குஞ் சிறுபான்மைவரும். வடிவாவது கட்புலனாகியே நிற்கும். அது வட்டஞ் சதுரம் முதலிய முப்பத்திரண்டனுள் ஒன்றை உணர்த்தும். மனத்தான் உணரும் நுண்ணுணர்விலோரும் உணர்தற்கு எழுத்துக்கட்கு வேறுவேறு வடிவங்காட்டி எழுதப்பட்டுநடத்தலிற் கட்புலனாகிய வரிவடிவும் உடையவாயின. இதற்கு விதி "உட்பெறுபுள்ளியுருவாகும்மே" என்னுஞ் சூத்திரம் முதலியனவாம். இவற்றுட் பெரும்பான்மை மெய்க்கே வடிவுகூறினார். "எகரஒகரத்தியற்கையுமற்றே" என உயிர்க்குஞ் சிறுபான்மை வடிவு கூறினார். இனித் தன்னை உணர்த்தும் ஓசையாவது தன்பிறப்பையும் மாத்திரையையுமே அறிவித்துத் தன்னைப்பெறநிகழும் ஓசை. சொற்கு இயையும் ஓசையாவது ஓரெழுத்தொருமொழி முதலியவாய் வரும் ஓசை.

இனிச் சொல்லென்றது யாதனையெனின், எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப்பொருட்டன்மையையும் ஒருவன் உணர்தற்கு நிமித்தமாம் ஓசையை. இவ்வுரைக்குப் பொருள் சொல்லதிகாரத்துட் கூறுதும். ஈண்டு "டறலள" என்னுஞ் சூத்திரமுதலியவற்றுள் மொழியாக மயங்குகின்றனவும் அவ்வாக்கத்தின்கண் அடங்கு-

மென்று உணர்க. எழுத்துச் சொற்கு அவயவமாதலின் அதனை முற்கூறி அவயவியாகிய சொல்லைப் பிற்கூறினார்.

இனிப் பொருளென்றது யாதனையெனின் சொற்றொடர் கருவியாக உணரப்படும் அறம்பொருளின்பமும் அவற்றது நிலையும் நிலையாமையுமாகிய அறுவகைப்பொருளுமாம். அவை பொருளதி காரத்துட் கூறுதும்.

வீடுகூறாரோவெனின், அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித்தங்கூறுதலன்றி வீட்டின் தன்மை இலக் கணத்தாற் கூறாரென்றுணர்க. அஃது "அந்நிலை மருங்கி னறமுத லாகிய—மும்முதற் பொருட்கு முரிய வென்ப" என்பதனான் உணர்க. இக்கருத்தானே வள்ளுவனாயனாரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங்கூறினார்.

செந்தமிழ் செவ்வியதமிழ். முந்துநூல் அகத்தியமும் மாபு ராணமும் பூதபுராணமும் இசைநுணுக்கமும். அவற்றுட் கூறிய இலக்கணங்களாவன எழுத்துச் சொற் பொருள் யாப்பும் சந்தமும் வழக்கியலும் அரசியலும் அமைச்சியலும் பார்ப்பனவியலுஞ் சோதி டமுங் காந்தருவமுங் கூத்தும் பிறவுமாம். புலமென்றது இலக்க ணங்களை. பனுவலென்றது அவ்விலக்கணங்களெல்லாம் அகப்படச் செய்கின்றதோர் குறியை. அவை இதனுட்கூறுகின்ற உரைச் சூத்திரங்களானும் மரபியலானும் உணர்க.

பாண்டியன் மாகீர்த்தி இருபத்துநாலாயிரம்யாண்டு வீற்றிருந் தானாதலின் அவனும் அவன் அவையிலுள்ளோரும் அறிவுமிக்கி ருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாங் குற்றந்தீர விடைகூறுதலின் அரிறப என்றார்.

அகத்தியனார் அதங்கோட்டாசிரியரைநோக்கி நீ தொல்காப்பி யன்செய்தநூலைக் கேளற்கவென்று கூறுதலானுந், தொல்காப்பியனா ரும் பல்காலுஞ்சென்று யான்செய்தநூலை நீர் கேட்டல்வேண்டு மென்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங்கூறிவிடுவலெனக் கருதி அவர்கூறிய கடாவிற்கெல்லாம் விடைகூறுதலின் அரிறபத்தெரிந்தென்றார்.

அவர் கேளன்மினென்றற்குக் காரணமென்னையெனின், தேவ ரெல்லாருங்கூடி யாஞ் சேரவிருத்தலின் மேருத் தாழ்ந்து தென் றிசை உயர்ந்தது, இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரிய ரென்று அவரைவேண்டிக்கொள்ள, அவருந் தென்றிசைக்கட் போ

துகின்றவர் கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச்சென்று அவர்மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனாருழைச்சென்று அவருடன்பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர்கொடுப்ப நீரேற்று இரீஇப், பெயர்ந்து, துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர்பதினெண்மரையும் பதினெண்கோடிவேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங்கொண்டுபோந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமைவிலக்கித், திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரைநோக்கி நீ சென்று குமரியாரைக்கொண்டுவருகவெனக்கூற, அவரும் எம்பெருமாட்டியை எங்ஙனங் கொண்டுவருவலென்றார்க்கு, முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகலம் நின்று கொண்டுவருகவென, அவரும் அங்ஙனங்கொண்டுவருவழி, வையைநீர்கடுகிக் குமரியாரை ஈர்த்துக்கொண்டுபோகத், தொல்காப்பியனார் கட்டளையிறந்து சென்று ஓர் வெதிர்ங்கோலைமுறித்து நீட்ட, அதுபற்றியேறினார்; அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையுந் தொல்காப்பியனாரையுஞ் சுவர்க்கம்புகாப்பிரெனச் சபித்தார்; யாங்கள் ஒருகுற்றமுஞ் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானுஞ் சுவர்க்கம்புகாப்பிரென அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனான் அவர் வெகுண்டாராதலின் அவன்செய்தநூலைக் கேளற்கவென்றாரென்க.

நான்கு கூறுமாய் மறைந்தபொருளும் உடைமையான் நான்மறையென்றார். அவை தைத்திரியமும் பௌடிகமுந் தலவகாரமுஞ் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமுமென்பாருமுளர். அதுபொருந்தாது; இவர் இந்நூல்செய்தபின்னர் வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்.

முற்கூறிய நூல்கள்போல எழுத்திலக்கணமுஞ் சொல்லிலக்கணமும் மயங்கக்கூறாது வேறோர் அதிகாரமாகக் கூறினாரென்றற்கு எழுத்துமுறைகாட்டியென்றார்.

வரைப்பின்கண்ணே தோற்றி நிறுத்தவென்க.

இந்திரனாற்செய்யப்பட்டது ஐந்திரமென்றாயிற்று.

பல்புகழாவன, ஐந்திரநிறைதலும் அகத்தியத்தின்பின் இந்நூல் வழங்கச்செய்தலும் அகத்தியனாரைச் சபித்தபெருந்தன்மை

யுழ் ஐந்தீநாப்பண் நிற்றலும் நீர்நிலைநிற்றலும் பிறவுமாகிய தவத்தான் மிகுதலும் பிறவுமாம். படிமை தவவேடம்.

'வடவேங்கடந்தென்குமரி' என்பது கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்த சொற்சீரடி. 'ஆயிடை' என்பது வழியசை புணர்ந்த சொற்சீரடி. தமிழ்கூறுநல்லுலகத்து' என்பது முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாய சொற்சீரடி. இங்ஙனஞ் சொற்சீரடியை முற்கூறினார், சூத்திரயாப்பிற்கு இன்னோசைபிறத்தற்கு. என்னை? "பாஅ வண்ணஞ், சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்" என்றலின். ஏனையடிகளெல்லாஞ் செந்தூக்கு.

வடவேங்கடந்தென்குமரியெனவே எல்லையும், எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடியெனவே நுதலியபொருளும் பயனும் யாப்பும், முந்துநூல்கண்டெனவே வழியும், முறைப்படவெண்ணி யெனவே காரணமும், பாண்டியனவையத்தெனவே காலமுங் களனும், அரிறபத்தெரிந்தெனவே கேட்டோருந், தன்பெயர்தோற்றி யெனவே ஆக்கியோன்பெயரும் நூற்பெயரும் பெறப்பட்டன.

தொல்காப்பியமென்பது மூன்று உறுப்படக்கிய பிண்டம். பொருள்கூறவே அப்பொருளைப் பொதிந்த யாப்பிலக்கணமும் அடங்கிற்று, நூறுகாணங்கொணர்ந்தானென்றால் அவைபொதிந்த கூறையும் அவையென அடங்குமாறுபோல.

இனி இவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவு கூறுவாரும் உளராலெனின், வேங்கடமுங் குமரியும் எல்லையாகவுடைய நிலத்திடத்து வழங்குந் தமிழ்மொழியினைக்கூறும் நன்மக்கள் வழக்குஞ் செய்யுளுமென்றாற் செந்தமிழ்நாட்டைச்சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டினும் வழங்குந் தமிழ்மொழியினைக் கூறுவாரை நன்மக்களென்றாரென்று பொருடருதலானும், அவர்கூறும் வழக்குஞ் செய்யுளுங்கொண்டு எழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்தல் பொருந்தாமையானும், அவர்கூறும் வழக்குஞ்செய்யுளுமாகிய இரு காரணத்தானும் எழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்ந்தாரெனின் அகத்தியர்க்கு மாறாகத் தாமும் முதனூல் செய்தாரென்னும் பொருடருதலானும், அங்ஙனங் கொடுந்தமிழ்கொண்டு இலக்கணஞ் செய்யக் கருதிய ஆசிரியர் குறைபாடுடையவற்றிற்குச் செந்தமிழ்வழக்கையும் முந்துநூலையும் ஆராய்ந்து முறைப்பட எண்ணினாரெனப் பொருடருதலானும் அது பொருளன்மை உணர்க. இன்னும் முந்துநூல்கண்டு முறைப்படவெண்ணியென்றதனானே முதல்வன்வழிநூல்செய்யுமாற்றிற்கு இலக்கணங் கூறிற்றிலனேனும் அவன் நூல்

செய்தமுறைமைதானே பின்பு வழிநூல்செய்வார்க்கு இலக்கணமா மென்பது கருதி இவ்வாசிரியர் செய்யுளியலினும் மரபியலினும் அந்நூல் செய்யும் இலக்கணமும் அதற்கு உரையுங் காண்டிகையுங் கூறும் இலக்கணமுங் கூறிய அதனையே ஈண்டுங் கூறினாரென்று உணர்க. அவை அவ்வோத்துக்களான் உணர்க.

"யாற்ற தொழுக்கே தேரைப் பாய்வே—சீய நோக்கே பருந் தின் வீழ்வென்—றுவகை நான்கே கிடக்கை முறையே"

"பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்—பழிப்பில் சூத்தி ரம் பன்னான்கே."

அவற்றுள், "பாடங் கண்ணழி வுதாரண மென்றிவை—நா டித் திரிபில வாகுதல் பொழிப்பே." "தன்னூன் மருங்கினும் பிற நூன் மருங்கினுந்—துன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற் பம்—பன்னிய வகல மென்மனார் புலவர்." "ஏதுவி னுங்கவை துடைத்த னுட்பம்." "துடைத்துக் கொள்பொரு ளெச்ச மாகும்."

"அப்புல மரிறப வறிந்து முதனூற்—பக்கம் போற்றும் பயன் றெரிந் துலகந்—திட்ப முடைய தெளிவர வுடையோ—னப் புலம் படைத்தற் கமையு மென்ப."

"சூத்திர முரையென் றுயிரு திறத்தினும்—பாற்படத் தோற் றல் படைத்த லென்ப—நூற்பய னுணர்ந்த நுண்ணி யோரே."

இவற்றை விரித்து உரைக்க.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

தொல்காப்பியம்.

எழுத்ததிகாரம்.

முதலாவது

நூன் மரபு.

க. எழுத்தெனப்படுப,
அகரமுத, னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே.

என்பது சூத்திரம். இவ்வதிகாரம் என்னபெயர்த்தோவெனின் எழுத்திலக்கணம் உணர்த்தினமை காரணத்தான் எழுத்ததிகாரமென்னும் பெயர்த்து. எழுத்தை உணர்த்திய அதிகாரமென விரிக்க. அதிகாரம், முறைமை.

எழுத்து உணர்த்துமிடத்து எனைத்துவகையான் உணர்த்தினரோவெனின் எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினரென்க. எட்டுவகையவென்பார்கூறுமாறு;—எழுத்து இனைத்தென்றலும் இன்னபெயரினவென்றலும் இன்னமுறையினவென்றலும் இன்ன அளவினவென்றலும் இன்னபிறப்பினவென்றலும் இன்னபுணர்ச்சியினவென்றலும் இன்னவடிவினவென்றலும் இன்னதன்மையினவென்றலுமாம். இவற்றுட் தன்மையும் வடிவும் நமக்கு உணர்த்தலாகாமையின் ஆசிரியர் ஈண்டு உரைத்திலர். ஏனைய இதனுட் பெறுதும். எழுத்து இனைத்தென்றலைத் தொகைவகைவிரியான் உணர்க. முப்பத்துமூன்றென்பது தொகை. உயிர் பன்னிரண்டும் உடம்புபதினெட்டுஞ் சார்பிற்றோற்றம் மூன்றும் அதன்வகை. அளபெடையேழும் உயிர்மெய்யிருநூற்றொருபத்தாறும் அவற்றோடுங்கூட்டி இருநூற்றைம்பத்தாறெனல் விரி. இனி எழுத்துக்களது பெயரும் முறையுந் தொகையும் இச்சூத்திரத்தாற்

பெற்றும். வகை "ஔகாரவிறுவாய்" என்பதனுனும் "னகரவி றுவாய்" என்பதனுனும் "அவைதாங், குற்றியலிகரங் குற்றியலுக ரம்" என்பதனுனும் பெற்றும். விரி "குன்றிசைமொழிவயின்" என் பதனுனும் "புள்ளியில்லா" என்பதனுனும் பெற்றும். அளவு "அவற்றுள், அ இ உ" என்பதனுனும் "ஆ ஈ ஊ" என்பதனுனும் "மெய்யினளபே" என்பதனுனும் "அவ்வியனிலையும்" என்பதனு னும் பெற்றும். பிறப்பு பிறப்பியலுட் பெற்றும். புணர்ச்சி "உயி ரிறு சொன்முன்" என்பதனுனும் "அவற்று, ணிறுத்தசொல்லின்" என்பதனுனும் பிறவாற்றுனும் பெற்றும்.

இனி எட்டிறந்த பல்வகைய்வென்பார் கூறுமாறு;—எழுத்துக் களது குறைவுங் கூட்டமும் பிரிவும் மயக்கமும் மொழியாக்கமும் நிலையும் இனமும் ஒன்றுபலவாதலுந் திரிந்ததன்றிரிபு அதுவென்ற லும் பிறிதென்றலும் அதுவும்பிறிதுமென்றலும் நிலையிற்றென்ற லும் நிலையாதென்றலும் நிலையிற்றும்நிலையாதுமென்றலும் இன்னோ ரன்ன பலவுமாம். குறைவு "அரையளபுகுறுகல்" "ஓரளபாகும்" என்பனவற்றுற் பெற்றும். கூட்டம் "மெய்யோடியையினும்" "புள் ளியில்லா" என்பனவற்றுற் பெற்றும். பிரிவு "மெய்யுயிர்நீங்கின்" என்பதனுற் பெற்றும். மயக்கம் "டறலள" என்பதுமுதலாக "மெய்ந் நிலைசுட்டின்" என்பதீறுகக் கிடந்தனவற்றுற் பெற்றும். மொழி யாக்கம் "ஓரெழுத்தொருமொழி" என்பதனுற் பெற்றும், அவவெ ழுத்துக்களை மொழியாக்கலின். நிலை "பன்னீருயிரும்" "உயிர் மெய்யல்லன" "உயிர்ஔ" "ஞணநமன" என்பன. இவற்றுன் மொழிக்குமுதலாம் எழுத்தும் ஈறுபெழுத்தும் பெற்றும். இனம் "வல்லெழுத்தென்ப" "மெல்லெழுத்தென்ப" "இடையெழுத் தென்ப" "ஔகாரவிறுவாய்" "னகரவிறுவாய்" என்பனவற்றுற் பெற்றும். இவற்றுனே எழுத்துக்கள் உருவாதலும் பெற்றும். இவ்வுருவாகிய ஓசைக்கு ஆசிரியர் வடிவுகூறுமை உணர்க. இனி வரிவடிவு கூறுங்கால் மெய்க்கே பெரும்பான்மையும் வடிவுகூறு மாறு உணர்க. ஒன்றுபலவாதல் "எழுத்தோரன்ன" என்பதனுற் பெற்றும். திரிந்ததன்றிரிடதுவென்றல் "தகரம்வருவழி" என்பத னுனும் பிறுண்டும் பெற்றும். பிறிதென்றல் "மகரவிறுதி" "னகா ரவீறு" என்பனவற்றுற் பெற்றும். அதுவும்பிறிதுமென்றல் "ஆற னுருபினகரக்கிளவி" என்பதனுற் பெற்றும். நிலையிற்றென்றல் "நிறுத்தசொல்லினீறு" என்பதனுற் பெற்றும். நிலையாதென்றல் நிலைமொழியது ஈறறுக்கண்ணின்றும் வருமொழியது முதற்கண் ணின்றும் புணர்ச்சி தம்முள் இயல்பாதல். அது "மருவின்று குதி" என்பதனுற் பெற்றும். நிலையிற்றும்நிலையாது மென்றல்

"குறியதன்முன்னரும்" என்பதனாற் கூறிய அகரம் "இராவென் கிளவிக்ககரமில்லை" என்பதனாற் பெற்றாம்.

இக்கூறிய இலக்கணங்கள் கருவியுஞ் செய்கையுமென இருவகைய. அவற்றுட் கருவி புறப்புறக்கருவியும் புறக்கருவியும் அகப்புறக்கருவியும் அகக்கருவியுமென நால்வகைத்து. நூன்மரபும் பிறப்பியலும் புறப்புறக்கருவி. மொழிமரபு புறக்கருவி. புணரியல் அகப்புறக்கருவி. "எகர ஒகரம் பெயர்க்கீறாகா" என்றாற்போல்வன அகக்கருவி. இனிச் செய்கையும் புறப்புறச்செய்கையும் புறச்செய்கையும் அகப்புறச்செய்கையும் அகச்செய்கையுமென நால்வகைத்து. "எல்லாமொழிக்குமுயிர்வருவழியே" என்றாற்போல்வன புறப்புறச்செய்கை. "லனவென வரூஉம்புள்ளிமுன்னர்" என்றாற்போல்வன புறச்செய்கை. "உகரமொடுபுணரும்புள்ளியிறுதி" என்றாற்போல்வன அகப்புறச்செய்கை. தொகைமரபு முதலிய ஓத்தினுள் இன்ன ஈறு இன்னவாறுமுடியுமெனச் செய்கைகூறுவனவெல்லாம் அகச்செய்கை. இவ்விகற்பமெல்லாந் தொகையாக உணர்க.

இவ்வோத்தென்னுதலிற்றோவெனின், அதுவும் அதன்பெயருரைப்பவே அடங்கும்.

இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின் இத்தொல்காப்பியமென்னும் நூற்கு மரபாந்துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தினமையின் நூன்மரபென்னும் பெயர்த்தாயிற்று. நூலென்றது நூல்போறலின் ஒப்பினாயதோர் ஆகுபெயராம். அவ்வொப்பாயவாறென்னையெனின், குற்றங் களைந்து எஃகின் பன்னுனைப் பஞ்சிகளையெல்லாங் கைவன்மகடூஉத் தூய்மையும் நுண்மையுமுடையவாக ஓரிழைப்படுத்தினாற்போல "வினையினீங்கிவிளங்கியவறிவ" னாலே வழுக் களைந்து எஃகிய இலக்கணங்களையெல்லாம் முதலும் முடிவும் மாறுகோளின்றாகவுந் தொகையினும் வகையினும் பொருண்மைகாட்டியும் உரையுங் காண்டிகையும் உள் நின்று அகலவும் ஈரைங்குற்றமுமின்றி ஈரைந்தழகுபெற முப்பத்திரண்டு தந்திரவுத்தியோடுபுணரவும் "ஒருபொருணுதலிய சூத்திரத்தானு—மினமொழிகிளந்த வோத்தினானும்—பொதுமொழிகிளந்த படலத்தானு—மூன்றுறுப்படக்கிய பிண்டத்தானும்" ஒருநெறிப்படப் புணர்க்கப்படூஉந் தன்மையுடைமையானென்க. மரபு இலக்கணம் முறைமை தன்மை என்பன ஒருபொருட்கிளவி.

ஆயின் நூலென்றது ஈண்டு மூன்றதிகாரத்தினையுமன்றே? இவ்வோத்து மூன்றதிகாரத்திற்கும் இலக்கணமாயவாறென்னையெனின் எழுத்துக்களது பெயரும் முறையும் இவ்வதிகாரத்திற்குஞ் செய்யுளியற்கும் ஒப்பக் கூறியது. ஈண்டுக் கூறிய முப்பத்துமூன்றனைப் பதினைந்தாக்கி ஆண்டுத் தொகைகோடலிற் றொகைவேறும். அளவு செய்யுளியற்கும் இவ்வதிகாரத்திற்கும் ஒத்த அளவும் ஒவ்வா அளவுமுளவாகக்கூறியது. குறிற்கும் நெடிற்குங் கூறிய மாத்திரை இரண்டிடத்திற்கும் ஒத்த அளவு. ஆண்டுக் கூறுஞ் செய்யுட்கு அளவுகோடற்கு ஈண்டைக்குப் பயன் தாராத அளபெடை கூறியது ஒவ்வா அளவு. அஃது "அளபிறந்துயிர்த்தலு" மென்னுஞ் சூத்திரத்தோடு ஆண்டு மாட்டெறியுமாற்றான் உணர்க. இன்னுங் குறிலும் நெடிலும் மூவகையினமும் ஆய்தமும் வண்ணத்திற்கும் இவ்வதிகாரத்திற்கும் ஒப்பக் கூறியன. குறைவும் இரண்டற்கும் ஒக்கும். கூட்டமும் பிரிவும் மயக்கமும் இவ்வதிகாரத்திற்கே உரியனவாகக் கூறியன. "அம்மூவாறும்" என்னுஞ் சூத்திரமுதலியனவற்றான் எழுத்துக்கள் கூடிச் சொல்லாமாறு கூறுகின்றமையிற் சொல்லதிகாரத்திற்கும் இலக்கணம் ஈண்டுக் கூறினாராயிற்று. இங்ஙனம் மூன்றதிகாரத்திற்கும் இலக்கணங் கூறுதலின் இவ்வோத்து நூலினது இலக்கணங் கூறியதாயிற்று. நூலென்றது தொல்காப்பியமென்னும் பிண்டத்தை. இவ்வோத்திலக்கணங்கடாம் எழுத்துக்களது பெயரும் முறையுந் தொகையும் அளவுங் குறைவுங் கூட்டமும் இனமும் மயக்கமுமாம். ஏனைய இவ்வதிகாரத்துள் ஏனையோத்துக்களுள் உணர்த்துப.

அற்றேல் அஃதாக: இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எழுத்துக்களது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதனுதலிற்று.

இ - ள். எழுத்தெனப்படுப=எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன: அகரமுதல் னகரவிறுவாய் முப்பஃதென்ப=அகரம் முதல் னகரம் ஈறாகக் கிடந்த முப்பதென்று சொல்லுவர் ஆசிரியர்: சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே=சார்ந்துவருதலைத் தமக்கு இலக்கணமாகவுடைய மூன்றும் அல்லாத இடத்து. எ - று.

எனவே, அம்மூன்றுங் கூடியவழி முப்பத்துமூன்றென்ப. அ - ஆ - இ - ஈ - உ - ஊ - எ - ஏ - ஐ - ஒ - ஓ - ஔ - க் - ங் - ச் - ஞ் - ட் - ண் - த் - ந் - ப் - ம் - ய் - ர் - ல் - வ் - ழ் - ள் - ற் - ன் எனவரும்.

எனப்படுபவென்று சிறப்பித்துணர்த்துதலான் அளபெடையும் உயிர் மெய்யும் இத்துணைச் சிறப்பின்ரும்; ஓசையுணர்வார்க்குக் கருவி யாகிய வரிவடிவுஞ் சிறப்பிலா எழுத்தாகக் கொள்ளப்படும்.

அகரம் முதலாதல் ஆரியத்திற்கும் ஒக்குமேனும் ஈண்டுத் தமிழெழுத்தே கூறுகின்ருரென்பது உணர்தற்கு னகரவிறு வாயென்ருர்.

படுப, படுவ. படுபவென்பது படுத்தலோசையாற் தொழிற் பெயராகக் கூறப்படும். பகரமும் வகரமும் ஈண்டு நிற்றற்குத் தம் முள் ஒத்த உரிமையவேனும் எழுத்தெனப்படுபவெனத் தூக்கற்று நிற்குஞ் சொற்சீரடிக்குப் படுபவென்பது இன்ஞேசைத்தாய் நிற்ற லின் ஈண்டுப் படுபவென்றே பாடம் ஓதுக. இஃது அன்பெருத அகரவீற்றுப் பலவறிசொல்.

அகரனகரமெனவே பெயருங் கூறினுர்.

எழுத்துக்கட்கெல்லாம் அகரம் முதலாதற்குக் காரணம் "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்." என்பதனுற் கூறுப. வீடு பேற்றிற்கு உரிய ஆண்மகனை உணர்த்துஞ் சிறப்பான் னகரம் பின் வைத்தார். இனி எழுத்துக்கட்குங் கிடக்கைமுறையாயினவாறு கூறுதும்.

குற்றெழுத்துக்களை முன்னுகக்கூறி அவற்றிற்கு இனமொத்த நெட்டெழுத்துக்களை அவற்றின் பின்னுகக் கூறினுர், ஒருமாத் திரை கூறியே இரண்டுமாத்திரை கூறவேண்டுதலின். அன்றி இரண்டை முற்கூறினுலோவெனின், ஆகாது; ஒன்றுநின்று அத ேைடு பின்னரும் ஒன்றுகூடியே இரண்டாவதன்றி இரண்டென்ப தொன்று இன்ருதலின். இதனுன் ஒன்றுதான் பலகூடியே எண் விரிந்ததென்று உணர்க. இனி, அகரத்தின்பின்னர் இகரம் எண் ணும் பிறப்பும் பொருளும் ஒத்தலின் வைத்தார். இகரத்தின்பின் னர் உகரம் வைத்தார், பிறப்பு ஒவ்வாதேனும் "அ - இ - உ - அம் மூன்றுஞ் சுட்டு" எனச் சுட்டுப்பொருட்டாய் நிற்கின்ற இனங்க ருதி. அவை ஐம்பாற்கண்ணும் பெரும்பான்மை வருமாறு உணர்க. எகரம் அதன்பின் வைத்தார், அகர இகரங்களோடு பிறப்பு ஒப்பு மைபற்றி. ஐகார ஔகாரங்கட்கு இனமாகிய குற்றெழுத்து இன்றே னும் பிறப்பு ஒப்புமைபற்றி ஏகார ஓகாரங்களின்பின்னர் ஐகார ஔகாரம் வைத்தார். ஒகரம் நொ என மெய்யோடு கூடிநின்றல் லது தானுக ஓரெழுத்தொருமொழியாகாத சிறப்பின்மைநோக்கி ஐகாரத்தின்பின் வைத்தார். அ - இ - உ - எ என்னும் நான்கும்

அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எக்கொற்றன் என மெய்யோடு கூடாமற் றாம் இடைச்சொல்லாய் நின்றுழியினும் மேல் வரும் பெயர்களோடு கூடிச் சுட்டுப்பொருளும் வினாப்பொருளும் உணர்த்தும். ஒகரம் மெய்யோடுகூடியே தன்பொருள் உணர்த்துவதல்லது, தானாகப் பொருளுணர்த்தாதென்று உணர்க. இன்னும் அ-ஆ-உ-ஊ-எ-ஏ-ஒ-ஓ-ஔ என்பன தம்முள் வடிவு ஒக்கும். இ-ஈ-ஐ தம்முள் வடிவு ஒவ்வா. இன்னும் இவை அளபெடுக்குங்கால் நெட்டெழுத்தோடு குற்றெழுத்திற்கு ஓசை இயையுமாற்றானும் உணர்க. இனிச் சுட்டுநீண்டு ஆகார ஈகார ஊகாரங்களாதலானும் பொருள் ஒக்கும். புணர்ச்சி ஒப்புமை உயிர்மயங்கியலுட் பெறுதும். இம்முறை வழுவாமல் மேல் ஆளுமாறு உணர்க.

இனிக் ககார ஙகாரமுஞ் சகார ஞகாரமும் டகார ணகாரமுந் தகார நகாரமும் பகார மகாரமுந் தமக்குப் பிறப்புஞ் செய்கையும் ஒத்தலின் வல்லொற்றிடையே மெல்லொற்றுக் கலந்துவைத்தார். முதனாவும் முதலண்ணமும் இடைநாவும் இடையண்ணமும் நுனிநாவும் நுனியண்ணமும் இதழியைதலுமாகிப் பிறக்கின்ற இடத்தின் முறைமைநோக்கி அவ்வெழுத்துக்களைக் க-ச-ட-த-ப-ங-ஞ-ண-ந-ம-ன வென இம்முறையே வைத்தார். பிறப்பு ஒப்புமையானும் னகாரம் றகாரமாய்த் திரிதலானும் றகாரமும் னகாரமுஞ் சேர வைத்தார். இவை தமிழெழுத்தென்பது அறிவித்தற்குப் பின்னர் வைத்தார். இனி இடையெழுத்துக்களில் யகாரம் முன்வைத்தார், அதுவும் உயிர்கள்போல மிடற்றுப்பிறந்த வளி அண்ணங்கண்ணுற்று அடையப்பிறத்தலின். ரகாரம் அதனோடு பிறப்பு ஒவ்வாதேனுஞ் செய்கை ஒத்தலின் அதன்பின்வைத்தார். லகாரமும் வகாரமுந் தம்மிற் பிறப்புஞ் செய்கையும் ஒவ்வாவேனுங் கல்வலிது சொல்வலிது என்றாற்போலத் தம்மிற் சேர்ந்துவருஞ் சொற்கள் பெரும்பான்மையென்பதுபற்றி லகாரமும் வகாரமுஞ் சேரவைத்தார். ழகாரமும் ளகாரமும் ஒன்றானும் இயைபிலவேனும் "இடையெழுத்தென்ப யரல வழள" என்றாற் சந்தவின்பத்திற்கு இயைபுடைமைகருதிச் சேரவைத்தார் போலும்.

அகரம் உயிரகரமும் உயிர்மெய்யகரமுமென இரண்டு. இஃது ஏனையுயிர்கட்கும் ஒக்கும். எனவே, ஓருயிர் பதினெட்டாயிற்று.

இவ் எழுத்தெனப்பட்ட ஓசையை அருவென்பார் அறியாதார். அதனை உருவென்றேகோடும். அது செறிப்பச் சேறலானுஞ்

செறிப்ப வருதலானும் இடையெறியப்படுதலானுஞ் செவிக்கட் சென்று உறுதலானும் இன்பதுன்பத்தை ஆக்குதலானும் உருவும் உருவுங் கூடிப்பிறத்தலானுந் தலையும் மிடறும் நெஞ்சுமென்னும் மூன்றிடத்தும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உறப் பிறக்குமென்றமையானும் உருவேயாம். அருவேயாயின் இவ்விடத்திற் கூறியன இன்மை உணர்க. அல்லதூஉம், வன்மை மென்மை இடைமையென்று ஓதினமையானும் உணர்க. உடம்பொடுபுணர்த்தலென்னும் இலக்கணத்தான் இவ் ஓசை உருவாதல் நிலைபெற்றதென்று உணர்க. அதற்குக் காரணமும் முன்னர்க் கூறினும்.

இவ் எழுத்துக்களின் உருவிற்கு வடிவுகூறாராயினர் அது முப்பத்திரண்டு வடிவினுள் இன்ன எழுத்திற்கு இன்ன வடிவெனப் பிறர்க்கு உணர்த்துதற்கு அரிதென்பது கருதி. அவ்வடிவு ஆராயுமிடத்துப் பெற்ற பெற்ற வடிவே தமக்கு வடிவாம், குழலகத்திற் கூறிற் குழல்வடிவுங் குடத்தகத்திற் கூறிற் குடவடிவும் வெள்ளிடையிற் கூறின் எல்லாத்திசையும் நீர்த்தரங்கமும்போல.

"எல்லா மெய்யு முருவுரு வாகி" எனவும் "உட்பெறு புள்ளி யுருவா கும்மே." எனவும் "மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்." எனவுஞ் சிறுபான்மை வடிவுங் கூறுவர். அது வட்டஞ் சதுரம் முதலிய முப்பத்திரண்டனுள் ஒன்றை உணர்த்தும். மனத்தான் உணரும் நுண்ணுணர்வு இல்லோரும் உணர்தற்கு எழுத்துக்கட்கு வேறு வேறு வடிவங்காட்டி எழுதப்பட்டு நடத்தலிற் கட்புலனாகிய வரிவடிவும் உடையவாயின. பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினர், உயிர்க்கு வடிவின்மையின். "எகர வொகரத் தியற்கையு மற்றே."எனச் சிறுபான்மை உயிர்க்கும் வடிவு கூறினார்

உ. அவைதாங், குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்தமென்ற,
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன.

இது மேற் சார்ந்துவருமென்ற மூன்றிற்கும் பெயரும் முறையும் உணர்த்து.

இ - ள். அவைதாம்=மேற் சார்ந்துவருமெனப்பட்டவைதாம்: குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்=குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஆய்தமென்று சொல்லப்பட்ட மூன்றுகூற்றதாகிய புள்ளிவடிவுமாம்: எழுத்தோரன்ன=

அவையும் முற்கூறிய முப்பதெழுத்தோடு ஒருதன்மையவாய் வழங்கும். எ - று.

முற்கூறிய இரண்டும் உம்மை தொக்குநின்றன. இகர உகரங் குறுகிநின்றன, விகாரவகையாற் புணர்ச்சி வேறுபடுதலின். இவற்றை இங்ஙனங் குறியிட்டாளுதல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. சந்தனக்கோல் குறுகினுஞ் சிரப்பங்கோலாகாது. அதுபோல உயிரது குறுக்கமும் உயிரேயாம். இவற்றைப் புணர்ச்சிவேற்றுமையும் பொருள்வேற்றுமையும்பற்றி வேறோர் எழுத்தாக வேண்டினார்.

இவற்றுட் குற்றியலுகரம் நேர்பசையும் நிரைபசையுமாகச் சீர்களைப் பலவாக்குமாறு செய்யுளியலுள் உணர்க.

ஆய்தமென்ற ஓசைதான் அடுப்புக்கூட்டுப்போல மூன்று புள்ளிவடிவிற்றென்பது உணர்த்தற்கு ஆய்தமென்ற முப்பாற்புள்ளியுமென்றார். அதனை இக்காலத்தார் நடுவுவாங்கியிட்டெழுதுப. இதற்கு வடிவு கூறினார், ஏனையொற்றுக்கள்போல உயிரேறுது ஓசைவிகாரமாய் நிற்பதொன்றாகலின். எழுத்தியல் தழா ஓசைகள் போலக் கொள்ளினுங் கொள்ளற்க என்றற்கு எழுத்தேயாமென்றார். இதனைப் புள்ளிவடிவிற்றெனவே ஏனையெழுத்துக்களெல்லாம் வரிவடிவினவாதல் பெற்றாம்.

முன்னின்ற சூத்திரத்தாற் சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே எழுத்தெனப்படுப முப்பஃதென்ப எனவே, சார்ந்துவரன் மரபின் மூன்றுமே சிறந்தன, ஏனைய முப்பதும் அவ்வாறு சிறந்திலவெனவும் பொருடந்துநிற்றலின் அதனை விலக்கிச் சிறந்த முப்பது எழுத்தோடு இவையும் ஒப்ப வழங்குமென்றற்கு எழுத்தோரன்ன என்றார்.

இப்பெயர்களே பெயர். இம்முறையே முறை. தொகையும் மூன்றே. இம்மூன்று பெயரும் பண்புத்தொகை.

'அவைதாம்' 'ஆய்தமென்ற' என்பன சொற்சீரடி. (உ)

௩. அவற்றுள், அ இ உ,
எ ஒ என்னு மப்பா லைந்து
மோரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.

இது முற்கூறியவற்றுட் சிலவற்றிற்கு அளவுங் குறியும் உணர்த்துஉ.

இ - ள். அவற்றுள்=முற்கூறிய முப்பதெழுத்தினுள்: அ-இ-உ-எ-ஒ என்னும் அப்பாலைந்தும்=அகர இகர உகர எகர ஒகரம் என்றுகூறப்படும் அப்பகுதிகளைந்தும்: ஓரளபு இசைக்குங் குற்றெழுத்தென்ப=ஒரோவொன்று ஓரளபாக ஒலிக்குங் குற்றெழுத்து என்னுங் குறியினையுடைய என்று கூறுவர் புலவர். எ - று. இக் காரணப்பெயர் மேல் ஆளுமாறு ஆண்டு உணர்க.

தமக்கு இனமாயவற்றின்கணல்லது குறுமை நெடுமை கொள்ளப்படாமையின் அளவிற்பட்டு அமைந்தனவாங் குற்றெழுத்திற் குறுகி மெய் அரைமாத்திரை பெற்றதேனுங் குற்றெழுத்து எனப் பெயர்பெறாதாயிற்று, ஒருமாத்திரைபெற்ற மெய் தமக்கு இனமாக இன்மையின். குற்றெழுத்தென்பது பண்புத்தொகை. இனி இசைப்பதும் இசையும் வேறாக உணர்க. அது பொருட் தன்மை.

'அவற்றுள்' 'அ-இ-உ' என்பன சொற்சீரடி. (௩)

ச. ஆ ஈ ஊ, ஏ ஐ,
ஓ ஔ என்னு மப்பா லேழு
மீரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப.

இதுவும் அது.

இ - ள். ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்னும் அப்பால் ஏழும்=ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்று சொல்லப்படும் அக்கூற்றேழும்: ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப=ஒரோவொன்று இரண்டுமாத்திரையாக ஒலிக்கும் நெட்டெழுத்து என்னுங் குறியினையுடைய என்று கூறுவர் ஆசிரியர். எ - று. எனவே, அளவுங் காரணக்குறியும் இங்ஙனம் உணர்த்தி மேல் ஆளுப. ஐகார ஔகாரங்கள் குறிய எழுத்தின் நெடியவாதற்குக் குற்றெழுத்தாகிய இனந் தமக்கின்றேனும் மாத்திரையொப்புமையான் நெட்டெழுத்தென்றார்.

'ஆ ஈ ஊ' 'ஏ ஐ' என்பனவற்றைச் சொற்சீரடியாக்குக. (ச)

ரு. மூவள பிசைத்த லோரெழுத் தின்றே.

இஃது ஐயம் அகற்றியது; ஓரெழுத்து மூவளபாயும் இசைக்குங்கொல்லோவென்று ஐயப்படுதலின்.

இ - ள். ஓரெழுத்து மூவளபு இசைத்தலின்று=ஓரெழுத்தே நின்று மூன்று மாத்திரையாக இசைத்தலின்று. எ - று. எனவே,

பல எழுத்துக் கூடிய இடத்து மூன்று மாத்திரையும் நான்கு மாத்திரையும் இசைக்குமென்றவாறு.

எனவே, பெரும்பான்மை மூன்று மாத்திரையே பெறுமென்றார் புலவர். பல எழுத்தெனவே, நான்கு மாத்திரையும் பெறுதல் பெற்றாம். (ரு)

சா. நீட்டம் வேண்டி னவ்வள புடைய
கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்.

இது மாத்திரை நீளுமாறு கூறுகின்றது.

இ - ள். நீட்டம் வேண்டின் = வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் ஓசையும் பொருளும் பெறுதல்காரணமாக இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையின் மிக்கு ஒலித்தலை விரும்புவராயின்: அவ்வளபு உடைய கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் = தாங் கருதிய மாத்திரையைத் தருதற்கு உரிய எழுத்துக்களைக் கூட்டி அம்மாத்திரைகளை எழுப்புகவென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

கூட்டியெழுப்புமாறு "குன்றிசைமொழி" "ஐ-ஔ வென்னும்" என்பனவற்றான் எழுவகைத்தெனக் கூறுப.

உதாரணம். ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ எனவரும். இவை மூன்றுமாத்திரை பெற்றன. இவைதாம், "நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி." என்ற அந்நெட்டெழுத்துக்களே அளபெடுத்தலிற் சொல்லாதல் எய்திற்று. இனி "அளபெடை யசைநிலை யாகலு முரித்தே." என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தான் எழுத்தாந்தன்மையும் எய்திற்று.

இதுதான் இயற்கையளபெடையுஞ் செய்யுட்குப் புலவர் செய்துகொண்ட செயற்கையளபெடையுமாய்ச் சொற்றன்மை எய்திநின்று அலகுபெறுமாறுங் குற்றியலிகரக் குற்றியலுகரங்கள் போல எழுத்தாந்தன்மை எய்தி அலகுபெறாது நிற்குமாறும் அச்சூத்திரத்தான் உணர்க. எனவே, எழுத்தாந் தன்மையும் உடைமையின் அளபெடையோடு கூடி எழுத்து நாற்பது என்றலும் பொருந்திற்று. ஒற்றளபெடை செய்யுட்கே வருதலின் ஈண்டுக் கூறாராயினார்.

அவ்வளபுடைய எனப் பன்மையாகக் கூறியவதனான் இவரும் நான்குமாத்திரையுங் கொண்டார். என்னை? இவ்வாசிரியரை "முந்துநூல்கண்டு" என்றாராகலின். மாபுராணத்துச் "செய்யுட்களோசை சிதையுங்கா லீரளபு—மையப்பா டின்றி யணையுமா—

மைதீரொற்—றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு—குன்றுமே லொற்றளபுங் கொள்." என்ற சூத்திரத்தான் அவர் கொண்ட நான்குமாத்திரையும் இவ்வாசிரியர்க்கு நேர்தல்வேண்டுதலின். அது "செருஅஅய்வாழியநெஞ்சு" "தூஉஉத்தீம்புகைத் தொல்விசும்பு" "பேஎஎர்த்துக்கொல்" "இலாஅஅர்க்கில்லைதமர்" "விராஅஅய்ச்செய்யாமைநன்று" "மரீஇஇப்பின்னைப்பிரிவு" எனச் சான்றோர் செய்யுட்கெல்லாம் நான்கு மாத்திரை பெற்றுநின்றன. அன்றி மூன்று மாத்திரை பெற்றனவேல் ஆசிரியத்தளை தட்டுச் செப்பலோசை கெடுமாயிற்று. இங்ஙனம் அளபெடாதுநின்று ஆசிரியத்தளை தட்டு நிற்பன கலிக்கு உறுப்பாகிய கொச்சகவெண்பாக்கள்; இவை அன்னவன்றென உணர்க.

கோட்டுநூறும் மஞ்சளுங் கூடிய வழிப் பிறந்த செவ்வண்ணம்போல நெடிலுங் குறிலுங் கூடிய கூட்டத்துப் பிறந்த பின்னர்ப் பிளவுபடாவோசையை அளபெடையென்று ஆசிரியர் வேண்டினர். இவை கூட்டிச்சொல்லியகாலத்தல்லது புலப்படா, எள்ளாட்டியவழியல்லது எண்ணெய்புலப்படாவாறு போல என்று உணர்க. இனி அளபெடையல்லாத ஓசைகளெல்லாம் இசையோசையாதலின் அவற்றை "அளபிறந்துயிர்த்தலும்" என்னுஞ் சூத்திரத்தாற் கூறுப. (௬)

ஏ. கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே.

இது மாத்திரைக்கு அளவு கூறுகின்றது.

இ - ள். கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை = கண்ணிமையெனவும் நொடியெனவும் அவ்விரண்டே எழுத்தின் மாத்திரைக்கு அளவு: நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே = நுண்ணிதாக நூலிலக்கணத்தை உணர்ந்த ஆசிரியர் கண்டநெறி. எ - று.

'என' எண்ணிற் பிரிந்து இரண்டிடத்துங் கூடிற்று. கண்ணிமை நொடி என்னும் பலபொருளொருசொற்கள் ஈண்டுத் தொழின்மேலும் ஓசைமேலும் முறையே நின்றன. ஆசிரியர் எல்லாரும் எழுத்திற்கு இவையே அளவாகக் கூறலின் இவருங் கூறினர். இயற்கை மகன் தன் குறிப்பினன்றி இரண்டிமையும் ஒருகாற்கூடி நீங்கின காலக்கழிவும் அ எனப் பிறந்த ஓசையது தோற்றக் கேட்டுக் காலக்கழிவும் ஒக்கும். இக்கண்ணிமையினது பாகம் மெய்க்குஞ் சார்பிற் றோற்றத்திற்கும் இதன்பாகம் மகரக்குறுக்கத்திற்குங்

கொள்க. இக்கண்ணிமை இரட்டித்துவருதல் நெடிற்கும் அது மூன்றும் நான்குமாய் வருதல் அளபெடைக்குங் கொள்க. அது போலவே நொடித்தற்றொழிலிற் பிறந்த ஓசையது தோற்றக்கேட்டுக் காலக்கழிவும் அ எனப்பிறந்த ஓசையது தோற்றக்கேட்டுக் காலக்கழிவும் ஒக்கும். ஏனையவற்றிற்குங் கூறியவாறே கொள்க.

இனி அவ்வளவைதான் நிறுத்தளத்தல் பெய்தளத்தல் சார்த்தியளத்தல் நீட்டியளத்தல் தெறித்தளத்தல் தேங்கமுகந்தளத்தல் எண்ணியளத்தல் என எழுவகைத்து. அவற்றுள் இது சார்த்தியளத்தலாம்.

கண்ணிமைக்கும் நொடிக்கும் அளவு ஆராயின் வரம்பின்றி ஓடுமென்றுகருதி 'நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறு' என்று முடிந்தது காட்டலென்னும் உத்திகூறினார். இஃது ஆணைகூறுதலுமாம். எனவே, எழுத்திற்கே அளவு கூறி மாத்திரைக்கு அளவு கூறிற்றிலர். நொடியிற் கண்ணிமை சிறப்புடைத்து; உள்ளத்தான் நினைத்து நிகழாமையின். (எ)

அ. ஔகார விறுவாய்ப்,
பன்னீ ரெழுத்து முயிரென மொழிப.

இது குறிலையும் நெடிலையுந் தொகுத்து வேறோர் குறியீடு கூறுகின்றது.

இ - ள். ஔகார இறுவாய்ப் பன்னீரெழுத்தும் = அகரம் முதலாக ஔகாரம் ஈறாகக் கிடந்த பன்னிரண்டெழுத்தும்: உயிரெனமொழிப = உயிரென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் புலவர். எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கியதோர்குறி. மெய் பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய்நின்று மெய்களை இயக்கு மேல் உயிரென வேறோர் எழுத்தின்றாம் பிறவெனின், மெய்யினிற்கும் உயிருந் தனியேநிற்கும் உயிரும் வேறென உணர்க. என்னை? "அகரமுதல்" என்புழி அகரந் தனியுயிருமாய்க் ககரவொற்று முதலியவற்றிற்கு உயிருமாய் வேறு நிற்றலின். அவ் அகரந் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையையுடைத்தென்று

கோடும் இறைவன் ஒன்றேயாய் நிற்குந் தன்மையும் பல்லுயிர்க்குந் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்குந் தன்மையும் போல. அது அ என்றவழியும் ஊர என விளியேற்றவழியும் "அகரமுதல்" என்றவழியும் மூவினங்களில் ஏறினவழியும் ஓசை வேறுபட்டவாற்றான் உணர்க. இங்ஙனம் இசைத்துழியும் மாத்திரை ஒன்றேயாம். இஃது ஏனையுயிர்கட்கும் ஒக்கும்.

ஔகாரவிறுவாய் என்பது பண்புத்தொகை. உம்மை முற்றும்மை. "அகரமுதல்" என முற்கூறிப்போந்தமையின் ஈண்டு ஈறே கூறினார். (அ)

௯. னகார விறுவாய்ப்,
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப.

இஃது உயிரல்லனவற்றைத் தொகுத்து ஓர் குறியீடு கூறுகின்றது.

இ - ள். னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும் = ககாரம் முதல் னகாரம் ஈறாய்க் கிடந்த பதினெட்டு எழுத்தும்: மெய்யென மொழிப = மெய்யென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் புலவர். எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. என்னை? பன்னீருயிர்க்குந் தான் இடங்கொடுத்து அவற்றான் இயங்குந் தன்மை பெற்ற உடம்பாய் நிற்றலின்.

னகாரவிறுவாய் என்பது பண்புத்தொகை. உம்மை முற்றும்மை. முன்னர் னகாரவிறுவாயென்புழி முப்பதெழுத்திற்கும் ஈறு மென்றார், ஈண்டுப் பதினெட்டெழுத்திற்கும் ஈறுமென்றாராதலிற் கூறியது கூறிற்றன்று. (௯)

௧௦. மெய்யோ டியையினு முயிரிய றிரியா.

இஃது உயிர்மெய்க்கு அளவு கூறுகின்றது.

இ - ள். உயிர் மெய்யோடு இயையினும் = பன்னீருயிரும் பதினெட்டு மெய்யோடுங் கூடி நின்றனவாயினும்: இயல் திரியா = தம் அளவுங் குறியும் எண்ணுந் திரிந்துநில்லா. எ - று.

இது "புள்ளியில்லா" என்பதனை நோக்கிநிற்றலின் எதிரது போற்றலாம். உயிரும் மெய்யும் அதிகாரப்படுதலின் ஈண்டுவைத்

தார். அ என்புழி நின்ற அளவுங் குறியும் ஒன்றென்னும் எண்ணுங் க என நின்ற இடத்தும் ஒக்கும், ஆ என்புழி நின்ற அளவுங் குறியும் ஒன்றென்னும் எண்ணுங் கா என நின்ற இடத்தும் ஒக்கும் என்பது இதன் கருத்து. பிறவும் அன்ன. ஆயின் ஒன்றரைமாத்திரையும் இரண்டரைமாத்திரையும் உடையன ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையும் ஆயவாறு என்னையெனின் நீர் தனித்து அளந்துழியும் நாழியாய் அரைநாழியுப்பிற் கலந்துழியுங் கூடி ஒன்றரைநாழியாய் மிகாதவாறுபோல்வதோர் பொருட்பெற்றியென்று கொள்வதல்லது காரணங் கூறலாகாமை உணர்க. ஆசிரியன் ஆணை என்பாரும் உளர். "விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக்—காரெனச் செய்தாரு மில்" என்பதே காட்டினர் உரையாசிரியரும். (கo)

கக. மெய்யி னளவே யரையென மொழிப.

இது தனிமெய்க்கு அளவுகூறுகின்றது.

இ - ள். மெய்யின் அளவே அரையென மொழிப=மெய்யினது மாத்திரையினை ஓரோவொன்று அரைமாத்திரையுடையவென்று கூறுவர் புலவர். எ - று.

அவ்வரைமாத்திரையுந் தனித்துக் கூறிக் காட்டலாகாது, நாச் சிறிது புடைபெயருந் தன்மையாய் நிற்றலின். இனி அதனைச் சில மொழிமேற் பெய்து காக்கை கோங்கு கவ்வையெனக் காட்டுப. மெய்யென்பது அஃறிணையியற்பெயராதலின் மெய்யென்னும் ஒற்றுமைபற்றி அரையென்றார். (கக)

கஉ. அவ்விய னிலையு மேனை மூன்றே.

இது சார்பிற் தோற்றத்து மூன்றற்கும் அளவு கூறுகின்றது.

இ - ள். ஏனைமூன்று=சார்பிற் தோற்றத்து மூன்றும்: அவ்இயல் நிலையும்=முற்கூறிய அரைமாத்திரையாகிய இயல்பின்கண்ணே நிற்கும். எ - று.

கேண்மியா நாகு எஃகு எனவரும். (கஉ)

கங. அரையளவு குறுகன் மகர முடைத்தே
யிசையிட னருகுந் தெரியுங் காலை.

இது மெய்களுள் ஒன்றற்கு எய்தியது விலக்குதனுதலிற்று.

இ - ள். இசை இடன் மகரம் அரையளவு குறுகலுடைத்து= வேறோர் எழுத்தினது ஓசையின்கண் மகரவொற்றுத் தன் அரை மாத்திரையிற் குறுகிக் கால்மாத்திரை பெறுதலையுடைத்து: தெரியுங் காலை அருகும்=ஆராயுங் காலத்துத் தான் சிறுபான்மையாய் வரும். எ - று.

உ-ம். போன்ம் வருவ்வண்ணக்கன் என ஒருமொழிக்கண்ணும் இருமொழிக்கண்ணுங் கொள்க. இது பிறன்கோட்கூறலென்னும் உத்தி. (கந)

கச. உட்பெறு புள்ளி யுருவா கும்மே.

இது பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமைசெய்கின்றது.

மகரம் அதிகாரப்பட்டுநிற்றலின் ஈண்டுக் கூறினார்.

இ - ள். உட்பெறுபுள்ளி=புறத்துப்பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும் புள்ளி: உருவாகும்=மகரத்திற்கு வடிவாம். எ-று.

எனவே புறத்துப்பெறும் புள்ளியாவது மேற்சூத்திரத்தான் மெய்கட்குக் கூறும் புள்ளி. ஈண்டு உருவென்றது காட்சிப்பொருளை உணர்த்திநின்றது.

உ-ம். கப்பி கம்மி எனவரும். இஃது எதிரதுபோற்றல். (கச)

கரு. மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்.

இது தனிமெய்க்கும் உயிர்மெய்க்கும் ஒப்புமை மேல் வேற்றுமைசெய்தல் கூறுகின்றது. என்னை? உயிர்மெய்யான ககர ஙகரங்கட்குந் தனிமெய்யான ககர ஙகரங்கட்கும் வடிவு ஒன்றாக எழுதியவற்றை ஒற்றாக்குதற்குப் பின்பு புள்ளிபெறுகவென்றலின்.

இ - ள். மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்=பதினெட்டுமெய்களின் தன்மையாவது புள்ளிபெற்று நிற்றலாம். எ-று.

எனவே உயிர்மெய்கட்குப் புள்ளியின்றாயிற்று. க்-ங்-ற்-ன் எனவரும். இவற்றைப் புள்ளியிட்டுக் காட்டவே புள்ளிபெறுவதற்குமுன்னர் அகரம் உடனின்றதோர் மெய்வடிவேபெற்று நின்றனவற்றைப் பின்னர் அப்புள்ளியிட்டுத் தனிமெய்யாக்கினாரென்பதூஉம் பெறுதும். இதனானே ககரம் ஙகரம் முதலியன புள்ளிபெறு

வதற்கு முன்னர் இயல்பாக அகரம்பெற்றே நிற்குமென்பதூஉம் புள்ளிபெறுங்காலத்து அவ்வகரம் நீங்குமென்பதூஉம் பின்னர் அப்புள்ளிநீங்கி உயிரேறுமிடத்துத் தன்கண் அகரம் நீங்கியேபோக வருகின்றதோர் உயிர் யாதானும் ஒன்று ஏறி நிற்குமென்பதூஉம் பெற்றாம். "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்." என்னுஞ் சூத்திரத்தானும் இதுவே இதற்குக் கருத்தாதல் உணர்க. (கரு)

கசா. எகர ஒகரத் தியற்கையு மற்றே.

இதுவும் அது.

இ - ள். எகர ஒகரத்து இயற்கையும் அற்றே = எகர ஒகரங்களினது நிலையும் மெய்போலப் புள்ளிபெறும் இயல்பிற்று. எ - று.

எனவே, ஏகார ஓகாரங்கட்குப் புள்ளியின்றாயிற்று.

எ் - ஒ் - எனவரும்.

இஃது உயிர்மெய்க்கும் ஒக்கும்.

மகரம் ஆராய்ச்சிப்பட்டதுகண்டு மகரத்திற்கு வடிவு வேற்றுமைசெய்து, அதிகாரத்தான் மெய்யின் தன்மைகூறி, அதன்பின் மாட்டேற்றலின் எகர ஒகரத்தையுங் கூறினார். (கசா)

கஎ. புள்ளி யில்லா வெல்லா மெய்யு
முருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலு
மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு
மாயீ ரியல வுயிர்த்த லாறே.

இது மெய்யும் உயிருங் கூடிப் புணருமாறும் ஆண்டு அவை திரியாதுந் திரிந்தும் நிற்குமாறுங் கூறுகின்றது.

இ - ள். புள்ளி இல்லா எல்லா மெய்யும் = உயிரைப்பெறுதற்குப் புள்ளியைப் போக்கின எல்லாமெய்களும்: உரு உருவாகி அகரமோடு உயிர்த்தலும் = புள்ளி பெறுகின்ற காலத்து இயல்பாகிய அகரநீங்கிய வடிவே தமக்கு வடிவாகிநின்று பின்னர் ஏறிய அகரத்தோடுகூடி ஒலித்தலும்: ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும் = ஒழிந்த பதினொருயிரோடுங் கூடி அவ்வடிவு திரிந்து ஒலித்தலும்: ஆயீரியல உயிர்த்தலாறே = என அவ்விரண்டு இயல்பினையுடைய அவை ஒலிக்கும் முறைமை. எ - று.

புள்ளியில்லா மெய்யெனவே முன்பெற்றுநின்ற புள்ளியை உயிரேற்றுதற்குப் போக்கினமை பெறுதும். உருவுருவாகியெனவே புள்ளிபெறுதற்காக இயல்பாகிய அகரம் நீங்கிய வடிவே பின்னர் அகரம்பெறுதற்கு வடிவாமென்பது கூறினார்.

க - ங - ய - எனவரும்.

உருவுதிரிந்து உயிர்த்தலாவது மேலுங் கீழும் விலங்குபெற்றுங் கோடுபெற்றும் புள்ளிபெற்றும் புள்ளியுங் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தலாம். கி கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன. கெ கே முதலியன கோடுபெற்றன. கா ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினார். மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினார். கொ கோ ஙொ ஙோ முதலியன புள்ளியுங் கோடும் உடனபெற்றன. இங்ஙனந் திரிந்து ஒலிப்பவே உயிர்மெய் பன்னிருபதினெட்டு இருநூற்றொருபத்தாறாயிற்று. ஆகவே உயிர்மெய்க்கு வடிவும் ஒருவாற்றாற் கூறினாராயிற்று. இதனானே மெய் தனக்கு இயல்பாகிய அகரத்தை நீங்கி நிற்பதோர் தன்மையும் பிறிதோருயிரை ஏற்குந் தன்மையும் உடையதென்பதூஉம் உயிர்மெய்க்கட் புலப்படாது இயல்பாகிய அகரமாய் நிற்குந் தன்மையும் மெய் புள்ளிபெற்றழிந்தவழி அவற்றிற்குத்தக்க உயிராய்ப் புலப்பட்டுவருந் தன்மையும் உடையதென்பதூஉம்பெற்றாம். உயிர்மெய்யென்பது உம்மைத்தொகை. (கஎ)

கஅ. மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே.

இது மெய்யும் உயிருங் கூடியவழி அவற்றின் ஓசைநிற்கும் முறைமை கூறுகின்றது.

இ - ள். மெய்யின்வழியது=மெய்யினது ஓசை தோன்றிய பின்னதாம்: உயிர் தோன்று நிலையே=உயிரினது ஓசை தோன்றும் நிலை. எ - று.

முன்னின்ற சூத்திரத்தான் மெய் முன்னர்நிற்ப உயிர் பின் வந்து ஏறுமென்றார். அம்முறையே ஓசையும் பிறக்குமென்றார். இதனானே மாத்திரை கொள்ளுங்கால் உப்பும் நீரும் போல ஒன்றேயாய் நிற்றலும் வேறுபடுத்துக் காணுங்கால் விரலும் விரலுஞ் சேர நின்றாற்போல வேறாய்நிற்றலும் பெற்றாம். நீர் உப்பின் குணமேயா

யவாறுபோல உயிரும் மெய்யின்குணமேயாய் வன்மை மென்மை இடைமை எய்தி நிற்றல்கொள்க.

உ-ம். க - ங - ய எனக் கூட்டமும் பிரிவும் மூவகையோசையுங் காண்க. (கஅ)

கக. **வல்லெழுத் தென்ப க ச ட த ப ற.**

இது தனிமெய்களுட் சிலவற்றிற்கு வேறோர் குறியீடு கூறுகின்றது.

இ - ள். க ச ட த ப ற = க ச ட த ப ற என்னுந் தனிமெய்களை: வல்லெழுத்தென்ப = வல்லெழுத்தென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் ஆசிரியர். எ - று.

இஃது ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. ஒழிந்த மெல்லெழுத்தையும் இடையெழுத்தையும் நோக்கித் தாம் வல்லென்றிசைத்தலானும் வல்லெனத் தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்தாயிற்று. (கக)

உ0. **மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன.**

இதுவும் அது.

இ - ள். ங ஞ ண ந ம ன = ங ஞ ண ந ம ன என்னுந் தனிமெய்களை: மெல்லெழுத்தென்ப = மெல்லெழுத்தென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் ஆசிரியர். எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. மெல்லென்றிசைத்தலானும் மெல்லென்று மூக்கின்வளியாற் பிறத்தலானும் மெல்லெழுத்தாயிற்று. (உ0)

உக. **இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள.**

இதுவும் அது.

இ - ள். ய ர ல வ ழ ள = ய ர ல வ ழ ள என்னுந் தனிமெய்களை: இடையெழுத்தென்ப = இடையெழுத்தென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் ஆசிரியர். எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. இடைநிகர்த்தாய் ஒலித்தலானும் இடைநிகர்த்தாய் மிடற்றுவளியாற் பிறத்தலானும் இடையெழுத்தாயிற்று.

வல்லினத்துக் க-ச-த-ப என்னும் நான்கும் மெல்லினத்து ஞ-ந-ம என்னும் மூன்றும் இடையினத்து ய-வ என்னும் இரண்டும் மொழிக்கு முதலாதல் நோக்கி இம்முறையே வைத்தார். இப்பெயரானே எழுத்தென்னும் ஓசைகள் உருவாயின. உயிர்க்குங் குறுமை நெடுமை கூறலின் அவையும் உருவாயின. இது சார்பிற் தோற்றத்திற்கும் ஒக்கும். (உக)

உஉ. அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை.

இது தனிமெய் பிறமெய்யோடுந் தன்மெய்யொடும் மயங்கும் மயக்கமும் உயிர்மெய் உயிர்மெய்யோடுந் தனிமெய்யோடும் மயங்கும் மயக்கமுங் கூறுகின்றது.

இ - ள். அம்மூவாறும் = அங்ஙனம் மூன்றுகூறாகப் பகுத்த பதினெட்டுமெய்யும்: வழங்கியல் மருங்கின் = வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் எழுத்துக்களைக் கூட்டி மொழிப்படுத்து வழங்குதல் உளதாமிடத்து: மெய் மயங்கும் நிலை = தனிமெய் தன்முன்னர் நின்ற பிறமெய்யோடுந் தன்மெய்யோடும் மயங்கும் நிலையும்: உடன் மயங்கும் நிலை = அப்பதினெட்டும் உயிருடனே நின்று தன்முன்னர் நின்ற உயிர்மெய்யோடுந் தனிமெய்யோடும் மயங்கும் நிலையுமென இரண்டாம்: தெரியுங்காலை = அவை மயங்கும் மொழியாந்தன்மை ஆராயுங்காலத்து. எ - று.

எனவே, தனித்துநின்ற எழுத்துடன் முன்னின்ற எழுத்துக்கள் தாங் கூடுமாறு கூறினாராயிற்று. கட்க என்றால் இடைநின்ற தனிமெய் முன்னர் நின்ற தன்னின்வேறாய ககரவொற்றோடு மயங்கிற்று. காக்கை என்றால் இடைநின்ற ககரவொற்று முன்னர் நின்ற தன்னொற்றோடு மயங்கிற்று. கரு என ஈரெழுத்தொரு மொழியுங் கருது என மூவெழுத்தொருமொழியும் உயிர்மெய் நின்று தன்முன்னர் நின்ற உயிர்மெய்யோடு மயங்கிற்று. துணங்கை என உயிர்மெய் நின்று தன்முன்னர் நின்ற தனிமெய்யோடு மயங்கிற்று. கல் வில் என்பன உயிர்மெய்நின்று தனிமெய்யோடு மயங்கிற்று.

தெரியுங்காலை என்றதனான் உயிர்முன்னர் உயிர்மெய்ம்மயக்கமும் உயிர்முன்னர்த் தனிமெய்ம்மயக்கமுங் கொள்க. அவை அளை ஆம்பல் என்றாற் போல்வன.

மெய்ம்மயக்கங்களுட் தனிமெய்முன்னர்ப் பிறமெய்நின்று மயங்குதல் பலவாதலிற் பலசூத்திரத்தாற் கூறித் தன்முன்னர்த் தான் வந்து மயங்குதலை ஒருசூத்திரத்தாற் கூறுப. அவை மயங்குங் கால் வல்லினத்தில் டகரமும் றகரமும் மெல்லினமாறும் இடையி னமாறும் பிறமெய்யோடு மயங்குமென்றும் வல்லினத்திற் கசதபக் கள் தன்மெய்யோடன்றிப் பிறமெய்யோடு மயங்காவென்றும் உய்த் துணரக்கூறுமாறு உணர்க.

மூவாறுமென்னும் உம்மை முற்றும்மை.

இச்சூத்திரம் முதலாக "மெய்ந்நிலைசுட்டின்" ஈறாக மேற்கூ றும் மொழிமரபிற்குப் பொருந்திய கருவிகூறுகின்றதென்றுணர்க, எழுத்துக்கள் தம்மிற் கூடிப்புணருமாறு கூறுகின்றதாதலின். (௨௨)

௨௩. டறலள வென்னும் புள்ளி முன்னர்க்
கசப வென்னு மூவெழுத் துரிய.

இது தனிமெய் பிறமெய்யோடு மயங்கும் மயக்கம் உணர்த் துகின்றது.

இ - ள். டறலள என்னும் புள்ளிமுன்னர்=மொழியிடை நின்ற டறலள என்று கூறப்படும் நான்கு புள்ளிகளின்முன்னர்: கசப என்னும் மூவெழுத்து உரிய=கசப என்று கூறப்படும் மூன்றெழுத்தும் வந்து மயங்குதற்கு உரிய. எ - று.

உ-ம். கட்க கட்சி கட்ப எனவுங் கற்க முயற்சி கற்ப எனவுஞ் செல்க வல்சி செல்ப எனவுங் கொள்க நீள்சினை கொள்ப எனவுந் தனிமெய் பிறமெய்யோடு மயங்கியவாறு காண்க. கட்சிறார் கற்சி றார் என்பன இருமொழிப்புணர்ச்சியாகலின் ஈண்டைக்காகா. (௨௩)

௨௪. அவற்றுள்,
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்.

இதுவும் அது.

இ - ள். அவற்றுள்=முற்கூறியநான்கனுள்: லளஃகான்முன் னர்=லகார ளகாரமாகிய புள்ளிகளின் முன்னர்: யவவுந் தோன் றும்=கசபக்களேயன்றி யகர வகரங்களும் வந்து மயங்கும். எ-று.

கொல்யானை செல்வம் வெள்யாறு கள்வன் எனவரும்.

இவற்றுட் கொல்யானை என வினைத்தொகையும் வெள்யாறு எனப் பண்புத்தொகையும் நிலைமொழி வருமொழி செய்வதற்கு இயையாமையின் "மருவின்பாத்திய" என்று கூறுவராதலின் இவ்வாசிரியர் இவற்றை ஒருமொழியாகக் கொள்வரென்று உணர்க. இக்கருத்தானே மேலும் வினைத்தொகையும் பண்புத்தொகையும் ஒருமொழியாகக்கொண்டு உதாரணங் காட்டுதும். அன்றி இவ்வாசிரியர் நூல்செய்கின்ற காலத்து வினைத்தொகைக்கண்ணும் பண்புத்தொகைக்கண்ணுமன்றி ஒருமொழிக்கண்ணே மயங்குவனவும் உளவாதலின் அவற்றைக்கண்டு இலக்கணங் கூறினார். அவை பின்னர் இறந்தனவென்று ஒழித்து உதாரணமில்லனவற்றிற்கு உதாரணங் காட்டாமற் போதலே நன்றென்று கூறலுமொன்று. (௨௪)

௨௫. ஙஞண நமனவெனும் புள்ளி முன்னர்த்
தத்த மிசைக ளொத்தன நிலையே.

இதுவும் அது.

இ - ள். ங ஞ ண ந ம ன எனும் புள்ளி முன்னர் = ங ஞ ண ந ம ன என்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர்: தத்தமிசைகள் = தமக்கினமாய் முன்னின்ற க ச ட த ப றக்கள்: ஒத்தன நிலையே = பின்னிற்றற்குப் பொருந்தின மயங்கிநிற்றற்கண். எ - று.

உ-ம். கங்கன் கஞ்சன் கண்டன் கந்தன் கம்பன் மன்றன் எனவரும். தெங்கு பிஞ்சு வண்டு பந்து கம்பு கன்று எனக் குற்றுகரமுங் காட்டுப. (௨௫)

௨௬. அவற்றுள், ணனஃகான் முன்னர்க்,
கசஞப மயவவ் வேழு முரிய.

இதுவும் அது.

இ - ள். அவற்றுள் = மேற்கூறிய மெல்லொற்று ஆறனுள்: ணனஃகான் முன்னர் = ணகார னகாரங்களின் முன்னர்: க ச ஞ ப ம ய வ ஏழும் உரிய = டறக்களேயன்றிக் க ச ஞ ப ம ய வ என்னும் ஏழெழுத்தும் வந்து மயங்குதற்கு உரிய. எ - று.

உ-ம். எண்கு வெண்சாந்து வெண்ஞாண் பண்பு வெண்மை மண்யாறு எண்வட்டு எனவும், புன்கு புன்செய் மென்ஞாண் அன்பு வன்மை இன்யாழ் புன்வரகு எனவும் வரும். எண்வட்டு வினைத்தொகை. எண்கு புன்கு பெயர். (௨௬)

௨எ. ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றன் மெய்பெற் றன்றே.

இதுவும் அது.

இ - ள். ஞ நமவ என்னும் புள்ளி முன்னர்=ஞ ந ம வ என்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர்: யஃகான் நிற்றல் மெய் பெற்றன்றே=யஃகான் நிற்றல் பொருண்மைபெற்றது. எ - று.

இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ்செய்தலின் அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றாம். அவை இக்காலத்து இறந்தன.

இனி உரையாசிரியர் உரிஞ்யாது பொருந்யாது திரும்யாது தெவ்யாது என இருமொழிக்கண் வருவன உதாரணமாகக் காட்டினாரெலெனின், ஆசிரியர் ஒருமொழியாமாறு ஈண்டுக் கூறி இருமொழிபுணர்த்தற்குப் புணரியலென்று வேறோர் இயலுங் கூறி அதன் கண் "மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியும்" என்று கூறினர். கூறியவழிப் பின்னும் "உகரமொடு புணரும் புள்ளி யிறுதி" என்றும் பிறாண்டும் ஈறுகடோறும் எடுத்தோதிப் புணர்ப்பர். ஆதலின் ஈண்டு இருமொழிப்புணர்ச்சி காட்டிற் கூறியது கூறலென்னுங் குற்றமாம். அதனால் அவைகாட்டுதல் பொருந்தாமை உணர்க. (௨எ)

௨அ. மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்.

இதுவும் அது.

இ - ள். மஃகான் புள்ளிமுன்=முற்கூறியவற்றுள் மகரமாகிய புள்ளிமுன்னர்: வவ்வுந் தோன்றும்=பகர யகரமேயன்றி வகரமும் வந்துமயங்கும். எ - று.

இதற்கும் உதாரணம் இக்காலத்து இறந்தன. அன்றி வரும் வண்ணக்கன் என்றாற்போல்வன காட்டின் "வகார மிசையு மகாரங் குறுகும்." என்ற விதி வேண்டாவாம். (௨அ)

௨௯. யரழ வென்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்.

இதுவும் அது.

இ-ள். யரழ வென்னும் புள்ளி முன்னர் = ய ர ழ என்று கூறப்படும் மூன்று புள்ளிகளின் முன்னர்: முதலாகெழுத்தும் = மொழிக்கு முதலாமென மேற்கூறும் ஒன்பதெழுத்துக்களும்: உம்மையான் மொழிக்கு முதலாகாத பிற எழுத்துக்களும்; ஙகரமொடு தோன்றும் = ஙகாரமும் வந்து மயங்கும். எ - று.

உ-ம். ஆய்க ஆர்க ஆழ்க ஆய்தல் ஆர்தல் ஆழ்தல் ஆய்நர் ஆர்நர் ஆழ்நர் ஆய்பவை ஆர்பவை ஆழ்பவை வாய்மை நேர்மை கீழ்மை எய்சிலை வார்சிலை வாழ்சேரி தெய்வம் சேர்வது வாழ்வது பாய்ஞெகிழி நேர்ஞெகிழி வாழ்ஞெண்டு செய்யாறு போர்யானை வீழ்யானை என மொழிக்குமுதலாம் ஒன்பதும் வந்து மயங்கின. செய்யாறு என யகரத்தின்முன்னர் யகரம் வந்தது தன்முன்னர்த் தான்வந்ததாம்.

இனி உம்மையாற் கொண்ட மொழிக்குமுதலாகாதவற்றின் கண்ணுஞ் சில காட்டுதும். ஓய்வு சோர்வு வாழ்வு ஓய்வோர் சோர்வோர் வாழ்வோர் ஆய்ஞர் சேர்ஞர் ஆழ்ஞர் எனவரும். பிற எழுத்துக்களோடு வருவன உளவேனும் வழக்குஞ் செய்யுளும் நோக்கிக் கூறிக்கொள்க.

இனி வேய்ங்ஙனம் வேர்ங்ஙனம் வேழ்ங்ஙனம் என மொழிக்குமுதலாகாத ஙகரம் இடைவந்த சொற்கள் அக்காலத்து வழங்கின என்றுணர்க; ஆசிரியர் ஓதுதலின். இதனை 'ஙகரமொடு தோன்றும்' எனப் பிரித்தோதினர் அக்காலத்தும் அரிதாக வழங்கலின்.

இனி வேய்கடிது வேர்கடிது வீழ்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது என்பன காட்டின் அவை இருமொழியாக நிலைமொழி வருமொழி செய்து மேற்புணர்க்கின்றன ஈண்டைக்காகா என மறுக்க. (உகூ)

கூ0. மெய்ந்நிலை சுட்டி னெல்லா வெழுத்துந்
தம்முற் றாம்வரூஉம் ரழவலங் கடையே.

இது நிறுத்தமுறையானே தனிமெய் தன்னொற்றோடு மயங்குமாறு கூறுகின்றது.

இ-ள். மெய்ந்நிலை சுட்டின் = பொருணிலைமையைக் கருதின்: எல்லா எழுத்தும் = பதினெட்டு மெய்யும்: தம்முற் தாம் வரூஉம் = தம்முன்னே தாம்வந்து மயங்கும்: ரழ அலங்கடையே = ரகார ழகாரங்களல்லாத இடத்து. எ - று.

உ-ம். காக்கை எங்ஙனம் பச்சை மஞ்ஞை பட்டை மண்ணை தத்தை வெங்நெய் அப்பு அம்மை வெய்யர் எல்லி எவ்வி கள்ளி கொற்றி கன்னி எனவரும்.

மெய்ந்நிலை சுட்டினென்றதனாற் றனிமெய் முன்னர் உயிர் மெய் வருமென்று கொள்க. எல்லாமென்றது ரகார ழகாரங்கள் ஒழிந்தனவற்றைத் தழுவிற்று. (௩௦)

௩௧. அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு.

இது குற்றெழுத்தென்றவற்றுட் சிலவற்றிற்கு வேறோர் குறியீடு கூறுகின்றது.

இ - ள். அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு = அ இ உ என்று கூறிய அம்மூன்றுஞ் சுட்டென்னுங் குறியினையுடைய. எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கியதோர் குறி, சுட்டி அறியப்படும் பொருளை உணர்த்தலின். தன்னினமுடித்தல் என்பதனான் எகரம் வினாப்பொருள் உணர்த்தலுங் கொள்க.

உ-ம். அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எப்பொருள் எனவரும். இவை பெயரைச் சார்ந்து தத்தங் குறிப்பிற் பொருள்செய்த இடைச்சொல். இச்சூத்திரம் ஒருதலைமொழிதலென்னும் உத்தி. இதுவும் மேலைச்சூத்திரமும் எழுத்தாந்தன்மையன்றி மொழிநிலைமைப்பட்டு வேறோர் குறிபெற்று நிற்றலின் மொழிமரபினைச் சேரவைத்தார். (௩௧)

௩௨. ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா.

இது நெட்டெழுத்தென்றவற்றுட் சிலவற்றிற்கு வேறோர் குறியீடு கூறுகின்றது.

இ - ள். ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா = ஆ ஏ ஓ என்று கூறப்பட்ட அம்மூன்றும் வினா என்னுங் குறியினையுடைய. எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி, வினாப்பொருள் உணர்த்தலின்.

உ-ம். உண்கா உண்கே உண்கோ எனவரும். இவற்றுள் ஆகாரம் இக்காலத்து வினாவாய் வருதலரிது. நீயே நீயோ என்பது இக்காலத்து வரும். இவற்றுள் ஏ ஓ என்பன இடைச்சொல்லோத்தினுள்ளுங் கூறினார், ஏகார ஓகாரங்கள் தரும் பொருட்டொகை

பற்றி. இது மொழிந்தபொருளோடொன்றவவ்வயின்மொழியாத தனைமுட்டின்றுமுடித்தலென்னும் உத்திக்கு இனமாம், யகர ஆகாரமும் வினவாய் வருதலின். (௩௨)

௩௩. அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலு
முளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர்.

இது பிறன்கோட்கூறலென்னும் உத்திபற்றி இசைநூற்கு வருவதோர் இலக்கணமாமாறு கூறி, அவ்விலக்கணம் இந்நூற்குங் கொள்கின்றது.

இ - ள். அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் நரம்பின் மறைய என்மனார்புலவர் = முற்கூறிய உயிரும் உயிர்மெய்யும் மாத்திரையை இறந்தொலித்தலும் ஒற்றெழுத்துக்கள் அரைமாத்திரையின் நீண்டொலித்தலும் யாழ்நூலிடத்தன என்று கூறுவர் புலவர்: இசையொடு சிவணிய உளவென மொழிப = அங்ஙனம் அளபிறந்தும் நீண்டும் இசைத்தல் ஓசையோடு பொருந்திய நால்வகைச் செய்யுட்களுக்கும் உளவென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

எழுத்துக்கள் முற்கூறியமாத்திரையை இறந்தொலிக்குமாறு கண்டு, அஃது இறந்தொலிக்கும் இடங் கூறினார், எழுத்துஞ் சொல்லும் பொருளுங் கிடக்கும் இடஞ் செய்யுளிடமாதலின். அது மிக்கொலித்தலைச் செய்யுளியலின்கண் "மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ" என இருபத்தாறு உறுப்பிற்குஞ் சிறப்புறுப்பாக முற்கூறிப், பின்னர் "மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு— மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்." என இச்சூத்திரத்தோடு மாட்டெறிந்து, பின்னும் "எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே— குன்றலு மிகுதலு மில்லென மொழிப." என்றுங் கூறினார். இது எதிரதுபோற்றலென்னும் உத்தியுங் கூறிற்று.

உ-ம். "வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" என்புழி ழகர ஆகாரமும் ககர ஏகாரமும் மாத்திரை இறந்தொலித்தவாறு உணர்க. "பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே" என்புழி ஙகரவொற்று அளவிறந்தவாறு காண்க. ஒழிந்த மூவகைச்செய்யுட்கும் இவவாறே தத்தமக்குரிய பாவென்னும் உறுப்பினை நடாத்தி அளவு மிகுமாறு காண்க.

சிவணிய என்பது தொழிற்பெயர். இசையொடு சிவணிய எனவே செய்யுளாதல் பெற்றும். நரம்பென்றது ஆகுபெயராய்

யாழினை உணர்த்திற்று. மறையென்றது நூலை. மொழிபவென்றும் என்மனூர்புலவரென்றும் இருகாற்கூறியவதனால் இங்ஙனம் பொருள்கூறலே ஆசிரியர்க்குக் கருத்தாயிற்று. என்னை? செய்யுளியலுட் கூறிய "மாத்திரையளவும்" என்னுஞ் சூத்திரத்தில் "மேற்கிளந்தன்ன" என்னும் மாட்டேற்றிற்கு இவ்வோத்தினுள் வேறோர் சூத்திரம் இன்மையின். இவ்விலக்கணங் கூறாக்காற் செய்யுட்குப் பாவென்னும் உறுப்பு நிகழாது அவை உரைச்செய்யுட் போல நிற்றலின் இவ்விலக்கணங் கூறவேவேண்டுமென்று உணர்க.

"சூத்திரத் துப்பொரு ளன்றியும் யாப்புற—வின்றி யமையா தியைபவை யெல்லா—மொன்ற வுரைப்ப துரையெனப் படுமே." என்னும் மரபியற்சூத்திரத்தானே இவவாறே சூத்திரங்களை நலிந்து பொருளுரைப்பனவெல்லாங் கொள்க. (௩௩)

முதலாவது நூன்மரபுமுற்றிற்று.

இரண்டாவது

மொழிமரபு.

௩௪. குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே.

என்பது சூத்திரம். மேல் எழுத்து உணர்த்தியபின்னர் அவை தம்முட் தொடருமாறும் உணர்த்தி அவ்வெழுத்தானும் மொழியது மரபு உணர்த்துகின்றமையின் இவவோத்து மொழிமரபெனக் காரணப்பெயர்த்தாயிற்று. இச்சூத்திரம் முன்னர்ச் சார்ந்துவருமென்ற மூன்றனுட் குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக்கோடுங் கூறுகின்றது.

இ - ள். உரையசைக் கிளவிக்கு வரூஉம்=தான்கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முகமாக்குஞ் சொல்லிற்குப் பொருந்தவரும்: ஆவயின்=அம் மியாவென்னும் இடைச்சொல்லைச் சொல்லுமிடத்து: யாவென் சினைமிசை மகரம் ஊர்ந்து=யாவென்னும் உறுப்பின்மேலதாய் முதலாய்நின்ற மகரவொற்றினையேறி: குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்=குற்றியலிகரம் நிற்றலை விரும்பும் ஆசிரியன். எ - று.

உ-ம். கேண்மியா சென்மியா எனவரும். கேளென்றது உரையசைக்கிளவி; அதனைச்சார்ந்து தமக்கு இயல்பின்றி நின்றது மியாவென்னும் இடைச்சொல். அவ்விடைச்சொல் முதலும் அதனிற் பிரியும் யா அதற்கு உறுப்புமாமென்று கருதி யாவென்சினை என்றார். மியா இடம்; மகரம் பற்றுக்கோடு. யாவும் இகரம் அரைமாத்திரையாதற்குச் சார்பு. இவ்விடைச்சொற் தனித்துநிற்றல் ஆற்றுமையிற் கேளென்பதனோடு சார்ந்து ஒருசொல்லாயே நின்றுழி இடைநின்ற இகரம் ஒருமொழியிடத்துக் குற்றியலிகரமாய் வருதலானும் ஆண்டு உணர்த்தற்குச் சிறப்பின்மையானும் ஈண்டுப் போதந்து கூறினார். ஊர்ந்தெனவே குற்றியலிகரமும் உயிரென்பது பெற்றாம், உயிர்க்கல்லது ஏறுதலின்மையின். (௧)

௩௫. புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.

இது குற்றியலிகரம் புணர்மொழியகத்தும் வருமென்கின்றது.

இ - ள். புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே = அக்குற்றியலிகரம் புணரியலுள் ஒருமொழிக்கண்ணன்றி இருமொழி தம்மிற் புணர்தலியன்ற நிலைமைக்கண்ணுங் குறுகுதலுரித்து: உணரக் கூறின் முன்னர்த் தோன்றும் = அதற்கு இடமும் பற்றுக்கோடும் உணரக் கூறத்தொடங்கின் அவை குற்றியலுகரப்புணரியலுள்ளே கூறப்படும். எ - று.

குறுகலுமென்னுமிடத்து உம்மையை நிலையிடையுமென மாறிக்கூட்டுக. "யகரம்வருவழி" என்னுஞ் சூத்திரத்து யகரம் இடம், உகரஞ் சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

உ-ம். நாகியாது வரகியாது தெள்கியாது எஃகியாது கொக்கியாது குரங்கியாது எனவரும். இது மொழிவாமென்னும் உத்தி. (௨)

௩௬. நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.

இஃது ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துகின்றது.

இ - ள். குற்றியலுகரம் வல்லாறு ஊர்ந்தே = குற்றியலுகரம் வல்லெழுத்துக்கள் ஆறினையும் ஊர்ந்து: நெட்டெழுத்திம்பருந்

தொடர்மொழி ஈற்றும் = நெட்டெழுத்தின்பின்னும் ஐவகைத் தொடர்மொழியின் இறுதியினும் நிற்றல்வேண்டும் ஆசிரியன். எ - று.

நெட்டெழுத்தினதுபின் தொடர்மொழியினது ஈறெனநிலத்ததகலம்போல ஒன்றியற்கிழமைப்பட்டு நின்றது, அம்மொழியிற் றீர்ந்து குற்றியலுகரம் நில்லாமையின். வல்லாறு பண்புத்தொகை. முற்றும்மை தொக்குநின்றது. அதிகாரமுறைமையென்னும் உத்தியான் நிற்றல்வேண்டுமென்பது வருவிக்க.

உ-ம். நாகு வரகு தெள்கு எஃகு கொக்கு குரங்கு எனவரும். இவ்வாறுவகையும் இடம்; வல்லெழுத்துப் பற்றுக்கோடு. எனவே, மொழிக்கு ஈருதலும் பெற்றும். பெருமுரசு திருமுரசு என்பன இருமொழிக்கண்வந்த முற்றுகரம். பரசு இங்கு ஏது என்னும் முற்றுகரங்கள் வடமொழிச்சிதைவு. தருக்கு அணுக்கு என்பன வினைக்கண்வந்த முற்றுகரம். குற்றுகரத்திற்கு முன்னர்வந்த உயிரேறிமுடிய அரைமாத்திரையாய் நிற்றலும், முற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறிமுடியாமையுந் தம்முள் வேற்றுமை. (௩)

௩௭. இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான.

இது குற்றியலுகரம் புணர்மொழிக்கட் தன் அரைமாத்திரையிற் குறுகிவருமென்கின்றது.

இ - ள். இடைப்படிற் குறுகும் இடனுமார் உண்டே = அவ்வுகரம் ஒருமொழியுளன்றிப் புணர்மொழியிடைப்படிற் தன் அரைமாத்திரையினுங் குறுகும் இடனும் உண்டு: கடப்பாடு அறிந்த புணரியலான = அதற்கு இடனும் பற்றுக்கோடும் யாண்டுப் பெறுவதெனின், அதன் புணர்ச்சிமுறைமை அறியுங் குற்றியலுகரப்புணரியலுள். எ - று.

"வல்லொற்றுத்தொடர்மொழி" என்பதனுள் வல்லெழுத்துத் தொடர்மொழியும் வல்லெழுத்துவரும்வழியும் இடம்; ஈற்றுவல்லெழுத்துப் பற்றுக்கோடு.

உ-ம். செக்குக்கணை சுக்குக்கோடு எனவரும். இவை அரைமாத்திரையிற் குறுகியவாறு ஏனையவற்ரோடு படுத்து உணர்க. இடனுமெனவே இது சிறுபான்மையாயிற்று. (௪)

௩௮. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

இது நிறுத்தமுறையானே ஆய்தம் ஒருமொழியுள் வருமாறு கூறுகின்றது.

இ - ள். ஆய்தப்புள்ளி=ஆய்தமாகிய ஒற்று: குறியதன்முன்னர் உயிரொடுபுணர்ந்த வல்லாறன் மிசைத்து=குற்றெழுத்தின் முன்னதாய் உயிரோடுகூடிய வல்லெழுத்தாறின் மேலிடத்ததாய் வரும். எ - று.

வல்லாறன்மிசைத்தென்றதனும் ஈண்டுப் புள்ளியென்றதனும் "ஆய்தத்தொடர்மொழி" என மேற்கூறுதலானும் உயிரென்றது ஈண்டுப் பெரும்பான்மையுங் குற்றுகரமேயாம். சிறுபான்மை ஏனையுயிர்களையுங் கொள்க.

உ-ம். எஃகு கஃசு கஃடு கஃது கஃபு கஃறு அஃது இஃது உஃது எனவரும். கஃறீது முஃடீது என்பனவற்றை மெய்பிறிதாகியபுணர்ச்சி என்றதனும் ஈண்டுப் புள்ளியென்றதனும் ஆய்தமும் மெய்யாயிற்று. அஃகாமை வெஃகாமை அஃகி வெஃகி அஃகம் எனப் பிறவுயிர்களோடும் வந்தது. கஃசியாதெனத் திரிந்ததுவுங் குற்றியலுகரத்தோடு புணர்ந்ததாம். (ரு)

ஙக. ஈறியன் மருங்கினு மிசைமை தோன்றும்.

இஃது அவ்வாய்தம் புணர்மொழியகத்தும் வருமாறு கூறுகின்றது.

இ - ள். ஈறியன் மருங்கினும்=நிலைமொழியீறு வருமொழிமுதலோடு புணர்ந்து நடக்கும் இடத்தும்: இசைமை தோன்றும்=அதன் அரைமாத்திரையே இசைக்குந்தன்மை தோன்றும். எ - று.

உ-ம். கஃறீது முஃடீது எனவரும். இவ்வீறு இயலுமாறு புள்ளிமயங்கியலுட் பெறுதும். ஈண்டும் இடம் குற்றெழுத்துமேல் வரும் வல்லெழுத்து. (சா)

சo. உருவினு மிசையினு மருகித் தோன்று
மொழிக்குறிப் பெல்லா மெழுத்தி னியலா
வாய்த மஃகாக் காலை யான.

இஃது எதிரதுபோற்றலென்னும் உத்தியாற் செய்யுளியலை நோக்கி ஆய்தத்திற்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

இ - ள். உருவினும் இசையினும் அருகித் தோன்றுங் குறிப்பு மொழியும்=நிறத்தின்கண்ணும் ஓசையின்கண்ணுஞ் சிறுபான்மை ஆய்தந் தோன்றும் பொருள்குறித்தலையுடைய சொல்லும்: எல்லா மொழியும்=அவையொழிந்த எல்லாமொழிகளும்: எழுத்தினிய லா=ஒற்றெழுத்துக்கள்போல அரைமாத்திரையின்கண்ணும் சிறு பான்மை மிக்கும் நடந்து: ஆய்தம் அஃகாக் காலையான=ஆய்தஞ் சுருங்காத இடத்தான சொற்களாம். எ - று.

எனவே, ஈண்டு ஆராய்ச்சியின்றேனுஞ் செய்யுளியலிற்கூறும் "ஒற்றளபெடுப்பினு மற்றெனமொழிப்." என்னுஞ் சூத்திரத்துக் "கண்ண் டண்ணெனக் கண்டுங்கேட்டும்" என்புழிக் கண்ண்ணென் பது சீர்நிலையெய்தினாற்போலக், "கஃஃறென்னுங்கல்லதரத்தம்" என நிறத்தின்கண்ணுஞ் "சுஃஃறென்னுந்தண்டோட்டுப்பெண்ணை" என இசையின்கண்ணும் வந்த ஆய்தம் ஒருமாத்திரைபெற்றுச் சீர்நி லையெய்துங்கால், ஆண்டுப் பெறுகின்ற ஒருமாத்திரைக்கு ஈண்டு எதிரதுபோற்றி விதிகூறினர், ஆய்தம் அதிகாரப்பட்டமை கண்டு. "எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்—வெஃஃகு வார்க்கில்லை வீடு" என்று ஏனையிடத்தும் வந்தன. ஒற்றளபெடுக்குமாறு இவ்வ திகாரத்துக் கூறிற்றிலர், அஃது உயிரளபெடைபோலச் சீர்நிலை யெய்தலும் அசைநிலையாந்தன்மையுமுடையவாய்ச் செய்யுட்கே வருதலின். இதனனே ஒற்றளபெடையும் ஒருமாத்திரை பெறு மென்பது பெற்றாம்.

எழுத்தினென்ற இன் உவமப்பொருள். இயலாவென்றது செய்யாவென்னும் வினையெச்சம்.

இவ்வாறன்றி இக்குறிப்புச்சொற்கள் ஆய்தம் இரண்டிட்டு எழுதப்படாவென்று பொருள்கூறிற் செய்யுளியலோடு மாறுபட்டு மாறுகொளக்கூறலென்னுங் குற்றந் தங்குமென்று உணர்க. (எ)

சக. குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே.

இஃது எதிரதுபோற்றலென்னும் உத்திபற்றிச் செய்யுளியலை நோக்கி "நீட்டம்வேண்டின்" என முற்கூறிய அளபெடையாமாறு கூறுகின்றது.

இ - ள். குன்றிசை மொழிவயின் நின்று இசைநிறைக்கும்= அளபெடுத்துக் கூறாக்காற் குன்றுவதான ஓசையையுடைய அவ்வ

ளபெடைச்சொற்கண்ணே நின்று அவ்வோசையைநிறைக்கும்: அவை யாவையோவெனின், நெட்டெழுத்திம்பர் ஒத்த குற்றெழுத்தே = நெட்டெழுத்துக்களின் பின்னாகத் தமக்கு இனமொத்த குற்றெழுத்துக்கள். எ - று.

உ-ம். ஆஅ ஈஇ ஊஉ ஏஎ ஓஒ எனவரும். குன்றிசைமொழி என்றதற்கு இசைகுன்றுமொழி என்றுமாம். இனமொத்தலாவது பிறப்பும் புணர்ச்சியும் ஓசையும் வடிவும் ஒத்தல். ஈண்டு மொழியென்றது "அளபெடையசைநிலை" என்னுஞ் செய்யுளியற்சூத்திரத்து எட்டு இயற்சீரின்பாற் படுகின்ற எண்வகை அளபெடைச் சொற்களையும். அவை ஆஅ கடாஅ ஆஅழி படாஅகை ஆஅங்கு ஆஅவது புகாஅர்த்து விராஅயது என்பனவாம். கட்டளைகொள்ளா ஆசிரியர் இவற்றைத் தனிநிலை முதனிலை இடைநிலை இறுதிநிலையென்றும் அடக்குப. இனி மொழியென்றதற்குத் தனிநிலை ஏழனையுமே கொள்ளின், ஒழிந்த இயற்சீரப்பாற் படும் அளபெடைகோடற்கு இடமின்மை உணர்க. (அ)

சஉ. ஐஔ வென்னு மாயீ ரெழுத்திற்
இகர வுகர மிசைநிறை வாகும்.

இஃது ஒத்தகுற்றெழுத்து இல்லாதன அளபெடுக்குமாறு கூறுகின்றது.

இதுவும் எதிரதுபோற்றல்.

இ - ள். ஐஔ என்னும் ஆயீரெழுத்திற்கு = தமக்கு இனமில்லாத ஐகார ஔகாரமென்று கூறப்படும் அவ்விரண்டெழுத்திற்கு: இகர உகரம் இசைநிறைவாகும் = ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய இகர உகரங்களைச் சார்த்திக் கூற, அவை அக்குன்றிசைமொழிக்கண் நின்று ஓசையை நிறைப்பனவாம். எ - று.

ஐஇ ஔஉ என நிரனிறையாகக்கொள்க. இவற்றை முற்கூறிய இயற்சீரெட்டிற்கும் ஏற்பனவற்றோடு உதாரணங்காட்டிக் கொள்க.

இத்துணையும் நூன்மரபின் ஒழிபு. (க)

சங. நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி.

இஃது ஓரெழுத்தொருமொழி உணர்த்துதல் நுதலியவற்றுள் நெட்டெழுத்தானும் மொழியாக்கங் கூறுகின்றது.

இ - ள். நெட்டெழுத்து ஏழே=நெட்டெழுத்தாகிய உயிர்களேழும்: ஓரெழுத்தொருமொழி=ஓரெழுத்தாகும் ஒருமொழியாம். எ - று.

முற்றும்மைதொகுத்து ஈற்றசையேகாரம் விரித்தார்.

உ-ம். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவரும். ஔகாரம் உயிர்மெய்க்கண்ணல்லது வாராது. ஊ என்பது தசை. இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் விதி. கா தீ பூ சே தை கோ கௌ எனவரும். இவை தம்மையுணரநின்றவழி எழுத்தாம். இடைநின்று பொருளுணர்த்தியவழிச் சொல்லாம். நெட்டெழுத்தேறியமெய் நெட்டெழுத்தாயுங் குற்றெழுத்தேறியமெய் குற்றெழுத்தாயும் நிற்றலேயன்றி மெய்க்கு நெடுமையுங் குறுமையும் இன்மை உணர்க. (கo)

சச. குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே.

இது குற்றெழுத்து ஐந்தும் மொழியாகா. அவற்றுட் சில மொழியாகுமென்பது உணர்த்துகின்றது.

இ - ள். குற்றெழுத்து ஐந்தும்=குற்றெழுத்தாகிய உயிரைந்தும்: மொழிநிறைபு இலவே=தாமே நிறைந்து நின்று மொழிதல் இல; சில மெய்யோடுகூடி நிறைந்துநின்று மொழியாம்.

உ-ம். து நொ எனவரும். இவை உயிர்மெய்க்கண்ணல்லது வாராமையானும், உயிர்க்கண்ணும், ஏனை அகரமும் எகரமும், அக்கொற்றன் எப்பொருள் எனத் தனித்துநின்று உணர்த்தலாற்றாது இடைச்சொல்லாய்ப் பெயரைச்சார்ந்துநின்று சுட்டுப்பொருளும் வினாப்பொருளும் உணர்த்துதலானும் நிறைபிலவென்றார். முற்றும்மை ஈண்டு எச்சப்பட்டுநின்றதென்று உணர்க. (கக)

சரு. ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

இது முன்னர் மெய்ம்மயக்கம் உடனிலைமயக்கங் கூறலானும் ஈண்டு "நெட்டெழுத்தேழே" என்பதனானும் எழுத்தினான் மொழியாமாறு கூறினார், அம்மொழிக்கு இச்சூத்திரத்தாற் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றார்.

இ - ள். ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி இரண்டிறந்து இசைக்குந் தொடர்மொழி உளப்பட=ஓரெழுத்தானும் ஒருமொழியும் இரண்டெழுத்தானும் ஒருமொழியும் இரண்டனை இறந்து பலவாற்ருன் இசைக்குந் தொடர்மொழியுடனே கூட: மொழிநிலை மூன்றே=மொழிகளின் நிலைமை மூன்றேயாம்: தோன்றிய நெறியே=அவை தோன்றிய வழக்குநெறிக்கண். எ - று.

உ-ம். ஆ கா நா ஓரெழுத்தொருமொழி, மணி வரகு கொற்றன் ஈரெழுத்தொருமொழி, குரவு அரவு மூவெழுத்தொருமொழி, கணவிரி நாலெழுத்தொருமொழி, அகத்தியனார் ஐயெழுத்தொருமொழி, திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொருமொழி, பெரும்பற்றப்புலியூர் ஏழெழுத்தொருமொழி.

ஓரெழுத்தொருமொழியுந் தொடர்மொழியுமென்னுது ஈரெழுத்தொருமொழியும் ஓதினர், சில பல என்னுந் தமிழ்வழக்கு நோக்கி.

ஆசிரியர் ஒற்றுங் குற்றுகரமும் எழுத்தென்று கொண்டனராதலின் மா கா எனநின்ற சொற்கள் மால் கால் என ஒற்றடுத்துழி ஒற்றினன் வேறுபொருள் தந்து நிற்றலின் இவற்றை ஈரெழுத்தொருமொழியென்றும் நாகு வரகு என்னுங் குற்றுகர ஈற்றுச் சொற்களிற் குற்றுகரங்கள் சொல்லோடுகூடிப் பொருள் தந்து நிற்றலின் இவற்றை ஈரெழுத்தொருமொழி மூவெழுத்தொருமொழியென்றுங் கோடுமென்பார்க்கு, ஆசிரியர் பொருளைக் கருதாது மாத்திரை குறைந்தமைபற்றி "உயிரிலெழுத்து மெண்ணப்படா" "குறிலே நெடிலே குறிலிணை" என்னுஞ் செய்யுளியற் சூத்திரங்களால் இவற்றை எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறு என்று விலக்குவராதலின், அவற்ருல் ஈண்டு ஈரெழுத்தொருமொழியும் மூவெழுத்தொருமொழியுங் கொள்ளின் மாறுகொளக்கூறலென்னுங் குற்றந் தங்குமென்று மறுக்க.

இனி "நெட்டெழுத்தேழேயோரெழுத்தொருமொழி." "குற்றெழுத்தைந்துமொழிநிறைபிலவே." என்பனவற்ருன் மெய்க்குக் குறுமைநெடுமையின்மையான் உயிரும் உயிர்மெய்யுமாகிய நெடிலுங் குறிலுமே மொழியாமென்று கூறி, மீட்டும் அதனையே இச்சூத்திரத்தான் ஓரெழுத்தொருமொழியென்றெடுத்து, அதனோடே ஈரெழுத்தையும் இரண்டிறந்ததனையுங் கூட்டி மொழியாகக் கோடலின், ஒற்றினைக்கூட்டி எழுத்தாகக்கோடல் ஆசிரியர்க்குக் கருத்தன்மையுணர்க. அன்றியும் "மொழிப்படுத்திசைப்பினும்" என்

னுஞ் சூத்திரத்திற் கூறுகின்றவாற்ருனும் உணர்க. "அகரமுதி னகர விறுவாய் முப்பஃதென்ப" என ஒற்றினையும் எழுத்தென்றது எழுத்தின் தன்மை கூறிற்று. ஈண்டு மொழியாந்தன்மை கூறிற்று. (கஉ)

சசு. மெய்யி னியக்க மகரமொடு சிவணும்.

இது தனிமெய்களை அகரம் இயக்குமாறு கூறுகின்றது.

இ - ள். மெய்யினியக்கம் = தனிமெய்களினது நடப்பு: அகரமொடு சிவணும் = அகரத்தோடு பொருந்தி நடக்கும். ஏ - று.

எனவே ஒருவன் தனிமெய்களை நாவாற் கருத்துப்பொருளாகிய உருவாக இயக்கும் இயக்கமும் மூவகையாற் காட்சிப்பொருளாகிய வடிவாக இயக்கும் இயக்கமும் அகரத்தோடு பொருந்தி நடக்கும் என்றவாறு.

உ-ம். "வல்லெழுத் தென்ப க ச ட த ப ற." "ககார ஙகார முதனு வண்ணம்." என்ருற்போல்வன நாவால் இயக்கியவாறு காண்க. எழுதிக்காட்டுமிடத்துக் ககரம் முதலியன உயிர்பெற்று நின்ற வடிவாக எழுதிப், பின்னர்த் தனிமெய்யாக்குதற்குப் புள்ளியிட்டுக் காட்டுகின்றவாற்ருன் வடிவை இயக்குமிடத்தும் அகரங் கலந்துநின்றவாறு காண்க.

இங்ஙனம் மெய்க்கண் அகரங்கலந்துநிற்குமாறு கூறினுற்போலப் பதினேருயிர்க்கண்ணும் அகரங்கலந்துநிற்குமென்பது ஆசிரியர் கூருராயினுர், அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானுமென்று உணர்க. இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல அகரமும் உயிர்க்கண்ணுந் தனிமெய்க்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்ரேர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது, "அகரமுதல" என்னுங் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம் அதுபோல இறைவனுகிய முதலையுடைத்து உலகமென வள்ளுவனுர் உவமைகூறியவாற்ருனுங், கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானேயெனக் கூறியவாற்ருனும் பிறநூல்களானும் உணர்க.

இதனுன் உண்மைத்தன்மையுஞ் சிறிது கூறினுராயிற்று. இதனை நூன்மரபிற் கூருது ஈண்டுக் கூறினுர்,"வல்லெழுத் தென்ப

கசட தபற." என்ற இடத்துத் தான் இடைநின்று ஒற்றென்ப தோர் பொருளை உணர்த்தி மொழியாந்தன்மை எய்திநிற்றலின்.(கங)

சஎ. தம்மியல் கிளப்பி னெல்லா வெழுத்து
மெய்ந்நிலை மயக்க மான மில்லை.

இது முன்னர் மெய்க்கண் உயிர்நின்றவாறு கூறி அவ்வுயிர் மெய்க்கண் ஏறி உயிர்மெய்யாய் நின்றகாலத்து அம்மெய்யாற் பெயர்பெறுமாறு கூறுகின்றது.

இ - ள். எல்லா எழுத்தும்=பன்னீருயிரும்: மெய்ந்நிலை தம் இயல் மயக்கங் கிளப்பின்=மெய்யின் தன்மையிலே தம்முடைய தன்மை மயங்கிற்றாகப் பெயர்கூறின்: மானமில்லை=குற்றமில்லை: எ - று.

மெய்யின் தன்மையாவது வன்மை மென்மை இடைமை. தம்மியலாவது உயிர்த்தன்மை. என்றது வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்தென உயிர்மெய்க்கும் பெயரிட்டாளுதல் கூறிற்று. அவை "வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே" எனவும், "மெல்லெழுத் தியையி னிறுதியோ டுறழும்" எனவும், "இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள." எனவும் பிறாண்டும் ஆள்ப. எழுத்தை வன்மை மென்மை இடைமையென விசேடித்த சிறப்பான் இப்பெயர் கூறினார்.

இஃதன்றிப் பதினெட்டுமெய்யுந் தன்மைகூறுமிடத்து மெய்ம் மயக்கங்கூறிய வகையானன்றி வேண்டியவாறு மயங்குமென்று கூறி "அவற்றுள், ல ள ஃகான்முன்னர்" என்பதனைக் காட்டில் அஃது இருமொழிக்கண்ணதென மறுக்க. (கச)

சஅ. ய ர ழ வென்னு மூன்று மொற்றக்
க ச த ப ங ஞ ந ம வீரொற் றாகும்.

இஃது ஈரொற்றுடனிலையாமாறு கூறுகின்றது.

இ - ள். ய ர ழ என்னும் மூன்றும் ஒற்ற=ய ர ழ வென்று கூறப்படும் மூன்றுபுள்ளியும் ஒற்றாய்நிற்ப: க ச த ப ங ஞ ந ம ஈரொற்றாகும்=க ச த பக்களும் ங ஞ ந மக்களும் வந்து ஈரொற் றாய்நிற்கும். எ - று.

உ-ம். வேய்க்க வாய்ச்சி பாய்த்தல் வாய்ப்பு எனவும், பீர்க்கு நேர்ச்சி வார்த்தல் ஆர்ப்பு எனவும், வாழ்க்கை தாழ்ச்சி தாழ்த்தல்

தாழ்ப்பு எனவும், காய்ங்கனி தேய்ஞ்சது காய்ந்தனம் காய்ம்புறம் எனவும், நேர்ங்கல் நேர்ஞ்சிலை நேர்ந்திலை நேர்ம்புறம் எனவும்வரும். ழகாரத்திற்கு வாழ்ந்தனம் என இக்காலத்து நகரவொற்றுவரும். ஏனையமூன்றும் இக்காலத்து வழங்குமெனின் உணர்க.

இனித் தாழ்ங்குலை தாழ்ஞ்சினை தாழ்ந்திரள் வீழ்ம்படை என அக்காலத்து வழங்குமென்று இத்தொகைச்சொற்கள் காட்டலும் ஒன்று. உரையாசிரியரும் இருமொழிக்கட் காட்டியவற்றிற்கு அவ் வீறுகடோறுங் கூறுகின்ற சூத்திரங்கள் பின்னர்வேண்டாமை உணர்க. இஃது ஈரொற்றுடனிலையாதலின் ஈண்டு வைத்தார்

இனி நெடிற்கீழேயன்றிப் பலவெழுத்துந் தொடர்ந்துநின்ற தன்பின்னும் ஈரொற்று வருதல்கொள்க. அவை வேந்தர்க்கு அன்றுய்க்கு என்றாற்போல்வனவாம். (கரு)

சகூ. அவற்றுள், ரகார ழகாரங் குற்றொற் றாகா.

இஃது எய்தியது ஒருமருங்கு மறுத்தல் கூறுகின்றது.

இ - ள். அவற்றுள் = முற்கூறிய மூன்றனுள்: ரகார ழகாரம் = ரகாரமும் ழகாரமும்: குற்றொற்றாகா = குறிற்கீழ் ஒற்றாகா, நெடிற்கீழ் ஒற்றாம், குறிற்கீழ் உயிர்மெய்யாம். எ - று.

கீழென்னும் உருபு தொகுத்துக்கூறினார். ஆகாதனவற்றிற்கு உதாரணமின்று.

உ-ம். கார் வீழ் என நெடிற்கீழ் ஒற்றாய் வந்தன. கரு மழு எனக். குறிற்கீழ் உயிர்மெய்யாய் வந்தன. இவற்றை விலக்கவே யகரம் பொய் எனவும் நோய் எனவும் இரண்டிடத்தும் ஒற்றாய் வருதல் பெற்றாம். புகர் புகழ் புலவர் என்றாற்போல்வனவோவெனின், மொழிக்குமுதலாம் எழுத்தினைச் சொல்வனவற்றிற்கே ஈண்டு ஆராய்ச்சியால் அவை வேண்டியவாறே வருமென்று உணர்க. அன்றியுங் குற்றொற்றென்றே சூத்திரஞ்செய்தலிற் குறிலிணையொற்றினைக் காட்டிக் கடாவலாகாமை உணர்க. இது வரையறையின்றி உயிர்மெய்யோடு தனிமெய் மயங்குவனவற்றிற் சிலவொற்றிற்கு வரையறை ஈண்டுக் கூறியது. (கசா)

ருo. குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல.

இஃது "அளபிறந்துயிர்த்தலும்" என்னுஞ் செய்யுளியலை நோக்கிய நூன்மரபிற்சூத்திரத்திற்குப் புறனடையாய் அதன்கண் நிகழ்வதோர் ஐயம் அகற்றுகின்றது; என்னை? உயிரும் உயிர்மெய்யும் அளபிறந்து இசைக்குங்காற் குறிலோ நெடிலோ இசைப்பதெனை மாணாக்கர்க்கு நிகழ்வதோர் ஐயம் அறுத்தலின்.

இ - ள். குறுமையும் நெடுமையும் = எழுத்துக்களது குறிய தன்மையும் நெடியதன்மையும்: அளவிற்கோடலின் = மாத்திரை யென்னும் உறுப்பினைச் செவிகருவியாக அளக்கின்ற அளவுதொழிலாலே செய்யுட்குக் கொள்ளப்படுதலின்: தொடர்மொழியெல்லாம் = அம்மாத்திரை தம்முட் தொடர்ந்துநிற்கின்ற சொற்களெல்லாம்: நெட்டெழுத்தியல = நெட்டெழுத்து மாத்திரை மிக்குநடக்கும்படியாகத் தொடர்ந்தசொல்லாம். எ - று.

உ-ம். "வருவர்கொல்வயங்கிழாஅய்" எனவும், "கடியவேகனங்குழாஅய்" எனவுங் குற்றெழுத்துக்களெல்லாம் நெட்டெழுத்தினை மாத்திரைமிகுத்தற்குக் கூடியவாறு உணர்க. ஏனைச்செய்யுட்களையும் இவ்வாறேகாண்க. எனவே, மாத்திரை அளக்குங்கால் நெட்டெழுத்தே மாத்திரைபெற்று மிக்குநிற்கும் என்றமையான், எதிரது போற்றலென்னும் உத்திபற்றிச் செய்யுளியலைநோக்கிக் கூறியதாயிற்று. ஈண்டுக்கூறினார், நெட்டெழுத்து இரண்டுமாத்திரையின் இகந்துவருமென்பது அறிவித்தற்கு.

அளபென்று மாத்திரையைக்கூறாது அளவெனச் சூத்திரஞ் செய்தமையான் அளவு தொழின்மேனின்றது. அது செய்யுளியலுள் "மாத்திரையளவும்" என்பதனானும் உணர்க. இயலவென்றதனைச் செயவெனெச்சமாக்கிப் படுத்தலோசையாற் கூறுக.

இனித் தன்னினமுடித்தலென்பதனான் ஒற்றிற்கும் இவ்வாறேகொள்க. "குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி" என்ற குறுஞ்சீர்வண்ணத்திற்கு உரிய குற்றெழுத்துக்களெல்லாம் இடையினின்ற ஒற்றெழுத்தை மாத்திரைமிகுத்தற்குக் கூடிநின்றவாறு உணர்க. எனவே, குற்றெழுத்துக்களெல்லாம் ஒற்றெழுத்துக்களோடும் நெட்டெழுத்துக்களோடுங் கூடி அவற்றையே ஓசைமிகுத்து நிற்கும் என்றவாறாயிற்று. இதனானே ஒற்றிசைநீடலுமென்ற ஒற்றிசை நீளுங்காற் குற்றெழுத்தாய் நீளுமென்றார். இனி உரையாசிரியர் புகர் புகழ் எனக் குறிலிணைக்கீழ் ரகார ழகாரங்கள் வந்த தொடர்மொழிகளெல்லாந் தார் தாழ் என்றாற்போல ஓசையொத்து நெட்

டெழுத்தின் தன்மையவாம் என்றாராலெனின், புகர் புகழ் என்பன வற்றை நெட்டெழுத்தென்றே எவ்விடத்தும் ஆளாமையானும் நெட்டெழுத்தாகக் கூறிய இலக்கணத்தால் ஒருபயன் கொள்ளா மையானுஞ் செய்யுளியலுள் இவற்றைக் குறிலிணை ஒற்றடுத்த நிரை யசையாகவுந் தார் தாழ் என்பனவற்றை நெட்டெழுத்து ஒற்றடுத்த நேரசையாகவுங் கோடலானும் அது பொருளன்மை உணர்க. (கஎ)

ருக. செய்யு ளிறுதிப் போலி மொழிவயி
னகார மகார மீரொற் றாகும்.

இது செய்யுட்கண் ஈரொற்றிலக்கணமாமாறு கூறுகின்றது.

இ - ள். செய்யுட் போலி மொழி இறுதி வயின்=செய்யுட் கட் போலுமென்னுஞ் சொல்லின் இறுதிக்கண்: னகாரம் மகாரம் ஈரொற்றாகும்=னகாரமும் மகாரமும் வந்து ஈரொற்று உடனிலை யாய் நிற்கும். எ - று.

உ-ம். "அந்நூலை-முந்நூலாக் கொள்வானும் போன்ம்" "சிதை யுங் கலத்தைப் பயினாற் றிருத்தித்—திசையறி மீகானும் போன்ம்" எனவரும். போலும் என்னுஞ் செய்யுமென்னும் முற்று ஈற்றுமிசை யுகரம் மெய்யொழித்துக் கெட்டு லகாரந் திரிந்துநின்றது. இஃது இறுதியில்முற்று; இடையிற் பெயரெச்சமாகிய உவமவுருபு. ஈண்டு முற்றென்பார் இறுதிமொழி என்றார். (கஅ)

ருஉ. ணகாரை முன்னர் மகாரங் குறுகும்.

இஃது அரையளபு குறுகுமென்ற மகாரத்திற்குக் குறுகும் இடம் இதுவென்கின்றது.

இ - ள். னகாரை முன்னர் மகாரங் குறுகும்=முற்கூறிய னகரத்தின்முன்னர் வந்த மகரந் தன் அரைமாத்திரையிற் குறுகி நிற்கும். எ - று.

உ-ம். போன்ம் என முன்னர்க் காட்டினும். னகாரையென இடைச்சொல் ஈறுதிரிந்துநின்றது.

இனித் தன்னினமுடித்தலென்பதனான் ணகாரவொற்றின் முன்னும் மகாரங்குறுகுதல்கொள்க. "மருளினுமெல்லாமருண்ம்" என வரும். (கக)

ருந. மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசை
மெழுத்திய றிரியா வென்மனார் புலவர். [ப்பினு

இஃது ஒற்றுங் குற்றுகரமும் ஈண்டு எழுத்துக்களோடு கூட்டி எண்ணப்பட்டு நிற்குமென்பதூஉஞ் செய்யுளியலுள் எண்ணப்படாது நிற்குமென்பதூஉங் கூறுகின்றது.

இ-ள். தெரிந்து=ஒற்றுங் குற்றுகரமும் பொருள் தருநிலைமையை ஆராய்ந்து: மொழிப்படுத்து இசைப்பினும்=சொல்லாகச் சேர்த்துச் சொல்லினும்: வேறு இசைப்பினும்=செய்யுளியலுள் ஒற்றுங் குற்றுகரமும் பொருள் தருமேனும் மாத்திரை குறைந்துநிற்கும் நிலைமையை நோக்கி எழுத்தெண்ணப்படாவென்று ஆண்டைக்கு வேருகக்கூறினும்: எழுத்தியல் திரியா என்மனார் புலவர்=அவ்விரண்டிடத்தும் அரைமாத்திரைபெற்றுநிற்கும் ஒற்றுங் குற்றுகரமும் முற்கூறிய எழுத்தாந்தன்மை திரியாவென்று கூறுவர் புலவர். எ - று.

இதனுன் ஒற்றும் ஆய்தமுங் குற்றுகரமும் எழுத்தாகிநின்று பொருள் தந்தும், எழுத்தெண்ணவும் அலகிடவும் பெருவென்பது கூறிஞராயிற்று. தெரிந்துவேறிசைத்தல் குற்றுகரத்திற்கு இன்ருதலின் ஏற்புழிக்கோடலான் ஒற்றிற்கும் ஆய்தத்திற்குங் கொள்க.

உ-ம். அல் இல் உண் எண் ஒல் எனவும், கல் வில் முள் செல் சொல் எனவும், ஆல் ஈர் ஊர் ஏர் ஓர் எனவும், கால் சீர் சூல் தேன் கோன் எனவும் உயிரும் உயிர்மெய்யுமாகிய குற்றெழுத்தையும் நெட்டெழுத்தையும் ஒற்றெழுத்துக்கள் அடுத்துநின்று பொருள் தந்தவாறு காண்க. கடம் கடாம் உடையான் திருவாரூர் அகத்தியனுர் என ஈரெழுத்தையும் மூவெழுத்தையும் நாலெழுத்தையும் ஐயெழுத்தையும் இறுதியிலும் இடையிலும் ஒற்றடுத்துநின்று பொருள் தந்தவாறு காண்க. எஃகு தெள்கு கொக்கு குரங்கு என்பனவும் எழுத்தெண்ணவும் அலகிடவும் பெருத குற்றுகரம் அடுத்துநின்று பொருள் தந்தவாறு காண்க. "உயிரிலெழுத்து மெண்ணப் படாஅ- உயிர்த்திற மியக்க மின்மை யான." என்பது எழுத்து எண்ணப் பெருமைக்கு விதி.

இனி இச்சூத்திரத்திற்கு எழுத்துக்களைச் சொல்லாக்கிக் கூறினும் பிறிதாகக் கூறினும் மாத்திரை திரியாதென்று பொருள்கூறி, அகரம் என்புழியும் அ என்புழியும் ஆலம் என்புழியும் ஆ என்புழியுங் ககரம் என்புழியுங் க என்புழியுங் காலம் என்பழியுங் கா என்புழியும் ஓசை ஒத்துநிற்குமென்ருல், அது முன்னர்க்கூறிய இலக்கணங்களாற் பெறப்படுதலிற் பயனில்கூற்ருமென்க. (உ௲

௫௪. அகர இகர மைகார மாகும்.

இது சிலவெழுத்துக்கள் கூடிச் சிலவெழுத்துக்கள் போல இசைக்குமென எழுத்துப்போலி கூறுகின்றது.

இ - ள். அகர இகரம் ஐகாரம் ஆகும்=அகரமும் இகரமுங் கூட்டிச்சொல்ல ஐகாரம்போல இசைக்கும், அதுகொள்ளற்க. எ-று.

போல என்றது தொக்கது.

உ-ம். ஐவனம் அஇவனம் எனவரும். ஆகுமென்றதனன் இஃது இலக்கணமன்றாயிற்று. (உக)

௫௫. அகர உகர மௌகார மாகும்.

இதுவும் அது.

இ - ள். அகர உகரம் ஔகாரம் ஆகும்=அகரமும் உகரமுங் கூட்டிச்சொல்ல ஔகாரம்போல இசைக்கும், அதுகொள்ளற்க. எ - று.

போல என்றது தொக்கது.

உ-ம். ஔவை அஉவை எனவரும். (உஉ)

௫௬. அகரத் திம்பர் யகரப் புள்ளியு
மையெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.

இதுவும் அது.

இ - ள். அகரத்திம்பர் யகரப்புள்ளியும்=அகரத்தின்பின் இகரமேயன்றி யகரமாகிய புள்ளிவந்தாலும்: ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்=ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவு பெறத் தோன்றும். எ - று.

உ-ம். ஐவனம் அய்வனம் எனவரும். மெய்பெற என்றதனன் அகரத்தின்பின்னர் உகரமேயன்றி வகரப்புள்ளியும் ஔகாரம்போல வருமென்றுகொள்க. ஔவை அவ்வை எனவரும். ()

௫௭. ஓரள பாகு மிடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான.

இஃது அதிகாரததான் ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் எதிரதுபோற்றலென்பதனுற் செய்யுளியலைநோக்கி மாத்திரைச்சுருக்கங் கூறுகின்றது.

இ - ள். மொழிவயினான=ஒருசொல்லிடத்தேநின்ற ஐகார ஔகாரங்கள்: தேருங்காலை=ஆராயுமிடத்து: ஓரளபாகும் இடனுமாருண்டே=ஒருமாத்திரையாய்நிற்கும் இடமும் உண்டு. எ - று.

உம்மையான் இரண்டுமாத்திரைபெறுதலே வலியுடைத்தாயிற்று. இடனுமென்றது ஒருசொல்லின் முதலிடைகடையென்னும் மூன்றிடத்துங் குறுகும், அது செய்யுட்கண் ஓசை இடர்ப்பட்டொலிக்குமிடத்துக் குறுகுமென்றற்கு. உரையிற்கோடலால் ஐகாரம் முதலிடைகடையென்னும் மூன்றிடத்துங் குறுகும், ஔகாரம் முதற்கண் குறுகுமெனக் கொள்க.

உ-ம். ஐப்பசி கைப்பை இடையன் குவளை எனவரும். "அடைப்பையாய்கோறு" எனவும், "புனையிளங்கொங்கையாய்வரும்" எனவும் பிறவாறும் வருவன செய்யுளியலுட் காண்க. ஔவை கௌவை எனவரும். ஔகாரம் "கௌவைநீர்வேலி கூற்று" எனத் தொடைநோக்கிக் குறுகினவாறுங் காண்க. தேருங்காலையென்றதனான் ஓரெழுத்தொருமொழியுங் குறுகும். கை பை எனவரும். (உச)

ருஅ. இகர யகர மிறுதி விரவும்.

இதுவும் போலிகூறுகின்றது.

இ - ள். இகரயகரம் இறுதிவிரவும்=இகரமும் யகரமும் ஒருமொழியின் இறுதிக்கண் ஓசை விரவி வரும், அவ்விகாரங் கொள்ளற்க. எ - று.

நாய் நாஇ எனவரும். (உரு)

ருகூ. பன்னீ ருயிரு மொழிமுத லாகும்.

இது மேல் எழுத்தினான் மொழியாமாறு உணர்த்தி அம்மொழிக்கு முதலாமெழுத்து இவையென்பது உணர்த்துகின்றது.

இ - ள். பன்னீருயிரும்=பன்னிரண்டு உயிரெழுத்தும்: மொழிமுதல் ஆகும்=மொழிக்கு முதலாம். எ - று.

உ-ம். அடை ஆடை இலை ஈயம் உளை ஊர்தி எழு ஏணி ஐவனம் ஒளி ஓடம் ஔவியம் எனவரும். (உசா)

சா0. உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா.

இஃது உயிர்மெய் மொழிக்கு முதலாம் என்கின்றது.

இ - ள். உயிர்மெய்யல்லன மொழிமுதல் ஆகா = உயிரோடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்கு முதலாகா. எ - று.

எனவே, உயிரோடுகூடிய மெய்களே மொழிக்கு முதலாவன என்றவாறும். ஈண்டு உயிர்மெய்யென்றது வேற்றுமைநயங் கருதிற்று. ஒற்றுமைநயங் கருதின் மேலைச்சூத்திரத்து உயிரோடுகூடி ஆமென்றல் பயனின்றாம். (உ௭)

௬௧. கதந பமவெனு மாவைந் தெழுத்து
மெல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே.

இது மேற் பொதுவகையான் எய்துவித்த இருநூற்றொருபத்தாறு எழுத்துக்களைச் சிறப்புவகையான் வரையறுத்து எய்துவிக்கின்றது.

இ - ள். க த ந ப ம எனும் ஆவைந்தெழுத்தும் = க த ந ப ம என்று கூறப்பட்ட அவ்வைந்து தனிமெய்யும்: எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே = பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதலாதற்குச் செல்லும். எ - று.

உ-ம். கலை கார் கிளி கீரி குடி கூடு கெண்டை கேழல் கைதை கொண்டல் கோடை கௌவை எனவும், தந்தை தாய் தித்தி தீமை துணி தூணி தெற்றி தேன் தையல் தொண்டை தோடு தௌவை எனவும், நந்து நாரை நிலம் நீலம் நுகம் நூல் நெய்தல் நேமி நைவளம் நொச்சி நோக்கம் நௌவி எனவும், படை பால் பிடி பீடு புகழ் பூமி பெடை பேடை பைதல் பொன் போது பௌவம் எனவும், மடி மாலை மிடறு மீளி முகம் மூப்பு மெலிவு மேனி மையல் மொழி மோத்தை மௌவல் எனவும் வரும். (உ௮)

௬உ. சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அ ஐ ஔவெனு மூன்றலங் கடையே.

இதுவும் அது.

இ - ள். சகரக்கிளவியும் அவற்றோரற்றே = சகரமாகிய தனிமெய்யும் முற்கூறியவைபோல எல்லா உயிரோடுங் கூடி மொழிக்கு முதலாம்: அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே = அகர ஐகார ஔ

காரமென்று சொல்லப்பட்ட மூன்று உயிரும் அல்லாத இடத்து. எ - று.

உ-ம். சாந்து சிற்றில் சீற்றம் சுரை சூரல் செக்கு சேவல் சொல் சோறு எனவரும். சட்டி சகடம் சமழ்ப்பு என்றாற்போல்வன "கடிசொல்லில்லை" என்பதனாற் கொள்க. சையம் சௌரியம் என்பனவற்றை வடசொல்லென மறுக்க. (உகூ)

சூங. உஊ ஒஓ வென்னு நான்குயிர்
வ என் னெழுத்தொடு வருத லில்லை.

இதுவும் அது.

இ-ள். உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்=உ ஊ ஒ ஓ என்று சொல்லப்பட்ட நான்கு உயிரும்: வ என் எழுத்தொடு வருதலில்லை=வ என்று சொல்லப்படுந் தனிமெய்யெழுத்தோடு கூடி மொழிக்குமுதலாய் வருதலில்லை. எ - று.

எனவே, ஒழிந்தன மொழிக்குமுதலாம் என்றவாறாயிற்று.

உ-ம். வளை வாளி விளரி வீடு வெள்ளி வேட்கை வையம் வெளவுதல் எனவரும். (ஙo)

சூச. ஆஎ, ஒஎனு மூவுயிர் ஞகாரத் துரிய.

இதுவும் அது.

இ-ள். ஆ எ ஒ எனும் மூவுயிர்=ஆ எ ஒ என்று கூறப்படும் மூன்று உயிரும்: ஞகாரத்து உரிய=ஞகார ஒற்றோடு கூடி மொழிக்கு முதலாதற்கு உரிய. எ - று.

எனவே, ஏனைய உரியவல்ல என்பதாம்.

உ-ம். ஞாலம் ஞெண்டு ஞொள்கிற்று எனவரும்.

"ஞமலிதந்தமனவுச்சூலுடும்பு" என்பது திசைச்சொல். ஞழியிற்று என்றாற்போல்வன இழிவழக்கு. (ஙக)

சூரு. ஆவோ டல்லது யகர முதலாது.

இதுவும் அது.

இ-ள். ஆவோடு அல்லது யகரம் முதலாது=ஆகாரத்தோடு கூடியல்லது யகரவொற்று மொழிக்கு முதலாகாது. எ - று.

உ-ம். யானை யாடு யாமம் எனவரும்.

யவனர் யுத்தி யூபம் யோகம் யௌவனம் என்பன வடசொல்லென மறுக்க. (௬௨)

௬௬. முதலா வேன தம்பெயர் முதலும்.

இது மொழிக்குமுதலாகாதனவும் ஒரோவழி ஆமென்கின்றது.

இ - ள். முதலாவும்=மொழிக்கு முதலாகா என்ற ஒன்பது மெய்யும்: ஏனவும்=மொழிக்கு முதலாமென்ற ஒன்பதுமெய்யும் பன்னிரண்டுயிரும்: தம்பெயர்முதலும்=தத்தம் பெயர்கூறுதற்கு முதலாம். எ - று.

முதலாவும் ஏனவும் என்ற உம்மைகள் தொக்குநின்றன.

உ-ம். ஙகரமும் டகரமும் ணகரமும் ரகரமும் லகரமும் ழகரமும் ளகரமும் றகரமும் னகரமும் என மொழிக்கு முதலாகாத ஒன்பதும் முதலாமாறு, ஙக்களைந்தார் டப்பெரிது ணந்நன்று எனவரும். இவ்வாறே ஏனையவற்றையும் ஒட்டுக. இனி ஏனவென்றதனான் கக்களைந்தார் தப்பெரிது அக்குறிது ஆநெடிது என மொழிக்குமுதலாமவற்றையுந் தம்பெயர் கூறுதற்கு முதலாமாறு ஒட்டிக்கொள்க. வரையறுக்கப்பட்டு மொழிக்குமுதலாகாது நின்ற மெய்க்கும் இவ் விதிகொள்க. அவை சகரத்துமூன்றும் வகரத்துநான்கும் ஞகரத் தொன்பதும் யகரத்துப்பதினொன்றுமாம். (௬௩)

௬௭. குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி
னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.

இஃது எழுத்துக்களை மொழிக்கு முதலாமாறுகூறி முறையே குற்றியலுகரம் மொழிக்கு முதலாமாறு கூறுகின்றது.

இ - ள். குற்றியலுகரம் முறைப்பெயர்மருங்கின்=குற்றியலுகரமானது முன்னிலைமுறைப்பெயரிடத்து: ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்=தனிமெய்யாய்நின்ற நகரத்துமேனின்ற நகரத்தோடுகூடி மொழிக்குமுதலாம். எ - று.

நுந்தை எனவரும். இதனானே முறைப்பெயர் இடமும் நகரம் பற்றுக்கோடுமாயிற்று. ஈண்டுக் குற்றியலுகரம் மெய்ப்பின்னர் நின்றதேனும் ஒற்றுமை நயத்தான் மொழிக்கு முதலென்றார். இது செய்யுளியலைநோக்கிக் கூறியதாயிற்று. (௬௪)

௬௮. முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ
தப்பெயர் மருங்கி னிலையிய லான.

இது மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

இ - ள். அப்பெயர்மருங்கின் நிலையியலான = அம்முறைப்பெயரிடத்தே நிற்றலிலக்கணமான குற்றியலுகரம்: முற்றியலுகரமொடு பொருள் வேறுபடாஅது = இதழ்குவித்துக் கூறும்வழி வரும் முற்றுகரத்தோடு அவ்விடத்துக் குற்றுகரம் பொருள் வேறுபடுமாறு போல ஈண்டுப்பொருள் வேறுபட்டுநில்லாது. எ - று.

காது கட்டு கத்து முருக்கு தெருட்டு என்பன முற்றுகரமுங் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டுநின்றாற்போல நுந்தை யென்று இதழ்குவித்து முற்றக்கூறியவிடத்தும் இதழ்குவியாமற் குறையக்கூறியவிடத்தும் ஒருபொருளே தந்தவாறு காண்க. நுந்தாயென்பதோவெனின் அஃது இதழ்குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயலென்றதனான் இடமும் பற்றுக்கோடும் இரண்டிற்கும் வேறுபாடின்றென்று கொள்க. இதனானே மொழிக்கு முதலாமெழுத்துத் தொண்ணூற்றுநான்கென்று உணர்க. ()

௬௯. உயிர்ஔ வெஞ்சிய விறுதி யாகும்.

இஃது உயிர்மொழிக்கு ஈறுமாறு கூறுகின்றது.

இ - ள். உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும் = உயிர்களுள் ஔகாரம் ஒழிந்தனவெல்லாம் மொழிக்கு ஈறும். எ - று.

எனவே, ஔகாரவுயிர் ஈறுகாதாயிற்று. இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என இவை தாமே ஈறுயின. ஆஅ ஈஇ ஊஉ ஏஎ ஓஒ எனக் குறிலைந்தும் அளபெடைக்கண் ஈறுயின. கா தீ பூ சே கை கோ எனவும், விள கிளி மழு எனவும் வரும். எகர ஒகரம் மேலே விலக்குப. "அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்"என்பராதலின், அளபெடைப்பின் வந்த குற்றெழுத்துங் கொள்வர் ஆசிரியரென்று உணர்க. நெட்டெழுத்தேழும் முதன்மொழியாமென்னுந் துணையே முன்னுணர்த்துதலின் ஈண்டு அவை ஈறுமென்றும் உணர்த்தினர். (௬௯)

௭0. கவவோ டியையி னௌவு மாகும்.

இஃது ஈருகாதென்ற ஔகாரம் இன்னுழியாமென்கின்றது.

இ-ள். ஔவும்=முன் ஈருகாதென்ற ஔகாரமும்: கவவோடு இயையின் ஆகும்=ககரவகரத்தோடு இயைந்தவழி ஈரும். எ - று.

உ-ம். கௌ வௌ எனவரும். எனவே, ஒழிந்த உயிரெல்லாந் தாமேநின்றும் பதினெட்டுமெய்களோடுங் கூடி நின்றும் ஈருதல் இதனாற் பெற்ரும். இதனானே ஔகாரம் ஏனைமெய்க்கண் வாரா தென விலக்குதலும் பெற்ரும். உயிர் ஙகரத்தோடுகூடி மொழிக்கு ஈருமென்பது இதனால் எய்திற்றேனும் அது மொழிக்கு ஈருகாமை தந்துபுணர்ந்துரைத்தலான் உணர்க. இது வரையறைகூறிற்று. ()

எக. எ என வருமுயிர் மெய்யீ ருகாது.

இஃது எகரந் தானேநின்ற வழியன்றி மெய்யோடு கூடினால் ஈருகாதென விலக்குகின்றது.

இ - ள். எ என வரும் உயிர் மெய் ஈருகாது=எ என்று கூறப் படும் உயிர் தானே ஈருவதன்றி யாண்டும் மெய்களோடு இயைந்து ஈருகாது. எ - று. (௬அ)

எஉ. ஔவ்வு மற்றே நவ்வலங் கடையே.

இது விலக்கும் வரையறையுங் கூறுகின்றது.

இ - ள். ஔவும் அற்று=ஒகரமும் முன்சொன்ன எகரம்போல த் தானே ஈருவதன்றி மெய்களோடு இயைந்து ஈருகாது: நவ்வ லங்கடையே=நகரவொற்றோடு அல்லாத இடத்தில். எ - று.

உ-ம். நொ கொற்று "நொஅலையனின்னாட்டைநீ" எனவரும்.

எ௩. ஏ ஓ எனுமுயிர் ஞகாரத் தில்லை.

இது சில உயிர் சில உடலோடேறி முடியாதென விலக்கு கின்றது.

இ) - ள். ஏஓ எனும் உயிர் ஞகாரத்தில்லை=ஏஓ என்று கூறப் பட்ட இரண்டுயிருந் தாமேநின்றும் பிறமெய்களோடுநின்றும் ஈருத லன்றி ஞகாரத்தோடு ஈருதலில்லை. எ - று.

எனவே, ஏனையுயிர்கள் ஞகாரத்தோடு ஈருமென்ருராயிற்று.

உ-ம். உரிஞு உரிஞா உரிஞி உரிஞீ உரிஞு உரிஞூ இவை எச்சமும் வினைப்பெயரும் பற்றிவரும். அஞ்ஞை மஞ்ஞை இவைபெயர். ஏனையைந்தும் விலக்கப்பட்டன. உரிஞோ என்பது "கடிசொல்லில்லை" என்பதனாற் கொள்க. (சo)

எச. உ ஊ கார நவவொடு நவிலா.

இதுவும் அது.

இ - ள். உ ஊகாரம்=உகர ஊகாரங்கள் தாமேநின்றும் பிற மெய்களோடுநின்றும் பயில்வதன்றி: நவவொடு நவிலா=நகரவொற்றோடும் வகரவொற்றோடும் பயிலா. எ - று.

எனவே, ஏனையுயிர்கள் நகரவகரங்களோடு வருமாயின.

உ-ம். நகரம் பொருந என வினைப்பெயராகியும், நா நீ நே எனப் பெயராகியும், நை நொ நோ என வியங்கோளாகியும் வரும். பொருநை என்றுங் காட்டுப. வகரம் உவ வே என வியங்கோளாயும், உவா செவவி வீ வை எனப் பெயராயும் வரும். ஒருவ ஒருவா ஒருவி ஒருவீ ஒளவை என்றுங் காட்டுப. ஈண்டு விலக்காத ஏனையுயிர்களோடு வந்த நகரவகரங்கள் அக்காலத்து வழங்கினவென்றுகோடும். இவ்விதியால் இனி நவிலாவென்றதனானே வகரவுகரம் கதவு துரவு குவவு புணர்வு நுகர்வு நொவவு கவவு எனப் பயின்று வருதலுங் கொள்க. (சக)

எரு. உச்ச கார மிருமொழிக் குரித்தே.

இது சகார உகாரம் பலசொற்கு ஈறாய்வாராது இருசொற்கு ஈறாமென்று வரையறை கூறுகின்றது.

இ - ள். உச்சகாரம்=உகரத்தோடுகூடிய சகாரம்: இருமொழிக்கே உரித்து=இரண்டுமொழிக்கே ஈறாம். எ - று.

எனவே, பன்மொழிக்கு ஈறாகாதென்றவாறாயிற்று. உரித்தேயென்னும் ஏகாரம் மொழிக்கேயெனக் கூட்டுக.

உ-ம். உசு; இது உளுவின்பெயர். முசு; இது குரங்கினுளொரு சாதி. பசு என்பதோவெனின், அஃது ஆரியச்சிதைவு. கச்சு குச்சு என்றாற்போல்வன குற்றுகரம். உகரம் ஏறிய சகரம் இருமொழிக்கு ஈறாமெனவே ஏனை உயிர்கள் ஏறிய சகரம் பன்மொழிக்கு ஈறாமாறாயிற்று. உச உசா விசி சே கச்சை சோ எனப் பெயரா

யுந், துஞ்ச எஞ்சா எஞ்சி மூசி மூசு என எச்சமாயும் வரும். அச்சோ என வியப்பாயும் வரும். இன்னும் இவை வழக்கின்கட் பலவாமாறும் உணர்க. (௪௨)

எ௯. உப்ப கார மொன்றென மொழிப
விருவயி னிலையும் பொருட்டா கும்மே.

இஃது ஒருசொல்லுரையறையும் அஃது ஓசைவேற்றுமையால் இருபொருள் தருமெனவுங் கூறுகின்றது.

இ - ள். உப்பகாரம் ஒன்றென மொழிப = உகரத்தோடுகூடிய பகரம் ஒருமொழிக்கல்லது பன்மொழிக்கு ஈறாகாதென்று கூறுவர் புலவர்: இருவயினிலையும் பொருட்டாகும்மே = அது தான் தன் வினை பிறவினையென்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தாம். எ - று.

உ-ம். தபு எனவரும். இது படுத்துக்கூற நீ சாவெனத் தன் வினையாம். எடுத்துக்கூற நீ ஒன்றனைச் சாவப்பண்ணெனப் பிறவினையாம். உப்பு கப்பு என்றாற்போல்வன குற்றுகரம். உகரத்தோடு கூடிய பகரம் ஒன்றெனவே ஏனையுயிர்களோடுகூடிய பகரம் பன்மொழிக்கு ஈறாய்ப் பலபொருள் தருமென்றாராயிற்று. மறந்தப துப்பா என எச்சமாயும், நம்பி செம்பூ பே பெதும்பை எனப் பெயராயும், போ என ஏவலாயும் வரும். இவற்றைப் பிறசொற்களோடும் ஒட்டுக. ஏனை ஈகாரபகரம் இடக்கராய் வழங்கும். (௪௩)

எஎ. எஞ்சிய வெல்லா மெஞ்சுத லிலவே.

இது முன்னர் மொழிக்கு ஈறுமென்றவற்றுள் எஞ்சிநின்றன மொழிக்கு ஈறுமாறும் மொழிக்கு ஈறாகாவென்றவை தம்பெயர் கூறுங்கால் மொழிக்கு ஈறுமாறுங் கூறுகின்றது.

இ - ள். எஞ்சியவும் எஞ்சுதலில = "கவவோடியையின்" என்னுஞ் சூத்திரத்தாற் பதினோருயிரும் பதினெட்டுமெய்க்கண்ணும் வந்து மொழிக்கு ஈறுமென்ற பொதுவிதியிற், பின்னை விசேடித்துக் கூறியவற்றை ஒழிந்தனவும் மொழிக்கு ஈறுதற்கு ஒழிவில: எல்லாம் எஞ்சுதலில = மொழிக்கு ஈறாகாதென்ற உயிர்மெய்களுந் தம்பெயர்கூறுய்வழி ஈறுதற்கு ஒழிவில. எ - று.

எல்லாமென்றது சொல்லினெச்சஞ்சொல்லியாங்குணர்த்தலென்னும் உத்தி. உம்மை விரிக்க. ஈண்டு எஞ்சியவென்றது

முன்னர் உதாரணங்காட்டிய ஞகரமும் நகரமும் வகரமுஞ் சகரமும் பகரமும் ஒருமொழிக்கும் ஈறாகாத ஙகரமும் ஒழிந்த பன்னிரண்டு மெய்க்கண்ணும் எகரமும் ஒகரமும் ஔகாரமும் ஒழிந்த ஒன்பதுயிரும் ஏறி மொழிக்கு ஈறாய் வருவனவற்றையென்று உணர்க.

உ-ம். வருக புகா வீக்கி புகீ செகு புகூ ஈங்கே மங்கை எங்கோ எனவும், கட்ட கடா மடி மடீ மடு படூ படை எனவும், இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க, மண்ண எண்ணா கண்ணி உணீ கணு நண்ணூ பண்ணை எனவும், இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறிவருவன உளவேற் கொள்க, அத புதா பதி வதீ அது கைதூ தந்தை அந்தோ எனவும், இதற்கு ஏகாரம் ஏறி வருவன உளவேற் கொள்க, கம நென்மா அம்மி மீ செம்மு கொண்மூ யாமை காத்தும்வம்மோ எனவும், இதற்கு ஏகாரம் ஏறிவருவன உளவேற் கொளக, செய காயா கொய்யூ ஐயை ஐயோ எனவும், இதற்கு இகர ஈகார உகர ஏகாரங்கள் ஏறிவருவன உளவேற் கொள்க, வர தாரா பரி குரீ கரு வெரூ நாரை எனவும், இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க, சில பலா வலி வலீ வலு கொல்லூ வல்லே கலை எனவும், இதற்கு ஓகாரம் ஏறி வருவன உளவேற் கொள்க, தொழ விழா நாழி வழீ மழு எழூ தாழை எனவும், இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறிவருவன உளவேற் கொள்க, உள உள்ளா வெள்ளி குளீ உளு எள்ளூ களை எனவும், இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க, கற்ற கற்றா உறி உறீ மறு உறூ கற்றை எற்றோ எனவும், இதற்கு ஏகாரம் ஏறி வருவன உளவேற் கொள்க, நன கனா வன்னி துனீ முன்னு துன்னூ என்னே அன்னை அன்னோ எனவும் வரும். இவற்றுட் பெயராயும் வினையாயும் வருவன உணர்க. இவற்றுட் ககர னகரங்கள் விலக்காத ஒன்பதும் வந்தன. ஆக ஈறு நூற்றுநாற்பத்துமூன்றும் உதாரணமில்லாத பதினெட்டும் ஆக நூற்றறுபத்தொன்று. ஙகரம் மொழிக்கு ஈறாகாதென்பது பெரும்பான்மையாதலிற் கூறிற்றிலர். இனி ஙகரமும் ஔகாரம் ஏறாத மெய்பதினைந்தும் எகரமும் ஒகரமும் ஏகாரமும் ஓகாரமும் உகரமும் ஊகாரமும் ஏறாதமெய்களுந் தம்பெயர் கூறுங்கால் மொழிக்கு ஈறுமாறு, ஙப்பெரிது சௌஅழகிது ஞௌதீது எனவரும். ஏனையவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. கெக்குறைந்தது கொத்தீது ஞெஉவழகிது ஞொ-த்தீது நுந்நன்று நூப்பெரிது வுச்சிறிது வூப்பெரிது என எல்லாவற்றையும் இவ்வாறே ஒட்டுக. இன்னும் எல்லாமென்றதனானே கந்நன்று ஆநன்று என மொழிக்கு ஈறுவனவுந் தம்பெயர்கூறும் வழி ஆமென்று கொள்க. (௪௪)

எஅ. ஞணநம னயரல வழள வென்னு
மப்பதி னொன்றே புள்ளி யிறுதி.

இது முன்னர் உயிர் ஈறுமாறு உணர்த்திப் புள்ளிகளுள் ஈறு வன இவையென்கின்றது.

இ - ள். ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் அப்பதி னொன்றே புள்ளியிறுதி=ஞணநமனயரலவழளவென்று கூறப் பட்ட பதினொன்றுமே புள்ளிகளில் மொழிக்கு ஈறுவன. எ - று.

உ-ம். உரிஞ் மண் பொருந் திரும் பொன் வேய் வேர் வேல் தெவ் வீழ் வேள் எனவரும். னகரம் ஈற்றுவையாது மகரத்தோடு வைத்தது வழக்குப் பயிற்சியும் மயக்க இயைபும் நோக்கி. (சரு)

எகூ. உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்.

இது மேற் பொதுவகையான் ஈறுவனவற்றுள் வரையறைப் படுவது இதுவென்கின்றது.

இ - ள். உச்சகாரமொடு நகாரஞ் சிவணும்=உகாரத்தோடு கூடிய சகரம் இருமொழிக்கீறுயவாறுபோல நகரவொற்றும் இரு மொழிக்கல்லது ஈறுகாது. எ - று.

உ-ம். பொருந் வெரிந் எனவரும். (சகூ)

அ௦. உப்ப காரமொடு ஞகாரையு மற்றே
யப்பொரு ளிரட்டா திவணை யான.

இதுவும் அது.

இ - ள். உப்பகாரமொடு ஞகாரையும் அற்றே=உகாரத்தோடு கூடிய பகரத்தோடு ஞகரமும் ஒத்து ஒருமொழிக்கு ஈறும்: இவணை யான அப்பொருள் இரட்டாது=இவ்விடத்து ஞகாரத்தின் கண் ணை அப்பொருள் பகரம்போல இருபொருட்படாது. எ - று.

உ-ம். உரிஞ் எனவரும். ஞகாரம் ஒருமொழிக்கு ஈறுதலின் நகரத்தின்பின் கூறினர். இவணையென்னும் ஐகாரம் அசை. (சஎ)

அக. வகரக் கிளவி நான்மொழி யீற்றது.

இதுவும் அது.

இ - ள். வகரக்கிளவி நான்மொழி ஈற்றது = வகரமாகிய எழுத்து நான்குமொழியின் ஈற்றதாம். எ - று.

உ-ம். அவ் இவ் உவ் தெவ் எனவரும். கிளவி ஆகுபெயர், எழுத்துக் கிளவியாதற்கு உரித்தாமாதலின். (௪௮)

அ௯. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப
புகரறக் கிளந்த வஃறிணை மேன.

இதுவும் அது; வரையன்றகூறுதலின்.

இ - ள். புகரறக் கிளந்த அஃறிணை மேன = குற்றமறச் சொல்லப்பட்ட அஃறிணைப்பெயரிடத்து: மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப = மகர ஈற்றுத் தொடர்மொழியோடு மயங்காதென்று வரையறைப்பட்ட னகர ஈற்றுத் தொடர்மொழி ஒன்பதென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

ஆய்தம் விகாரம்.

உ-ம். எகின் செகின் விழன் பயின் குயின் அழன் புழன் கடான் வயான் எனவரும். எகின் எகினம் என்றாற்போல வேறோர் பெயராய்த் திரிவனவுஞ் சந்தியாற் திரிவனவுமாய் ஈற்றுட் திரிபுடையன களைந்து ஒன்பதும் வரும்; மேற்கண்டுகொள்க. நிலம் நிலன் பிலம் பிலன் கலம் கலன் வலம் வலன் உலம் உலன் குலம் குலன் கடம் கடன் பொலம் பொலன் புலம் புலன் நலம் நலன் குளம் குளன் வளம் வளன் என இத்தொடக்கத்தன தம்முள் மயங்குவன. வட்டம் குட்டம் ஓடம் பாடம் இவைபோல்வன மயங்காதன. வரையறை னகரத்தின்மேற்செல்லும். மயங்காவெனவே மயக்கமும்பெற்றாம். (௪௯)

இரண்டாவது மொழிமரபு முற்றிற்று.

மூன்றாவது

பிறப்பியல்.

அ௩. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கு

மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா
னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி
யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னாக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான.

என்பது சூத்திரம். இவவோத்து எழுத்துக்களினது பிறப்பு உணர்த்துதலிற் பிறப்பியலென்னும் பெயர்த்தாயிற்று. சார்பிற்றோற் றத்து எழுத்துந் தனிமெய்யும் மொழியினன்றி உணர்த்தலாகாமை யின் அவை பிறக்கும் மொழியை மொழிமரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்தவேண்டுதலின் நூன்மரபின்பின்னர் வையாது இதனை மொழிமரபின்பின்னர் வைத்தார்.

இச்சூத்திரம் எழுத்துக்களினது பொதுப்பிறவி இத்துணை நிலைக்களத்துநின்று புலப்படுமென்கின்றது.

இ - ள். எல்லா எழுத்தும் பிறப்பின் ஆக்கஞ் சொல்லுங்கா லை = தமிழெழுத்து எல்லாவற்றிற்கும் ஆசிரியன் கூறிய பிறப்பினது தோற்றரவை யாங் கூறுமிடத்து: உந்திமுதலாத் தோன்றி முந்து வளி = கொப்பூழடியாகத் தோன்றி முந்துகின்ற உதானனென்னுங் காற்று: தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ = தலையின்கண் ணும் மிடற்றின்கண்ணும் நெஞ்சின்கண்ணும் நிலைபெற்று: பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எண்முறைநிலையான் உறுப்புற்று = பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமுமென்ற ஐந்துடனே அக்காற்றுநின்ற தலையும் மிடறும் நெஞ்சுங் கூட எட் டாகிய முறைமையையுடைய தன்மையோடு கூடிய உறுப்புக்க ளோடு ஒன்றுற்று: அமைய = இங்ஙனம் அமைதலானே: வேறுவேறு இயல = அவ்வெழுத்துக்களது தோற்றரவு வேறுவேறு புலப்பட வழங்குதலையுடைய: காட்சியான நாடி நெறிப்பட = அதனையறி வான் ஆராய்ந்து அவற்றின்வழியிலே மனம்பட: திறப்படத் தெரி யும் = அப்பிறப்பு வேறுபாடுகளெல்லாங் கூறுபடவிளங்கும். எ-று.

சொல்லுங்காலை வளி நிலைபெற்று உறுப்புக்களுற்று இங்ங னம் அமைதலானே அவை வழங்குதலையுடைய; அவற்றின் வழக் கம் அவற்றின் வழியிலே மனந் திறப்படத் தெரியுமெனக்கூட்டி உரைத்துக்கொள்க. இங்ஙனங் கூறவே முயற்சியும் முயலுங்கருத் தாவும் உண்மை பெற்றாம். (க)

௮௪. அவ்வழி, பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்.

இஃது உயிரெழுத்திற்குப் பொதுப்பிறவி கூறுகின்றது.

இ - ள். பன்னீருயிருந் தந்நிலை திரியா=பன்னிரண்டு உயிருந் தத்தம் மாத்திரை திரியாவாய்: அவ்வழிப் பிறந்த=அவ்வுந்தியிடத்துப் பிறந்த: மிடற்று வளியின் இசைக்கும்=மிடற்றின்கண் நிலைபெற்ற காற்றான் ஒலிக்கும். எ - று.

எனவே குற்றியலிகரமுங் குற்றியலுகரமுந் தந்நிலை திரியுமென்றாராயிற்று. அவ்வெழுத்துக்களைக் கூறி உணர்க. (௨)

௮௫. அவற்றுள், அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்.

இஃது அவ்வுயிர்களுட் சிலவற்றிற்குச் சிறப்புப்பிறவி கூறுகின்றது.

இ - ள். அவற்றுள்=முற்கூறிய பன்னிரண்டு உயிர்களுள்: அ ஆ ஆயிரண்டு=அகர ஆகாரங்களாகிய அவ்விரண்டும்: அங்காந்து இயலும்=அங்காந்துகூறும் முயற்சியாற் பிறக்கும்: எ - று.

முயற்சி உயிர்க்கிழவன்கண்ணது. அ ஆ என இவற்றின் வேறுபாடு உணர்க. (௩)

௮௬. இ ஈ எ ஏ ஐயென விசைக்கும்
மப்பா லைந்து மவற்றோ ரன்ன
வவைதாம்,
மண்பன் முதனா விளிம்புற லுடைய.

இதுவும் அது.

இ - ள். இ ஈ எ ஏ ஐ என இசைக்கும் அப்பாலைந்தும்=இ ஈ எ ஏ ஐ என்று கூறப்படும் அக்கூற்று ஐந்தும்: அவற்றோரன்ன=அகர ஆகாரங்கள்போல் அங்காந்து கூறும் முயற்சியாற் பிறக்கும்: அவைதாம் அண்பல் முதல் நா விளிம்பு உறல் உடைய=அவைதாம் அங்ஙனம் பிறக்குமாயினும் அண்பல்லும் அடிநாவிளிம்பும் உறப் பிறக்கும் வேறுபாடுடைய. எ - று.

அண்பல் வினைத்தொகை. எனவே, நாவிளிம்பு அணுகுதற்குக் காரணமான பல்லென்று அதற்கோர் பெயராயிற்று. இ ஈ எ ஏ ஐ என இவற்றின் வேறுபாடு உணர்க. (௪)

௮௭. உ ஊ ஒ ஓ ஔவென விசைக்கு
மப்பா லைந்து மிதழ்குவிந் தியலும்.

இதுவும் அது.

இ - ள். உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும் அப்பாலைந்தும்= உ ஊ ஒ ஓ ஔ என்று சொல்லப்படும் அக்கூற்று ஐந்தும்: இதழ் குவிந்து இயலும்=இதழ்குவித்துக் கூறப் பிறக்கும். எ - று.

உ ஊ ஒ ஓ ஔ என இவற்றின் வேறுபாடு உணர்க. (௬)

௮௮. தத்தந் திரிபே சிறிய வென்ப.

இது முற்கூறிய உயிர்க்கும் மேற்கூறும் மெய்க்கும் பொதுவிதிகூறிச் சிங்கநோக்காகக் கிடந்தது.

இ - ள். தத்தந் திரிபே சிறிய என்ப=உயிர்களும் மெய்களும் ஒவ்வொரு தானங்களுட் பிறப்பனவற்றைக் கூட்டிக் கூறினேமாயினும் நுண்ணுணர்வான ஆராயுமிடத்துத் தம்முடைய தம்முடைய வேறுபாடுகள் சிறியவாக உடைய என்று கூறுவர் புலவர். எ - று.

அவை எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் என்றவாற்றானுந் தலைவளி நெஞ்சுவளி மிடற்றுவளி மூக்குவளி என்றவாற்றானும் பிறவாற்றானும் வேறுபடுமாறு நுண்ணுணர்வுடையோர் கூறி உணர்க. ஐ விலங்கலுடையது. வல்லினந் தலைவளியுடையது. மெல்லினம் மூக்குவளியுடையது. இடையினம் மிடற்றுவளியுடையது. எனையவுங் கூறிக் கண்டு உணர்க. (௭)

௮௯. ககார ஙகார முதனா வண்ணம்.

இது மெய்களுட் சிலவற்றிற்குப் பிறப்புக் கூறுகின்றது.

இ - ள். ககார ஙகாரம் முதல் நா அண்ணம்=ககாரமும் ஙகாரமும் முதல் நாவும் முதல் அண்ணமும் உறப் பிறக்கும். எ - று.

உயிர்மெய்யாகச் சூத்திரத்துக் கூறினுந் தனிமெய்யாகக் கூறிக்காண்க. முதலை இரண்டிற்குங் கூட்டுக. க ங என இவற்றின் வேறுபாடு உணர்க. (௮)

௯௦. சகார ஞகார மிடைநா வண்ணம்.

இதுவும் அது.

இ - ள். சகார ஞகாரம் இடை நா அண்ணம்=சகாரமும் ஞகாரமும் இடைநாவும் இடையண்ணமும் உறப் பிறக்கும். எ - று.

இடையை இரண்டிற்குங் கூட்டுக. ச ஞ என இவற்றின் வேறுபாடு உணர்க. (அ)

கூக. டகார ணகார நுனிநா வண்ணம்.

இதுவும் அது.

இ - ள். டகார ணகாரம் நுனி நா அண்ணம்=டகாரமும் ணகாரமும் நுனிநாவும் நுனியண்ணமும் உறப் பிறக்கும். எ - று.

நுனியை இரண்டிற்குங் கூட்டுக. ட ண என இவற்றின் வேறுபாடு உணர்க. (கூ)

கூஉ. அவ்வா றெழுத்து மூவகைப் பிறப்பின.

இது மேலனவற்றிற்கோர் ஐயம் அகற்றியது.

இ - ள். அவ்வாறெழுத்தும் மூவகைப் பிறப்பின=அக்கூறப் பட்ட ஆறெழுத்தும் மூவகையாகிய பிறப்பினை உடைய. எ - று.

எனவே, அவை ககாரம் முதல் நாவினும் ஙகாரம் முதல் அண்ணத்தினும் பிறக்குமென்று இவ்வாறே நிரனிறைவகையான் அறுவகைப் பிறப்பின அல்ல என்றார். (கo)

கூங. அண்ண நண்ணிய பன்முதன் மருங்கி
ற்னுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்குந் தகார நகாரம்.

இது மெய்களுட் சிலவற்றிற்குப் பிறவிகூறுகின்றது.

இ - ள். அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கில்=அண்ணத்தைச்சேர்ந்த பல்லினதடியாகிய இடத்தே: நாநுனி பரந்து மெய்யுற ஒற்ற=நாவினது நுனி பரந்து சென்று தன்வடிவு மிகவும் உறும்படி சேர: தகார நகாரந் தாம் இனிது பிறக்கும்=தகார நகாரமென்றவை தாம் இனிதாகப் பிறக்கும். எ - று.

த ந என இவற்றின் வேறுபாடு உணர்க. முன்னர் உறுப்புற்று அமைய என்று கூறி ஈண்டு மெய்யுற ஒற்ற என்றார் சிறிது ஒற்றவும் வருடவும் பிறப்பன உளவாகலின். (கக)

௯௪. அணரி நுனிநா வண்ண மொற்ற
றஃகா னஃகா னுயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ - ள். நுனிநா அணரி அண்ணம் ஒற்ற=நாவினது நுனி மேனோக்கிச்சென்று அண்ணத்தைத் தடவ: றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்=றகாரனகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும். எ - று.

இது முதலாக நெடுங்கணக்குமுறையன்றி நாவதிகாரம்பற்றிக் கூறுகின்றார்.

ற ன என இவற்றின் வேறுபாடு உணர்க. (௧௨)

௯௫. நுனிநா வணரி யண்ணம் வருட
ரகார ழகார மாயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ - ள். நுனிநா அணரி அண்ணம் வருட=நாவினது நுனி மேனோக்கிச்சென்று அண்ணத்தைத் தடவ: ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்=ரகாரழகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும். எ-று.

ர ழ என இவற்றின்வேறுபாடு உணர்க. (௧௩)

௯௬. நாவிளிம்பு வீங்கி யண்பன் முதலுற
வாவயி னண்ண மொற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ - ள். நா வீங்கி விளிம்பு அண்பல் முதலுற=நா மேனோக்கிச்சென்று தன் விளிம்பு அண்பல்லினடியிலே உறுநிற்க: ஆவயின் அண்ணம் ஒற்ற லகாரமாய்=அவ்விடத்து அவ்வண்ணத்தை அந்நாத் தீண்ட லகாரமாயும்: ஆவயின் அண்ணம் வருட ளகாரமாய்=அவ்விடத்து அவ்வண்ணத்தை அந்நாத் தடவ ளகாரமாயும்: இரண்டும் பிறக்கும்=இவ்விரண்டெழுத்தும் பிறக்கும். எ - று.

ல ள என இவற்றின் வேறுபாடு உணர்க.

இத்துணையும் நாவதிகாரங் கூறிற்று. (௧௪)

கூஎ. இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்.

இதுவும் அது.

இ - ள். இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்=மேலிதழுங் கீழிதழுந் தம்மிற்கூடப் பகாரமும் மகாரமும் பிறக்கும். எ-று.

ப ம் என இவற்றின் வேறுபாடு உணர்க. (கரு)

கூஅ. பல்லித ழியைய வகாரம் பிறக்கும்.

இது வகாரம் பிறக்குமாறு கூறுகின்றது.

இ - ள். பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்=மேற்பல்லுங் கீழிதழுங் கூட வகாரமானது பிறக்கும். எ - று.

வ என வரும். இதற்கும் இதழ் இயைதலின் மகரத்தின் பின்னர் வைத்தார். (கசு)

கூகூ. அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.

இது யகாரம் பிறக்குமாறு கூறுகின்றது.

இ - ள். எழுவளி மிடற்றுச் சேர்ந்த இசை=உந்தியிலெழுந்த காற்று மிடற்றிடத்துச் சேர்ந்த அதனாற் பிறந்த ஓசை: அண்ணங் கண்ணுற்று அடைய=அண்ணத்தை அணைந்து உரலாணி இட்டாற்போலச் செறிய: யகாரம் பிறக்கும்=யகாரவொற்றுப் பிறக்கும். எ - று.

ஆணி மரம். ய எனவரும். (கஎ)

க00. மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினு
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.

இது மெல்லெழுத்திற்குச் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கஞ் சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்=மெல்லெழுத்துக்கள் ஆறுந் தத்தம் பிறப்பினது ஆக்கஞ் சொல்லிய இடத்தே நிலைபெற்றனவாயினும்:

மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும் = ஓசைகூறுங்கால் மூக்கின்கண் உளதாகிய வளியினிசையான் யாப்புறத் தோன்றும். எ-று.

அவை அங்ஙனமாதல் கூறிக் காண்க. யாப்புற என்றதனான் இடையினத்திற்கு மிடற்றுவளியும் வல்லினத்திற்குத் தலைவளியுங் கொள்க. (கஅ)

க0க. சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்.

இது சார்பிற்றோற்றங்கள் பிறக்குமாறு கூறுகின்றது.

இ - ள். சார்ந்து வரின் அல்லது = சில எழுத்துக்களைச் சார்ந்து தோன்றினல்லது: தமக்கு இயல்பு இல என = தமக்கெனத் தோன்றுதற்கு ஓரியல்பிலவென்று: தேர்ந்து வெளிப்படுத்த தம்மியல்பு மூன்றும் = ஆராய்ந்து வெளிப்படுக்கப்பட்ட எழுத்துக்கள் தம்முடைய பிறப்பியல்பு மூன்றினையுங் கூறுங்கால்: தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி இயலும் = தத்தமக்கு உரிய சார்பாகிய மெய்களது சிறப்புப்பிறப்பிடத்தே பிறத்தலோடு பொருந்தி நடக்கும்: ஏனை ஒத்த காட்சியின் இயலும் = ஒழிந்த ஆய்தந் தமக்குப் பொருந்தின நெஞ்சுவளியாற் பிறக்கும். எ - று.

காட்சியென்றது நெஞ்சினை. கேண்மியா நாகு நுந்தை எனவும் எஃகு எனவும் வரும்.

ஆய்தத்திற்குச் சார்பிடங் "குறியதன்முன்னர்" என்பதனாற் கூறினார். இனி ஆய்தந் தலைவளியானும் மிடற்றுவளியானும் பிறக்குமென்பாரும் உளர். மொழிந்தபொருளோடொன்றவவ்வயின் மொழியாததனைமுட்டின்றுமுடித்தலென்பதனான் அளபெடையும் உயிர்மெய்யுந் தம்மை ஆக்கிய எழுத்துக்களது பிறப்பிடமே இடமாகவருமென்று உணர்க. (கக)

க0உ. எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே

யஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளவுநுவன் றிசினே.

இஃது எழுத்துக்கடம் பிறப்பிற்குப் புறனடை கூறுகின்றது.

இ - ள். எல்லாவெழுத்துங் கிளந்து வெளிப்பட=ஆசிரியன் எல்லாவெழுத்துக்களும் பிறக்குமாறு முந்துநூற்கண்ணே கூறி வெளிப்படுக்கையினாலே: சொல்லிய பள்ளி பிறப்பொடு விடுவழி=யானும் அவ்வாறே கூறிய எண்வகைநிலத்தும் பிறக்கின்ற பிறப்போடே அவ்வெழுத்துக்களைக் கூறுமிடத்து: எழுதரு வளியின் உறழ்ச்சிவாரத்தின் அளபு கோடல்=யான் கூறியவாறு அன்றி உந்தியிற் தோன்றுங் காற்றினது திரிதருங் கூற்றின்கண்ணே மாத்திரைகூட்டிக்கோடலும்: அகத்து எழு வளியிசை அரில் தப நாடிக் கோடல்=மூலாதாரத்தில் எழுகின்ற காற்றினோசையைக் குற்றமற நாடிக்கோடலும்: அந்தணர் மறைத்தே=பார்ப்பாரது வேதத்து உளதே அந்நிலைமை ஆண்டு உணர்க: அஃது இவண் நுவலாது=அங்ஙனங் கோடலை ஈண்டுக் கூறலாகாமையின் இந்நூற்கட் கூறாதே: எழுந்து புறத்து இசைக்கும்=உந்தியிற் தோன்றிப் புறத்தே புலப்பட்டு ஒலிக்கும்: மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே=பொருடெரியுங் காற்றினது துணிவிற்கே யான் மாத்திரைகூறினேன் அவற்றினது மாத்திரையை உணர்க. எ - று.

இதனை இரண்டு சூத்திரமாக்கியும் உரைப்ப.

இது பிறன்கோட்கூறலென்னும் உத்திக்கு இனம். என்னை? உந்தியில் எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி மாத்திரைகூட்டிக் கோடலும் மூலாதாரம் முதலாகக் காற்றெழுமாறு கூறலும் வேதத்திற்கு உளதென்று இவ்வாசிரியர் கூறி அம்மதம்பற்றி அவர்கொள்வதோர் பயன் இன்றென்றலின். உந்தியில் எழுந்த காற்று முன்னர்த் தலைக்கட்சென்று பின்னர் மிடற்றிலேவந்து பின்னர் நெஞ்சிலே நிற்றலை உறழ்ச்சிவாரத்து என்றார். அகத்தெழுவளியெனவே மூலாதாரமென்பது பெற்றாம்.

இன் சாரியையை அத்துச்சாரியையோடு கூட்டுக. ஏகாரந் தேற்றம்.

மெய்தெரிவளியெனவே பொருடெரியா முற்கும் வீளையும் முயற்சியானுமெனினும் பொருடெரியாமையின் அவை கடியப்பட்டன. எனவே, சொல்லப்பிறந்து சொற்கு உறுப்பாம் ஓசையை

இவர் எழுத்தென்று வேண்டுவரென உணர்க. "நிலையும் வளி யும் முயற்சியு மூன்று—மியல நடப்ப தெழுத்தெனப் படுமே." என்றாராகலின். (௨௦)

மூன்றாவது பிறப்பியல் முற்றிற்று.

நான்காவது

புணரியல்.

க0ௗ. மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தி
னிரண்டுதலை யிட்ட முதலா கிருபஃ
தறுநான் கீற்றொடு நெறிநின் றியலு
மெல்லா மொழிக்கு மிறுதியு முதலு
மெய்யே யுயிரென் றாயீ ரியல.

என்பது சூத்திரம். மொழிமரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகையாற் புணர்க்கும் முறைமை உணர்த்தினமையிற் புணரிய லென்று இவ்வோத்திற்குப் பெயராயிற்று. ஈண்டு முறைமையென் றது மேற் செய்கையோத்துக்களுட் புணர்தற்கு உரியவாக ஈண்டுக் கூறிய கருவிகளை.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மொழிமரபிற் கூறிய மொழிக்கு முதலாமெழுத்தும் மொழிக்கு ஈறாமெழுத்தும் இத்துணை யென்றலும், எல்லாமொழிக்கும் ஈறும் முதலும் மெய்யும் உயிருமல் லது இல்லையென்று வரையறுத்தலும், ஈறும் முதலுமாக எழுத்து நாற்பத்தாறு உளவோவென்று ஐயுற்றார்க்கு எழுத்து முப்பத்து மூன்றுமே அங்ஙனம் ஈறும் முதலுமாய் நிற்பதென்று ஐயமறுத்த லும் நுதலிற்று.

இ - ள். முதல் இரண்டு தலையிட்ட இருபஃது ஈறு அறுநான் காகும் மூன்று தலையிட்ட முப்பதிற்றெழுத்தினொடு=மொழிக்கு முதலாமெழுத்து இரண்டை முடியிலேயிட்ட இருபஃதும் மொ ழிக்கு ஈறாமெழுத்து இருபத்துநான்குமாகின்ற மூன்றை முடியிலே யிட்ட முப்பதாகிய எழுத்துக்களோடே: நெறிநின்று இயலும் எல் லாமொழிக்கும்=வழக்குநெறிக்கணின்று நடக்கும் மூவகைமொ ழிக்கும்: மெய்யே உயிரென்று ஆயீரியல இறுதியும் முதலும்= மெய்யும் உயிருமென்று கூறப்பட்ட அவ்விரண்டு இயல்பினையு டைய எழுத்துக்களே ஈறும் முதலும் ஆவன. எ - று.

இருபத்திரண்டு முதலாவன பன்னீருயிரும் ஒன்பது உயிர்மெய்யும் மொழிமுதற்குற்றியலுகரமுமாம். இருபத்துநான்கு ஈறாவன பன்னீருயிரும் பதினொருபுள்ளியும் ஈற்றுக்குற்றியலுகரமுமாம். மெய்யை முற்கூறினார் நால்வகைப் புணர்ச்சியும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழாவென்றற்கு.

உ-ம். மரம் என மெய்முதலும் மெய்யீறும், இலை என உயிர்முதலும் உயிரீறும், ஆல் என உயிர்முதலும் மெய்யீறும், விள என மெய்முதலும் உயிரீறுமாம். மொழியாக்கம் இயல்பும் விகாரமுமென இரண்டாம். உயிர் தாமே நின்று முதலும் ஈறுமாதல் இயல்பு. அவை மெய்யோடு கூடிநின்று அங்ஙனமாதல் விகாரம்.()

௧௦௪. அவற்றுள்,
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்.

இது முற்கூறியவாற்றாற் தனிமெய் முதலாவான் சென்றதனை விலக்கலின் எய்தியதுவிலக்கிற்று.

இ-ள். அவற்றுள் = முற்கூறிய மெய்யும் உயிருமென்ற இரண்டினுள்: மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல் = மெய் மொழிக்கு ஈறாயவையெல்லாம் புள்ளிபெற்று நிற்கும். எ - று.

எனவே மொழிக்கு முதலாயினவையெல்லாம் புள்ளியிழந்து உயிரேறி நிற்குமென்றாராயிற்று. இன்னும் ஈற்றுமெய் புள்ளி பெற்று நிற்குமென்றதனானே உயிர்முதன்மொழி தம்மேல்வந்தால் அவை உயிரேற இடங்கொடுத்து நிற்குமென்பதூஉங் கூறினாராயிற்று. இவ்விதி முற்கூறியதன்றோவெனின் ஆண்டுத் தனிமெய் பதினெட்டும் புள்ளிபெற்று நிற்குமென்றும் அவைதாம் உயிரேறுங்கால் புள்ளியிழந்து நிற்குமென்றுங் கூறினார்; ஈண்டு மெய்முதல் மெய்யீறெனப் பொருளுரைக்கவேண்டினமையின் மொழிமுதன் மெய்களும் புள்ளிபெறுமோவென்று ஐயுற்ற ஐயம் அகற்றக் கூறினாரென்று உணர்க. மரம் எனப் புள்ளிபெற்றுநின்றது அரிதென வந்துழி மரமரிதென்று ஏறி முடிந்தவாறு காண்க. (உ)

௧௦௫. குற்றிய லுகரமு மற்றென மொழிப.

இது முன்னர்ப் புள்ளியீற்றுமுன் உயிர் தனித்தியலாதென்று மெய்க்கு எய்துவிக்கின்ற கருவியை எதிரதுபோற்றி உயிர்க்கும் எய்துவிக்கின்ற கருவிச்சூத்திரம்.

இ - ள். குற்றியலுகரமும் அற்றென மொழிப=ஈற்றுக்குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிரேற இடங்கொடுக்குமென்று கூறுவர் புலவர். எ - று.

இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல் புள்ளிபெறுமையின். அங்ஙனம் உயிரேறுங்காற் குற்றுகரங் கெட்டுப்போக நின்ற ஒற்றின் மேல் உயிரேறிற்றென்று கொள்ளற்க. நாகரிதென்புழி முன்னர்க் குற்றுகரவோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங்கூடிநின்றல்லது அப்பொருளுணர்த்தலாகாமையின், இஃது உயிரோடுங் கூடிநிற்குமென்றார். (௩)

க0சு. உயிர்மெய் யீறு முயிரீற் றியற்றே.

இது "மெய்யேயுயிரென்றாயீரியல" என்ற உயிர்க்கண் நிகழ்வதோர் ஐயம் அகற்றியது; உயிர்மெய்யென்பதோர் ஈறு உண்டேனும் அது புணர்க்கப்படாது, அதுவும் உயிராயே அடங்குமென்றலின்.

இ - ள். உயிர்மெய்யீறும்=உயிர்மெய் மொழியினது ஈற்றின்கண் நின்றதும்; உயிரீற்றியற்றே=உயிரீற்றின் இயல்பையுடைத்து. எ - று.

உம்மையான் இடைநின்ற உயிர்மெய்யும் உயிரீற்றின் இயல்பையுடைத்து என்றாராயிற்று. உம்மை எச்சவும்மை. ஈற்றினும் இடையினும் நின்றன உயிருள் அடங்குமெனவே முதல் நின்றன மெய்யுள் அடங்குமென்றார். இதனானே மேல் விள என்றாற்போலும் உயிர்மெய்களெல்லாம் அகரவீறென்று புணர்க்குமாறு உணர்க. வரகு இதனை மேல் உயிர்த்தொடர்மொழியென்ப. முன்னர் "மெய்யின்வழியது" என்றது ஓரெழுத்திற்கென்று உணர்க. இத்துணையும் மொழிமரபின் ஒழிபுகூறிற்று. (ச)

க0எ. உயிரிறு சொன்மு னுயிர்வரு வழியு
முயிரிறு சொன்முன் மெய்வரு வழியு
மெய்யிறு சொன்மு னுயிர்வரு வழியு
மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியுமென்
றிவ்வென வறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்
றாயீ ரியல புணர்நிலைச் சுட்டே.

இது மேற்கூறும் புணர்ச்சிகளெல்லாம் இருமொழிப்புணர்ச்சியல்லது இல்லையென்பதூஉம் அஃது எழுத்துவகையான் நான்காமென்பதூஉம் உணர்த்துகின்றது.

இ - ள். உயிரிறு சொன்முன் உயிர்வரு வழியும்=உயிர் தனக்கு ஈறாக இறுஞ்சொல்லின்முன் உயிர்முதலாகிய மொழிவரும் இடமும்: உயிரிறுசொன்முன் மெய்வரு வழியும்=உயிர் தனக்கு ஈறாக இறுஞ் சொல்லின்முன்னர் மெய்முதலாகிய மொழிவரும் இடமும்: மெய்யிறு சொன்முன் உயிர்வரு வழியும்=மெய் தனக்கு ஈறாக இறுஞ் சொல்லின்முன்னர் உயிர்முதலாகிய மொழிவரும் இடமும்: மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியும்=மெய் தனக்கு ஈறாக இறுஞ் சொல்லின்முன்னர் மெய்முதலாகிய மொழிவரும் இடமும்: என்று புணர்நிலைச் சுட்டு=என்று சொல்லப்பட்ட ஒன்றினோடொன்று கூடும் நிலைமையாகிய கருத்தின்கண்: இவவென அறியக் கிளக்குங் காலை=அவற்றை இத்துணையென வரையறையை எல்லாரும் அறிய யாங் கூறுங் காலத்து: நிறுத்த சொல்லே குறித்து வரு கிளவியென்று ஆயீரியல=முன்னர் நிறுத்தப்பட்ட சொல்லும் அதனை முடித்தலைக்குறித்து வருஞ் சொல்லும் என்று சொல்லப்பட்ட அவவிரண்டு இயல்பினையுடைய. எ - று.

எனவே, நான்குவகையானுங் கூடுங்கால் இருமொழியல்லது புணர்ச்சியின்று என்றாராயிற்று.

உ-ம். ஆவுண்டு ஆவலிது ஆலிலை ஆல்வீழ்ந்தது என முறையே காண்க. விளவினைக்குறைத்தான் என்றவழிச் சாரியையும் உருபும் நிலைமொழியாயே நிற்குமென்பது நோக்கி அதனை நிறுத்தசொல்லென்றும் முடிக்குஞ்சொல்லைக் குறித்துவருகிளவியென்றுங் கூறினார். இதனானே நிலைமொழியும் வருமொழியுங் கூறினார். முன்னர் "மெய்யேயுயிர்" என்றது ஒருமொழிக்கு, இஃது இருமொழிக்கென்று உணர்க. (௫)

௧0அ. அவற்றுள்,

நிறுத்த சொல்லி னீறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலு

மூன்றே திரிபிட னொன்றே யியல்பென
வாங்கந் நான்கே மொழிபுண ரியல்பே.

இது முன்னர் எழுத்துவகையான் நான்குபுணர்ச்சி எய்திய இருவகைச்சொல்லுஞ் சொல்வகையானும் நான்காகுமென்பதூஉம் அங்ஙனம் புணர்வது சொல்லுஞ் சொல்லும் அன்று எழுத்தும் எழுத்துமென்பதூஉம் உணர்த்துகின்றது.

இ - ள். அவற்றுள் = நிலைமொழி வருமொழியென்றவற்றுள் நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு குறித்துவரு கிளவி முதலெழுத்து இயைய = முன்னர் நிறுத்தப்பட்ட சொல்லினது ஈறுகின்ற எழுத்தோடே அதனை முடிக்கக்கருதி வருகின்ற சொல்லினது முதலெழுத்துப் பொருந்த; பெயரொடு பெயரைப் புணர்க்குங்காலும் = பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லைக் கூட்டும் இடத்தும்; பெயரொடு தொழிலைப் புணர்க்குங்காலும் = பெயர்ச்சொல்லோடு தொழிற்சொல்லைக் கூட்டும் இடத்தும்; தொழிலொடு பெயரையும் புணர்க்குங் காலும் = தொழிற்சொல்லோடு பெயர்ச்சொல்லைக் கூட்டும் இடத்தும்; தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும் = தொழிற்சொல்லோடு தொழிற்சொல்லைக் கூட்டும் இடத்தும்; மூன்றே திரிபு இடன் ஒன்றே இயல்பென ஆங்கு அந்நான்கே = திரியும் இடம் மூன்று இயல்பு ஒன்று என்று முந்துநூலிற் கூறிய அந்நான்கு இலக்கணமுமே; மொழி புணர் இயல்பு = ஈண்டு மொழிகள் தம்முட் கூடும் இலக்கணம் எ - று.

உ-ம். சாத்தன்கை சாத்தனுண்டான் வந்தான்சாத்தன் வந்தான்போயினான் என முறையே காண்க. இவை நான்கு இனத்தோடுங் கூடப் பதினாறும். இடையும் உரியுந் தாமாக நில்லாமையிற் பெயர்வினையே கூறினார். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் புணர்க்குஞ் செய்கைப்பட்டுழிப் புணர்ப்புச் சிறுபான்மை. பெயர்ப் பெயரும ஒட்டுப்பெயருமென இரண்டுவகைப்படும்பெயர். தெரிநிலைவினையுங் குறிப்புவினையுமென இரண்டுவகைப்படுந் தொழில். நிலைமொழியது ஈற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப்போக வருமொழியின் முதலெழுத்துப் பின் பிறந்து கெட்டமையான் முறையே பிறந்து கெடுவன ஒருங்குநின்று புணருமாறின்மையிற் புணர்ச்சியென்பது ஒன்றின்றாம் பிறவெனின், அச்சொற்களைக் கூறுகின்றோருங் கேட்கின்றோரும் அவவோசையை இடையறவுபடாமை உள்ளத்தின்கண்ணே உணர்வராதலின் அவவோசை கேடின்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவேயாம். ஆகவே பின்னர்க் கண்கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சியும் முடிந்தனவேயா

மென்று உணர்க. இனி முயற்கோடு உண்டென்றால் அது குறித்து வருகிளவியன்மையிற் புணர்க்கப்படாது. இதுதான் இன்றென்றாற் புணர்க்கப்படுமென்று உணர்க. (௬)

௧௦௯. அவைதாம்,
மெய்பிறி தாதன் மிகுதல் குன்றலென்
றிவ்வென மொழிப திரியு மாறே.

இது முற்கூறிய மூன்று திரிபும் ஆமாறு கூறுகின்றது.

இ - ள். அவைதாந் திரியுமாறு = முன்னர்த் திரிபென்று கூறிய அவைதாந் திரிந்து புணரும் நெறியை: மெய் பிறிதாதல் மிகுதல் குன்றலென்று இவ்வென மொழிப = மெய் வேறுபடுதல் மிகுதல் குன்றலென்று கூறப்படும் இம்மூன்று கூற்றையுடையவென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

இம்மூன்றும் அல்லாதது இயல்பாமென்று உணர்க. இவை விகற்பிக்கப் பதினாறு உதாரணமாம். மட்குடம் மலைத்தலை மரவேர் இவை பெயரோடு பெயர் புணர்ந்த மூன்றுதிரிபு. மண்மலை என்பது இயல்பு. சொற்கேட்டான் பலாக்குறைத்தான் மரநட்டான் இவை பெயரொடு தொழில் புணர்ந்த மூன்றுதிரிபு. கொற்றன்வந்தான் இஃது இயல்பு. வந்தானாற்சாத்தன் கொடாப்பொருள் ஓடுநாகம் இவை தொழிலொடு பெயர் புணர்ந்த மூன்றுதிரிபு. வந்தான்சாத்தன் இஃது இயல்பு. வந்தாற்கொள்ளும் பாடப்போயினான் சாஞான்றான் இவை தொழிலொடு தொழில் புணர்ந்த மூன்றுதிரிபு. வந்தான் கொண்டான் இஃது இயல்பு. மூன்றுதிரிபென்றது இடனென்றதனான் ஒருபுணர்ச்சிக்கண் மூன்றும் ஒருங்கேயும் வரப்பெறுமென்று உணர்க. மகத்தாற்கொண்டான் இஃது அங்ஙனம் வந்தவாறு மகர ஈற்று "நாட்பெயர்க்கிளவி" என்னுஞ் சூத்திரத்தான் உணர்க. இரண்டு வருவனவுங் காண்க. (௭)

௧௧௦. நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியு
மடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய.

இது நிலைமொழி அடையடுத்தும் வருமொழி அடையடுத்தும் அவ்விருமொழியும் அடையடுத்தும் புணருமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியும் = நிலைமொழியாக நிறுத்தின சொல்லும் அதனைக் குறித்துவருஞ் சொல்லும்:

அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய = தாமே புணராது ஒரோவோர்சொல் அடையடுத்துவரினும் இரண்டும் அடையடுத்து வரினும் புணர்நிலைமைக்கு உரிய. எ - று.

அடையாவன, உம்மைத்தொகையும் இருபெயரொட்டுப் பண்புத்தொகையுமாம்.

உ-ம். பதினாயிரத்தொன்று ஆயிரத்தொருபஃது பதினாயிரத் திருபஃது எனவரும். இவ்வடைகள் ஒருசொல்லேயாம். வேற்றுமைத்தொகையும் உவமத்தொகையும் முடியப் பண்புத்தொகையும் வினைத்தொகையும் பிளந்துமுடியாமையின் ஒருசொல்லேயாம். அன்மொழித்தொகையுந் தனக்கு வேறோர் முடிபின்மையின் ஒரு சொல்லேயாம். இத்தொகைச்சொற்களெல்லாம் அடையாய் வருங் காலத்து ஒருசொல்லாய் வருமென்று உணர்க. உண்டசாத்தன்வந் தான் உண்டுவந்தான்சாத்தன் என்பனவும் ஒருசொல்லேயாம். (அ)

கககூ. மருவின் றொகுதி மயங்கியன் மொழியு
முரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே.

இது மரூஉச்சொற்களும் புணர்ச்சிபெறுமென்பதூஉம் நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியுமாய்ப் பொருளியைபில்லனவும் புணர்ச்சிபெற்றாற்போல நிற்குமென்பதூஉம் உணர்த்துகின்றது.

இ - ள். மருமொழியும் = இருவகையாகிமருவிய சொற்களும்: இன்றொகுதி மயங்கியன்மொழியும் = செவிக்கினிதாகச் சொற்றிரளிடத்து நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியுமாய் ஒட்டினாற் போலநின்று பொருளுணர்த்தாது பிரிந்து பின்னர்ச்சென்று ஒட்டிப் பொருளுணர்த்த மயங்குதல் இயன்றசொற்களும்: புணர்நிலைச் சுட்டு உரியவை உள = புணரும் நிலைமைக்கருத்தின்கண் உரியன உள. எ - று.

மொழியுமென்பதனை மருவென்பதனோடுங் கூட்டுக. இன்றொகுதியென்றார், பாவென்னும் உறுப்பு நிகழப் பொருளொட்டாமற் சான்றோர் சொற்களைச் சேர்த்தலின்.

உ-ம். முன்றில் மீகண் இவை இலக்கணத்தோடு பொருந்திய மரூ. இலக்கணம் அல்லா மரூ "வழங்கியன்மருங்கின்மருவொடு திரிநவும்" என்புழிக் காட்டுதும். இனி "இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்—பரலவ லடைய விரலை தெறிப்ப" என்புழி மருப்பினிரலையென்று ஒட்டி இரண்டாவதன் தொகையாய்ப் பொருடந்து

"புள்ளி யீற்றுமுன் னுயிர்தனித் தியலா" என்று உயிரேறிமுடிந்து மயங்கிகின்றது. ஆயின், மருப்பிற்பரலென்று மெய்பிறிதாய் ஒட்டி நின்றவாறென்னையெனின் மருப்பினையுடையபரலென வேற்றுமைத்தொகைப்பொருள் உணர்த்தாமையின் அஃது அச்செய்யுட்கு இன்னோசைநிகழ்தற்குப் பகரத்தின்முன்னர் நின்ற னகரம் றகரமாய்த் திரிந்துநின்ற துணையேயாய்ப் புணர்ச்சிப்பயனின்றி நின்றது. இங்ஙனம் புணர்ச்சியெய்தினாற்போல மாட்டிலக்கணத்தின் கண்ணும் மொழிமாற்றின்கண்ணும் நிற்றல் சொற்கு இயல்பென்றற்கு அன்றே ஆசிரியர் இன்றொருகூறியென்றதென்று உணர்க. "கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினை" என்புழி ஓமைச்சினையென்று ஒட்டி ஓமையினது சினையெனப் பொருள் தருகின்றது இன்னோசை தருதற்குக் ககரவொற்றுமிக்குக் காண்பினென்பதனோடும் ஒட்டினாற்போல நின்றது. "தெய்வமால்வரைத்திருமுனியருளால்" என்புழித் தெய்வவரையென்று ஒட்டித் தெய்வத்தன்மையுடையவரையெனப் பொருள் தருகின்றது இன்னோசை தருதற்கு மாலென்பதனோடும் ஒட்டினாற்போலக் குறைந்துநின்றது. மூன்றுதிரிபும் வந்தவாறு காண்க. இனி எச்சத்தின்கண்ணும் "எயிறுபடையாக வெயிற்கதவிடா—பொன்னோடைப் புகரணிநுதற்—றுன்னருந்திறற் கமழ்கடாத்துக்—கயிறுபிணிக்கொண்ட கவிழ்மணிமருங்கிற்—பெருங்கையானை யிரும்பிடர்த்தலையிருந்து—மருந்தில்கூற்றத் தருந்தொழில்சாவா" என மாட்டாய் ஒட்டிகின்றது கயிறுபிணிக்கொண்ட என்பதனோடும் ஒட்டினாற்போல நின்று ஒற்றடுத்தது இன்னோசைபெறுதற்கு. பிற சான்றோர்செய்யுட்கண் இவ்வாறும் பிறவாறும் புணர்ச்சியில்வழிப் புணர்ச்சிபெற்றாற்போல நிற்பன எல்லாவற்றிற்கும் இதுவே ஓத்தாகக்கொள்க. (கூ)

கக௨. வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையு
மெழுத்தே சாரியை யாயிரு பண்பி
னொழுக்கல் வலிய புணருங் காலை.

இது மூவகைத்திரிபினுள் மிக்குப்புணரும் புணர்ச்சி இருவகைய என்கின்றது.

இ - ள். புணருங்காலை = நால்வகைப்புணர்ச்சியுள் மிக்கபுணர்ச்சி புணருங்காலத்து: வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும் = வேற்றுமைப்பொருண்மையினைக் குறித்த புணர்மொழியினது தன்மையும்; வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும் =

வேற்றுமையல்லாத அல்வழியிடத்துப் புணரும் மொழியினது தன்மையும்: எழுத்தே சாரியை ஆயிரு பண்பின் ஒழுக்கல் வலிய= எழுத்துமிகுதலுஞ் சாரியைமிகுதலுமாகிய அவ்விரண்டுகுணத்தினு னுஞ் செல்லுதலைத் தமக்கு வலியாகவுடைய. எ - று.

எனவே ஏனைப்புணர்ச்சிகளுக்கு இத்துணைவேறுபாடு இன்றென உணர்க.

உ-ம். விளங்கோடு இஃது எழுத்துப்பெற்றது. மகவின்கை இது சாரியைபெற்றது. இனி அல்வழிக்கண் விளக்குறிது இஃது எழுத்துப்பெற்றது. பனையின்குறை இது சாரியைபெற்றது. இதற்குப் பனைகுறைந்ததென்பது பொருளாம். இஃது அளவுபெயர். ஒழுக்கல்வலியவென்றதனான் இக்கூறிய இரண்டும் எழுத்துஞ் சாரியையும் உடன்பெறுதலுங் கொள்க. அவற்றுக்கோடென்பது வேற்றுமைக்கண் இரண்டும்பெற்றது. கலத்துக்குறையென்பது அல்வழிக்கண் இரண்டும்பெற்றது. இதற்குக் கலங்குறைந்ததென்பது பொருளாம். இயல்புகணத்துக்கண் இவ்விரண்டும் உடன்பெறுதலின்று. அல்வழி முற்கூறுதது வேற்றுமையல்லாதது அல்வழியெனவேண்டுதலின். எழுத்துப்பேறு யாப்புடைமையானும் எழுத்திறச் சாரியையாதலானும் எழுத்து முற்கூறினார். வேற்றுமை மேலைச்சூத்திரத்தே கூறுகின்றார்.

அல்வழியாவன அவ்வுருபுகள் தொக்கும் விரிந்தும் நில்லாது புணர்வன. அவை எழுவாய்வேற்றுமை ஆறுபயனிலையோடும் புணர்ந்த புணர்ச்சியும், விளிவேற்றுமை தன்பொருளோடு புணர்ந்த புணர்ச்சியும், முற்றுப் பெயரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், பெயரெச்சமும் வினையெச்சமும் பெயரோடும் வினையோடும் புணர்ந்தபுணர்ச்சியும், உவமத்தொகையும் உம்மைத்தொகையும் இருபெயரொட்டுப்பண்புத்தொகையும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், அன்மொழித்தொகை பொருளோடு புணர்ந்த புணர்ச்சியும், பண்புத்தொகையும் வினைத்தொகையும் விரிந்துநின்றவழிப் புணர்ந்த புணர்ச்சியுமென உணர்க. (கO)

ககரு. ஐஒடு குஇன் அதுகண் ணென்னு
மவ்வா றென்ப வேற்றுமை யுருபே.

இது மேல் வேற்றுமையெனப்பட்ட அவற்றது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது.

இ - ள். வேற்றுமையுருபு=முற்கூறிய வேற்றுமைச்சொற்களை: ஐ ஒடு கு இன் அது கண் என்னும் அவ்வாறென்ப=ஐ ஒடு கு இன் அது கண் என்று சொல்லப்படும் அவ்வாறு உருபுமென்று சொல்வர் ஆசிரியர். எ - று.

மேற் சொல்லதிகாரத்து எழுவாயையும் விளியையுங் கூட்டி வேற்றுமை எட்டென்பாராலெனின் ஐ முதலிய வேற்றுமையாறுந் தொக்கும் விரிந்தும் பெரும்பான்மையும் புலப்பட்டுநின்று பெயர்ப் பொருளைச் செயப்படுபொருள் முதலியனவாக வேறுபாடுசெய்து புணர்ச்சியெய்துவிக்குமென்றற்கு ஈண்டு ஆறென்றார். ஆண்டு எழுவாயும் விளியுஞ் செயப்படுபொருள் முதலியவற்றினின்றுந் தம்மை வேறுபடுத்துப் பொருள்மாத்திரம் உணர்த்திநின்றும் விளியாய் எதிர்முகமாக்கிநின்றும் இங்ஙனஞ் சிறுபான்மையாய்ப் புலப்படுநில்லா வேறுபாடு உடையவேனும் அவையும் ஒருவாற்றான் வேற்றுமையாயினவென்றற்கு ஆண்டு எட்டென்றாரென உணர்க.

ககச. வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்
கொல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும்.

இது நான்காவதற்கும் ஏழாவதற்கும் உருபியலைநோக்கியதோர் கருவிகூறுகின்றது.

இ - ள். வல்லெழுத்து முதலிய வேற்றுமையுருபிற்கு=வல்லெழுத்து அடியாய்நின்ற நான்காவதற்கும் ஏழாவதற்கும்: ஒல்வழி ஒற்று இடைமிகுதல் வேண்டும்=பொருந்தியவழி வல்லொற்றாயினும் மெல்லொற்றாயினும் இடைக்கண் மிக்குப்புணர்தலை விரும்பும் ஆசிரியன். எ - று.

வரையாது ஒற்றெனவே வல்லொற்றும் மெல்லொற்றும் பெற்றாம்.

உ-ம். மணிக்கு மணிக்கண் திக்கு திக்கண் மனைக்கு மனைக்கண் எனவும், வேய்க்கு வேய்க்கண் ஊர்க்கு ஊர்க்கண் பூழ்க்கு பூழ்க்கண் எனவும், உயிரீறுமூன்றினும் புள்ளியீறுமூன்றினும் பெரும்பான்மை வல்லொற்றுமிக்கு வரும். தங்கண் நங்கண் நுங்கண் எங்கண் என மெல்லொற்றுமிக்கது. இவற்றிற்கு நிலைமொழிமகரக் கேடு உருபியலிற் கூறுப. ஆங்கண் ஈங்கண் ஊங்கண் என்பன சுட்டெழுத்து நீண்டுநின்றன. இவற்றிற்கு ஒற்றுக்கேடு கூறுதற்கு ஒற்றின்று.

இனி நான்கனுருபிற்கு மெல்லெழுத்து மிகாதென்று உணர்க.

இனி ஒல்வழியென்பதனான் ஏழாமுருபின்கண் நம்பிகண் என இகர ஈற்றின்கண்ணும் நங்கைகண் என ஐகார ஈற்றின்கண்ணுந் தாய்கண் என யகர ஈற்றின்கண்ணும் அரசர்கண் என ரகர ஈற்றின்கண்ணும் ஒற்றுமிகாமை கொள்க.

இனி மெய்பிறிதாதலை முன்னே கூறாது மிகுதலை முற்கூறிய அதனானே பொற்கு பொற்கண் வேற்கு வேற்கண் வாட்கு வாட்கண் எனத் திரிந்துமுடிவனவுங்கொள்க. இதனானே அவன்கண் அவள்கண் என உயர்திணைப்பெயர்க்கண் ஏழனுருபு இயல்பாய்வருதலுங் கொள்க. இவற்றிற்குக் குன்றியபுணர்ச்சிவருமேனுங் கொள்க.

கொற்றிக்கு கொற்றிகண் கோதைக்கு கோதைகண் என விரவுப்பெயர்க்கும் இதனானே கொள்க. (கஉ)

ககரு. ஆறனுருபி னகரக் கிளவி
ஈறா ககரமுனைக் கெடுதல் வேண்டும்.

இஃது ஆறாவதற்குத் தொகைமரபைநோக்கியதோர் கருவிகூறுகின்றது.

இ - ள். ஆறனுருபின் அகரக்கிளவி = அதுவென்னும் ஆறனுருபின்கணின்ற அகரமாகிய எழுத்து: ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும் = நெடுமுதல் குறுகுமொழிகட்கு "ஈறாகு புள்ளி யகரமொடு நிலையும்" என விதித்ததனால் உளதாகிய அகரத்தின்முன்னர்த் தான் கெடுதலைவிரும்பும் ஆசிரியன். எ - று.

தமது நமது எமது நுமது தனது எனது நினது எனவரும். இது நிலைமொழிக்கு ஓர் அகரம் பெறுமென விதியாது உருபு அகரம் ஏறி முடியுமென விதித்தால் வருங் குற்றம் உண்டோவெனின், "நின்று கூறுவலெனவகேண்மதி" என்றாற்போல ஆறாவதற்கு உரிய அகர உருபின்முன்னரும் ஓர் அகர எழுத்துப்பேறு நிலைமொழிக்கண் வருதலுளதாகக் கருதினாராதலின், ஆறனுருபிற்கும் நான்கனுருபிற்கும் பொதுவாக நிலைமொழிக்கண் அகரப்பேறு விதித்து, அதுவென்னும் ஒருமையுருபுவந்தால் ஆண்டுப்பெற்று நின்ற அகரத்தின்முன்னர் அதுவென்பதன்கண் அகரங் கெடுகவென்று ஈண்டுக் கூறினாராதலின், அதற்குக் குற்றம் உண்டென்று உணர்க. (கரு)

கககா. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.

இது வேற்றுமை பெயர்க்கண் நிற்குமாறு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமை பெயர்வழிய=வேற்றுமைகள் பெயரின் பின்னிடத்தனவாம்: புணர்நிலை=அவற்றோடு புணரும் நிலைமைக் கண். எ - று.

உ-ம். சாத்தனை சாத்தனொடு சாத்தற்கு சாத்தனின் சாத்தனது சாத்தன்கண் எனவரும். மற்று இது "கூறிய முறையின்" என்னும் வேற்றுமையோத்திற் சூத்திரத்தாற் பெறுதுமெனின், பெயரொடு பெயரைப் புணர்த்தல் முதலிய நால்வகைப் புணர்ச்சியினையும் வேற்றுமை அல்வழியென இரண்டாக அடக்குதலிற் றொழிற் பின்னும் உருபு வருமென எய்தியதனை விலக்குதற்கு ஈண்டுக்கூறினாரென்க. ஆயின் இவ்விலக்குதல் வினையியன்முதற்சூத்திரத் தாற் பெறுதுமெனின், அது முதனிலையைக் கூறிற்றென்பது ஆண்டு உணர்க. (கச)

கக௭. உயர்திணைப் பெயரே யஃறிணைப் பெயரென்
றாயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே.

இது முற்கூறிய பெயர்கட்குப் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

இ - ள். சுட்டுநிலைப்பெயர்=பொருளை ஒருவர் கருதுதற்குக் காரணமான நிலைமையயுடைய பெயர்களை: உயர்திணைப்பெயரே அஃறிணைப்பெயரென்று ஆயிரண்டென்ப=உயர்திணைப்பொருளை ஒருவன் கருதுதற்குக் காரணமானபெயரும் அஃறிணைப்பொருளை ஒருவன் கருதுதற்குக் காரணமானபெயரும் என்னும் அவ்விரண் டென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

பெயரியலுள் அவன் இவன் உவன் என்பது முதலாக உயர்திணைப்பெயரும் அது இது உது என்பது முதலாக அஃறிணைப்பெயரும் ஆமாறு அவற்றிற்கு இலக்கணங்கூறுகின்றார் ஈண்டுக் குறியிட்டாளுதல் மாத்திரையே கூறினாரென்று உணர்க. இனிக் கொற்றன் கொற்றி என்றாற்போலும் விரவுப்பெயருங் கொற்றன்குறியன் கொற்றிகுறியள் கொற்றன்குளம்பு கொற்றிகுறிது எனப் பின்வருவனவற்றாற் றிணைதெரிதலின் இருதிணைப்பெயரின்கண் அடங்கும். கொற்றன்செவி கொற்றிசெவி என்பனவும் பின்னர்வருகின்ற வினைகளாற் றிணைவிளங்கி அடங்குமாறு உணர்க. இனி "அஃறிணைவிரவுப்பெயரியல்புமாருளவே" என்றாற்போலப் பிறாண்டும் ஓதுதல்பற்றி நிலையென்றதனான் விரவுப்பெயர்கோடலும் ஒன்று. ()

கக௮. அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே.

இது சாரியை வரும் இடங் கூறுகின்றது.

இ - ள். அவற்றுவழி மருங்கின் = அச்சொல்லப்பட்ட இரு வகைப்பெயர்களின்பின்னாகிய இடத்தே: சாரியை வரும் = சாரியைச் சொற்கள் வரும். எ - று.

உ-ம். ஆடூஉவின்கை மகடூஉவின்கை பலவற்றுக்கோடு எனப் புணரியனிலையிடைப் பொருணிலைக்கு உதவிவந்தன. சாரியையென்றதன் பொருள் வேறாகி நின்று இருமொழியுந் தம்மிற் சார்தற் பொருட்டு இயைந்துநின்றது என்றவாறு. (கசு)

கக௯. அவைதாம்,
இன்னே வற்றே யத்தே யம்மே
யொன்னே யானே யக்கே யிக்கே
யன்னென் கிளவி யுளப்படப் பிறவு
மன்ன வென்ப சாரியை மொழியே.

இஃது அச்சாரியைகட்குப் பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது.

இ - ள். அவைதாம் = முன்னர்ச் சாரியையெனப்பட்ட அவைதாம்: இன்னே வற்றே அத்தே அம்மே ஒன்னே ஆனே அக்கே இக்கே அன்னென்கிளவி உளப்பட அன்ன என்ப = இன்னும் வற்றும் அத்தும் அம்மும் ஒன்னும் ஆனும் அக்கும் இக்கும் அன்னென்னுஞ்சொல்லோடுகூட ஒன்பதாகிய அத்தன்மையுடையனவும்: பிறவுஞ் சாரியைமொழி என்ப = அவையொழிந்தனவுஞ் சாரியைச் சொல்லாமென்பர் ஆசிரியர். எ - று.

பிறவாவன தம் நம் நும் உம் ஞான்று கெழு ஏ ஐ என்பனவாம். இவற்றுள் ஞான்று ஒழிந்தன எடுத்தோதுவர் ஆசிரியர். "எடுத்தநறவின்குலையலங்காந்தள்" இது வினைத்தொகை, சாரியையன்று. இன்சாரியை வழக்குப்பயிற்சியும் பலகால் எடுத்தோதப்படுதலும் பொதுவகையான் ஓதியவழித் தானே சேறலுமாகிய சிறப்பு நோக்கி முன்வைத்தார். வற்றும் அத்தும் இன்போல முதல் திரியுமாகலானுஞ் செய்கையொப்புமையானும் அதன்பின்வைத்தார். அம் ஈறுதிரியுமாதலிற் திரிபுபற்றி அதன்பின்வைத்தார். ஒன் ஈறுதிரியுமேனும் வழக்குப்பயிற்சியின்றி நான்காமுருபின்கட் திரிதலின்

அதன்பின் வைத்தார். ஆன் பொருட்புணர்ச்சிக்கும் உருபுபுணர்ச்சிக்கும் வருமென்று அதன்பின் வைத்தார். அக்கு ஈறுதிரியுமேனும் உருபுபுணர்ச்சிக்கண் வாராமையின் அதன்பின் வைத்தார். இக்கு முதல் திரியுமேனுஞ் சிறுபான்மைபற்றி அதன்பின் வைத்தார். அன் இன்போலச் சிறத்தலிற் பின்வைத்தார்.

ஆனுருபிற்கும் ஆன்சாரியைக்கும் இன்னுருபிற்கும் இன்சாரியைக்கும் வேற்றுமை யாதெனின், அவை சாரியையான இடத்து யாதானும் ஓர் உருபேற்று முடியும்; உருபாயின இடத்து வேறோர் உருபினை ஏலாவென்று உணர்க. இனி மகத்துக்கை என்புழித் தகரவொற்றுந் தகரவுகரமும் வருமென்று கோடுமெனின், இருளத்துக்கொண்டானென்றால் அத்து எனவே வேண்டுதலின் ஆண்டும் அத்து நின்றே கெட்டதென்று கோடும். அக்கு இக்கு என்பனவும் பிரித்துக்கூட்டக் கிடக்கும். தாழக்கோலென அக்குப் பெற்று நிற்றலானும் ஆடிக்கு என்புழிக் குகரம் நான்கனுருபாகாமையானும் இவை சாரியையாமாறு உணர்க. (கஎ)

கஉ௦. அவற்றுள், இன்னி னிகர மாவி னிறுதி
முன்னர்க் கெடுத லுரித்து மாகும்.

இது முற்கூறியவற்றுள் இன்சாரியை முதல் திரியுமாறு கூறுகின்றது.

இ-ள். அவற்றுள்=முற்கூறிய சாரியைகளுள்: இன்னின் இகரம்=இன்சாரியையது இகரம்: ஆவின் இறுதிமுன்னர்=ஆ என்னும் ஓரெழுத்தொருமொழிமுன்னர்: கெடுதல் உரித்துமாகும்=கெட்டுமுடியவும் பெறும். எ - று.

உரித்துமாகுமென்றதனாற் கெடாதுமுடியவும் பெறுமென்றவாறு. இஃது ஒப்பக்கூறலென்னும் உத்தி.

உ-ம். ஆனை ஆவினை ஆனொடு ஆவினொடு ஆற்கு ஆவிற்கு ஆனின் ஆவினின் ஆனது ஆவினது ஆன்கண் ஆவின்கண் எனவரும்.

இனி முன்னரென்றதனானே மாவிற்கும் இவ்வாறே கொள்க. மானை மாவினை மானொடு மாவினொடு மாற்கு மாவிற்கு என ஒட்டுக. ஆகார ஈறென்னாது ஆவினிறுதியென்று ஓதினமையின் மா இலேசிறாற்கொள்ளப்பட்டது.

இனி ஆன்கோடு ஆவின்கோடு மான்கோடு மாவின்கோடு என உருபிற்குச் சென்றசாரியை பொருட்கட் சென்றுழியுங் கொள்க.()

௧௨௧. அளவாகு மொழிமுத னிலைஇய வுயிர்மிசை
னஃகான் றஃகா னாகிய நிலைத்தே.

இஃது அவ் இன்சாரியை ஈறுதிரியுமாறு கூறுகின்றது.

இ - ள். அளவாகும் மொழி=அளவுப்பெயராய்ப் பின்னிற்கும் மொழிக்கு: முதல் நிலைஇய உயிர்மிசை னஃகான்=முன்னர் நின்ற எண்ணுப்பெயர்களின் ஈற்றுநின்ற குற்றுகரத்தின்மேல் வந்த இன்சாரியையது னகரம்: றஃகானாகிய நிலைத்து=றகரமாய்த் திரியும் நிலைமையையுடைத்து. எ - று.

உ-ம். பதிற்றகல் பதிற்றுழக்கு. இவற்றைப் பத்தென நிறுத்தி "நிறையுமளவும்" என்னுஞ் சூத்திரத்தால் இன்சாரியைகொடுத்துக் "குற்றிய லுகர மெய்யொடுங் கெடுமே" என்றதனாற் குற்றுகரம் மெய்யோடுங் கெடுத்து வேண்டுஞ் செய்கைசெய்து "முற்றவின்வரூஉம்" என்பதனான் ஒற்றிரட்டித்து முடிக்க.

நிலைஇய என்றதனாற் பிறவழியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க. பதிற்றெழுத்து பதிற்றடுக்கு ஒன்பதிற்றெழுத்து பதிற்றொன்று பதிற்றிரண்டு பதிற்றொன்பது என எல்லாவற்றோடும் ஒட்டிக்கொள்க. அச்சூத்திரத்திற் "குறையாதாகும்" என்றதனாற் பொருட்பெயர்க்கும் எண்ணுப்பெயர்க்கும் இன்கொடுக்க.(௧௯)

௧௨௨. வஃகான் மெய்கெடச் சுட்டுமுத லைம்மு
னஃகா னிற்ற லாகிய பண்பே.

இது வற்று முதல் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள். சுட்டுமுதல் ஐம்முன்=சுட்டெழுத்தினைமுதலாகவுடைய ஐகார ஈற்றுச்சொன்முன் வற்று வருங்காலை: வஃகான் மெய்கெட அஃகான் நிற்றலாகிய பண்பு=அவ வற்றுச்சாரியையினது வகரமாகிய ஒற்றுக்கெட ஆண்டு ஏறிய அகரம் நிற்றல் அதற்கு உளதாகிய குணம். எ - று.

உ-ம். அவையற்றை இவையற்றை உவையற்றை எனவரும். இன்னும் இவற்றை அவை இவை உவை என நிறுத்திச் "சுட்டுமுதலாகிய வையெனிறுதி" என்றதனான் வற்றும் உருபுங் கொடுத்து

ஐகான் ஔகான் எனவரும். உம்மை இறந்தது தழீஇயிற்று, காரத்தைக் கருதுதலின். (௩௫)

கந௮. புள்ளி யீற்றுமுன் னுயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே.

இது புள்ளியீற்றுமுன் உயிர்முதன்மொழி வந்த காலத்துப் புணரும் முறைமை கூறுகின்றது.

இ - ள். புள்ளியீற்றுமுன் உயிர் தனித்து இயலாது=புள்ளி யீற்றுச்சொன்முன்னர் வந்த உயிர்முதன்மொழியின் உயிர் தனித்து நடவாது: மெய்யொடுஞ் சிவணும்=அப்புள்ளியோடுங் கூடும்: அவ்வியல் கெடுத்து=தான் தனித்து நின்ற அவ்வியல்பினைக் கெடுத்து. எ - று.

எனவே நீரொடு கூடிய பால்போல நின்றதென்று ஒற்றுமை கூறினார். ஈண்டு இதனனே உயிர்மெய்யெனப் பெயர்பெற்றது.

உ-ம். பாலரிது பாலாழி ஆலிலை பொருளீட்டம் வானுலகு வானாடு வேலெறிந்தான் வேலேற்றான் பொருளையம் பொருளொன்று நாணோடிற்று சொல்லெளவியம் எனவரும்.

ஒன்றெனமுடித்தலென்பதனன் இயல்பல்லாத புள்ளிமுன்னர் உயிர்வந்தாலும் இவ்விதிகொள்க. அதனை அதனொடு நாடுரி என வரும். இவற்றைச் "சுட்டுமுதலுகரமன்னொடு" "உரிவருகாலைநாழிக்கிளவி" என்பனவற்றான் முடிக்க. புள்ளியீற்றுமுன்னுமென உம்மையை மாறி எச்சவும்மையாக்கிக் குற்றியலுகரத்தின் முன்னரும் என அவ்விதிகொள்க. எனவே "குற்றியலுகரமுமற்று" என்றதனேடும் பொருந்திற்றும். நாகரிது வரகரிது எனவரும். (௩௬)

கநகூ. மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்.

இஃது உயிர்மெய் புணர்ச்சிக்கண் உயிர்நீங்கியவழிப் படுவதோர் விதி கூறுகின்றது.

இ - ள். மெய் உயிர் நீங்கின்=மெய் தன்னேடுகூடிநின்ற உயிர் புணர்ச்சியிடத்துப் பிரிந்து வேறுநின்றதாயின்: தன் உருவாகும்=தான் முன்னர்ப் பெற்றுநின்ற புள்ளிவடிவு பெறும். எ - று.

ஆல் இலை அதன் ஐ என வரும்.

உயிர் இன்னவடிவிற்றென்று ஆசிரியர் கூறாமையின் உயிர்க் கண் ஆராய்ச்சியின்று.

இனி எகர ஒகரங்களைப் புள்ளியான் வேற்றுமைசெய்தலிற் தொன்றுதொட்டு வழங்கின வடிவுடையவென்று கோடலுமாம். புணர்ச்சியுள் உயிர்மெய்யினைப் பிரிப்பாராதலின் இதுகூறாக்காற் குன்றக்கூறலாமென்று உணர்க. (௬எ)

கசO. எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
யுடம்படு மெய்யி னுருவுகொளல் வரையார்.

இஃது உயிரீறும் உயிர்முதன்மொழியும் புணரும்வழி நிகழ்வ தோர் கருவிகூறுகின்றது.

இ - ள். எல்லாமொழிக்கும் = நிலைமொழியும் வருமொழியு மாய்ப் புணரும் எவ்வகைமொழிக்கும்: உயிர்வருவழி = உயிர்முதன் மொழி வருமிடத்து: உடம்படுமெய்யின் உருவுகொளல் வரை யார் = உடம்படுமெய்யினது வடிவை உயிரீறுகோடலை நீக்கார் கொள்வார் ஆசிரியர். எ - று.

அவை யகரமும் வகரமுமென்பது முதனூல்பற்றிக் கோடும்; "உடம்படு மெய்யே யகார வகார—முயிர்முதன் மொழிவருஉங் காலை யான." எனவும் "இறுதியு முதலு முயிர்நிலை வரினே—யுறு மென மொழிப வுடம்படு மெய்யே." எனவுங் கூறினராகலின். உயிர்களுள் இகர ஈகார ஐகார ஈறு யகர உடம்படுமெய் கொள் ளும். ஏகாரம் யகாரமும் வகாரமுங் கொள்ளும். அல்லனவெல் லாம் வகர உடம்படுமெய்யே கொள்ளுமென்று உணர்க.

உ-ம். கிளியழகிது குரீஇயோப்புவாள் வரையரமகளிர் என வும், விளவழகிது பலாவழகிது கடுவழகிது பூவழகிது கோவழகிது கௌவடைந்தது எனவும் ஒட்டுக. "ஏஎயிவளொருத்திபேடியோ வென்றார்" ஏவாடல்காண்க என ஏகாரத்திற்கு இரண்டும் வந்தன.

ஒன்றெனமுடித்தலென்பதனான் விகாரப்பட்டமொழிக்கண் ணும் உடம்படுமெய்கொள்க. மரவடி ஆயிருதிணை எனவரும். வரையாரென்றதனான் உடம்படுமெய்கோடல் ஒருதலையன்று. கிளிஅரிது மூங்காஇல்லை எனவும்வரும். ஒன்றெனமுடித்தலென் பதனால் "விண்வத்துக்கொட்கும்" எனச் சிறுபான்மை புள்ளி யீற்றினும் வரும். செல்வுழி உண்புழி என்பன வினைத்தொகை யென மறுக்க. (௬அ)

கசக. எழுத்தோ ரன்ன பொருடெரி புணர்ச்சி
யிசையிற் றிரித னிலைஇய பண்பே.

இஃது எழுத்துக்கள் ஒன்று பலவாமென எய்தாததெய்துவிக்கின்றது.

இ - ள். எழுத்தோரன்ன பொருள் தெரி புணர்ச்சி = எழுத்து ஒருதன்மைத்தான பொருள்விளங்கநிற்கும் புணர்மொழிகள்: இசையிற் றிரிதல் நிலைஇய பண்பு = எடுத்தல் படுத்தல் நலிதலென்கின்ற ஓசைவேற்றுமையாற் புணர்ச்சிவேறுபடுதல் நிலைபெற்ற குணம். எ - று.

உ-ம். செம்பொன்பதின்றொடி செம்பருத்தி குறும்பரம்பு நாகன்றேவன்போத்து தாமரைக்கணியார் குன்றேறமா என இவை இசையிற் றிரிந்தன. (நக)

கசஉ. அவைதாம்,
முன்னப் பொருள புணர்ச்சி வாயி
னின்ன வென்னு மெழுத்துக்க டிலவே.

இது மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

இ - ள். அவைதாம் = பலபொருட்குப் பொதுவென்ற புணர்மொழிகள் தாம்: முன்னப் பொருள = குறிப்பான் உணரும் பொருண்மையினையுடைய: புணர்ச்சிவாயின் இன்னவென்னும் எழுத்துக் கடன் இல = புணர்ச்சியிடத்து இத்தன்மையவென்னும் எழுத்துமுறைமையை உடையவல்ல. எ - று.

செம்பொன்பதின்றொடி என்றுழிப் பொன்னுரைாய்ச்சியுளவழிப் பொன்னெனவுஞ் செம்பாராய்ச்சியுளவழிச் செம்பெனவுங் குறிப்பான் உணரப்பட்டது. இசையிற் றிரிதலென்றது ஒலியெழுத்திற்கெனவும் எழுத்துக்கடனிலவென்றது வரிவடிவிற்கெனவுங் கொள்க. (சo)

நான்காவது புணரியல் முற்றிற்று.

ஐந்தாவது

தொகைமரபு.

கசந. கசதப முதலிய மொழிமேற் றோன்று
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்

ஙஞநம வென்னு மொற்று மும்மே
யன்ன மரபின் மொழிவயி னான.

என்பதுசூத்திரம். உயிரீறும் புள்ளியீறும் மேலை அகத்தோத்தினுள் முடிக்கும்வழி ஈறுகடோறும் விரித்துமுடிப்பனவற்றை ஈண்டு ஒரோவோர் சூத்திரங்களாற் தொகுத்து முடிபுகூறினமையின் இவ்வோத்துத் தொகைமரபென்னும் பெயர்த்தாயிற்று. மேல் மூவகைமொழியும் நால்வகையாற் புணர்வுழி, மூன்றுதிரிபும் ஓரியல்பும் எய்தி வேற்றுமை அல்வழியென இருபகுதியவாகி எழுத்துஞ் சாரியையும் மிக்குப் புணருமாறு இதுவென்று உணர்த்தி, அவைதாம் விரிந்த சூத்திரப்பொருளவன்றியுந் தொக்குப்புணருமாறு கூறுதலின், இவ்வோத்துப் புணரியலோடு இயைபுடைத்தாயிற்று. இத்தலைச்சூத்திரம் உயிர்மயங்கியலையும் புள்ளிமயங்கியலையும் நோக்கியதோர் வருமொழிக்கருவி கூறுகின்றது.

இ - ள். கசதப முதலிய மொழிமேற் தோன்றும் இயற்கை மெல்லெழுத்து = உயிரீறும் புள்ளியீறும் முன்னர்நிற்பக் கசதபக்களை முதலாகவுடைய மொழிகள் வந்தால் அவற்றிற்குமேலே தோன்றிநிற்கும் இயல்பாகிய மெல்லெழுத்துக்கள்: சொல்லிய முறையான் ஙஞநம என்னும் ஒற்றாகும் = நெடுங்கணக்கிற் பொருந்தக் கூறிய முறையானே கசதபக்களுக்கு ஙஞநமவென்னும் ஒற்றுக்கள் நிரனிறைவகையானும்: அன்ன மரபின் மொழிவயினான = அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய மொழிகளிடத்து. எ-று.

உ-ம். விளங்கோடு செதிள் தோல் பூ எனவரும். இது "மரப் பெயர்க்கிளவி" என்பதனான் மெல்லெழுத்துப் பெற்றது. மரங்குறிது சிறிது தீது பெரிது என அல்வழிக்கட் திரியுமாறு "அல்வழியெல்லாம்" என்பதனாற் பெறுதுமேனும் ஈண்டுத் தோன்றுமென்றதனால் நிலைமொழிக்கட் தோன்றிநின்ற ஒற்றுத் திரிதல் கொள்க. அன்னமரபின்மொழியன்மையின் விளக்குறுமை விளக்குறைத்தான் என்புழி மெல்லெழுத்துப்பெறாவாயின, இவை ஏழாவதும் இரண்டாவதுந் திரிதலின், இங்ஙனம் எழுத்துப்பெறுவனவுந் திரிவனவுமெல்லாம் வருமொழியேபற்றி வருமென்று உணர்க. (க)

கசச. ஞநம யவவெனு முதலாகு மொழியு
முயிர்முத லாகிய மொழியு முளப்பட
வன்றி யனைத்து மெல்லா வழியு
நின்ற சொன்மு னியல்பா கும்மே.

வேண்டுஞ்செய்கைசெய்க. இவ்வாறே எல்லா உருபிற்கும் ஒட்டுக. அவையற்றுக்கோடு என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றவழியுங் கொள்க.

ஆகியபண்பு என்றதனுனே எவனென்பது படுத்தலோசை யாற் பெயராயவழி எவன் என நிறுத்தி வற்றும் உருபுங் கொடுத்து வற்றுமிசையொற்றென்று னகரங்கெடுத்து அகரவுயிர்முன்னர் வற்றின்-வகரங்கெடுமெனக் கெடுத்து எவற்றை எவற்றொடு எனமுடிக்க. (உ0)

கஉரு. னஃகான் றஃகா னுன்க னுருபிற்கு.

இஃது இன் ஒன் ஆன் அன்னென்னும் னகர ஈறு நான்குந் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள். னஃகான் நான்கனுருபிற்கு றஃகான்=னகார ஈற்று நான்குசாரியையின் னகரமும் நான்காமுருபிற்கு றகாரமாய்த் திரியும். எ - று.

உ-ம். அளவிற்கு கோஒற்கு ஒருபாற்கு அதற்கு எனவரும்.

இதனை "அளவாகு மொழிமுதல்" என்பதன்பின் வையாது ஈண்டு வைத்தது னகர ஈறுகளெல்லாம் உடன் திரியுமென்றற்கு. ஆண்டுவைப்பின் இன்சாரியையே திரியுமென்பது படும். "ஒன்று முத லாகப் பத்தூர்ந்து வரூஉ—மெல்லா வெண்ணும்" என்பதனுன் ஒருபாற்கு என்பதனை முடிக்க. (உக)

கஉச. ஆனி னகரமு மதனோ ரற்றே
நாண்முன் வரூஉம் வன்முதற் றொழிற்கே.

இஃது ஆனின் ஈறு பொருட்புணர்ச்சிக்கட் திரியுமென்கின்றது.

இ - ள். நாள்முன் வரூஉம் வன்முதற் றொழிற்கு=நாட்பெயர்முன்னர்வரும் வல்லெழுத்தைமுதலாக உடைய தொழிற்சொற்கு இடையேவரும்: ஆனின் னகரமும் அதனோரற்று=ஆன்சாரியையின் னகரமும் நான்கனுருபின்கண் வரும் ஆன்சாரியைபோல றகரமாய்த் திரியும். எ - று.

உ-ம். பரணியாற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும். "நாண்முற் றோன்றுந் தொழினிலைக் கிளவிக்கு"

என்றதனான் ஆன்சாரியை கொடுத்துச் செய்கைசெய்க. இனி உம்மையை இறந்ததுதழீஇயதாக்கி நாளல்லவற்றுமுன் வரும் வன்முதற்றொழிற்கண் இன்னின் னகரமும் அதனோடு ஒக்குமெனப் பொருளுரைத்துப் பனியிற்கொண்டான் வளியிற்கொண்டான் என இன்னின் னகரமும் றகரமாதல் கொள்க.

இனி ஞாபகத்தாற் றொழிற்கண் இன்னின் னகரந் திரியுமெனவே பெயர்க்கண் இன்னின் னகரந் திரிதலுந் திரியாமையுங் கொள்க. குறும்பிற்கொற்றன் பறம்பிற்பாரி எனத் திரிந்துவந்தன. குருகின்கால் எருத்தின்புறம் எனத் திரியாது வந்தன. (உஉ

கஉரு. அத்தி னகர மகரமுனை யில்லை.

இஃது அத்து முதல் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள். அத்தின் அகரம்=அத்துச்சாரியையின் அகரம்: அகரமுனை இல்லை=அகர ஈற்றுச்சொன்முன்னர் இல்லையாம். எ - று.

“அத்தவண் வரினும் வரைநிலை யின்றே.” என்பதனான் மகப்பெயர் அத்துப்பெற்றுநின்றது மகத்துக்கையென அகரங்கெட்டுநின்றது. விளவத்துக்கண்ணென்புழிக் கெடாதுநிற்றல் “அத்தே வற்றே” என்பதனுட் “தெற்றென்றற்றே” என்பதனாற் கூறுப. ()

கஉசா. இக்கி னிகர மிகரமுனை யற்றே.

இஃது இக்கு முதல் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள். இக்கின் இகரம்=இக்குச்சாரியையினது இகரம்: இகரமுனை அற்று=இகர ஈற்றுச்சொன்முன்னர் முற்கூறிய அத்துப்போலக் கெடும். எ - று.

“திங்கண்முன்வரின்” என்பதனாற் பெற்ற இக்கு ஆடிக்குக் கொண்டான் சென்றான் தந்தான போயினான் என இகரங்கெட்டு நின்றது. இஃது இடப்பொருட்டு. (உச)

கஉஎ. ஐயின் முன்னரு மவ்விய னிலையும்.

இதுவும் அது.

இ - ள். ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்=இக்கின் இகரம் இகர ஈற்றுச் சொன்முன்னரன்றி ஐகார ஈற்றுச் சொன் முன்னரும் மேற்கூறிய கெடுதலியல்பிலே நிற்கும். எ - று.

இ - ள். அத்தே வற்றே ஆயிரு மொழிமேல் ஒற்று = அத்தும் வற்றுமாகிய அவ்விரண்டு சாரியைமேல் நின்ற ஒற்று: மெய்கெடுதல் தெற்றென்றற்று = தன்வடிவுகெடுதல் தெளியப்பட்டது: அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே = அவ்விருசாரியைமுன்னும் வரும் வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். கலத்துக்குறை அவற்றுக்கோடு எனவரும். "அத்திடைவரூஉங் கலமென்னளவே." "சுட்டுமுதல்வகர மையுமெய்யும்" என்பனவற்றான் அத்தும் வற்றும் பெற்றுவரும் அகர வகர ஈறுகட்கு ஈற்றுவல்லெழுத்துவிதி இன்மையின் அவற்றுமுன்வரூஉம் வல்லெழுத்துமிகுமென்று சாரியைவல்லெழுத்து விதித்தார். வல்லெழுத்து இன்றித் திரிந்து முடிவன ணகாரமும னகாரமும் லகாரமும் ளகாரமுமாம். மகர ஈற்றிற்கு அத்தும் வகர ஈற்றிற்கு வற்றும் வருமென்பது அச்சூத்திரங்களாற் பெற்றாம். வற்றேயத்தேயென்னாத முறையன்றிக்கூற்றினாற் புள்ளியீற்றின்முன்னர் அத்தின்மிசையொற்றுக் கெடாதுநிற்றலுங் கொள்க. உ-ம். விண்ணத்துக்கொட்கும் வெயிலத்துச்சென்றான் இருளத்துக்கொண்டான் எனவரும். மெய்யென்றதனான் அத்தின் அகரம் அகரமுன்னரேயன்றிப் பிற உயிர்முன்னருங் கெடும் ஓரோவிடத்தென்று கொள்க. அண்ணாத்தேரி திட்டாத்துக்குளம் என ஆகாரததின்முன்னரும்வரும் அத்தின் அகரங் கெட்டது. இவற்றை அகர ஈறாக்கியும் முடிப்ப. இனித் தெற்றென்றற்றே என்றதனான் அத்தின் அகரந் தெற்றெனக் கெடாது நிற்கும் இடமுங்கொள்க. அதவத்துக்கண் விளவத்துக்கண் எனவரும். (ஙக)

கஙச. காரமுங் கரமுங் கானொடு சிவணி
நேரத் தோன்று மெழுத்தின் சாரியை.

இது மொழிச்சாரியையைவிட்டு எழுத்துக்கட்கு வருஞ் சாரியைகளது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது.

இ - ள். காரமுங் கரமுங் கானொடு சிவணி = காரமுங் கரமுங் கானொடு பொருந்தி: எழுத்தின் சாரியை நேரத் தோன்றும் = எழுத்தின்கண்வருஞ் சாரியையாதற்கு எல்லா ஆசிரியரானும் உடம்படத் தோன்றும். எ - று.

காரமுங் கரமும் எடுத்துச்சொல்லியவழி இனிதிசைத்தலானும் வழக்குப்பயிற்சியுடைமையானும் வடவெழுத்திற்கும் உரியவாதலானுஞ் சேரக்கூறினார். கான் அத்தன்மையின்மையினாற்

பின்வைத்தார். நேரத்தோன்றுமெனவே நேரத்தோன்றாதனவும் உளவாயின. அவை ஆனம் ஏனம் ஓனம் என்க. இவை சிதைந்தவழுக்கேனுங் கடியலாகா ஆயின. (௩௨)

கஙரு. அவற்றுள்,
கரமுங் கானு நெட்டெழுத் திலவே.

இஃது அவற்றுட் சிலசாரியை சிலவெழுத்தோடு வாராவென எய்தியது விலக்கிற்று.

இ - ள். அவற்றுள்=முற்கூறியவற்றுள்: கரமுங் கானும் நெட்டெழுத்தில=கரமுங் கானும் நெட்டெழுத்திற்கு வருதலின்று. எ - று.

எனவே நெட்டெழுத்திற்குக் காரம் வருமாயிற்று. ஆகாரம் ஈகாரம் என ஒட்டுக. ஐகாரம் ஔகாரமெனச் சூத்திரங்களுள் வருமாறுகாண்க. (௩௩)

கஙச. வரன்முறை மூன்றுங் குற்றெழுத் துடைய.

இஃது ஐயம் அகற்றியது; என்னை? நெட்டெழுத்திற்குச் சிலசாரியை விலக்கினாற்போலக் குற்றெழுத்திற்கும் விலக்கற்பாடு உண்டோவென ஐயம் நிகழ்தலின்.

இ - ள். வரன்முறை மூன்றும்=வரலாற்றுமுறைமையையுடைய மூன்றுசாரியையும்; குற்றெழுத்துடைய=குற்றெழுத்துப் பெற்று வருதலையுடைய. எ - று.

அகாரம் அகரம் அஃகான் என ஒட்டுக. "வகாரமிசையும்" "அகரஇகரம்" "வஃகான் மெய்கெட" எனவும் பிறவுஞ் சூத்திரங்களுட் காண்க. இஃகான் ஒஃகான் என்பன பெருவழக்கன்று. வரன்முறையென்றதனான் அஃகான் என்புழி ஆய்தம்பெறுதல் கொள்க. இது "குறியதன்முன்னராய்தப்புள்ளி" என்பதனாற் பெறாதாயிற்று, மொழியாய் நில்லாமையின். (௩௪)

கஙஎ. ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்.

இஃது "அவற்றுட் கரமுங் கானும்" என்பதற்கோர் புறனடை கூறுகின்றது.

இ - ள். ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்=நெட்டெழுத்துக்களுள் ஐகார ஔகாரங்கள் முன்விலக்கப்பட்ட கானொடுந் தோன்றும். எ - று.

"திங்களு நாளு முந்துகிளந் தன்ன." என்பதனாற் சித்திரைக்குக்கொண்டான் என்புழிப் பெற்ற இக்கு ஐகாரத்தின்முன்னர்க் கெட்டவாறு காண்க. (உரு)

கஉஅ. எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கி னிறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகர முற்றத் தோன்றாது.

இஃது அக்கு முதல் ஒழிய ஏனைய கெடுமாறு கூறுகின்றது.

இ - ள். எப்பெயர்முன்னரும் = எவ்வகைப்பட்ட பெயர்ச் சொன்முன்னரும்: வல்லெழுத்து வருவழி = வல்லெழுத்து வருமொழியாய் வருமிடத்து: அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முற்றத் தோன்றாது = இடைநின்ற அக்குச்சாரியையின் இறுதிநின்ற குற்றியலுகரம் முடியத்தோன்றாது: மெய்ம்மிசையொடுங் கெடும் = அக்குற்றுகரம் ஏறிநின்ற வல்லொற்றுத் தனக்குமேல் நின்ற வல்லொற்றோடுங் கெடும். எ - று.

"ஒற்றுநிலை திரியா தக்கொடு வருஉம்" என்றதனான் அக்குப் பெற்ற குன்றக்கூகை மன்றப்பெண்ணை என்பனவும் "வேற்றுமையாயி னேனை யிரண்டும்" என்பதனான் அக்குப்பெற்ற ஈமக்குடம் கம்மக்குடம் என்பனவும் "தமிழென்கிளவியும்" என்பதனான் அக்குப்பெற்ற தமிழக்கூத்து என்பதுவும் அக்கு ஈறுகெட்டவாறு காண்க. இங்ஙனம்வருதலின் எப்பெயரென்றார். முற்றவென்பதனான் வன்கணமன்றி ஏனையவற்றிற்கும் இவ்விதி கொள்க. தமிழநூல் தமிழயாழ் தமிழவரையர் எனவரும். இன்னும் இதனானே தமக்கேற்ற இயைபுவல்லெழுத்துக் கொடுத்து முடித்துக்கொள்க. அன்றிக் கேடோதிய ககரவொற்று நிற்குமெனின், சகரந் தகரம் பகரம் வந்தவற்றிற்குக் ககரவொற்றாகாமை உணர்க. (உசா)

கஉகூ. அம்மி னிறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும்.

இஃது அம் ஈறுதிரியுமாறு கூறுகின்றது.

இ - ள். அம்மின் இறுதி = அம்முச்சாரியையின் இறுதியாகிய மகரவொற்று: கசதக்காலை = கசதக்கள் வருமொழியாய் வருங்காலத்து: தன்மெய் திரிந்து ஙஞந ஆகும் = தன் வடிவுதிரிந்து ஙஞநக்களாம். எ - று.

உ-ம். புளியங்கோடு செதிள் தோல் எனவரும். இது "புளி மரக்கிளவிக்கு" என்பதனுன் அம்முப்பெற்றது. கசதக்காலைத்திரியு மெனவே பகரத்தின்கட் திரிபின்ருயிற்று. மெய்திரிந்தென்றது தன்மெய் என்றதனுன் அம்மின் மகரமேயன்றித் தம் நம் நும் உம் என்னுஞ் சாரியை மகரமுந் திரிதல்கொள்க. எல்லார்தங்கையும் எல்லார்நங்கையும் எல்லீர்நுங்கையும் வானவரிவில்லுந்திங்களும் எனவரும். துறைகேழூரன் வளங்கேழூரன் எனக் கெழுவென்னுஞ் சாரியையது உகரக்கேடும் எகரநீட்சியுஞ் செய்யுண்முடிபென்று கொள்க. (எ௨)

கஙo. மென்மையு மிடைமையும் வரூஉங் காலை
யின்மை வேண்டு மென்மனார் புலவர்.

இஃது அம்மீறு இயல்புகணத்துமுன்னர்க் கெடுமென்கின்றது.

இ - ள். மென்மையும் இடைமையும் வரூஉங்காலை=மென்கணமும் இடைக்கணமும் வருமொழியாய் வருங்காலத்து: இன்மை வேண்டும் என்மனார் புலவர்=அம்முச்சாரியை இறுதிமகரமின்றி முடிதலை வேண்டுமென்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். புளியஞெரி நுனி முரி யாழ் வட்டு எனவரும். உரையிற்கோடலென்பதனுற் புளியவிலையென உயிர்வருவழி ஈறுகெடுதலும் புளியிலையென அம்மு முழுவதுங் கெடுதலுங் கொள்க. புளியவிலையென்றது "ஒட்டுதற்கொழுகியவழக்கு" அன்று. மென்கணமும் இடைக்கணமும் உயிர்க்கணமுந் தம்முளொக்குமேனும் அம்மு முழுவதுங் கெட்டுவருதலின் உயிரை எடுத்தோதாராயினர். புளிங்காய் என்பது மருமுடிபு. (௨அ)

கஙக. இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்
கின்னென் சாரியை யின்மை வேண்டும்.

இஃது இன்சாரியை ஐந்தாமுருபின்கண் முழுவதுங் கெடுமென்கின்றது.

இ - ள். இன்னென வரூஉம் வேற்றுமையுருபிற்கு=இன்னென்று சொல்ல வருகின்ற வேற்றுமையுருபிற்கு: இன்னென் சாரியை இன்மை வேண்டும்=இன்னென்னுஞ் சாரியை தான் இன்றி முடிதலை விரும்பும் ஆசிரியன். எ - று.

உ-ம். விளவின் பலாவின் கடுவின் தழூவின் சேவின் வெளவின் எனவரும். இவற்றிற்கு வீழ்பழமெனவும் நீங்கினனெனவுங் கொடுத்து முடிவுணர்க. ஊரினீங்கினன் என ஏனையவற்றோடும் ஒட்டுக. இனி "அவற்றுள் இன்னினிகரம்" என்றதன்பின் இதனை வையாத முறையன்றிக்கூற்றினன் இன்சாரியை கெடாது வழக்கின் கண்ணுஞ் செய்யுட்கண்ணும் நிற்றல் கொள்க. பாம்பினிற்கடிது தேள் "கற்பினின்வழாஅநற்பலவுதவி" "அகடுசேர்புபொருந்தியளவினிற்றிரியாது" எனவரும். இனி இன்மையும் வேண்டுமென்னும் உம்மை தொக்குநின்றதாக்கி அதனன் இவைகோடலும் ஒன்று. ()

கந௨. பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியுந்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணு
மொட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்கா
திடைநின் றியலுஞ் சாரியை யியற்கை
யுடைமையு மின்மையு மொடுவயி னொக்கும்.

இது முற்கூறிய சாரியைகளெல்லாம் புணர்மொழியுள்ளே வருமென்பதூஉம் அம்மொழிதாம் இவையென்பதூஉம் அவை வராத மொழிகளும் உளவென்பதூஉங் கூறுகின்றது.

இ-ள். பெயருந் தொழிலும்=பெயர்ச்சொல்லுந் தொழிற்சொல்லும்: பிரிந்து இசைப்ப ஒருங்கு இசைப்ப=பெயருந்தொழிலுமாய்ப் பிரிந்திசைப்பப் பெயரும்பெயருமாய்க் கூடியிசைப்ப: வேற்றுமையுருபு நிலைபெறு வழியும்=வேற்றுமைசெய்யும் உருபுகள் தொகாது நிலைபெற்ற இடத்தும்: தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்=அவ்வேற்றுமையுருபுகள் தோற்றுதல் வேண்டாது தொக்க இடத்தும்: ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணி=தாம் பொருந்துதற்கேற்ப நடந்த வழக்கோடே பொருந்தி: சொற் சிதர் மருங்கின்=சாரியைபெறும் புணர்மொழிகளைப் பிரித்துக்காணுமிடத்து: சாரியை இயற்கைவழி வந்து விளங்காது இடைநின்று இயலும்=அச்சாரியையினதுதன்மை அச்சொற்களின்பின்னே வந்து விளங்காது நடுவேநின்று நடக்கும்: உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்=அச்சாரியை உண்டாதலும் இல்லையாதலும் ஒடுவுருபினிடத்து ஒத்துவரும். எ - று.

ஒடுவிற்கொக்கும் எனவே ஏனைய ஒவ்வாவாயின.

உ-ம். விளவினைக்குறைத்தான் கூழிற்குக்குற்றேவல்செய்யும் இவைபிரிந்திசைத்து உருபுநிலை பெற்றன. "அன்னென்சாரியை" என்பதனைக் "குற்றியலுகரத்திறுதி" என்பதனைச் சேர வைத்ததனால் இன்சாரியைவருதல் கொள்க. இவ்விரண்டுருபுஞ் சாரியைநிற்பப் பெரும்பான்மையுந் தொகாவென்று உணர்க. விளவினைக்குறைத்தவன் கடிசூத்திரத்திற்குப்பொன் இவை ஒருங்கிசைப்ப உருபுநிலைபெற்றன. வானத்தின்வழுக்கி வானத்துவழுக்கி எனச் சாரியைபெற்றுப் பிரிந்திசைத்து ஐந்தாமுருபு நிலைபெற்றும் நிலைபெறாதும் வந்தது. வானத்தின்வழுக்கல் வானத்துவழுக்கல் இவை "மெல்லெழுத்துறழும்" என்னுஞ்சூத்திரத்து "வழக்கத்தான" என்பதனான் அத்துக்கொடுத்து மகரங்கெடுக்க ஒருங்கிசைத்தன. விளவினதுகோடு விளவின்கோடு என ஒருங்கிசைத்துச் சாரியைபெற்றவழி ஆறனுருபு தொகாதுந் தொக்கும் நின்றது. இதற்குப் பிரிந்திசைத்தலின்று. மரத்துக்கட்கட்டினான் மரத்துக்கட்டினான் எனப் பிரிந்திசைத்தவழியும் மரத்துக்கட்குரங்கு மரத்துக்குரங்கு என ஒருங்கிசைத்தவழியுஞ் சாரியை நின்றவழி ஏழனுருபு தொகாதுந் தொக்கும் நின்றது. "கிளைப்பெயரெல்லாம்" என்றதனுட் "கொள" என்றதனான் ணகாரம் டகாரமாயிற்று. "நிலாவென் கிளவி யத்தொடு சிவணும்." என விதித்த அத்து நிலாக்கதிர் நிலாமுற்றம் என்றவழிப் பெறாதாயிற்று, அஃது "ஒட்டுதற்கொழுகியவழக்கு" அன்மையின். நிலாத்துக்கொண்டான் நிலாத்துக்கொண்டவன் என்பன உருபுதொக்குழி இருவழியும் பெற்றன. எல்லார்தம்மையும் எனச் சாரியை ஈற்றின்கண்ணும் வருதலின் இடைநிற்றல் பெரும்பான்மையென்றற்கு இயலுமென்றார். பூவினொடுவிரிந்தகூந்தல் பூவொடுவிரிந்தகூந்தல் என உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒத்தது. இனி இயற்கையென்றதனான் ஒடு உருபின்கட் பெற்றும் பெறாமையும் வருதலன்றிப் பெற்றேவருதலுங் கொள்க. பலவற்றொடு எனவரும். (ங0)

கஙங. அத்தே வற்றே யாயிரு மொழிமே
லொற்றுமெய் கெடுத றெற்றென் றற்றே
யவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே.

இஃது அத்து வற்று என்பனவற்றிற்கு நிலைமொழியது ஒற்றுக்கேடும் வருமொழிவன்கணத்துக்கண் ஒற்றுப்பேறுமாகிய செய்கை கூறுகின்றது.

இது முற்கூறிய நால்வகைப்புணர்ச்சியுள் இயல்புபுணருங்கால் இக்கூறிய பதினேழெழுத்தும் வருமொழியாய் வந்த இடத்து இருபத்துநான்கீற்றின் முன்னரும் வேற்றுமையிலும் அல்வழியிலும் வருமொழி இயல்பாய் முடிகவென்கின்றது.

இ - ள். ஞநமயவ எனும் முதலாகுமொழியும்=ஞநமயவ என்று சொல்லப்படும் எழுத்துக்கள் முதலாய்நிற்குஞ் சொற்களும்: உயிர்முதலாகிய மொழியும் உளப்பட=உயிரெழுத்து முதலாய் நின்ற சொற்களுந் தம்மிற்கூட்: அன்றியனைத்தும்=அப்பதினேழாகிய வருமொழிகளும்: எல்லாவழியும்=வேற்றுமையும் அல்வழியுமாகிய எல்லா இடத்தும்: நின்றசொன்முன்=இருபத்துநான்கு ஈற்றவாய்நின்ற பெயர்ச்சொன்முன்னர்: இயல்பாகும்=திரிபின்றி இயல்புபுணர்ச்சியாய் நிற்கும்: எ - று.

உயிரீற்றின்கண் எகர ஒகரம் ஒழிந்தனகொள்க.

உ-ம். விள பலா கிளி குரீ கடு பூ சே கை சோ கௌ எனநிறுத்தி, ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது நுந்தையது என மெய்ம்முதன்மொழி வருவித்துப், பொருள் தருதற்கு ஏற்பன அறிந்து கூட்டுக. சோ என்பது அரண். அதற்குச் சோ ஞொள்கிற்று எனக் கொள்க. கௌவென்பதற்குக் கௌஞெகிழ்ந்தது நீடிற்று என்க. இனி இவற்றின்முன்னர் உயிர்முதன்மொழி வருங்கால் அழகிது ஆயிற்று இல்லை ஈண்டிற்று உண்டு ஊறிற்று எழுந்தது ஏய்ந்தது ஐது ஒன்று ஓங்கிற்று ஔவியத்தது எனவரும். இவற்றுட் சோவுக்கு இடிந்தது ஈஞ்ஞையது உள்ளது ஊறிற்று என்பனவற்றோடு முற்கூறியவற்றையும் ஒட்டுக. கௌவுக்கு ஈண்டையது ஊக்கத்தது என்பனவற்றோடு முற்கூறியவற்றையும் ஒட்டுக. இனி வேற்றுமைக்கண் விளமுதலியவற்றை நிறுத்தி ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை அழகு ஆக்கம் இளமை ஈட்டம் உயர்வு ஊற்றம் எழுச்சி ஏற்றம் ஐயம் ஒழிவு ஓக்கம் ஔவியம் என ஒட்டுக. ஏலாதனவற்றிற்கு முற்கூறியவாறுபோல ஏற்பன கொணர்ந்து ஒட்டுக.

இனிப் புள்ளியீற்று ணகாரமும் னகாரமும் மேற்கூறுப. ஏனைய ஈண்டுக்கூறுதும். உ-ம். உரிஞ் வெரிந் என நிறுத்தி, ஞெகிழ்ந்தது நீடிற்று அழகிது ஆயிற்று எனவும், ஞெகிழ்ச்சி நீட்டிப்பு அடைவு ஆக்கம் எனவும் வருவித்து, எல்லாவற்றோடும் ஒட்டுக. மரம் வேய் வேர் யாழ் என நிறுத்தி, ஞான்றது நீண்டது மாண்டது

யாது வலிது நுந்தையது அழகிது ஆயிற்று எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை அடைவு ஆக்கம் எனவும் வருவித்து, எல்லாவற்றோடும் ஒட்டுக. இவற்றுள் மகர ஈறு வேற்றுமைக்கட் கெடுதல் "துவர" என்றதனாற் கொள்க. அல்வழிக்கட் கெடுதல் "அல்வழியெல்லாம்" என்றதனாற்கொள்க. நிலைமொழித்திரிபு ஈண்டுக் கொள்ளாமை உணர்க. யகர ஈறு யகரத்தின்முன்னர் இரண்டிடத்துங் கெடுதல் ஈண்டு எல்லாமென்றதனாற் கொள்க. வேல் தெவ் கோள் என நிறுத்தி ஏற்பன கொணர்ந்து இருவழியும் ஒட்டுக. ணகார லகார ளகார னகாரங்களின்முன்னர் நகரம் வருமொழியாகவந்துழி அந்நகரந் திரிதலின் அத்திரிந்த உதாரணங்கள் ஈண்டுக் கொள்ளற்க. இவற்றுட் திரிந்துவருவனவுள; அவை எடுத்தோத்தானும் இலேசானும் ஏனையோத்துக்களுள் முடிக்கின்றவாற்றான் உணர்க. இனி எல்லாமென்றதனான் உயிர்க்கணமாயின் ஒற்றிரட்டியும் உடம்படுமெய்பெற்றும் உயிரேறியும் முடியுங் கருவித்திரிபுகள் திரிபெனப்படா இவ்வியல்பின்கண்ணென்று உணர்க. வரகுஞான்றது வரகுஞாற்சி எனக் குற்றுகரத்தின்கண்ணும் இவ்வாறே கொள்க. இருபத்துநான்கு ஈற்றிற்கும் வேற்றுமைக்கும் அல்வழிக்கும் அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவனவற்றை ஒருசூத்திரத்தாற் தொகுத்துமுடித்தார். மேலும் இவ்வாறே கூறுப. இவ்வியல்பு வருமொழிநோக்கிக் கூறியதென்று உணர்க. இவ்வியல்புபுணர்ச்சி மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழாமையின் மெய் முற்கூறினார். (உ)

கசரு. அவற்றுள்,

மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதி யான.

இது முற்கூறிய முடிபிற் சிலவற்றிற்கு அம்முடிபு விலக்கிப் பிறிதுவிதி எய்துவித்தது.

இ-ள். அவற்றுள் = முற்கூறிய மூன்றுகணத்தினுள்; மெல்லெழுத்தியற்கை உறழினும் வரையார் = மெல்லெழுத்து இயல்பியல்பாதலேயன்றி உறழ்ந்து முடியினும் நீக்கார்: சொல்லிய தொடர்மொழி இறுதியான = சொல்லப்பட்ட தொடர்மொழியீற்றுக்கண். எ - று.

உம்மை எதிர்மறை. எனவே உறழாமை வலியுடைத்தாயிற்று. கதிர்ஞெரி கதிர்ஞ்ஞெரி நுனிமுரி எனவும், இதழ்ஞெரி

இதழ்ஞெரி நுனி முரி எனவும் வரும். வருமொழிமுற்கூறியவத னால் ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழிகளுள்ளுஞ் சில உறழ்ச்சிபெற்று முடிதல் கொள்க. பூஞெரி பூஞ்ஞெரி நுனி முரி காய்ஞெரி காய்ஞ்ஞெரி நுனி முரி எனவரும். சொல்லியவென்றத னன் ஓரெழுத்தொருமொழிகளுட் சில மிக்கு முடிதல் கொள்க. கைஞ்ஞெரித்தார் நீட்டினர் மறித்தார் என வரும். இன்னும் இத னனே ஈரெழுத்தொருமொழிக்கண் மெய்ஞ்ஞானம் நூல் மறந்தார் என வரும். இவற்றை நலிந்துகூறப்பிறத்தலின் இயல்பென்பாரும் உளர். பூஞாற்றினர் என்றாற்போல்வன மிகாதன. (கூ)

கசகா. ணனவென் புள்ளிமுன் யாவு ஞாவும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்.

இது யகர ஞகர முதன்மொழிவந்த இடத்து நிகழ்வதோர் தன்மை கூறுகின்றது. இதுவும் புணரியலொழிபாய்க் கருவிப் பாற்படும்.

இ - ள். ணனவென்புள்ளிமுன் யாவும் ஞாவும் = ணகார ன காரமென்று கூறப்படும் புள்ளிகளின்முன்னர் வந்த யாவும் ஞாவும் முதலாகிய வினைச்சொற்கள்: வினையோரனைய என்மனார் புல வர் = ஒருவினைவந்த தன்மையை ஒக்குமென்று சொல்லுவர் புல வர். எ - று.

உ-ம். மண்யாத்தகோட்டமழகளிறுதோன்றுமே மண்ஞாத்த கோட்டமழகளிறுதோன்றுமே எனவும், பொன்யாத்ததார்ப்புரவி பரிக்குமே பொன்ஞாத்ததார்ப்புரவிபரிக்குமே எனவும் வரும்.

வினைக்கண்ணெனவே மண்யாமை மண்ஞாமை எனப் பெயர்க்கண் வாராவாயின. ஞா முற்கூறாது யா முற்கூறியவதனான் ஞாச்சென்றவழி யாச்செல்லாது யாச்சென்றவழி ஞாச்செல்லு மென்று கொள்க. மண்ஞான்றது என்றவழி மண்யான்றது என்று வாராமை உணர்க. (ச)

கசஎ. மொழிமுத லாகு மெல்லா வெழுத்தும்
வருவழி நின்ற வாயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிட னிலவே.

இது ணகார ஈறும் னகார ஈறும் அல்வழிக்கண் இயல்பாய் முடியுமென்கின்றது.

இ - ள். மொழிமுதலாகும் எல்லாவெழுத்தும் வருவழி= மொழிக்கு முதலாமெனப்பட்ட இருபத்திரண்டெழுத்தும் வருமொழியாய் வருமிடத்து: நின்ற ஆயிரு புள்ளியும்=முன்னர்க்கூறி நின்ற ணகாரமும் னகாரமும்: வேற்றுமையல்வழித் திரிபிடன் இலவே=வேற்றுமையல்லாத இடத்துத் திரியுமிடம் இல. எ - று.

மண் பொன் என நிறுத்திக், கடிது சிறிது தீது பெரிது ஞெகிழ்ந்தது நீண்டது மாண்டது யாது வலிது நுந்தையது அடைந்தது ஆயிற்று இல்லை ஈண்டிற்று உண்டு ஊட்டிற்று எவ்விடத்தது ஏறிற்று ஐது ஒழுகிற்று ஓங்கிற்று ஔவையது என ஒட்டுக. வருமொழி முற்கூறியவதனால் ணகாரத்திற்குச் சிறுபான்மை திரிபும் உண்டென்று கொள்க. சாட்கோல் எனவரும். இதற்குச் சாணுகியகோலென்க. இவை "நின்றசொன்முனியல்பாகும்" என்றவழி அடங்காவாயின, அது வருமொழிபற்றித் திரியாமை கூறியதாதலின். இது நிலைமொழிபற்றித் திரியாமை கூறியது.

கசஅ. வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி
மேற்கூ றியற்கை யாவயி னான.

இது முற்கூறியவாற்றான் வேற்றுமைக்கட் திரிபு எய்திநின்றவற்றை ஈண்டு வேற்றுமைக்கண்ணும் வல்லெழுத்தல்வழித் திரியாவென எய்தியது விலக்கிற்று.

இ - ள். ஆவயினான=அல்வழிக்கண் அங்ஙனந் திரியாது நின்ற அவ்வொற்றுக்கள்: வேற்றுமைக்கண்ணும்=வேற்றுமைப் பொருட்புணர்ச்சியிடத்தும்: வல்லெழுத்தல்வழி மேற்கூறியற்கை=வல்லெழுத்தல்லாத இடத்து மேற்கூறிய இயல்பு முடிபாம். எ - று.

எனவே வல்லெழுத்துவந்துழித் திரியுமென்றாராயிற்று.

உ-ம். மண் பொன் என நிறுத்தி, ஞெகிழ்ச்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை நுந்தையது அழகு ஆக்கம் இன்மை என ஏற்பன கொணர்ந்து ஒட்டுக. இதுவுஞ் செய்கைச்சூத்திரம். மேல் நான்கு சூத்திரத்தாற்கூறியன வல்லெழுத்துவந்துழித் திரியுமாறு தத்தம் ஈற்றுட் கூறுப. (சா)

கசகூ. ல ன வெனவரூஉம் புள்ளி முன்னர்த்
த ந வெனவரிற் றனவா கும்மே.

இது புள்ளிமயங்கியலை நோக்கியதோர் வருமொழிக்கருவி கூறுகின்றது.

இ - ள். ல ன எனவரூஉம் புள்ளிமுன்னர்=லகார னகாரமென்று சொல்லவருகின்ற புள்ளிகளின்முன்னர்: த ந எனவரின்=தகாரமும் நகாரமும் முதலென்று சொல்லும்படியாகச் சிலசொற்கள் வரின்: றனவாகும்=நிரனிறையானே அவை றகார னகாரங்களாகத் திரியும். எ - று.

உ-ம். கஃறீது கன்னன்று பொன்றீது பொன்னன்று என வரும்; நிலைமொழித்திரிபு தத்தம் ஈற்றுட் கூறுப. (௭)

௧௫௦. ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்.

இதுவும் அது.

இ - ள். ணளவென் புள்ளிமுன்=ணகார ளகாரமென்று சொல்லப்படும் புள்ளிகளின்முன்னர் அதிகாரத்தாற் தகார நகாரங்கள் வருமெனின்: டணவெனத் தோன்றும்=அவை நிரனிறையானே டகார ணகாரங்களாய்த் திரிந்து தோன்றும். எ - று.

மண்டீது மண்ணன்று முஃடீது முண்ணன்று என வரும் நிலைமொழித்திரிபு தத்தம் ஈற்றுட் கூறுப. (௮)

௧௫௧. உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியு
மியல்பா குநவு முறழா குநவுமென்
றாயீ ரியல வல்லெழுத்து வரினே.

இது முன்னிலைவினைச்சொல் வன்கணத்துக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். உயிரீறாகிய முன்னிலைக் கிளவியும்=உயிரீறாய்வந்த முன்னிலைவினைச்சொற்களும்: புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியும்=புள்ளியீறாய்வந்த முன்னிலைவினைச்சொற்களும்: வல்லெழுத்துவரின்=வல்லெழுத்துமுதலாகிய மொழிவரின்: இயல்பாகுநவும் உறழாகுநவுமென்று ஆயீரியல=இயல்பாய்முடிவனவும் உறழ்ந்து முடிவனவுமென அவ்விரண்டு இயல்பினையுடைய. எ - று.

உ-ம். எறிகொற்றா கொணாகொற்றா உண்கொற்றா தின்கொற்றா சாத்தா தேவா பூதா என இவை இயல்பு. நடகொற்றா நடக்

கொற்று ஈர்கொற்று ஈர்க்கொற்று சாத்தா தேவா பூதா என இவை உறழ்ச்சி. ஈறென்று ஓதினமையின் வினைச்சொல்லே கொள்க. இவை முன்னின்றான்தொழிலுணர்த்துவனவும் அவனைத்தொழிற் படுத்துவனவுமென இருவகைய. இ ஐ ஆய் முதலியன தொழிலு ணர்த்துவன. நட வா முதலியன உயிரீறும் புள்ளியீறுந் தொழிற் படுத்துவன. நில்கொற்று நிற்கொற்று எனத் திரிந்துறழ்ந்தனவும் உறழாகுநவுமென்னும் பொதுவகையான் முடிக்க. இயல்புமுறழ்வு மென்றிரண்டியல்பின என்றது ஆகுநவுமென்றதனாற் துக்கொற் று நொக்கொற்று ஞெள்ளா நாகா மாடா வடுகா என ஓரெழுத் தொருமொழிமுன்னிலைவினைச்சொல் மிக்கேமுடிதல் கொள்க. (௯)

கடுஉ. ஔவென வரூஉ முயிரிறு சொல்லும்
ஞநமவ வென்னும் புள்ளி யிறுதியுங்
குற்றிய லுகரத் திறுதியு முளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே.

இஃது எய்தியது விலக்கிற்று, முற்கூறியவற்றுட் சில ஆகா தனவற்றை வரைந்து உணர்த்தலின்.

இ - ள். ஔவென வரூஉம் உயிரிறு சொல்லும் = ஔவென வருகின்ற உயிரீற்றுச்சொல்லும்: ஞநமவ என்னும் புள்ளியிறுதி யும் = ஞநமவ என்றுசொல்லப்படும் புள்ளியீற்றுச்சொல்லும்: குற் றியலுகரத்து இறுதியும் = குற்றியலுகரத்தை இறுதியிலேயுடைய சொல்லும்: முன்னிலைமொழிக்கு உளப்பட முற்றத் தோன்றா = முன்னர் முன்னிலைமொழிக்குப் பொருந்தக் கூறிய இயல்பும் உ றழ்ச்சியுமாகிய முடிபிற்கு முற்றத் தோன்றா. எ - று.

முற்றவென்றதனான் நிலைமொழி உகரம்பெற்று உறழ்ந்துமு டிதல் கொள்க.

உ-ம். கௌவுகொற்று கௌவுக்கொற்று வௌவுகொற்று வௌவுக்கொற்று உரிஞுகொற்று உரிஞுக்கொற்று பொருநுகொற் று பொருநுக்கொற்று திருமுகொற்று திருமுக்கொற்று தெவ் வுகொற்று தெவ்வுக்கொற்று கூட்டுகொற்று கூட்டுக்கொற்று எனவரும். (கo)

கடுக. உயிரீ றாகிய வுயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரு
மெல்லா வழியு மியல்பென மொழிப.

இஃது உயர்திணைப்பெயர் வன்கணம் மென்கணம் இடைக்கணம் உயிர்க்கணமென்னும் நான்குகணத்தினும் இருவழியும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். உயிரீறாகிய உயர்திணைப்பெயரும் = உயிரீறாய்வந்த உயர்திணைப்பெயர்களும்: புள்ளியிறுதி உயர்திணைப்பெயரும் = புள்ளியீற்றினையுடைய உயர்திணைப்பெயர்களும்: எல்லாவழியும் = நான்கு கணத்து அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லா இடத்தும்: இயல்பென மொழிப = இயல்பாய் முடியுமென்று கூறுவர் புலவர். எ - று.

வன்கணம் ஒழிந்த கணங்களை "ஞ ந ம ய வ" என்பதனான் முடிப்பாரும் உளர். அது பொருந்தாது இவ்வாசிரியர் உயர்திணைப் பெயரும் விரவுப்பெயரும் எடுத்தோதியே முடிப்பாராதலின்.

உ-ம். நம்பி அவன் எனவும் நங்கை அவள் எனவும் நிறுத்தி, அல்வழிக்கட் குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும், குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், ஞான்றான் நீண்டான் மாண்டான் எனவும், ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் எனவும், யாவன் வலியன் எனவும், யாவள் வலியள் எனவும், அடைந்தான் ஆயினான் ஒளவியத்தான் எனவும், அழகியள் ஆடினாள் ஒளவியத்தாள் எனவும் ஒட்டுக. இனி வேற்றுமைக்கட் கை செவி தலை புறம் எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி எனவும், யாப்பு வன்மை எனவும், அழகு ஒளவியம் எனவும் எல்லாவற்றோடும் ஒட்டுக. ஒருவேன் எனத் தன்மைப்பெயர்க்கண்ணுங் குறியேன் சிறியேன் தீயேன் பெரியேன் எனவும், கை செவி தலை புறம் எனவும் ஒட்டுக. நீ முன்னிலைவிரவுப்பெயராதலின் ஈண்டைக்காகா.

இனி உயிரீறு புள்ளியிறுதி என்ற மிகையானே உயர்திணைப் பெயர் திரிந்துமுடிவனவுங் கொள்க. கபிலபரணர் இறைவநெடுவேட்டுவர் மருத்துவமாணிக்கர் என னகர ஈறுகெட்டு இயல்பாய்முடிந்தன. ஆசீவகப்பள்ளி நிக்கந்தக்கோட்டம் என இவை அவ்வீறுகெட்டு ஒற்று மிக்கு முடிந்தன. ஈழவக்கத்தி வாணிகத்தெரு அரசக்கன்னி கோலிகக்கருவி என இவை ஒருமையீறும் பன்மையீறுங் கெட்டு மிக்குமுடிந்தன. குமரகோட்டம் குமரக்கோட்டம் பிரமகோட்டம் பிரமக்கோட்டம் என இவை ஈறுகெட்டு வல்லெழுத்து உறழ்ந்தன. வண்ணாரப்பெண்டிர் இது மிக்குமுடிந்தது. பல்சங்கத்தார் பல்சான்றோர் பல்லரசர் என்றாற்போல்வன ரகரவீறும் அதன் முன்னின்ற அகரமுங்கெட்டுப் பிறசெய்கைகளும்பெற்றுமுடிந்தன.

இனி எல்லாவழியுமென்றதனான் உயர்திணைவினைசொல் இயல்பாயுந் திரிந்தும் முடிவன எல்லாங்கொள்க. உண்கு உண்டு வருது சேறு உண்பல் உண்டேன் உண்பேன் என்னுந் தன்மை வினைகளைக் கொற்றா சாத்தா தேவா பூதா என்பனவற்றோடு ஒட்டுக. உண்டீர் சான்றீர் பார்ப்பீர் என முன்னிலைக்கண்ணும் உண்ப உண்டார் சான்றார் பார்ப்பார் எனப் படர்க்கைக்கண்ணும் ஒட்டுக. இவை இயல்பு. உண்டனெஞ்சான்றேம் உண்டேநாம் என்றாற் போல்வன திரிந்துமுடிந்தன. பிறவும் அன்ன. (௧௧)

௧௫௪. அவற்றுள்,
இகர விறுபெயர் திரிபிட னுடைத்தே.

இஃது உயர்திணைப்பெயருட்சிலவற்றிற்கு எய்தாததெய்து வித்தது.

இ - ள். அவற்றுள் இகர இறுபெயர்=முற்கூறிய உயர்திணைப்பெயர்களுள் இகர ஈற்றுப்பெயர்: திரிபிடனுடைத்து=இருவழியுந் திரிந்து முடியும் இடனுடைத்து. எ - று.

எட்டிப்பூ காவிதிப்பூ நம்பிப்பேறு என இவவுயர்திணைப்பெயர்கள் வேற்றுமைக்கண் மிக்குமுடிந்தன. எட்டி காவிதி என்பன தேயவழக்காகிய சிறப்புப்பெயர். எட்டி மரம் அன்று. அஃது "எட்டிக்குமரனிருந்தோன்றன்னை" என்பதனான் உணர்க. இவை எட்டியதுபூ, எட்டிக்குப்பூ எனவிரியும். இனி நம்பிக்கொல்லன் நம்பிச் சான்றான் நம்பித்துணை நம்பிப்பிள்ளை எனவும், செட்டிக்கூத்தன் சாத்தன் தேவன் பூதனெனவும் அல்வழிக்கண் உயர்திணைப்பெயர் மிக்குமுடிந்தன. இடனுடைத்தென்றதனான் இகர ஈறல்லாதனவும் ஈறுதிரியாதுநின்று வல்லெழுத்துப்பெறுதல் கொள்க. நங்கைப் பெண் நங்கைச்சானி என அல்வழிக்கட் சிறுபான்மை ஐகார ஈறு மிக்கன. இவ்வீற்றஃறிணைப்பெயர் மிக்குமுடிதல் உயிர்மயங்கியலுட் கூறுப. (௧௨)

௧௫௫. அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே.

இது விரவுப்பெயருள் இயல்பாய் முடிவனவும் உளவென்கின்றது.

இ - ள். அஃறிணைவிரவுப்பெயர்=உயர்திணைப்பெயரோடு அஃறிணைவிரவிய விரவுப்பெயர்: இயல்புமாருள=இயல்பாய் முடிவனவும் உள: உம்மையான் இயல்பின்றி முடிவனவும் உள. எ-று.

உயர்திணைப்பெயரோடு அஃறிணைசென்று விரவிற்றென்ற தென்னை? சொல்லதிகாரத்து "இருதிணைச்சொற்குமோ ரன்னவுரிமையின்" என்று சூத்திரஞ்செய்வாராலெனின், அதுவும் பொருந்துமாறு கூறுதும். சாத்தன் சாத்தி முடவன் முடத்தி எனவரும் விரவுப்பெயர்க்கண் உயர்திணைக்கு உரித்தாக ஓதிய ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்திநின்ற ஈற்றெழுத்துக்களே அஃறிணையாண்பாலும் பெண்பாலும் உணர்த்திற்றென்றல் வேண்டும், என்னை? அஃறிணைக்கு ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தும் ஈறன்றி ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தும் ஈறுகள் உளவாக ஆசிரியர் ஓதாமையின்; அங்ஙனம் உயர்திணை இருபாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணையாண்பாலையும் பெண்பாலையும் உணர்த்துதலின் அஃறிணை உயர்திணையோடுசென்று விரவிற்றென்று அவற்றின் உண்மைத்தன்மைத்தோற்றங் கூறுவான் ஈண்டுக் கூறினார். இவ்வாறே விளிமரபின்கட் "கிளந்தவிறுதியஃறிணைவிரவுப்பெயர்" என்புழியும் ஆசிரியர் உயர்திணையோடு அஃறிணை விரவிய விரவுப்பெயரென ஆண்டும் உண்மைத்தன்மைத்தோற்றங் கூறுவர். மாணாக்கன் இனிது உணர்தற்கு இவ்வாறு விரவுப்பெயரினது உண்மைத்தன்மைத்தோற்றம் இரண்டு அதிகாரத்துங்கூறி, அவ்விரவுப்பெயர் வழக்கின்கண் இருதிணைப்பொருளும் உணர்த்தி இருதிணைச்சொல்லாய் நிற்றற்கும் ஒத்த உரிமையவாமெனப் புலப்பட நிற்குமாறு காட்டினாரென்று உணர்க.

இனி அவை அல்வழிக்கண் இயல்பாய்நிற்குமாறு;—சாத்தன் கொற்றன் சாத்தி கொற்றி என நிறுத்திக் குறியன் சிறியன் தீயன் பெரியன் குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், ஞான்றான் நீண்டான் மாண்டான் யாவன் வலியன் ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் யாவள் வலியள் எனவும், அடைந்தான் ஔவித்தான் அடைந்தாள் ஔவித்தாள் எனவும் நான்குகணத்தோடும் ஒட்டி உணர்க. இனி வேற்றுமைக்கட் கை செவி தலை புறம் எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை அழகு ஔவியம் எனவும் ஒட்டுக. இவற்றுள் ணகாரம் நிற்பத் தகார நகாரம் வந்துழித் திரியும் உதாரணம் ஈண்டுக் கொள்ளற்க. இனிச் சாத்தன்குறிது சாத்திகுறிது என அஃறிணைமுடிபேற்பனவுங் கொள்க. இவற்றொடு வினைச்சொற் தலைப்பெய்ய இவை இருதிணைக்கும் உரியவாம். ஆண்டு நாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவதனை ஈண்டுத் தொகுத்தார். இஃது உயர்திணைக்கும் ஒக்கும். உம்மையான் இயல்பின்றி முடிவன ணகார ஈற்றுட் காட்டுதும். (கஙு)

கரு௬ரு. புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையாற்
றம்மி னாகிய தொழிற்சொன் முன்வரின்
மெய்ம்மை யாகலு முறழத் தோன்றலு
மம்முறை யிரண்டு முரியவை யுளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இது மேல் உயிரீற்றிற்கும் புள்ளியீற்றிற்கும் வேற்றுமைக் கட் கூறும் முடிபுபெருதுநிற்கும் மூன்ரும்வேற்றுமைமுடிபு கூறு கின்றது.

இ - ள். தம்மினாகிய தொழிற்சொல்=மூன்ருவதற்கு உரிய வினைமுதற்பொருளானுளவாகிய தொழிற்சொல்: புள்ளியிறுதிமுன் னும் உயிரிறுகிளவிமுன்னும் வரின்=புள்ளியீற்றுச்சொன்முன்ன ரும் உயிரீற்றுச்சொன்முன்னரும் வருமாயின்: மெய்ம்மையாகலும் உறழத்தோன்றலும் அம்முறையிரண்டும் உரியவை உள=அவற் றுள் இயல்பாகலும் உறழத்தோன்றலுமாகிய அம்முறையிரண்டும் பெறுதற்கு உரிய உளவாதலால்: வேற்றுமை மருங்கிற்சொல்லிய முறையான் வேண்டும் வல்லெழுத்துமிகுதி=உயிர்மயங்கியலுள் ளும் புள்ளிமயங்கியலுள்ளும் வேற்றுமைப்புணர்ச்சிக்குச் சொல்லிய முறையான் விரும்பும் வல்லெழுத்துமிகுதியை: போற்றல்=ஈண் டுக்கொள்ளற்க. எ - று.

மெய்ம்மை பட்டாங்காதலின் இயல்பாம்.

உ-ம். நாய் புலி என நிறுத்திக் கோட்பட்டான் சாரப்பட் டான் தீண்டப்பட்டான் பாயப்பட்டான் என வருவித்து இயல்பா யவாறு காண்க. சூர்கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான் வளி கோட்பட்டான் வளிக்கோட்பட்டான் சாரப்பட்டான் தீண்டப் பட்டான் பாயப்பட்டான் என இவை உறழ்ந்தன. இவை நாற்பத் தெட்டுச் சூத்திரங்களான் முடிவனவற்றைத் தொகுத்தார்.

புள்ளியிறுதி உயிரிறுகிளவி என்றதனுற் பேஎய்கோட்பட் டான் பேஎய்க்கோட்பட்டான் என எகரப்பேறும் உறழ்ச்சிக்குக் கொடுக்க. அம்முறையிரண்டுமுரியவையுளவே என்றதனுற் பாம்பு கோட்பட்டான் பாப்புக்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலைமொழியொற்றுத் திரிதலுங் கொள்க. இவவீறுகள் நாய்க்கால் தேர்க்கால் கிளிக்கால் என ஆண்டு வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுமாறு காண்க. (கச)

௧௫௭. மெல்லெழுத்துமிகுவழிவலிப்பொடுதோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலு
மியற்கை மருங்கின் மிகற்கை தோன்றலு
முயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலுஞ்
சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலுஞ்
சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலுஞ்
சாரியை யியற்கை யுறழத் தோன்றலு
முயர்திணை மருங்கி னொழியாது வருதலு
மஃறிணை விரவுப்பெயர்க் கவ்விய னிலையலு
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலு
மன்ன பிறவுந் தன்னியன் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கு
மைகார வேற்றுமைத் திரிபென மொழிப.

இஃது இரண்டாம்வேற்றுமைத்திரிபு தொகுத்து உணர்த்துகின்றது.

இ - ள். மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்=“மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே.” என்றதனான் விளங்குறைத்தானென மெல்லெழுத்து மிகுமிடத்து விளக்குறைத்தானென வல்லெழுத்துத் தோன்றுதலும்: வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்=“மகரவிறுதி” என்பதனான் மரக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுமிடத்து மரங்குறைத்தான் என மெல்லெழுத்துத் தோன்றுதலும்: இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்=“தாயென் கிளவி யியற்கை யாகும்.” என்றவழித் தாய்கொலை என இயல்பாய் வருமிடத்துத் தாய்க்கொலை என மிகுதி தோன்றலும்: உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்=“குறியதன்முன்னரும்” எனவுங் “குற்றெழுத்திம்பரும்” எனவும் “ஏயெனிறுதிக்கு” எனவுங் கூறியவற்றான் உயிர் மிக்குவருமிடத்துப் பலாக்குறைத்தான் கழுக்கொணர்ந்தான் ஏக்கட்டினான் என உயிர் கெடவருதலும்: சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்=“வண்டும் பெண்டும்” என்பதனாற் சாரியைப்பேறு உள்ள இடத்து வண்டு கொணர்ந்தான் எனச் சாரியைகெட்டுநிற்றலும்: சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்=“வண்டும்பெண்டும்” என்பதனாற் சாரியைப் பேறு உள்ள இடத்து வண்டினைக்கொணர்ந்தான் எனத் தன்னுருபு நிற்றலும்: (இதற்கு வல்லெழுத்துப்பேறு ஈற்றுவகையாற்கொள்க.)

சாரியை இயற்கை உறழத் தோன்றலும்=“புளிமரக்கிளவிக்கு” எனவும் “பனையுமரையும்” எனவும் “பூல்வேலென்ரு” எனவும் பெற்ற சாரியைபெருது இயல்பாய்நின்று புளிகுறைத்தான் புளிக்குறைத்தான் பனைதடிந்தான் பனைத்தடிந்தான் பூல்குன்றத்தான் பூற்குறைத்தான் என மிக்குந் திரிந்தும் உறழ்ச்சியாகத்தோன்றலும்:உயர்திணைமருங்கின் ஒழியாதுவருதலும்=“உயிரீருகிய வுயர்திணைப்பெயரும்” என்பதனுன் வேற்றுமைக்கண் இயல்பாய்வருமென்றவை நம்பியைக்கொணர்ந்தான் நங்கையைக்கொணர்ந்தான் என்றவழி இரண்டனுருபு தொகாதேநிற்றலும்: (ஒழியாதென்றதனுன் மகற்பெற்ருன் மகட்பெற்ருன் எனவும் ஆஉேவறிசொல் “மழவரோட்டிய” “அவர்க்கண்டெம்முள்” எனவும் ஒழிந்தும் வருமென்று கொள்க.) அஃறிணைவிரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்=உயர்திணையோடு அஃறிணை விரவும்பெயர்க்குத் கொற்றனைக்கொணர்ந்தானென உருபுதொகாதே நிற்றலும்: (அவ்வியல் நிலையலும் என்றதனுனே மகப்பெற்றேனென விரவுப்பெயர்க்கண்ணுந் தொகுதல் கொள்க. உருபியலுட் “தேருங்காலை” என்ற இலேசான் இதற்கும் முன்னையதற்கும் வல்லெழுத்துப்பேறுங் கொள்க.) மெய்பிறிதாகிடத்து இயற்கையாதலும்=புள்ளிமயங்கியலுள் ணகார னகார இறுதி வல்லெழுத்தியையின் மெய்ற்றிதாகுமென்ற இடத்து மெய்பிறிதாகாது மண்கொணர்ந்தான் பொன்கொணர்ந்தான் என இயற்கையாய்வருதலும்: அன்ன பிறவும்=அவைபோல்வனபிறவும்: (அவை “எக்கண்டு பெயருங் காலை யாழநின் கற்கெழு சிறுகுடி” எனவும் “நப்புணர் வில்லா நயனில்லோர் நட்பு” எனவும் வருவழி எக்கண்டு நப்புணர்வு என்னுந் தொடக்கங்குறுகும் உயர்திணைப்பெயர்கள் மெல்லெழுத்துப் பெறுதற்கு உரியன வல்லெழுத்துப்பெறுதல் கொள்க. இன்னுந் திணைபிளந்தான் மயிர்குறைத்தான் தற்கொண்டான் செறுத்தான் புகழ்ந்தான் எனவரும்.) தன் இயல் மருங்கின்=தன்னையே நோக்கித் திரிபு நடக்குமிடத்து: மெய்பெறக்கிளந்து பொருள்வரைந்து இசைக்கும்=பொருள்பெற எடுத்தோதப்பட்டு ஏனைவேற்றுமைப்பொருட்புணர்ச்சியது பொதுமுடிபினைத்தான் நீக்கி வேறுமுடிபிற்ருய்நின்று ஒலிக்கும்: ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப=இரண்டாம்வேற்றுமையது வேறுபட்டபுணர்ச்சி என்று கூறுவர் ஆசிரியர். எ - று.

மெய்பெற என்றதனுனே சாரியையுள்வழித் தன்னுருபு நிலையாது செய்யுட்கண் வருவனவும் பிறவற்றின்கண் உறழ்ந்து முடிவனவுங் கொள்க. “மறங்கடிந்தவருங்கற்பின்” எனவும் “சில்சொல்லிற் பல்கூந்தல்” எனவும் “ஆயிருதிணையினிசைக்குமன்” எனவும்

பிருண்டும் பெரும்பான்மையும் வருமென்று கொள்க. மைகொணர்ந்தான் மைக்கொணர்ந்தான் வில்கோள் விற்கோள் எனவரும். இனி இவ்வாறு திரியாது அகத்தோத்திற்கூறிய பொதுமுடிபே தமக்குமுடிபாக வருவனவுங் கொள்க. அவை கடுக்குறைத்தான் செப்புக்கொணர்ந்தான் என்றாற்போல்வன. "தம்மினாகிய தொழிற்சொன் முன்வரின்" என்ற அதிகாரத்தான் வினைவந்துழியே இங்ஙனம் பெரும்பான்மை திரிவதென்று உணர்க. இனித் தன்னினமுடித்தலென்பதனான் ஏழாவதற்கும் வினையோடுமுடிவுழித் திரிதல்கொள்க. அது "வரைபாய்வருடை" "புலம்புக்கன்னே புல்லணற்காளை" என்றாற்போலவரும். (கரு)

கருஅ. வேற்றுமை யல்வழி இஐ யென்னு
மீற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய
வவைதாம்,
மியல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவு
முறழா குநவு மென்மனார் புலவர்.

இஃது இகர ஈற்றுப்பெயர்க்கும் ஐகார ஈற்றுப்பெயர்க்கும் அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமையல் வழி = வேற்றுமையல்லா இடத்து: இ ஐ என்னும் ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலைய = இ ஐ என்னும் ஈற்றையுடைய பெயர்ச்சொற்கள் மூவகையாகிய முடிபுநிலையையுடைய: அவைதாம் = அம்முடிபுகடாம்: இயல்பாகுநவும் = இயல்பாய் முடிவனவும்: வல்லெழுத்து மிகுநவும் = வல்லெழுத்து மிக்கு முடிவனவும்: உறழாகுநவும் = உறழ்ச்சியாய்முடிவனவும்: என்மனார் புலவர் = என இவையென்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். பருத்திகுறிது காரைகுறிது சிறிது தீது பெரிது என இவை இயல்பு. மாசித்திங்கள் சித்திரைத்திங்கள் அலிக்கொற்றன் புலைக்கொற்றன் காவிக்கண் குவளைக்கண் என இவை மிகுதி. கிளிகுறிது கிளிக்குறிது தினைகுறிது தினைக்குறிது என இவை உறழ்ச்சி.

பெயர்க்கிளவி மூவகைநிலையவெனவே பெயரல்லாத இரண்டீற்றுவினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் இயல்பும் மிகுதியுமாகிய இருவகைநிலையவாம். ஒல்லைக்கொண்டான் என்பது ஐகார ஈற்றுவினைச்சொன் மிகுதி. இனி அணியென்பதன்கண் இகர ஈற்று வினையெச்சம் எடுத்தோதுப. இவற்றிற்கு இயல்பு வந்துழிக்காண்க. "சென்மதிபாக" இஃது இகர ஈற்று இடைச்

சொல்லியல்பு. மிகுதி வந்துழிக்காண்க. "தில்லைச்சொல்லே" இஃது ஐகார ஈற்று இடைச்சொன்மிகுதி. இயல்பு வந்துழிக் காண்க. "கடிகா" இஃது இகர ஈற்று உரிச்சொல்லியல்பு. மிகுதி வந்துழிக்காண்க. பணைத்தோள் இஃது ஐகார ஈற்று உரிச்சொன் மிகுதி. இயல்பு வந்துழிக்காண்க. (கசு)

கருகூ. சுட்டுமுத லாகிய விகர விறுதியு
மெகரமுதல் வினாவி னிகர விறுதியுஞ்
சுட்டுச்சினை நீடிய வையெ னிறுதியும்
யாவென் வினாவி னையெ னிறுதியும்
வல்லெழுத்து மிகுநவு முறழா குநவுஞ்
சொல்லியன் மருங்கி னுளவென மொழிப.

இஃது ஏழாம்வேற்றுமை இடப்பொருளுணர்த்திநின்ற இகர ஐகார ஈற்று இடைச்சொன்முடிபு கூறுகின்றது.

இ - ள். சொல்லியல் மருங்கின்=இகர ஐகாரங்கட்கு முன்னர்க் கூறிய மூவகையிலக்கணங்களுள் இயல்பைநீக்கி: சுட்டு முதலாகிய இகர இறுதியும்=சுட்டெழுத்தினை முதலாகவுடைய அவ் இகர ஈற்று இடைச்சொல்லும்: எகர வினாவின் முதல் இகர இறுதியும்=எகரமாகிய வினாவினை முதலாகவுடைய அவ் இகர ஈற்று இடைச்சொல்லும்: சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்=சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட அவ் ஐகார ஈற்று இடைச்சொல்லும்: யாவென் வினாவின் ஐயென் இறுதியும்=யாவென்வினாவினை முதற்கணுடைய அவ் ஐகார ஈற்று இடைச்சொல்லும்: வல்லெழுத்து மிகுநவும்=வல்லெழுத்துமிக்கு முடிவனவும்: உறழாகுநவும்=உறழ்ச்சியாய் முடிவனவும்: உளவெனமொழிப=உளவென்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். அதோளிக்கொண்டான் இதோளிக்கொண்டான் உதோளிக்கொண்டான் எதோளிக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், ஆண்டைக்கொண்டான் ஈண்டைக்கொண் ஊண்டைக்கொண்டான் யாண்டைக்கொண்டான் எனவும் இவை மிக்கன. அதோளி அவ்விடமென்னும் பொருட்டு. அவ்வழிகொண்டான் அவ்வழிக்கொண்டான் இவ்வழிகொண்டான் இவ்வழிக் கொண்டான் உவ்வழிகொண்டான் உவ்வழிக்கொண்டான் எவ்வழி கொண்டான் எவ்வழிக்கொண்டான் என உறழ்ந்தன. சுட்டுச்சினை நீண்டதற்கும் யாவினாவிற்கும் வரும் ஐகார ஈற்றுக்கு உதாரணம்

அக்காலத்து ஆயிடைகொண்டான் ஆயிடைக்கொண்டான் என்முற்போல ஏனையவற்றிற்கும் வழங்கிற்றுப்போலும். இனி ஆங்கவைகொண்டான் ஆங்கவைக்கொண்டான் என்பன காட்டுவாரும் உளர். அவை திரிபுடையனவாம். சொல்லியல் என்றதனுனே பிற ஐகார ஈறு மிக்குமுடிவன கொள்க. அன்றைக்கூத்தர் 'பண்டைச்சான்றோரெனவும் ஒருதிங்களைக்குழவி ஒருநாளைக்குழவி எனவும் வரும். (கஎ)

கக௰. நெடியதன் முன்ன ரொற்றுமெய் கெடுதலுங்
குறியதன் முன்னர்த் தன்னுரு விரட்டலு
மறியத் தோன்றிய நெறியிய லென்ப.

இது புள்ளிமயங்கியலைநோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுகின்றது.

இ-ள். நெடியதன்முன்னர் ஒற்று மெய்கெடுதலும்=நெட்டெழுத்தின்முன் நின்ற ஒற்றுத் தன்வடிவு கெடுதலும்: குறியதன் முன்னர்த் தன் உரு இரட்டலும்=குற்றெழுத்தின்முன் நின்ற ஒற்றுத் தன்வடிவு இரட்டித்தலும்: அறியத் தோன்றிய நெறியியல் என்ப=அறியும்படி அடிப்பாட்டியலென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

இங்ஙனம் நெடியதன்முன்னர் ஒற்றுக்கெடுவன ணகாரமும் னகாரமும் மகாரமும் லகாரமும் ளகாரமும் என ஐவகையவாம்.

உ-ம். கோணிமிர்ந்தது தானல்லன் தாநல்லர் வேனன்று தோணன்று என நகரம் வருமொழியாதற்கண் நெடியதன்முன்னர் ஒற்றுக்கெட்டது. கோறீது வேறீது எனத் தகரம் வருமொழியாதற்கண் லகரவொற்றுக் கெட்டது. ஏனைய வந்துழிக் காண்க. இவற்றை "லனவெனவரூஉம்" "ணளவென்புள்ளிமுன்" என்பனவற்றான் முடித்துக் கெடுமாறு காண்க. ஒற்றிரட்டுவன ஞகார நகார மகாரம் ஒழிந்தன. கண்ணழகிது பொன்னகல் தம்மாடை சொல்லழகிது எள்ளழகிது நெய்யகல் தெவ்வலன் எனக் குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டின.

மேலைச்சூத்திரத்து நான்கனுருபு பிற்கூறியவதனுன் ஒற்றிரட்டுதல் உயிர்முதன்மொழிக்கண்ணதென்று உணர்க. குறியது பிற்கூறிய முறையன்றிக்கூற்றிஞற் தம்மை எம்மை நின்னை என நெடியன குறுகிநின்றவழியுங் குறியதன்முன்னரொற்ருய் இரட்டு

தலும், விரனன்று குறணிமிர்ந்தது எனக் குறிலிணையின்முன்னர் வந்த ஒற்றுக்கெடுதலும், வராறீது நன்று எனக் குறினெடிற்கண் நின்ற ஒற்றுக்கெடுதலும், அதுகொஃறோழி எனவுங் குரிசிறீயன் எனவுந் தொடர்மொழியீற்றுநின்ற ஒற்றுக்கெடுதலும் இடைச்சொல்லோடு ஒட்டுப்பட்டுநிற்றலுங், காற்றீது எனவும் விரற்றீது எனவும் ஒற்றுநிற்றலுங் கொள்க. இனி அறிய என்றதனாற் றேன்றீது நாண்டீது என்றாற்போல்வன கெடாமைநிற்றலுங், கெடுதலுந் தகரநகரங்கள் வந்துழியென்பதூஉங் கொள்க. நெறியியலென்றதனாற் சுட்டின்முன் உயிர்முதன்மொழி வந்துழி அவ்வடை அவ்வாடை என இடை வகரவொற்று இவ்வழியும் இரட்டுதல்கொள்க. (கஅ)

ககசு. ஆறனுருபினு நான்கனுருபினுங்
கூறிய குற்றொற் றிரட்ட லில்லை
யீறாகு புள்ளி யகரமொடு நிலையு
நெடுமுதல் குறுகு மொழிமுன் னான.

இஃது உருபியலைநோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுகின்றது.

இ - ள். நெடுமுதல் குறுகும் மொழிமுன் ஆன=நெடிதாகிய முதலெழுத்துக் குறுகிமுடியும் அறுவகைப்பட்ட மொழிகளின் முன்னர் வந்த: ஆறனுருபினும் நான்கனுருபினும்=ஆறாம்வேற்றுமைக்கண்ணும் நான்காம்வேற்றுமைக்கண்ணும்: கூறிய குற்றொற்று இரட்டலில்லை=முன்னர் நிலைமொழிக்கு இரட்டுமென்ற குற்றொற்று இரட்டிவருதலில்லை: ஈறாகுபுள்ளி அகரமொடுநிலையும்=நிலைமொழியீற்றுக்கண் நின்ற ஒற்றுக்கள் அகரம்பெற்றுநிற்கும். எ - று.

உருபியலில் "நீயெனொருபெயர்" எனவுந் "தாம்நாமென்னும்" எனவுந் "தான்யானெனன்னும்" எனவுங் கூறியவற்றாற் குறுகி ஒற்றிரட்டித் தம்மை நம்மை எம்மை தன்னை நின்னை என்னை எனவருவன இதனானே தமது நமது எமது தனது நினது எனது எனவும், தமக்கு நமக்கு எமக்கு தனக்கு நினக்கு எனக்கு எனவும் ஒற்றிரட்டாது அகரம்பெற்று வந்தன. நான்காவதற்கு ஒற்றுமிகுதல் "வல்லெழுத்துமுதலிய" என்பதனாற்கொள்க. ஆறனுருபாகிய அகரம் எறிமுடியாமைக்குக் காரணம் "ஆறனுருபினகரக்கிளவி" என்புழிக் கூறினம். ஒற்றிரட்டாமையும் அகரப்பேறும் இரண்டற்கும் ஒத்தவிதியென்று உணர்க. கூறியவென்றதனான் நெடுமுதல்குறுகாத தம் நம் நும் எனவருஞ் சாரியைகட்கும் இவ்விரு

விதியுங் கொள்க. எல்லார்தமக்கும் எல்லார்நமக்கும் எல்லீர்நுமக்கும் எல்லார்தமதும் எல்லாநமதும் எல்லீர்நுமதும் எனவரும். (கக)

கசுஉ. நும்மெ னிறுதியு மந்நிலை திரியாது.

இது நெடுமுதல்குறுகாத நும்மென்கின்றதும் அவ்விதிபெறு மென்கின்றது.

இ - ள். நும்மென் இறுதியும் = நெடுமுதல்குறுகா நும்மென்னும் மகரவீறும்: அந்நிலை திரியாது = முற்கூறிய குற்றொற்று இரட்டாமையும் ஈறுகுபுள்ளி அகரமொடுநிலையலும் எய்தும். எ - று.

உ-ம். நுமது நுமக்கு என்வரும். (உ0)

கசுங. உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமு முயிரும் வருவழி யியற்கை.

இது புள்ளிமயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிச்செய்கை கூறுகின்றது.

இ - ள், உகரமொடு புணரும் புள்ளியிறுதி = உகரப்பேற்றோடு புணரும் புள்ளியீறுகள்: யகரமும் உயிரும் வருவழி இயற்கை = யகரமும் உயிரும் வருமொழியாய் வருமிடத்து அவ்வுகரம் பெறாது இயல்பாய்முடியும். எ - று.

அவ் ஈறுகளாவன புள்ளிமயங்கியலுள் உகரம்பெறுமென்று விதிக்கும் பல ஈறுகளுமென்று கொள்க. உரிஞ்யாது அனந்தா ஆதா இகலா ஈந்தா உழுந்தா ஊரா எயிறு ஏறு ஐயா ஒழுக்கா ஓதா ஔவியா எனவும், உரிஞ்யாது அழகு எனவும் ஒட்டுக. ஏனைப் புள்ளிகளோடும் ஏற்பன அறிந்து ஒட்டுக.

"ஞகாரையொற்றிய" என்பதனும் "ஞநமவவியையினும்" என்பதனும் யகரமும் உயிரும் வந்தால் உகரம்பெறாது இயல்பாமென்பது பெறுதலின் ஈண்டு விலக்கல் வேண்டாவெனின், எடுத்தோத்தில்வழியதே உய்த்துணர்ச்சியென்று கொள்க.

இது முதலாக அல்வழிகூறுகின்றார். (உக)

கசுச. உயிரும் புள்ளியு மிறுதி யாகி
யளவு நிறையு மெண்ணுஞ் சுட்டி
யுளவெனப் பட்ட வெல்லாச் சொல்லுந்

தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வரூஉங் காலந் தோன்றி
னொத்த தென்ப வேயென் சாரியை.

இஃது அளவும் நிறையும் எண்ணுமாகிய பெயர்கள் தம்மிற் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். உயிரும் புள்ளியும் இறுதியாகி = உயிரும் புள்ளியுந் தமக்கு ஈறாய்: அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி உளவெனப்பட்ட எல்லாச்சொல்லும் = அளவையும் நிறையையும் எண்ணையுங் கருதி வருவனவுளவென்று ஆசிரியர் கூறப்பட்ட எல்லாச்சொற்களும்: தத்தங் கிளவி தம்மகப்பட்ட = தத்தமக்கு இனமாகிய சொற்களாய்த் தம்மிற் குறைந்த சொற்கள்: முத்தை வரூஉங் காலந்தோன்றின் = தம்முன்னே வருங் காலந் தோன்றுமாயின்: ஏயென் சாரியை ஒத்தது என்ப = தாம் ஏயென் சாரியைபெற்று முடிதலைப் பொருந் திற்றென்பார் ஆசிரியர். எ - று.

முந்தை முத்தையெனவிகாரம்.

நாழியேயாழாக்கு உழக்கேயாழாக்கு கலனேபதக்கு என அளவுப்பெயர் ஏகாரம்பெற்றுத் தம்முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. தொடியேகஃசு கழஞ்சேகுன்றி கொள்ளேயையவி என நிறைப்பெயர் ஏகாரம்பெற்றுத் தம்முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. ஒன்றேகால் காலேகாணி காணியேமுந்திரிகை என எண் ணுப்பெயர் ஏகாரம்பெற்றுத் தம்முன்னர்த் தம்மிற் குறைந்தன வந் தன. அதிகாரம்பட்ட புள்ளியீறு முற்கூறாததனானே குறுணிநா னாழி ஐந்நாழியுழக்கு என ஏகாரமின்றி வருவனவுங் கொள்க. (உஉ)

கசரு. அரையென வரூஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்றாற் சாரியை யியற்கை.

இஃது எய்தியதுவிலக்கிற்று.

இ - ள். அரையெனவரூஉம் பால்வரைகிளவிக்கு = அம்மூவ கைச்சொன் முன்னர் வரும் அரையென்றுசொல்ல வருகின்ற பொ ருட்கூற்றை உணரநின்ற சொல்லிற்கு: சாரியையியற்கை புரைவ தன்று = ஏயென்சாரியைபெறுந்தன்மை பொருந்துவதன்று. எ-று.

ஆல் அசை.

உ-ம். உழக்கரை செவிட்டரை மூவுழக்கரை எனவும், கலஃசரை கழஞ்சரை தொடியரை கொள்ளரை எனவும், ஒன்றரை பத்தரை எனவும் இவை ஏயென்சாரியை பெறாவாய் வந்தன. புரைவதன்றென்றதனாற் கலவரையென்பதனை ஒற்றுக்கெடுத்துச் செய்கைசெய்து முடிக்க. இதனானே செவிட்டரையென்புழி டகரவொற்று மிகுதலுங்கொள்க. "ஒட்டுதற்கொழுகியவழக்கு" அன்மையிற் சாரியைபெறாவாயினவென்றாலோவெனின் அவை பெற்றும் பெறாதும் வருவனவற்றிற்குக் கூறியதாகலானும் இது "தம்மகப்பட்ட" என வரைந்தோதினமையானும் விலக்கல்வேண்டிற்று. ()

கசசு. குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது, ஏயென்சாரியை விலக்கி வேற்றுமைமுடிபினோடு மாட்டெறிதலின்.

இ-ள். குறையென் கிளவி முன்வரு காலை = குறையென்னுஞ்சொல் அளவுப்பெயர் முதலியவற்றின்முன் வருங்காலத்திற்கு: வேற்றுமையியற்கை = வேற்றுமைப்புணர்ச்சிமுடிபிற்கு உரித்தாகக் கூறுந் தன்மை: நிறையத்தோன்றும் = நிரம்பத்தோன்றும். எ - று.

உ-ம். உரிக்குறை கலக்குறை எனவும், தொடிக்குறை கொட்குறை எனவும், காணிக்குறை காற்குறை எனவும் வரும். உரியநெல்லுங்குறைநெல்லுமென்க.

வேற்றுமையியற்கையெனவே இவை வேற்றுமையன்றாயின. எனவே உரிக்குறையென்பதற்கு உரியும் உழக்குமெனப் பொருளாயிற்று. ஏனையவும் அன்ன.

முன்வருகாலையென்றதனானே கலப்பயறு கலப்பாகு என்றாற் போலப் பொருட்பெயரோடு புணரும்வழியும் இவ்வேற்றுமைமுடிபு எய்துவிக்க. பாகென்றது பாக்கினை. நிறையவென்றதனானே உரிக்கூறு தொடிக்கூறு காணிக்கூறு எனக் கூறென்றதற்கும் இம்முடிபு எய்துவிக்க. (உச)

கசஎ. குற்றிய லுகரக் கின்னே சாரியை.

இது வேற்றுமைமுடிபு விலக்கி இன் வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ள். குற்றியலுகரக்குச் சாரியை = குற்றியலுகர ஈற்று அளவுப்பெயர்முதலியவற்றிற்குக் குறையென்பதனோடு புணரும் வழி வருஞ் சாரியை: இன்னே = இன்சாரியையேயாம். எ - று.

குற்றியலுகரக்கு, இதற்கு அத்து விதித்து முடிக்க. குற்றிய லுகரத்தின்னேயென்பதும் பாடம்.

உழக்கின்குறை ஆழாக்கின்குறை எனவும், கஃறின்குறை கஃசின்குறை எனவும், ஒன்றின்குறை பத்தின்குறை எனவும் வரும். இதற்கு உழக்குங்குறையுமென்பது பொருள். இது வேற்று மைக்கண்ணாயின் உழக்கிற்குறையென நிற்கும். (உ௫)

கசுஅ. அத்திடை வருஉங் கலமெ னளவே.

இதுவும் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வருத்தது, வேற்று மைவிதிவிலக்கி அத்து வருத்தலின்.

இ - ள். கலமென் அளவே = கலமென்னும் அளவுப்பெயர் குறையொடு புணருமிடத்து: அத்து இடைவருஉம் = அத்துச்சா ரியை இடைவந்து புணரும். எ - று.

கலத்துக்குறை. இதனை "அத்தேவற்றே" என்பதனான் முடிக்க. இதற்குக் கலமுங்குறையுமென்பது பொருள். சாரியைமுற்கூறியவ தனானே முன் இன்சாரியைபெற்றவழி வல்லெழுத்து வீழ்க்க. (உசு)

கசுக. பனையெ னளவுங் காவெ னிறையு
நினையுங் காலை யின்னொடு சிவணும்.

இதுவும் அது, வேற்றுமைவிதி விலக்கி இன் வருத்தலின்.

இ - ள். பனையென் அளவுங் காவென் நிறையும் = பனை யென்னும் அளவுப்பெயருங் காவென்னும் நிறைப்பெயருங் குறை யென்பதனோடு புணருமிடத்து: நினையுங்காலை இன்னொடு சிவ ணும் = ஆராயுங்காலத்து இன் சாரியைபெற்றுப் புணரும். எ - று.

பனையின்குறை காவின்குறை எனவரும். இவையும் உம் மைத்தொகை. நினையுங்காலையென்பதனான் வேற்றுமைக்கு உரிய விதியெய்தி வல்லெழுத்துப் பெறுதலுஞ் சிறுபான்மை கொள்க. பனைக்குறை காக்குறை எனவரும்.

இத்துணையும் அல்வழிமுடிபு. இவற்றை "வேற்றுமையல் வழிஇஐ" என்னுஞ் சூத்திரத்திற்கூறுது வேறேறுதினார், இவை அளவும் நிறையும் எண்ணுமாதலின். (உஎ)

கஎ0. அளவிற்கு நிறையிற்கு மொழிமுத லாகி
யுளவெனப் பட்ட வொன்பதிற் றெழுத்தே
யவைதாங்,
கசதப வென்று நமவ வென்று
வகர வுகரமோ டவையென மொழிப.

இது முற்கூறிய மூன்றனுள் அளவிற்கும் நிறைக்கும் மொழிக்குமுதலாமெழுத்து இனைத்தென்கின்றது.

இ - ள். அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி உளவெனப்பட்ட ஒன்பதிற்றெழுத்தே = அளவுப்பெயர்க்கும் நிறைப்பெயர்க்கும் மொழிக்கு முதலாயுள்ளவென்று கூறப்பட்டன ஒன்பதெழுத்துக்கள்: அவைதாங் கசதப என்று நமவ என்று அகரவுகரமோடு அவையென மொழிப = அவ்வெழுத்துக்கள் தாங் கசதபக்களும் நமவககளும் அகர உகரமுமாகிய அவையென்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு இவை அளவு. கழஞ்சு சீரகம் தொடி பலம் நிறை மா வரை அந்தை இவை நிறை. நிறைக்கு உகரமுதற்பெயர் வந்துழிக் காண்க. இனி உளவெனப்பட்ட என்றதனானே உளவெனப்படாதனவும் உள. அவை இம்மி ஓரடை இடா என வரையறைகூறுதனவுங் கொள்க. இன்னும் இதனானே தேயவழக்காய் ஒருனார் ஒருது வலி என்பனவுங் கொள்க. இங்ஙனம் வரையறைகூறினார், அகத்தோத்தினுள் முடிபுகூறியவழி அதிகாரத்தான் வன்கணத்தின்மேற் செல்லாது ஒழிந்தகணத்தினுஞ் செல்லுமென்றற்கு. எண்ணுப்பெயர் வரையறையின்மையிற் கூறாராயினார். (உஅ)

கஎக. கூறியன் மருங்கி னிவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லா
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
யொத்தவை யுரிய புணர்மொழி நிலையே.

இஃது இவ்வோத்திற்குப் புறனடை; எடுத்தோத்தானும் இலேசானும் முடியாதனவற்றிற்கு இதுவே ஓத்தாகலின்.

இ-ள். ஈறு இயல் மருங்கின் = உயிரும் புள்ளியும் இறுதியாகிய சொற்கள் வருமொழியோடு கூடி நடக்குமிடத்து: இவற்று இயல்பு இவையெனக் கூறிய கிளவிப் பல்லாறெல்லாம் = இம்மொழிகளின் முடிபு இவையெனக் கூறி முடிக்கப்பட்ட சொற்களினது அவ்வாற்றான் முடியாதுநின்ற பலவகை முடிபுகளெல்லாம்: மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி = உண்மையைத் தலைப்பட்ட வழக்கோடு கூடி: புணர்மொழிநிலை ஒத்தவை உரிய = புணரும் மொழிகளின் நிலைமைக்கட் பொருந்தினவை உரியவாம். எ - று.

உ-ம். நடஞெள்ளா என உயிரீறாகிய முன்னிலைக்கிளவி மென்கணத்தோடு இயல்பாய் முடிந்தது. மண்ணுகொற்றா மண்ணுக்கொற்றா மன்னுகொற்றா மன்னுக்கொற்றா உள்ளுகொற்றா உள்ளுக்கொற்றா கொல்லுகொற்றா கொல்லுக்கொற்றா என்பன புள்ளியிறுதி முன்னிலைக்கிளவி உகரம்பெற்றும் உறழ்ந்தும் முடிந்தன. உரிஞுஞெள்ளா இஃது "ஔவெனவரூஉம்" என்பதன் ஒழிபு. பதக்கநாழி பதக்குநாழி என இவை ஏயென்சாரியை பெறாது அக்குப்பெற்று அதன் இறுதி மெய்ம்மிசையொடுங் கெட்டுப்புணர்ந்தன. வாட்டானை தோற்றண்டை என்பன தகரம்வந்துழித் திரிந்து நெடியதன்முன்னர் ஒற்றுக்கெடாது நின்றன. சீரகரை என்பதனைச் சீரகம் அரையென நிறுத்திக் ககரவொற்றின்மேலேறின அகரத்தையும் மகரவொற்றையுங் கெடுத்து அரையென்பதன் அகரத்தையேற்றிமுடிக்க. இது நிறைப்பெயர். ஒருமாவரையென்பதனை ஒருமா அரையென நிறுத்தி வருமொழி அகரங் கெடுத்து ஒருமாரையெனமுடிக்க. கலவரையென்பதனைக் கலரை என முடிக்க. அகர மகரங் கெடுத்து நாகணையெனப் பிறவும் வருவனவெல்லாம் இச்சூத்திரத்தான் முடிக்க. (உக)

களஉ. பலரறி சொன்முன் யாவ ரென்னும்
பெயரிடை வகரங் கெடுத லுமேனை
யொன்றறி சொன்முன் யாதென் வினாவிடை
யொன்றிய வகரம் வருத லுமிரண்டு
மருவின் பாத்தியிற் றிரியுமன் பயின்றே.

இது மரூஉச்சொன் முடிபு கூறுகின்றது.

இ - ள். பலரறிசொன்முன் யாவரென்னும் பெயரிடை வகரங் கெடுதலும் = பலரையறியும் அவரென்னுஞ் சொல்லின்முன்னர் வருகின்ற யாவரென்னும்பெயர் இடையில்வகரங் கெடுதலும்:

ஏனை ஒன்றறிசொன்முன் யாதென் வினை இடை ஒன்றிய வகரம் வருதலும்=ஒழிந்த ஒன்றனை அறியும் அதுவென்னுஞ் சொல்லின்முன்னர் வருகின்ற யாதென்னும்வினைச்சொல் இடையிலே உயிரோடுபொருந்திய வகரம் வருதலும்: இரண்டும்=ஆகிய அவையிரண்டும்: மருவின் பாத்தியின் மன் பயின்று திரியும்=மருமுடிபின் பகுதியிடத்து மிகவும் பயின்று திரியும். எ - று.

உ-ம். அவ்யார் எனவும் அதுயாவது எனவும் வரும். அவர் யாவரென்பது வகரங்கெட்டு அவர்யாரென நின்றவழி "யாஅ ரென்னும் வினாவின்கிளவி" என்று வினையியலுட் கூறும் வினைக் குறிப்புச்சொல்லாம்பிறவெனின், ஆகாது; அவ்வகரங் கெட்டாலும் ஈண்டு யாவரென்னும் பெயர்த்தன்மையாயே நிற்றலின். அது பெற்றவாறென்னையெனின் ஈண்டுப் பலரறிசொன்முன் வந்த யாவரென்பதன் வகரங் கெடுமெனவே, ஏனை அவன் அவள் என்னும் இருபான்முன்னும் யாவரென்பது வாராதென்றும் அது திரிந்து மருவாய்நிற்குமென்றுங் கூறுதலானும் 'யாவரென்னும் பெயரிடை' என்பதனானும் பெற்றாம். இதனானே அவன்யாவர் அவள்யாவர் என்றாற் பால்வழுவாமென்பது பெற்றாம். இதனை "யாவன் யாவள் யாவ ரென்னு—மாவயின் மூன்றே" எனப்பெயராக ஓதிய வாற்றான் உணர்க. அன்றியும் யாரென்னும் வினாவின் கிளவி முப்பாற்கும் உரித்தென்று யாரென்னும் வினாவினைக்குறிப்பினை அவன் யார் அவள்யார் அவர்யார் என முப்பாற்கும் ஒப்ப உரிமைகூறுதலானும் அது வேறென்பது பெற்றாம். அது வினையியலுள் ஓதினமையானும் "வினாவிற்கேற்றல்" எனப்பயனிலையாக ஓதினமையானும் வேறாயிற்று.

இனி "யார்யார்க்கண்டேயுவப்பர்" எனப் பலரறிசொன்முன்னரன்றி இயல்பாக வந்த யாரென்பது யாண்டு அடங்குமெனின் அதுவும் யாரையாரைக்கண்டென உருபுவிரிதலின் யாவரை என்னும் வகரங்கெட்ட பெயரேயாம். அங்ஙனம் நிலைமொழி வருமொழியாய் நிற்றல் பயின்றென்றதனாற்கொள்க. இதனானே "யாவதுநன்றெனவுணரார்மாட்டும்" என ஏனை ஒன்றறிசொல்லும் நிலைமொழியாய் நிற்றல்கொள்க. இன்னும் இதனானே யாரவர் யாவதது என இவ்விருசொல்லும் நிலைமொழியாய் வருதல் கொள்க. (ங.0)

ஐந்தாவது தொகைமரபு முற்றிற்று.

ஆறாவது

உருபியல்.

கஎ௩. அஆ உஊ ஏஔ வென்னு
மப்பா லாற னிலைமொழி முன்னர்
வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை.

என்பது சூத்திரம். உருபுகளோடு பெயர் புணரும் இயல்பு உணர்த்தினமையின் இவ்வோத்து உருபியலென்னும் பெயர்த்தாயிற்று. மேற் தொகுத்துப்புணர்த்ததனை ஈண்டு விரித்துப்புணர்க்கின்றாராகலின் இவ்வோத்துத் தொகைமரபோடு இயைபுடைத்தாயிற்று. இச்சூத்திரம் அகரமுதலிய ஈற்றான்வரும் ஆறு ஈற்றுச்சொற்கள் நின்று இன் பெற்று உருபினோடு புணருமாறு கூறுகின்றது. உருபின் பொருள்பட வரும் புணர்ச்சி மேற்கூறுப.

இ - ள். அ ஆ உ ஊ ஏ ஔ என்னும் அப்பால் ஆறன் நிலைமொழிமுன்னர் = அ ஆ உ ஊ ஏ ஔ என்று சொல்லப்படுகின்ற அக்கூற்று ஆறினையும் ஈறாகவுடைய நிலைமொழிகளின்முன்னர் வருகின்ற: வேற்றுமையுருபிற்கு இன்னே சாரியை = வேற்றுமையுருபுகட்கு இடையே வருஞ் சாரியை இன்சாரியையே. எ - று.

உ-ம். விளவினை விளவினொடு விளவிற்கு விளவினது விளவின்கண் எனவும், பலாவினை பலாவினொடு பலாவிற்கு பலாவினது பலாவின்கண் எனவும், கடுவினை கடுவினொடு கடுவிற்கு கடுவினது கடுவின்கண் எனவும், தழூஉவினை தழூஉவினொடு தழூஉவிற்கு தழூஉவினது தழூஉவின்கண் எனவும், சேவினை சேவினொடு சேவிற்கு சேவினது சேவின்கண் எனவும், வௌவினை வௌவினொடு வௌவிற்கு வௌவினது வௌவின்கண் எனவும் வரும். இவ்வாறே செய்கையறிந்து ஒட்டுக.

"இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்—கின்னென் சாரியை யின்மை வேண்டும்." எனவே, ஏனைய இன்பெறுமென்றலின், "ஞநமயவ" என்பதனான் இயல்பென்றதுவிலக்கிற்றாம். (௪)

கஎ௪. பல்லவை நுதலிய வகர விறுபெயர்
வற்றொடு சிவணு லெச்ச மின்றே.

இஃது இன்சாரியைவிலக்கி வற்று வருத்தலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். பல்லவை நுதலிய பெயரிறு அகரம்=பன்மைப்பொருளைக் கருதின பெயர்களின் இறுதிநின்ற அகரம்: வற்றொடு சிவணல் எச்சமின்று=வற்றுச்சாரியையோடு பொருந்துதலை ஒழிதலில்லை. எ - று.

உ-ம். பல்லவற்றை பல்லவற்றொடு பலவற்றை பலவற்றொடு சில்லவற்றை சில்லவற்றொடு சிலவற்றை சிலவற்றொடு உள்ளவற்றை உள்ளவற்றொடு இல்லவற்றை இல்லவற்றொடு என ஒட்டுக.

எச்சமின்று என்றதனானே மேல் இன்பெற்றன பிறசாரியையும் பெறுதல் கொள்க. நிலாத்தை துலாத்தை மகத்தை எனவரும். இன்னும் இதனானே பல்லவை நுதலியவற்றின்கண் மூன்றாமுருபு வற்றுப்பெற்றே முடிதல் கொள்க. (உ)

கஎ௫. **யா**வென் வினாவு மாயிய றிரியாது.

இஃது ஆகார ஈற்றுள் ஒன்றற்கு எய்தியதுவிலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ - ள். யாவென் வினாவும்=யாவென்றுசொல்லப்படும் ஆகார ஈற்று வினாப்பெயரும்: ஆயியல் திரியாது=முற்கூறிய வற்றுப் பேற்றிற் றிரியாது. எ - று.

யாவற்றை யாவற்றொடு எனவரும். (௩)

கஎ௬. சுட்டுமுத லுகர மன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே.

இஃது உகர ஈற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி=சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுச்சொல் அன்சாரியையோடு பொருந்தி: ஒட்டிய மெய் ஒழித்து உகரங் கெடும்=தான் பொருந்திய மெய்யைநிறுத்தி உகரங் கெடும். எ - று.

அதனை அதனொடு இதனை இதனொடு உதனை உதனொடு என வரும். அதினை அதினொடு என்றாற்போல்வன மரூ முடிப்புழி முடிந்தன. ஒட்டிய என்றதனாற் சுட்டுமுதல் உகரமன்றிப் பிற உகரமும் உயிர்வருவழிக் கெடுவன கொள்க. அவை கதவு களவு கனவு என நிறுத்தி அழகிது இல்லை என வருவித்து உகரங்கெ

டுத்து முடிக்க. இவற்றை வகர ஈருக்கி உகரம்பெற்றனவென்று கோடுமெனின் வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணும் பயின்றுவரும் வகர ஈறுகளை ஒழித்து ஆசிரியர் "வகரக்கிளவி நான்மொழியீற்றது." என்றாற்போல வரைந்தோதல் குன்றக்கூறலாம் ஆதலின் அவை உகர ஈறென்று உணர்க. அவை செலவு வரவு தரவு உணவு கனவு என வழக்கின்கணும் "புன்கண்ணுடைத்தாற்புணர்வு" "பாடறியாதானையிரவு" "கண்ணுறக்காணக்கதவு" எனச் செய்யுட்கண்ணும் பயின்று வருமாறு உணர்க. (ச)

களஎ. சுட்டுமுத லாகிய வையெ னிறுதி
வற்றொடு சிவணி நிற்றலு முரித்தே.

இஃது ஐகார ஈற்றிற்கு முடிபுகூறுகின்றது.

இ - ள். சுட்டுமுதலாகிய ஐயெனிறுதி = சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார ஈற்றுச்சொல்: வற்றொடு சிவணி நிற்றலும் உரித்து = வற்றுச்சாரியையோடு பொருந்தி நிற்றலும் உரித்து. எ-று. உம்மையான் வற்றொடு சில உருபின்கண் இன்சாரியைபெற்று நிற்றலும் உரித்தென்றவாறு.

அவையற்றை அவையற்றொடு இவையற்றை இவையற்றொடு உவையற்றை உவையற்றொடு என ஒட்டுக. இங்ஙனம் ஐகாரம் நிற்க வற்று வந்துழி "வஃகான்மெய்கெட" என்பதனான் முடிக்க.

இனி உம்மையான் அவையற்றிற்கு அவையற்றின்கண் என நான்காவதும் ஏழாவதும் வற்றும் இன்னும் பெற்று வந்தவாறு காண்க. இனி ஒன்றெனமுடித்தலென்பதனாற் பல்லவை நுதலிய அகர ஈற்றிற்கும் இவ்விரண்டு உருபின்கண் வற்றும் இன்னுங் கொடுத்துப் பலவற்றிற்கு பலவற்றின்கண் என முடிக்க. இது மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும். (ரு)

களஅ. யாவென் வினாவி னையெ னிறுதியு
மாயிய றிரியா தென்மனார் புலவ
ராவயின் வகர மையொடுங் கெடுமே.

இதுவும் அது.

இ - ள். யாவென் வினாவின் ஐயென் இறுதியும் = யாவெனும் வினாவினையுடைய ஐகார ஈற்றுச்சொல்லும்: ஆயியல் தி

யாது=முற்கூறிய சுட்டுமுதல் ஐகாரம்போல வற்றுப்பெறும் அவ்வியல்பிற் றிரியாதென்றுசொல்லுவார் ஆசிரியர்: ஆவயின் வகரம் ஐயொடுங் கெடும்=அவ் ஈற்றிடத்து வகரம் ஐகாரத்தோடுகூடக் கெடும். எ - று.

யாவற்றை யாவற்றொடு என ஒட்டுக. வகரம் வற்றுமிசையொற்றென்று கெடுவதனைக் கேடு ஓதிய மிகையானே பிற ஐகாரமும் வற்றுப்பெறுதல் கொள்க. கரியவற்றை கரியவற்றொடு நெடியவற்றை நெடியவற்றொடு குறியவற்றை குறியவற்றொடு என எல்லாவற்றோடும் ஒட்டுக. இது கருமை நெடுமை குறுமை என்னும் பண்புப்பெயரன்றிக் கரியவை நெடியவை குறியவை எனப் பண்புகொள்பெயராய் நிற்றலின் வகர ஐகாரங்கெடுத்து வற்றுச்சாரியை கொடுத்து முடிக்கப்பட்டன. இவை "ஐம்பாலறியும்பண்புதொகுமொழி" அன்மை உணர்க. (கூ)

கஎக. நீயெ னொருபெயர் நெடுமுதல் குறுகு
மாவயி னகர மொற்றா கும்மே.

இஃது ஈகார ஈறு இன்னவாறு புணருமென்கின்றது.

இ - ள். நீ என் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்=நீயென்னும் ஒருபெயர் தன்மேல் நின்ற நெடியதாகிய ஈகாரங் குறுகி இகரமாம்: ஆவயின் னகரம் ஒற்றாகும்=அவ்விடத்துவரும் னகரம் ஒற்றாய்நிற்கும். எ - று.

உ-ம். நின்னை நின்னொடு நினக்கு எனச் செய்கையறிந்து ஒட்டுக. நினக்கு என்பதற்கு "ஆறனுருபினுநான்கனுருபினும்" "வல்லெழுத்துமுதலிய" என்பன கொணர்ந்து முடிக்க. நினதென்பதற்கு "ஆறனுருபினகரக்கிளவி" என்பதனான் முடிக்க. நின்னென்பது வேறொருபெயரோ எனக் கருதுதலை விலக்குதற்கு ஒருபெயரென்றார். பெயர்குறுகுமென்னாது முதல்குறுகுமென்றது அப்பெயரின் எழுத்தின்கண்ணது குறுக்கமென்றற்கு. நெடுமுதலெனவே நகரங் குறுகுதலை விலக்கிற்று. உயிர்மெய்யொற்றுமைபற்றி நெடியது முதலாயிற்று. "உடைமையுமின்மையுமொடுவயினொக்கும்" என்றதனைநோக்கி ஒடுவிடத்துச் சாரியைபெற்றே வந்த அதிகாரத்தை மாற்றுதற்குச் சாரியைப்பேற்றிடை எழுத்துப்பேறு கூறினார். (எ)

கஅ௦. ஒகார விறுதிக் கொன்னே சாரியை.

இஃது ஒகார ஈறு இன்னவாறு புணருமென்கின்றது.

இ - ள். ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை = ஓகார ஈற்றிற்கு இடைவருஞ்சாரியை ஒன்சாரியை. எ - று.

கோஒனை கோஒனொடு என ஒட்டுக. ஒன்னேயென்ற ஏகாரத்தாற் பெரும்பான்மையாக வருஞ் சாரியை ஒன்னே, சிறுபான்மை இன் சாரியை வருமென்று கொள்க. "ஒன்றாகநின்றகோவினையடர்க்கவந்த" எனவும், கோவினை கோவினொடு சோவினை சோவினொடு ஓவினை ஓவினொடு எனவும் வரும்.

ஓ வென்பது மதகுநீர்தாங்கும் பலகை. (௮)

கஅக. அ ஆ வென்னு மரப்பெயர்க் கிளவிக்
அத்தொடுஞ் சிவணு மேழ னுருபே.

இஃது அகர ஆகார ஈற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். அஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு = அஆவென்று சொல்லப்படும் மரத்தை உணர்த்துகின்ற பெயராகிய சொல்லிற்கு: ஏழனுருபு அத்தொடுஞ் சிவணும் = ஏழாமுருபு இன்னோடன்றி அத்தோடும் பொருந்தும். எ - று.

உ-ம். விளவத்துக்கண் பலாவத்துக்கண் எனவரும்.

"வல்லெழுத்துமுதலிய" என்பதனான் வல்லெழுத்துக்கொடுத்துத் "தெற்றென்றற்றே" என்பதனான் "அத்தினகரமகரமுனை" க்கெடாமைச் செய்கைசெய்து முடிக்க. (௯)

கஅஉ. ஞநவென் புள்ளிக் கின்னே சாரியை.

இது புள்ளியீற்றுள் ஞகார ஈறும் நகார ஈறும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். ஞந என் புள்ளிக்கு இன்னே சாரியை = ஞநவென்று சொல்லப்படுகின்ற புள்ளியீறுகட்கு வருஞ் சாரியை இன் சாரியை. எ - று.

உ-ம். உரிஞினை உரிஞினொடு பொருநினை பொருநினொடு என ஒட்டுக. (௧0)

கஅ௩. சுட்டுமுதல் வகர மையு மெய்யுங்
கெட்ட விறுதி யியற்றிரி பின்றே.

இது நான்குமொழிக்கு ஈரும் வகர ஈற்றுட் சுட்டுமுதல் வகர ஈற்றிற்கு முடிபுகூறுகின்றது.

இ-ள். சுட்டுமுதல்வகரம்=அவ் இவ் உவ் என்னுஞ் சுட்டெ ழுத்தினை முதலாகவுடைய வகர ஈற்றுச்சொல்: ஐயும் மெய்யுங் கெட்ட இறுதியிற் றிரிபின்று=ஐகாரமும் ஐகாரத்தான் ஊரப் பட்ட மெய்யுங் கெட்டு வற்றுப்பெற்று முடிந்த யாவை என்னும் ஐகார ஈற்றுச்சொல்லியல்பிற் றிரிபின்றி வற்றுப்பெற்றுமுடியும். எ-று.

உ-ம். அவற்றை அவற்றொடு இவற்றை இவற்றொடு உவற் றை உவற்றொடு என ஒட்டுக. (கக)

கஅ௪. ஏனை வகர மின்னொடு சிவணும்.

இஃது எய்தாததெய்துவித்தது; பெயர்க்கேயன்றி உரிச்சொல் வகரத்திற்கு முடிபுகூறுதலின்.

இ-ள். ஏனை வகரம் இன்னொடு சிவணும்=ஒழிந்த உரிச் சொல்வகரம் இன்சாரியையோடு பொருந்தி முடியும். எ-று.

தெவ்வினை தெவ்வினொடு என ஒட்டுக. இஃது உரிச்சொல் லாயினும் படுத்தலோசையாற் பெயராயிற்று. (கஉ)

கஅரு. மஃகான் புள்ளிமு னத்தே சாரியை.

இது மகர ஈறு புணருமாறு கூறுகின்றது.

இ-ள். மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை=மகரமாகிய புள்ளியீற்றுச்சொன்முன் வருஞ் சாரியை அத்துச்சாரியை. எ-று.

உ-ம். மரத்தை மரத்தொடு நுகத்தை நுகத்தொடு என ஒட் டுக. "அத்தேவற்றே" "அத்தினகரம்" என்பனவற்றான் முடிக்க. ()

கஅசா. இன்னிடை வரூஉ மொழியுமா ருளவே.

இது மகர ஈற்றிற் சிலவற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள். இன்னிடைவரூஉம் மொழியுமாருள=மகர ஈற்றுச் சொற்களுள் அத்தேயன்றி இன்சாரியை இடையேவந்து முடியுஞ் சொற்களும் உள. எ-று.

மார் அசை.

உ-ம். உருமினை உருமினொடு திருமினை திருமினொடு எனவொட்டுக. (கச)

கஅஎ. நும்மெ னிறுதி யியற்கை யாகும்.

இது மகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ-ள். நும்மென் இறுதி இயற்கையாகும் = நும்மென்னும் மகர ஈறு மேற்கூறிய அத்தும் இன்னும் பெறாது இயல்பாகி முடியும். எ-று.

உ-ம். நும்மை நும்மொடு நுமக்கு நும்மின் நுமது நுங்கண் எனவரும்.

நுமக்கு நுமது என்பனவற்றிற்கு "ஆறனுருபினுநான்கனுருபினும்" "நும்மெனிறுதியுமந்நிலை" "வல்லெழுத்துமுதலிய" "ஆறனுருபினகரக்கிளவி" என்பன கொணர்ந்து முடிக்க.

நுங்கணென்பதற்கு மேலைச்சூத்திரத்து "மெய்" என்றதனான் மகரவொற்றுக்கெடுத்து "வல்லெழுத்துமுதலிய" என்பதனான் மெல்லொற்றுக்கொடுக்க. இயற்கையென்றார் சாரியைபெறாமை கருதி. (கரு)

கஅஅ. தாநா மென்னு மகர விறுதியும்
யாமெ னிறுதியு மதனோ ரன்ன
ஆஎய் யாகும் யாமெ னிறுதி
யாவயின் யகரமெய் கெடுதல் வேண்டு
மேனை யிரண்டு நெடுமுதல் குறுகும்.

இது மகர ஈற்றின் முற்கூறிய முடிபு ஒவ்வாதனவற்றிற்கு முடிபுகூறுகின்றது.

இ-ள். தாம் நாம் என்னும் மகர இறுதியும் யாமென் இறுதியும் அதனோரன்ன = தாம் நாமென்று கூறப்படும் மகர ஈறும் யாமென்னும் மகர ஈறும் நும்மென்னும் மகர ஈறுபோல அத்தும் இன்னும் பெறாது முடிதலையுடைய: யாமென் இறுதி ஆ எ ஆகும் = யாமென்னும் மகர ஈற்றுச்சொல்லில் ஆகாரம் எகாரமாம்: ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும் = அவ்விடத்துநின்ற யகரமாகியமெய் கெ

டுதலைவிரும்பும் ஆசிரியன்: ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும் = ஒழிந்த தாம் நாமென்னும் இரண்டும் நெடியவாகிய முதல்குறுகித் தம் நம் என நிற்கும். எ - று.

உ-ம். தம்மை தம்மொடு நம்மை நம்மொடு எம்மை எம்மொடு என ஆறு உருபோடும் ஒட்டுக. ஆறனுருபிற்கும் நான்கனுருபிற்குங் கருவியறிந்து முடிக்க.

மெய்யென்றதனாற் பிறவயின்மெய்யுங் கெடுக்க. தங்கண் நங்கண் எங்கண் என ஏழனுருபின்கண் மகரங்கெடுத்து "வல்லெழுத்துமுதலிய" என்பதனான் மெல்லெழுத்துக் கொடுக்க. (கசு)

கஅகூ. எல்லா மென்னு மிறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்று
மும்மை நிலையு மிறுதி யான.

இது மகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். எல்லாமென்னும் இறுதிமுன்னர் வற்றென்சாரியை முற்றத்தோன்றும் = எல்லாமென்னும் மகர ஈற்றுச்சொன்முன்னர் அத்தும் இன்னும் அன்றி வற்றென்னுஞ் சாரியை முடியத்தோன்றி முடியும்: உம்மை நிலையும் இறுதியான = ஆண்டு உம்மென்னுஞ் சாரியை இறுதிக்கண் நிலைபெறும். எ - று.

மகரம் வற்றின்மிசையொற்றெனக் கெடுக்க.

எல்லாவற்றையும் எல்லாவற்றினும் எல்லாவற்றுக்கண்ணும் எனவரும். முற்றவென்றதனான் ஏனைமுற்றுகரத்திற்கும் உம்மின் உகரங் கெடுத்துக்கொள்க. எல்லாவற்றொடும் எல்லாவற்றுக்கும் எல்லாவற்றதும் எனவரும். முற்றுகரமாதலின் ஏறிமுடியா. (கஎ)

கஅ0. உயர்திணை யாயி னம்மிடை வருமே.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். உயர்திணையாயின் = எல்லாமெனநின்ற மகர ஈற்று விரவுப்பெயர் உயர்திணைப்பெயராமெனின்: நம் இடைவரும் = நம்மென்னுஞ்சாரியை இடைநின்று புணரும். எ - று.

மகர ஈற்றினை மேல் வற்றின்மிசையொற்றெனக் கெடுத்த அதிகாரத்தாற் கெடுக்க. எல்லாநம்மையும் எல்லாநம்மினும் எல்லா

நங்கணும் என உகரம்பெற்றும் எல்லாநம்மொடும் எல்லாநமக்கும் எல்லாநமதும் என உகரங்கெட்டும் மகரம் நிற்கும். இவற்றிற்கு எல்லாரையும் எல்லாரொடும் என்பது பொருளாக ஒட்டுக. இதற்கு நம்மு வகுத்ததே வேறுபாடு. ஈறுகுபுள்ளி அகரமொடுநிற்றல் நான்காவதற்கும் ஆறுவதற்குங் கொள்க. (கஅ)

க௯க. எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியு
மெல்லீரு மென்னு முன்னிலை யிறுதியு
மொற்று முகரமுங் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
யும்மை நிலையு மிறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉ முன்னிலை மொழிக்கே.

இது மகர ஈற்று உயர்திணைப்பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

இ - ள். எல்லாருமென்னும் படர்க்கையிறுதியும் = எல்லாருமென்னும் மகர ஈற்று உயர்திணைப்படர்க்கைப்பெயரும்: எல்லீருமென்னும் முன்னிலையிறுதியும் = எல்லீருமென்னும் மகர ஈற்று உயர்திணைமுன்னிலைப்பெயரும்: ஒற்றும் உகரமுங் கெடுமென மொழிப = மகரவொற்றும் அதன்முன்னின்ற உகரமுங் கெட்டு முடியுமென்று சொல்லுவர் புலவர்: ரகரப்புள்ளி நிற்றல் வேண்டும் = அவ்வுகரம் ஏறிநின்ற ரகர ஒற்றுக் கெடாதுநிற்றலை விரும்பும் ஆசிரியன்: இறுதியான உம்மை நிலையும் = அவ்விருமொழியிறுதிக்கண்ணும் உம்மென்னுஞ்சாரியை நிலைபெறும்: படர்க்கை மேன தம் இடைவரூஉம் = படர்க்கைச்சொல்லிடத்துத் தம்முச்சாரியை இடைவரும்: முன்னிலைமொழிக்கு நும் இடைவரூஉம் = முன்னிலைச்சொற்கு நும்முச்சாரியை இடைவரும். எ - று.

உ-ம். எல்லார்தம்மையும் எல்லார்தம்மினும் எல்லார்தங்கணும் என உகரம்பெற்றும் எல்லார்தம்மொடும் எல்லார்தமக்கும் எல்லார்தமதும் என உகரங்கெட்டும் மகரம்நிற்கும். எல்லீர்நும்மையும் எல்லீர்நும்மினும் எல்லீர்நுங்கணும் என உகரம் பெற்றும் எல்லீர்நும்மொடும் எல்லீர்நுமக்கும் எல்லீர்நுமதும் என உகரங்கெட்டும் மகரம் நிற்கும்.

முன்னர் "மெய்" என்ற இலேசாற்கொண்ட மகரக்கேடு இவற்றிற்கும் மேல்வருவனவற்றிற்குங் கொள்க.

படர்க்கைப்பெயர் முற்கூறியவதனானே ரகர ஈற்றுப் படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் மகர ஈற்றுத்தன்மைப்பெயரும் தம் நும் நம் என்னுஞ் சாரியை இடையேபெற்று இறுதி உம் முச்சாரியையும்பெற்று முடிவன கொள்க. கரியார்தம்மையும் சான்றோர்தம்மையும் எனவும், கரியீர்நும்மையும் சான்றீர்நும்மையும் எனவும், கரியேநம்மையும் இருவேநம்மையும் எனவும் எல்லாவுருபொடுஞ் செய்கையறிந்து ஒட்டுக. உகரமும் ஒற்றும் என்றதனான் இக்காட்டியவற்றிற்கெல்லாம் மூன்று உருபின்கண்ணும் உம்மின் உகரங் கெடுதல்கொள்க. 'நிற்றல்வேண்டும்ரகரப்புள்ளி' என்றதனானே தம்முப்பெறுமை வருமவையுங் கொள்க. "எல்லார்க்குமெல்லாநிகழ்பவை" எனவரும். (கக)

ககஉ. தான்யா னென்னு மாயீ ரிறுதியு
மேன்முப் பெயரொடும் வேறுபா டிலவே.

இது னகர ஈற்றுட் சிலவற்றிற்கு முடிபுகூறுகின்றது.

இ - ள். தான் யான் என்னும் ஆயீரிறுதியும்=தான் யான் என்று சொல்லப்பட்ட அவ்விரண்டு னகர ஈறும்: மேல் முப்பெயரொடும் வேறுபாடு இலவே=மேல் மகர ஈற்றுட்கூறிய மூன்றுபெயரோடும் வேறுபாடின்றித் தானென்பது குறுகியும் யானென்பதன்கண் ஆகாரம் எகாரமாய் யகரவொற்றுக் கெட்டும் முடியும். எ - று.

தன்னை என்னை என எல்லாவுருபோடும் ஒட்டுக. செய்கையறிந்து ஒற்றிரட்டுதல் "நெடியதன்முன்னர்" என்பதனுள் இலேசாற்கொள்க. (உ0)

ககங. அழனே புழனே யாயிரு மொழிக்கு
மத்து மின்னு முறழத் தோன்ற
லொத்த தென்ப வுணரு மோரே.

இதுவும் அது.

இ - ள். அழனே புழனே ஆயிரு மொழிக்கும்=அழன் புழன் ஆகிய அவ்விருமொழிக்கும்: அத்தும் இன்னும் உறழத் தோன்றல் ஒத்ததென்ப=அத்துச்சாரியையும் இன்சாரியையும் மாறிவரத் தோன்றுதலைப் பொருந்திற்றென்பர்: உணருமோர்=அறிவோர். எ - று.

அழத்தை அழனிணை புழத்தை புழனிணை எனச் செய்கைய றிந்து எல்லாவுருபிஞேடும் ஒட்டுக. ஊகரத்தை அத்தின்மிசை ஒற் றென்று கெடுத்து "அத்தினகரம்" என்பதனுன் முடிக்க. தோன்ற லென்றதனுல் எவன் என நிறுத்தி வற்றுக்கொடுத்து வேண்டுஞ் செய்கைசெய்து எவற்றை எவற்ருெடு என முடிக்க. எல்லாவுருபி ஞேடும் ஒட்டுக. எற்றை என்புழி நிலைமொழிவகரம் இதனுற்கெ டுக்க. இனி ஒத்ததென்றதனுல் எகின் என நிறுத்தி அத்தும் இன் னுங்கொடுத்துச் செய்கைசெய்து எகினத்தை எகினிணை என ஒட் டுக. அத்து இனிது இசைத்தலின் முற்கூறினுர். (௨௧)

ககச. அன்னென் சாரியை யேழ னிறுதி
முன்னர்த் தோன்று மியற்கைத் தென்ப.

இஃது ஏழென்னும் எண்ணுப்பெயர் அன்சாரியை பெற்றுப் புணர்க என்கின்றது.

இ - ள். அன்னென்சாரியை ஏழனிறுதி முன்னர்த்தோன் றும் இயற்கைத்தென்ப = அன்னென்னுஞ்சாரியை ஏழென்னும் எண்ணுப்பெயரின்முன்னே தோன்றும் இயல்பிணையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

உ-ம். ஏழனை ஏழற்கு ஏழனின் என்க. ஏனை உருபுகளோ டுஞ் செய்கையறிந்து ஒட்டுக. சாரியைமுற்கூறியவதனுற் பிறவும் அன்பெறுவன கொள்க. பூழனை யாழனை என ஏனையவற்ருெடும் ஒட்டுக. மேல் வருகின்ற இன்சாரியையைச் சேரவைத்தமையான் அவையெல்லாம் இன்சாரியைபெற்றுவருதலுங் கொள்க. ஏழினை பூழினை யாழினை எனவரும். (௨௨)

ககரு. குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்று மின்னென் சாரியை.

இது குற்றுகர ஈற்றிற்கு முடிபுகூறுகின்றது.

இ-ள். குற்றியலுகரத்து இறுதிமுன்னர் = குற்றியலுகரமாகிய ஈற்றின்முன்னர்: முற்றத்தோன்றும் இன்னென்சாரியை = முடியத் தோன்றும் இன்னென்னுஞ்சாரியை. எ - று.

உ-ம். நாகிணை நாகிெனுடு வரகிணை வரகிெனுடு எனவரும். ஏனையவற்ருெடுஞ் செய்கையறிந்து ஒட்டுக.

முற்ற என்றதனானே பிறசாரியை பெறுவனவுங் கொள்க. வழக்கத்தாற்பாட்டாராய்ந்தானெனவுங் கரியதனை எனவும் வரும்.

கஉசு. நெட்டெழுத் திம்ப ரொற்றுமிகத் தோன்று
மப்பான் மொழிக ளல்வழி யான.

இஃது அக்குற்றியலுகரங்களுட் சிலவற்றிற்கு இனவொற்று மிகுமென்கின்றது.

இ-ள். நெட்டெழுத்திம்பர் ஒற்று மிகத்தோன்றும்=நெட்டெழுத்தின்பின்னர் வருகின்ற குற்றுகரங்கட்கு இனவொற்று மிகத்தோன்றாநிற்கும்: அப்பால் மொழிகள் அல்வழி ஆன=ஒற்று மிகத்தோன்றாத கசதபக்கள் ஈறாகிய மொழிகள் அல்லாத இடத்து. எ-று.

எனவே டகார றகாரங்கள் ஈறான சொல்லிடைத் தோன்றுமாயிற்று.

உ-ம். யாட்டை யாட்டொடு யாட்டுக்கு யாட்டின் யாட்டது யாட்டுக்கண் எனவும், யாற்றை சோற்றை எனவும் இனவொற்று மிக்கன. இவை அப்பால் மொழிகள் அல்லன.

நாகு காசு போது காபு என்றாற்போல்வன அப்பால் மொழிகள்; அவை இனவொற்று மிகாவாயின. (உச)

கஉஎ. அவைதாம்,
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப.

இஃது எய்தியது விலக்கிற்று.

இ-ள். அவைதாம் இயற்கைய ஆகுஞ் செயற்கைய என்ப=அங்ஙனம் இனவொற்று மிகுவனதாம் இன்சாரியைபெறாது இயல்பாகமுடியுஞ் செய்தியையுடையவென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உதாரணம் முன்னர்க்காட்டினவேகொள்க.

செயற்கைய என்ற மிகையானே உயிர்த்தொடர்மொழிகளில் ஏற்பனவற்றிற்கும் ஒற்று மிகத்தோன்றுதல் கொள்க. முயிற்றை முயிற்றொடு முயிற்றுக்கு முயிற்றின் முயிற்றது முயிற்றுக்கண் என

வரும். இன்னும் இதனானே யாட்டினை முயிற்றினை என விலக்கிய இன்பெறுதலுங் கொள்க. (உச)

கககஅ. எண்ணி னிறுதி யன்னொடு சிவணும்.

இது குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர்முடிபு கூறுகின்றது.

இ - ள். எண்ணின் இறுதி அன்னொடு சிவணும் = எண்ணுப் பெயர்களினது குற்றுகர ஈறு அன்சாரியையோடு பொருந்தும். எ - று.

உ-ம். ஒன்றனை இரண்டனை என எல்லா எண்ணினையும் எல்லா உருபினோடுஞ் செய்கையறிந்து ஒட்டுக. முன்னர்ச் செயற்கைய என்ற இலேசானே ஒன்றினை இரண்டினை என இன்சாரியையுங் கொடுக்க. (உரு)

கககக. ஒன்றுமுத லாகப் பத்தூர்ந்து வரூஉ
மெல்லா வெண்ணுஞ் சொல்லுங் காலை
யானிடை வரினு மான மில்லை
யஃதென் கிளவி யாவயிற் கெடுமே
யுய்தல் வேண்டும் பஃகான் மெய்யே.

இஃது ஒன்று முதலாக எட்டு இறுதியாக நின்ற குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர் ஏழினோடும் பத்தென்னும் எண்ணுப்பெயர் வந்து புணர்ந்து ஒன்றாய்நின்ற சொற்கள் சாரியைபெற்றுத் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள். ஒன்று முதலாகப் பத்து ஊர்ந்து வரூஉம் எல்லா எண்ணும் = ஒன்றுமுதலாக எட்டீறாகநின்ற எண்களின்மேலே பத்தென்னும் எண்ணுப்பெயர் ஏறி வருகின்ற ஒருபது முதலான எல்லா எண்களையும்: சொல்லுங்காலை = முடிபுகூறுங்காலத்து: ஆன் இடை வரினும் மானமில்லை = முற்கூறிய அன்சாரியையேயன்றி ஆன்சாரியை இடையேவரினுங் குற்றமில்லை: ஆவயின் அஃதென் கிளவி கெடும் = அவ் ஆன் பெற்றுழிப் பஃதென்னும் எண்ணிடத்து அஃதென்னுஞ் சொற் கெட்டுப்போம்: பஃகான் மெய் உய்தல்வேண்டும் = அவ் அகரத்தான் ஊரப்பட்ட பகரமாகிய ஒற்றுக் கெடாது நிற்றலை ஆசிரியன் விரும்பும். எ - று.

"நின்ற பத்த னொற்றுக்கெட வாய்தம்—வந்திடைநிலையும்" என்பதனான் ஆய்தம்பெற்றது.

உ-ம். ஒருபஃது இருபஃது முப்பஃது நாற்பஃது ஐம்பஃது அறுபஃது எண்பஃது எனக் குற்றியலுகரப்புணரியலுள் விதிக்குமாறே நிறுத்தி அஃதென்பதனைக் கெடுத்துப் பகரவொற்றை நிறுத்தி ஆன்சாரியை கொடுத்து ஒருபானை இருபானை என எல்லா எண்ணோடும் எல்லா உருபினையுஞ் செய்கையறிந்து ஒட்டுக. உம்மை எதிர்மறையாதலின் ஒருபஃதனை இருபஃதனை என எல்லாவற்றோடும் ஒட்டுக.

சொல்லுங்காலை என்றதனாற் பத்தூர்கிளவியேயன்றி "ஒன்பான்முதனிலை" "ஒன்பாற்கொற்றிடைமிகுமே" என்றாற்போல வருவனவற்றின்கண்ணும் பகரத்துள் அகரம்பிரித்து அஃதென்பது கெடுத்து ஆன் கொடுக்க. (உஎ)

உ00. யாதெ னிறுதியுஞ் சுட்டுமுத லாகிய
வாய்த விறுதியு மன்னொடு சிவணு
மாய்தங் கெடுத லாவயி னான.

இஃது எண்ணுப்பெயரல்லாத குற்றுகர ஈற்றுட் சிலவற்றிற்கு முடிபுகூறுகின்றது.

இ-ள். யாது என் இறுதியும்=யாதெனவருங் குற்றுகர ஈறும்: சுட்டு முதலாகிய ஆய்த இறுதியும்=சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகர ஈறும்: அன்னொடு சிவணும்=அன்சாரியையோடு பொருந்தும்: ஆவயின் ஆன ஆய்தங் கெடுதல்=அவ்விடத்து வந்த ஆய்தங் கெடும். எ-று.

யாதனை யாதனொடு எனவும், அதனை அதனொடு இதனை இதனொடு உதனை உதனொடு எனவும் வரும். (உஅ)

உ0க. ஏழ னுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி யியற்கையு மாகு
மாவயி னிறுதி மெய்யொடுங் கெடுமே.

இதுவுங் குற்றுகர ஈற்றுட் சிலவற்றிற்கு ஏழனுருபோடு முடிபு கூறுகின்றது.

இ-ள். திசைப்பெயர்முன்னர் ஏழனுருபிற்கு=திசைப்பெயர்களின்முன்னர் வந்த கண்ணென்னும் உருபிற்கு முடிபுகூறுங்கால்: சாரியைக்கிளவி இயற்கையுமாகும்=முன்கூறிய இன்சாரியை

யாகிய சொல் நின்றுமுடிதலேயன்றி நில்லாது இயல்பாயும் முடியும்: ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடும் = அங்ஙனம் இயல்பாய வழித் திசைப்பெயரிறுதிக் குற்றுகரந் தன்னான் ஊரப்பட்ட மெய்யொடுங் கெடும். எ - று.

உ-ம். வடக்கின்கண் கிழக்கின்கண் தெற்கின்கண் மேற்கின் கண் எனவும் வடக்கண் கிழக்கண் தெற்கண் மேற்கண் எனவும் வரும். இன்பெறுவழி உகரங் கெடாதென்று உணர்க.

ஆவயினென்றதனாற் கீழ்சார் கீழ்புடை மேல்சார் மேல் புடை தென்சார் தென்புடை வடசார் வடபுடை எனச் சாரியை யின்றிப் பலவிகாரப்பட்டு நிற்பனவுங் கொள்க. இன்னும் இத னானே கீழைக்குளம் மேலைக்குளம் கீழைச்சேரி மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலுங் கொள்க. (உக)

உ0உ. புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியுஞ்
சொல்லிய வல்ல வேனைய வெல்லாந்
தேருங் காலை யுருபொடு சிவணிச்
சாரியை நிலையுங் கடப்பா டிலவே.

இஃது இவ்வோத்தினுள் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்றவற்றிற்கெல்லாம் இதுவே ஓத்தாயதோர் புறனடை கூறுகின்றது.

இ-ள். சொல்லிய அல்ல புள்ளியிறுதியும் உயிரிறு கிளவியும் = முற்கூறிய புள்ளியீறும் உயிரீறும் அல்லாத புள்ளியீற்றுச் சொல் லும் உயிரீற்றுச்சொல்லும்: ஏனையவுமெல்லாம் = முற்கூறிய ஈறு கள் தம்முளொழிந்து நின்றனவுமெல்லாம்: தேருங்காலை உருபொடு சிவணிச் சாரியைநிலையுங் கடப்பாடு இல = ஆராயுங்காலத்து உருபு களோடு பொருந்திச் சாரியை நின்று முடியும் முறைமையை உடை யவல்ல; நின்றும் நில்லாதும் முடியும். எ - று.

ஏனையவுமென உம்மைவிரிக்க. கூறாத புள்ளியீறுகள் ஐந்து. அவை ணகர யகர ரகர லகர ளகரங்களாம். மண்ணினை மண்ணை வேயினை வேயை நாரினை நாரை கல்லினை கல்லை முள்ளினை முள் ளை என வரும். உயிரீற்றுள் ஒழிந்தது இகரம் ஒன்றுமேயாதலின், அதனைப் பிற்கூறினார். கிளியினை கிளியை எனவரும்.

இனித் தான் யான் அழன் புழன் என்னும் னகர ஈற்றினும் ஏழென்னும் ழகர ஈற்றினும் ஒழிந்தன பொன்னினை பொன்னை

தாழினை தாழை என்றாற்போல வருவன பிறவுமாம். இனி ஈகார ஈற்றுள் ஒழிந்தன தீயினை தீயை ஈயினை ஈயை வீயினை வீயை என்றாற்போல்வன பிறவுமாம். ஐகார ஈற்றுள் ஒழிந்தன தினையினை தினையை கழையினை கழையை என்றாற்போல்வன பிறவுமாம். ஏனை ஈறுகளினும் வருவன உணர்ந்துகொள்க.

மேலே பெயரீற்றுச் செய்கையெல்லாந் தத்தம் ஈற்றின்கண் முடிப்பாராதலின் அவை ஈண்டுக் கூறல்வேண்டா.

இனித் தேருங்காலை என்றதனானே உருபுகள் நிலைமொழியாத நின்று தம்பொருளோடு புணரும்வழி வேறுபடும் உருபீற்றுச் செய்கையெல்லாம் ஈண்டு முடித்துக்கொள்க.

உ-ம். நம்பியைக்கொணர்ந்தான் மண்ணினைக்கொணர்ந்தான் கொற்றனைக்கொணர்ந்தான் என மூவகைப்பொருளோடுங் கூடிநின்ற உருபிற்கு ஒற்றுக்கொடுக்க. மலையொடுபொருதது மத்திகையாற்புடைத்தான் சாத்தற்குக்கொடுத்தான் ஊர்க்குச்சென்றான் காக்கையிற்கரிது காக்கையதுபலி மடியுட்பழுக்காய் தடாவினுட்கொண்டான் என்னுந் தொடக்கத்தன உருபுகாரணமாகப் பொருளோடு புணரும்வழி இயல்பாயும் ஈறுதிரிந்தும் ஒற்றுமிக்கும் வந்தன கொள்க.

இனிக் கண் கால் புறம் முதலியன பெயராயும் உருபாயும் நிற்குமாதலின் அவை உருபாகக் கொள்ளும்வழி வேறுபடுஞ் செய்கைகளெல்லாம் இவ்விலேசான் முடிக்க. இஃது உருபியலாதலின் உருபொடுசிவணி என வேண்டா, அம்மிகையானே உருபுபுணர்ச்சிக்கட் சென்ற சாரியைகளெல்லாம் ஈற்றுப்பொருண்முடிபு உள்வழிப் பொருட்புணர்ச்சிக்குங் கொள்க. விளவின்கோடு கிளியின்கால் என எல்லா ஈற்றினுங் கொள்க. நம்பியை கொற்றனை என உயிரீறும் புள்ளியீறுஞ் சாரியைபெறாது இயல்பாய் முடிவனவும் ஈண்டே கொள்க. (௩0)

ஆறாவது உருபியல் முற்றிற்று.

ஏழாவது

உயிர்மயங்கியல்.

௨0௩. அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றிற்
றத்த மொத்த வொற்றிடை மிகுமே.

என்பதுசூத்திரம். உயிரீறுநின்று வன்கணத்தோடுஞ் சிறுபான்மை ஏனைக்கணங்களோடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தினமையின் இவவோத்து உயிர்மயங்கியலென்னும் பெயர்த்தாயிற்று. மேற் பெயரோடு உருபு புணருமாறு கூறிப் பெயர்வருவழி உருபு தொக்குநின்ற பொருட்புணர்ச்சி கூறுகின்றமையின் உருபியலோடு இயைபுடைத்தாயிற்று.

இச்சூத்திரம் அகர ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் வனகணத்தோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். அகர இறுதிப் பெயர்நிலைமுன்னர் = அகரமாகிய இறுதிநிலையுடைய பெயர்ச்சொன்முன்னர்: வேற்றுமையல்வழிக் கசதபத் தோன்றின் = வேற்றுமையல்லாதவிடத்துக் கசதப முதன்மொழிகள் வருமொழியாய்த் தோன்றுமாயின்: தத்தம் ஒத்த ஒற்று இடைமிகும் = தத்தமக்குப் பொருந்திய அக்கசதபக்களாகிய ஒற்று இடைக்கண்மிகும். எ - று.

உ-ம். விளக்குறிது நுணக்குறிது அதக்குறிது சிறிது தீது பெரிது என ஒட்டுக. இவை அஃறிணை இயற்பெயராகிய எழுவாய் வினைக்குறிப்புப்பண்பாகிய பயனிலையோடு முடிந்தன.

ஒத்தவென்றமையாது தத்தமொத்த என்றதனான் அகர ஈற்று உரிச்சொல் வல்லெழுத்து மிக்கும் மெல்லெழுத்து மிக்கும் முடியும் முடிபும் அகரந் தன்னை உணரநின்றவழி வன்கணத்தோடு மிக்குமுடியும் முடிபுங் கொள்க. தடக்கை தவக்கொண்டான் வயக்களிறு வயப்புலி குழக்கன்று எனவும், தடஞ்செவி கமஞ்சூல் எனவும், அக்குறிது சிறிது தீது பெரிது எனவும் வரும். இனி இடைச்சொல் வல்லொற்றுப்பெற்று வருவன உளவேல் அவற்றையும் இவவிலேசினான் முடித்துக்கொள்க. (க)

உ0௪. வினையெஞ்சு கிளவியு முவமக் கிளவியு
மெனவெ னெச்சமுஞ் சுட்டி னிறுதியு
மாங்க வென்னு முரையசைக் கிளவியு
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.

இஃது அகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும் புணருமாறு கூறுகின்றது.

இ-ள். வினையெஞ்சு கிளவியும் = வினையை ஒழிபாகவுடைய அகர ஈற்று வினைச்சொல்லும்: உவமக் கிளவியும் = உவமவுருபாய் நின்ற அகர ஈற்று இடைச்சொல்லும்: எனவென் எச்சமும் = என வென்னும் வாய்பாட்டால் நின்ற அகர ஈற்று இடைச்சொல்லும்: சுட்டின் இறுதியும் = சுட்டாகிய அகர ஈற்று இடைச்சொல்லும்: ஆங்க என்னும் உரையசைக் கிளவியும் = ஆங்கவென்னும் அகர ஈற்று உரையசையிடைச்சொல்லும்: ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகும் = முன்னர்க்கூறிய வல்லெழுத்து மிக்குமுடியும். எ-று.

உ-ம். உண தாவ சாவ என நிறுத்திக் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. இவ்வினையெச்சம் ஒழிந்தன எல்லாம் இடைச்சொல்லென்று உணர்க. புலிபோலக்கொன்றான் சென்றான் தந்தான் போயினான் எனவும், கொள்ளெனக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், அக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும், ஆங்கக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் "ஆங்கக் குயிலு மயிலுங்காட்டிக் கேசவனைவிடுத்துப் போகியோளே" எனவும் வரும். உவமம் வினையெச்சவினைக்குறிப்பேனும் ஒன்றனோடு பொருவப்படுதல் நோக்கி உவமவியலின்கண் ஆசிரியர் வேறுபடுத்திக் கூறினார். எனவென்னும் எச்சமும் இருசொல்லையும் இயைவிக்கின்ற நிலைமையான் இடைச்சொல்லோத்தினுள் வேறோதினார். ஆங்க என்பது ஏழனுருபின் பொருள்பட வந்ததல்லாமை 'ஆங்க வென்னு முரையசை' என்றதனானும் "ஆங்கவுரையசை" என்னும் இடையியற்சூத்திரத்தானும் உணர்க. இவை இயல்பு கணத்துக்கண் முடியும் முடிபு "ஞநமயவ" என்புழிக் கூறியதேயாம். அவை தாவ புலிபோல கொள்ளென ஆங்க என நிறுத்தி ஞநமயவ முதலிய மொழி ஏற்பன கொணர்ந்து புணர்த்தி இயல்பாமாறு ஒட்டிக் கொள்க. சுட்டு மேற்கூறுப. (உ)

உ0௫. சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றி
ஒட்டிய வொற்றிடை மிகுதல் வேண்டும்.

இது "ஞநமயவ" என்னுஞ் சூத்திரத்தான் மென்கணம் இயல்பாகும் என முற்கூறியதனை விலக்கி மிக்குமுடிக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ-ள். சுட்டின்முன்னர் ஞநமத் தோன்றின் = அகரச்சுட்டின்முன்னர் ஞநமக்கண் முதலாகிய மொழிவரின்: ஒட்டிய ஒற்று

இடைமிகுதல் வேண்டும்=தத்தமக்குப் பொருந்தின ஒற்று இடை மிகுதலை விரும்பும் ஆசிரியன். எ - று.

அஞ்ஞாண் அந்நூல் அம்மணி எனவரும்.

ஒட்டியவென்றதனான் அஞ்ஞெளிந்தது அந்நன்று அம்மாண்டது என அகரந் தன்னையுணரநின்றவழியும் மிகுதல் கொள்க. (ங)

உ0௬. யவமுன் வரினே வகர மொற்றும்.

இதுவும் அது.

இ - ள். யவ முன்வரின்=யகர வகர முதன்மொழி அகரச் சுட்டின்முன்னே வரின்: வகரம் ஒற்றும்=இடைக்கண் வகரம் ஒற்றும். எ - று.

உ-ம். அவ்யாழ் அவ்வளை எனவரும்.

வருமொழி முற்கூறியவதனால் அகரந் தன்னையுணரநின்றவழியும் வகரம் மிகுதல்கொள்க. அவ்வளைந்தது எனவரும். (ச)

உ0எ. உயிர்முன் வரினு மாயிய றிரியாது.

இதுவும் அது.

இ - ள். உயிர் முன்வரினும் ஆயியல் திரியாது=உயிர்கள் அகரச்சுட்டின்முன் வரினும் முற்கூறிய வகரம் மிக்குவரும் இயல்பிற் றிரியாது. எ - று.

அ என நின்ற சுட்டின்முன்னர் அடை என வருவித்து வகரம் ஒற்றித் தன்னுரு இரட்டி உயிரேற்றி அவ்வடை அவ்வாடை அவ்விலை அவ்வீயம் அவ்வுரல் அவ்வூர்தி அவ்வெழு அவ்வேணி அவ்வையம் அவ்வொழுக்கம் அவ்வோடை அவ்வெளவியம் என ஒட்டுக.

"நெடியதன்முன்னர்" என்பதனுள் "நெறியியல்" என்றதனான் இரட்டுதல் கூறினமையின் அது நிலைமொழித்தொழிலென்பது பெறப்பட்டது. வருமொழி முற்கூறியவதனான் அகரந் தன்னையுணரநின்றவழியும் வகரம் மிகுதல்கொள்க. அவ்வழகிது எனவரும். திரியாதென்றதனான் மேற் சுட்டு நீண்டவழி வகரக்கேடு கொள்க.()

உ0அ. நீட வருதல் செய்யுளு ளுரித்தே.

இஃது எய்தியதுவிலக்கிச் செய்யுட்கு ஆவதோர் விதி கூறுகின்றது.

இ - ள். நீட வருதல் செய்யுளுள் உரித்து = அகரச்சுட்டு நீட வருதல் செய்யுளிடத்து உரித்து. எ - று.

உ-ம். "ஆயிருதிணையினிசைக்குமன்சொல்லே" "ஆயிருபாற்சொல்" என வரும். இது வருமொழி வரையாதுகூறலின் வன்கணம் ஒழிந்தகணம் எல்லாவற்றோடுஞ் சென்றது. அவற்றிற்கு உதாரணம் வந்தவழிக் காண்க. இந்நீட்சி இருமொழிப்புணர்ச்சிக்கண் வருதலின் "நீட்டும்வழிநீட்டல்" ஆகாமை உணர்க. (சா)

உ0கூ. சாவ வென்னுஞ் செயவெ னெச்சத்
திறுதி வகரங் கெடுதலு முரித்தே.

இது மேல் வினையெஞ்சுகிளவி என்ற எச்சத்திற்கு எய்தாதது எய்துவித்தது.

இ - ள். சாவ என்னுஞ் செயவென் எச்சத்து இறுதி வகரம் = சாவவென்று சொல்லப்படுஞ் செயவெனெச்சத்து இறுதிக்கண்ணின்ற அகரமும் அதனாற் பற்றப்பட்ட வகரமும்: கெடுதலும் உரித்து = கெட்டுநிற்றலுங் கெடாதுநிற்றலும் உரித்து. எ - று.

உ-ம். கோட்டிடைச்சாக்குத்தினான் எனவரும். சீறினான் தகர்த்தான் புடைத்தான் என ஒட்டுக. கெடாதது முன்னர் முடித்தாம்.

இதனை "வினையெஞ்சுகிளவி" என்றதன்பின் வையாததனான் இயல்புகணத்தும் இந்நிலைமொழிக்கேடு கொள்க. சாஞான்றான் நீண்டான் மாண்டான் யாத்தான் வீழ்த்தான் அடைந்தான் என ஒட்டுக.

உகO. அன்ன வென்னு முவமக் கிளவியு
மண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியுஞ்
செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லு
மேவல் கண்ணிய வியங்கோட் கிளவியுஞ்
செய்த வென்னும் பெயரெஞ்சு கிளவியுஞ்
செய்யிய வென்னும் வினையெஞ்சு கிளவியு
மம்ம வென்னு முரைப்பொருட் கிளவியும்

பலவற் றிறுதிப் பெயர்க்கொடை யுளப்பட
வன்றி யனைத்து மியல்பென மொழிப.

இஃது அகர ஈற்றுள் ஒருசார் பெயர்க்கும் வினைக்கும் இடைக்கும் முன்னெய்தியது விலக்கியும் எய்தாததெய்துவித்தும் இலக்கணங் கூறுகின்றது.

இ - ள். அன்ன என்னும் உவமக் கிளவியும் = அன்ன என்று சொல்லப்படும் உவமவுருபாகிய அகர ஈற்று இடைச்சொல்லும்: அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும் = அணியாரைக் கருதின விளியாகிய நிலைமையினையுடைய அகர ஈற்று உயர்திணைப்பெயர்ச் சொல்லும்: செய்ம்மன என்னுந் தொழிலிறுசொல்லும் = செய்ம் மன என்று சொல்லப்படுந் தொழிற்சொற் பொருள் தருங்கால் உம் ஈற்றான் இறுஞ்சொல்லும்: ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும் = ஒருவரான் ஏவற்றொழின்மைகருதிக் கூறப்பட்ட ஏவற்பொருண்மையை முற்ற முடித்தலை உணர்த்தும் அகர ஈற்று வினைச் சொல்லும்: செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும் = செய்த என்று சொல்லப்படும் பெயரெச்சமாகிய அகர ஈற்று வினைச்சொல்லும்: செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும் = செய்யிய என்று சொல்லப்படுகின்ற வினையெச்சமாகிய அகர ஈற்று வினைச்சொல்லும்: அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும் = அம்ம என்று சொல்லப்படும் எதிர்முகமாக்கிய அகர ஈற்று இடைச்சொல்லும்: பலவற்று இறுதிப் பெயர்க்கொடை உளப்பட = பன்மைப்பொருளை உணர்த்தும் அகர ஈற்றுப் பெயர்கள் ஐந்திணையும் முற்கூறியவற்றோடு கூட்டிக் கொடுத்தல் உள்ளிட்டு: அன்றி அனைத்தும் இயல்பென மொழிப = அவ எட்டுச்சொல்லும் இயல்பாய் முடியுமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

உ-ம். பொன்னன்னகுதிரை செந்நாய் தகர் பன்றி என இது "வினையெஞ்சுகிளவி" என்பதனான் மிக்குமுடிதலை விலக்கிற்று. ஊர கேள் செல் தா போ என "உயிரீறாகியவுயர்திணை" என்னுஞ் சூத்திரத்தான் இயல்பாய் முடிவது ஈண்டு னகரங்கெட்டு அகர ஈறாய் விளியேற்று முடிந்தமையின் எய்தாததெய்துவித்தது. உண் மனகுதிரை செந்நாய் தகர் பன்றி என்பனவற்றிற்கு உண்ணுமென விரித்தும் யானுண்மன நீயுண்மன அவனுண்மன என நிறுத்திக் கூழ் சோறு தேன் பால் என வருவித்தும் முடிக்க. இவற்றிற்கும் அவ் வாறே விரித்துக்கொள்க. இங்ஙனஞ் செய்யுமென்பதன் பொருட் டாகிய மனவெனிறுதிச் சொல் அக்காலம் வழங்கியதாதலின் ஆசி

ரியர் அதனையும் வேறாக எடுத்தோதினார். யானும் நின்னோடுடன்வருக அவன்செல்க அவள்செல்க அவர்செல்க என நிறுத்திக் காட்டின்கண் செறுவின்கண் தானைக்கண் போரின்கண் என வருவித்து முடிக்க. இவை ஏவற்பொருண்மையை முற்ற முடித்தன. ஏவல்கண்ணியவெனவே ஏவல்கண்ணாதனவும் உளவாயின. அவை நீசெல்க அதுசெல்க அவைசெல்க என நிறுத்தி முற்கூறிய காடுமுதலியவற்றை வருவித்து முடிக்க. இவை ஏவற்பொருண்மையை முற்ற முடியாதன. அஃறிணை ஏவற்பொருண்மையை முற்ற முடியாமை வினையியலுள் வியங்கோட்கண்ணே பொருளியலுஞ் செய்யுளியலும்பற்றிக் கூறுதும். மனவும் வியங்கோளும் எய்தாததெய்துவித்தது. உண்டகுதிரை செந்நாய் தகர் பன்றி இதுவும் அது. இதற்கு உரிய உண்ணாதகுதிரையென்னும் எதிர்மறையும் நல்லகுதிரையென்னுங் குறிப்புங் கொள்க. உண்ணியகொண்டான் சென்றான் தந்தான் போயினான் இது முன்னர் வினையெச்சம் வல்லெழுத்துப்பெறுக என்றலின் எய்தியதுவிலக்கிற்று. அம்மகொற்றா சாத்தா தேவா பூதா என்பது இடைச்சொல்லாதலின் எய்தாததெய்துவித்தது. இதுகேளாய் கொற்றனே என எதிர்முகமாக்கியவாறு காண்க. பல்லகுதிரை பலகுதிரை சில்லகுதிரை சிலகுதிரை உள்ளகுதிரை இல்லகுதிரை செந்நாய் தகர் பன்றி என ஒட்டுக. இக்காலத்துப் பல்ல சில்ல என்பது வழங்காது. இதுவும் விளக்குறிது என்றாற்போலப் பலக்குதிரையென வல்லெழுத்தெய்தியதனை விலக்கிற்று. விளிநிலைக்கிளவியாகிய பெயர் முற்கூறாததனானே செய்யுமென்பதன் மறையாகிய செய்யாதவென்பதற்கும் இவ்வியல்பு முடிபுகொள்க. அது வாராதகொற்றனெனவரும். இவ்வியல்பு முடிபிற்குச் செய்ம்மன சிறத்தலின் வியங்கோட்குமுன் வைத்தார். ஏவல்கண்ணிய என்பதனான் ஏவல்கண்ணாததும் உளதென்றுகூறி மன்னியபெருமநீ என உதாரணங்காட்டுகவெனின் அது பொருந்தாது; கூறுகின்றான் அவன் நிலைபெற்றிருத்தல் வேண்டுமென்றே கருதிக் கூறுதலின் அதுவும் ஏவல்கண்ணிற்றேயாம். எல்லாவற்றினுஞ் சிறந்த பலவற்றிறுதி முற்கூறுகவெனின், அது வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேறுவேறு முடிபுடைத்தென்றற்குஞ் செய்யுண்முடிபு இவ்வியல்புபோற் சிறப்பின்றென்றற்கும் அகர ஈற்றுள் முடிபு கூறாது நின்ற முற்றுவினையும் வினைக்குறிப்பும் இவ்வியல்புமுடிபு பெறுமென்றற்கும் பின்வைத்தார். உண்டனகுதிரை இது முற்றுவினை. கரியனகுதிரை இது முற்றுவினைக்குறிப்பு. இஃது இயல்புகணத்துமுடிபு "ஞநமயவ" என்புழிப் பொருந்துவனவெல்லாங் கொள்க. (௮)

உகக. **வா**ழிய வென்னுஞ் செயவென் கிளவி
யிறுதி யகரங் கெடுதலு முரித்தே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

இ - ள். வாழிய என்னுஞ் செய என் கிளவி = வாழுங்காலம் நெடுங்காலமாகுக என்னும் பொருளைத்தரும் வாழியவென்று சொல்லப்படுஞ் செயவெனெச்சக் கிளவி: இறுதி யகரங் கெடுதலும் உரித்து = இறுதிக்கண் அகரமும் அதனைப்பற்றப்பட்ட யகரவொற்றுங் கெட்டு முடிதலும் உரித்து. எ - று.

கெடுதலுமெனவே, கெடாதுமுடிதலே பெரும்பான்மை யென்றவாறு.

வாழிகொற்றா சாத்தா தேவா பூதா எனவரும். வாழிய என்பதே பெரும்பான்மை. வாழியயான் நீ அவன் அவள் அவர் அது அவை என இது மூன்றிடத்துஞ் சேறலின் "உயிரீறாகிய முன்னிலைக் கிளவியும்" என்புழி முன்னிலையியல்பாம் என்றதன்கண் அடங்காதாயிற்று. இது குறிப்புவியங்கோள்.

ஒன்றெனமுடித்தலான் இஃது இயல்புகணத்துங் கொள்க. வாழிஞெள்ளா எனவரும். இவை வாழ்த்தப்படும்பொருள் வாழ வேண்டுமென்னுங் கருத்தினைக் கூறுதலின் ஏவல்கண்ணிற்றே யாம். அல்லாக்கால் "வாழ்த்தியல்வகையே நாற்பாற்குமுரித்தே" என்பதற்கும் வாழ்த்தியலாகச் சான்றோர் கூறிய செய்யுட்களுக்கும் பயனின்றாமென்று உணர்க. (கூ)

உகஉ. உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்.

இஃது அம்மவென்பதற்கு எய்தாததெய்துவித்தது.

இ - ள். உரைப்பொருட்கிளவி = எதிர்முகமாக்கும் பொருளையுடைய அம்மவென்னுஞ் சொல்: நீட்டமும் வரையார் = அகரமாகி நிற்றலேயன்றி ஆகாரமாய் நீண்டுமுடிதலையும் நீக்கார். எ - று.

அம்மா கொற்றா சாத்தா தேவா பூதா எனவரும். உம்மையால் நீளாமையே பெரும்பான்மையாம். வரையாதுகூறினமையின் நீட்சி இயல்புகணத்துங் கொள்க. அம்மா ஞெள்ளா நாகா மாடா வடுகா ஆதா என ஒட்டுக. (கO)

உகங. பலவற் றிறுதி நீடுமொழி யுளவே
செய்யுள் கண்ணிய தொடாமொழி யான.

இது முற்கூறிய பலவற்றிறுதிகக்கண் சிலவற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள். பலவற்று இறுதி நீடும் மொழி உள = பலவற்றை உணர்த்தும் ஐவகைச்சொல்லின் இறுதி அகரம் நீண்டுமுடியுமொழிகளுஞ் சில உள: செய்யுள் கண்ணிய தொடர்மொழி ஆன = யாண்டுளவெனிற் செய்யுளாதலைக் கருதிய ஒன்றோடொன்று தொடர்ச்சிப்படுஞ் செய்யுண்முடிபுடைய மொழிகளின்கண். எ - று.

உடைத்தென்றது உளவென்ற பன்மையான் வருமொழிக்கட் சில என்பது வந்து நீடுமென்று கொள்க. செய்யுளான என்றது செய்யுள்கண்ணியதொடர்மொழியான என்றதனாற், பல என்பதன் இறுதி அகரம் நீண்டுழி நிலைமொழி அகரப்பேறும் வருமொழி ஞகரமாகிய மெல்லெழுத்துப்பேறும், வருமொழியிறுதி நீண்டவழி அகரப்பேறும் மகரமாகிய மெல்லெழுத்துப்பேறுங் கொள்க.

உ-ம். "பலாஅஞ்சிலாஅமென்மனார்புலவர்" இதன் சொன்னிலை பலசில என்னுஞ் செவ்வெண். (கக)

உகச. தொடர லிறுதி தம்முற் றாம்வரின்
லகரம் றகரவொற் றாகலு முரித்தே.

இது பலசில என்பனவற்றிற்கு இயல்பேயன்றித் திரிபும் உண்டென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். தொடர் அல் இறுதி = தொடர்மொழியல்லாத ஈரெழுத்தொருமொழியாகிய பலசில என்னும் அகர ஈற்றுச்சொல்: தம் முற் தாம்வரின் = தம்முன்னே தாம்வருமாயின்: லகரம் றகர வொற்று ஆகலும் உரித்து = தம் ஈற்றினின்ற லகரவொற்று றகர வொற்றாகத் திரிந்து முடிதலும் உரித்து. எ - று.

உம்மையாற் திரியாமையும் உரித்தென்றார்.

உ-ம். பற்பலகொண்டார் சிற்சிலவித்தி எனவரும். அகர ஈற்றுச் சுட்டல்லாத குற்றெழுத்து ஓரெழுத்தொருமொழியாகுவன இன்மையிற் தொடரலிறுதியெனவே ஈரெழுத்தொருமொழியே

உணர்த்திற்று. தன்முனென்றது தம்முனென்ற பன்மையாற் பல சில எனநின்ற இரண்டுந் தழுவப்பட்டன.

தம்முன்வரினென்றது தாமென்றதனாற் பலவின்முன் பலவருதலுஞ் சிலவின்முன் சிலவருதலுங் கொள்க. லகரம் றகரவொற்றாமென ஒற்றிற்குத் திரிபுகூறி அகரங்கெடுதல் கூறிற்றிலரேனின் அது வாராததனால்வந்ததுமுடித்தலென்னும் உத்திபெறவைத்ததென்றுஉணர்க. இதனை ஞாபகமென்பாரும் உளர். அருத்தாபத்தியாற் தம்முற் தாம்வரினெனவே தம்முன் பிறவரின் லகரம் றகரவொற்றாகாது அகரங்கெடுமென்று கொள்ளப்படும்.

உ-ம். பல்கடல் சேனை தானை பறை எனவும், பல்யானை பல்வேள்வி எனவும், சில்காடு சேனை தானை பறை எனவும், சில்யானை சில்வேள்வி எனவும் வரும். உரித்தென்றது அகர ஈற்றொருமைபற்றி. (கஉ)

உகரு. வல்லெழுத் தியற்கை யுறழத் தோன்றும்.

இது முற்கூறிய இரண்டற்கும் உள்ளதோர் முடிபுவேற்றுமை கூறுகின்றது.

இ-ள். வல்லெழுத்து இயற்கை=முற்கூறிய பலசிலவென்னும் இரண்டற்கும் அகர ஈற்றுப்பொதுவிதியிற் கூறிய வல்லெழுத்துமிகும் இயல்பு: உறழத்தோன்றும்=மிகுதலும் மிகாமையுமாய் உறழ்ந்துவரத் தோன்றும். எ-று.

உ-ம். பலப்பல பலபல சிலச்சில சிலசில எனவரும். ஈண்டுந் தம்முற் தாம்வருதல் கொள்க. இயற்கையென்றதனான் அகரங்கெட லகரந் திரிந்துந் திரியாதும் உறழ்ந்தும் முடிதலுங் கொள்க. பற்பல பல்பல சிற்சில சில்சில எனவரும். தோன்றுமென்றதனான் அகரங்கெட லகரம் மெல்லெழுத்தும் ஆய்தமுமாகத் திரிந்து முடிதலுங்கொள்க. பன்மீன்வேட்டத்து பன்மலர் பஃறாலி பஃறாழிசை சின்னூல் சிஃறாழிசை எனவரும். இது முன்னர்த் தோன்றுமென்று எடுத்தோதிய சிறப்புவிதியால் அகரங்கெட நின்ற லகரவொற்றின் முடிபாகலிற் தகரம் வருவழி ஆய்தமென்பதனான் முடியாது. (கங)

உகசு. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது அகர ஈற்றிற்கு அல்வழிமுடிபு கூறி வன்கணத்தோடு வேற்றுமைதொக்குநின்ற முடிபு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமைக்கண்ணும் அதனோரற்று = அகர ஈற்றுப் பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும் முற்கூறிய அல்வழியோடு ஒருதன்மைத்தாய்க் கசதப முதன்மொழி வந்துழித் தத்தம் ஒத்தவொற்று இடைமிக்கு முடியும். எ - று.

உ-ம். இருவிளக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவரும். இருவிளக்குறுமை சிறுமை தீமை பெருமை எனக் குணவேற்றுமைக்கண்ணுங் கொள்க. இருவிளவென்பது ஒலை; வேணாட்டகத்து ஓரூர்; கருவூரினகத்து ஒருசேரியுமென்ப. இருவிளவிற்கொற்றன் என விரிக்க. (கச)

உகஎ. மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

இஃது அகர ஈற்று மரப்பெயர்க்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வருத்தது.

இ - ள். மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகும் = அகர ஈற்று மரப்பெயராய சொல் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் மெல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். அதங்கோடு விளங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

இது "கசதபமுதலிய" என்பதனான் முடியும். (கரு)

உகஅ. மகப்பெயர்க் கிளவிக் கின்னே சாரியை.

இஃது அகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வருத்தது.

இ - ள். மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை = அகர ஈற்று மக என்னும் பெயர்ச்சொல்லிற்கு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் வருஞ் சாரியை இன்சாரியை. எ - று.

உ-ம். மகவின்கை செவி தலை புறம் எனவரும். சாரியைப்பேறு வரையாதுகூறியவழி நான்குகணத்துக்கண்ணுஞ் செல்லுமென்பது ஆசிரியர்க்குக் கருத்தாகலின் மகவின்ஞாண் நூல் மணி யாழ் வட்டு அடை என ஒட்டுக.

மேல் அவண் என்றதனான் இன்சாரியை பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. (கசு)

உகசு. அத்தவண் வரினும் வரைநிலை யின்றே.

இஃது ஈற்றுவல்லெழுத்தும் அத்தும் வகுத்தலின் எய்திய தன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். அவண் = முற்கூறிய மகவிடத்து அத்து வரினும்: வரைநிலை இன்று = இன்னேயன்றி அத்துச்சாரியையும் ஈற்று வல்லெழுத்தும் வந்து முடியினும் நீக்கும் நிலைமையின்று. எ - று.

உ-ம். மகத்துக்கை செவி தலை புறம் எனவரும்.

அவண் என்றதனுல் மகப்பால்யாடு என வல்லெழுத்துப் பேறும், மகவின்கை என மேல் இன்சாரியை பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், விளவின்கோடு என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்வுங் கொள்க. நிலையென்றதனுல் மகம்பால்யாடு என மெல்லெழுத்துப் பேறுங் கொள்க. (கள)

உஉ௦. பலவற் றிறுதி யுருபிய னிலையும்.

இஃது ஈற்றுவல்லெழுத்தும் வற்றும் வகுத்தலின் எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். பலவற்றிறுதி = பல்ல பல சில உள்ள இல்ல என்னும் பலவற்றையுணர்த்தும் அகர ஈற்றுச்சொற்களின் இறுதி: உருபியல் நிலையும் = உருபியற்கண் வற்றுப்பெற்றுப் புணர்ந்தாற் போல உருபினது பொருட்புணர்ச்சிக்கண்ணும் வறறுப்பெற்றுப் புணரும். எ - று.

ஈற்றுவல்லெழுத்து அதிகாரத்தாற்கொள்க.

உ-ம். பல்லவற்றுக்கோடு பலவற்றுக்கோடு சிலவற்றுக்கோடு உள்ளவற்றுக்கோடு இல்லவற்றுக்கோடு செதிள் தோல் பூ என ஒட்டுக. உருபு விரிந்துழி நிற்குமாறுபோலன்றி அவ்வுருபு தொக்கு அதன்பொருள் நின்று புணருங்கால் வேறுபாடு உடைமையின் அவ்வேறுபாடுகள் ஈண்டு ஓதினுர் இத்துணையுமென்று உணர்க. ()

உஉக. ஆகார விறுதி யகர வியற்றே.

இஃது ஆகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். ஆகார இறுதி அகர இயற்று=ஆகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் அகர ஈற்று அல்வழியது இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழித் தத்தம் ஒத்த ஒற்று இடைமிகும். எ - று.

உ-ம். மூங்காக்கடிது தாராக்கடிது சிறிது தீது பெரிது என ஒட்டுக. (கசு)

உஉஉ. செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியு
மவ்வியல் திரியா தென்மனார் புலவர்.

இஃது ஆகார ஈற்று வினைச்சொன்முடிபு கூறுகின்றது.

இ - ள். செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்=செய்யா வென்னும் வினையெச்சமாகிய சொல்லும் உம்மையாற் பெயரெச்சமறையாகிய சொல்லும்: அவ்வியல் திரியாது என்மனார் புலவர்= வல்லெழுத்து மிக்குமுடியும் அவ்வியல்பிற் றிரியாதென்று சொல்லுவார் புலவர். எ - று.

உ-ம். உண்ணாக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், உண்ணாக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும் வரும். (உ௦)

உஉந. உம்மை யெஞ்சிய விருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக வகர மிகுமே.

இஃது ஆகார ஈற்று அல்வழிக்கண் உம்மைத்தொகைமுடிபு கூறுகின்றது.

இ - ள். உம்மை எஞ்சிய இருபெயர்த்தொகைமொழி=உம்மை தொக்குநின்ற இருபெயராகிய தொகைச்சொற்கள்: மெய்ம்மையாக அகரம் மிகும்=மெய்யாக நிலைமொழியீற்று அகரம் மிக்குமுடியும். எ - று.

உ-ம். உவாஅப்பதினான்கு இராஅப்பகல் எனவரும். மெய்ம்மையாக என்பதனான் வல்லெழுத்துக் கொடுக்க. இஃது எழுவாயும் பயனிலையுமன்றி உம்மைத்தொகையாதலின் மாட்டேற்றான் வல்லெழுத்துப் பெறாதாயிற்று.

உம்மைதொக்க என்னாது எஞ்சிய என்ற வாய்பாட்டுவேற்றுமையான் அராஅப்பாம்பு எனப் பண்புத்தொகைக்கும் இராஅக்கொ

டிது என எழுவாய்முடிபிற்கும் இராஅக்காக்கை எனப் பெயரெச்ச மறைக்கும் அகரப்பேறு கொள்க. வருமொழி வரையாதுகூறின மையின் இயல்புகணத்துக்கண்ணும் அகரப்பேறு கொள்க. இறாஅ வழுதுணங்காய் எனவரும். இஃது உம்மைத்தொகை. அராஅக் குட்டி என்பது பண்புத்தொகையும் வேற்றுமைத்தொகையுமாம். உவாஅப்பட்டினி என்பது வேற்றுமைத்தொகை. (உக)

உஉச. ஆவு மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாவென் வினாவும் பலவற் றிறுதியு
மேவல் குறித்த வுரையசை மியாவுந்
தன்றொழி லுரைக்கும் வினாவின் கிளவியோ
டன்றி யனைத்து மியல்பென மொழிப.

இஃது எய்தியது விலக்கலும் எய்தாததெய்துவித்தலும் உணர்த்துகின்றது.

இ - ள். ஆவும்=ஆவென்னும் பெயரும்: மாவும்=மாவென்னும் பெயரும்: விளிப்பெயர்க் கிளவியும்=விளித்தலையுடையபெயராகிய உயர்திணைச்சொல்லும்: யாவென் வினாவும்=யாவென்னும் வினாப்பெயரும்: பலவற்று இறுதியும்=பன்மைப்பொருளை உணர்த்தும் ஆகார ஈற்றுப் பெயரெச்சமறையாகிய முற்றுவினைச்சொல்லும்: ஏவல் குறித்த உரையசை மியாவும்=முன்னிலையேவல்வினையைக் கருதிவரும் எதிர்முகமாக்குஞ் சொல்லினைச் சேர்ந்த மியாவென்னும் ஆகார ஈற்று இடைச்சொல்லும்: தன் தொழில் உரைக்கும் வினாவின் கிளவியொடு=தனது தொழிலினைச் சொல்லும் ஆகார ஈற்றுத் தன்மையாகிய வினாச்சொல்லோடு கூட: அன்றி அனைத்தும்=அவ்வெழுவகையாகிய சொல்லும்: இயல்பென மொழிப=இயல்பாய் முடியுமென்று சொல்லுவர் புலவர். எ - று.

உ-ம். ஆகுறிது மாகுறிது சிறிது தீது பெரிது குறிய சிறிய தீய பெரிய என ஒட்டுக. இஃது ஆகார ஈற்றுப் பெயராகலின் மிக்குமுடிவன மிகாவென எய்தியது விலக்கிற்று. ஊராகேள் செல் தா போ என இஃது இயல்பாமென்ற உயர்திணைப்படர்க்கைப்பெயர் திரிந்து முன்னிலையாய் விளியேற்றலின் எய்தாததெய்துவித்தது. யாகுறிய சிறிய தீய பெரிய என இதுவும் பெயராகலின் எய்திய இயைபுவல்லெழுத்து விலக்கியதாம். உண்ணாகுதிரைகள் செந்நாய்கள் தகர்கள் பன்றிகள் என இஃது எய்தியதுவிலக்கிற்று, செய்யாவென்னுஞ் சூத்திரத்து உம்மையாற்பெற்ற வல்லெழுத்தினை விலக்

கலின். கேண்மியாகொற்று சாத்தா தேவா பூதா எனவும் உண் கொற்று சாத்தா தேவா பூதா எனவும் இவ்விடைச்சொற்கள் முடியாமையின் எய்தாததெய்துவித்ததுமாம். உண்கா என்பது யானுண்பேனே என்னும் பொருட்டு. இயல்புகணத்துக்கண்ணுயின் "ஞநமயவ" என்பதனான் முடிபெய்தும். (உஉ)

உஉரு. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது ஆகார ஈறு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமைக்கண்ணும் = ஆகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண்ணேயன்றி வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும்: அதனோரற்று = அகர ஈற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்துவந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். தாரா மூங்கா வங்கா என நிறுத்திக் கால் செவி தலை புறம் என வருவித்து வல்லெழுத்துக்கொடுத்து ஒட்டுக. (உங)

உஉசு. குறியதன் முன்னரு மோரெழுத்து மொழிக்கு மறியத் தோன்று மகரக் கிளவி.

இஃது அவ் ஈற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது, அகரமும் வல்லெழுத்தும் பெறுதலின்.

இ - ள். குறியதன் முன்னரும் = குற்றெழுத்தின் முன்னின்ற ஆகார ஈற்றிற்கும்: ஓரெழுத்து மொழிக்கும் = ஓரெழுத்தொருமொழியாகிய ஆகார ஈற்றிற்கும்: அகரக்கிளவி அறியத்தோன்றும் = நிலைமொழிக்கண் அகரமாகிய எழுத்து விளங்கத் தோன்றும். எ - று.

உ-ம். பலாஅக்கோடு செதிள் தோல் பூ எனவும், காஅக்குறை செய்கை தலை புறம் எனவும் வரும். ஓரெழுத்தொருமொழி அகரம் பெறுதல் சிறுபான்மையென்றற்கு அதனைப் பிற்கூறினார். இது நிலைமொழிச்செய்கையாதலிற் பலாஅவிலை பலாஅநார் என இயல்புகணத்துங் கொள்க. அறிய என்றதனான் அவ் அகரம் ஈரிடத்தும் பொருந்தினவழிக் கொள்க.

இன்னும் இதனானே அண்ணாஅத்தேரி திட்டாஅத்துக்குளம் என அத்துக்கொடுத்தும் உவாஅத்துஞான்றுகொண்டான் என அத்தும் ஞான்றுங் கொடுத்தும் உவாத்தாற்கொண்டான் என

அத்தும் ஆனுங் கொடுத்தும் இடாஅவினுட்கொண்டான் என இன்னும் ஏழனுருபுங் கொடுத்துஞ் செய்கைசெய்து முடிக்க.

இன்னும் இதனுனே மூங்காவின்கால் மூங்காவின்றலை என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்துக்கேடுங் கொள்க. (உச)

உஉஎ. இராவென் கிளவிக் ககர மில்லை.

இஃது ஆகார ஈற்றுப்பெயர்க்கு ஒருவழி எய்தியது விலக்குகின்றது.

இ - ள். இராவென் கிளவிக்கு=இராவென்னும் ஆகார ஈற்றுச் சொல்லிற்கு: அகரம் இல்லை=முற்கூறிய அகரம் பெறுதலின்றி வல்லெழுத்துப்பெற்று முடியும். எ - று.

உ-ம். இராக்கொண்டான் சென்ருன் தந்தான் போயினன் எனவரும். இராஅக்காக்கை இராஅக்கூத்து எனப் பெயரெச்சமறைப்பொருள் தாராது இராவிடத்துக்காக்கை இராவிடத்துக்கூத்து என வேற்றுமைகருதியவழி இராக்காக்கை இராக்கூத்து என அகரம்பெருதென்று உணர்க. (உரு)

உஉஅ. நிலாவென் கிளவி யத்தொடு சிவணும்.

இஃது அகரம் விலக்கி அதிகாரவல்லெழுத்திஞேடு அத்து வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். நிலாவென் கிளவி அத்தொடு சிவணும்=நிலாவென்னுஞ் சொல் அத்துச்சாரியையோடு பொருந்திமுடியும். எ - று.

உ-ம். நிலாத்துக்கொண்டான் சென்ருன் தந்தான் போயினுன் எனவரும். நிலைமொழித்தொழிலை விலக்குமாதலின் அத்து வகுப்ப அகரம் வீழ்ந்தது. இதற்கு ஏழனுருபுவிரிக்க. நிலாஅக்கதிர் என்பது "வேற்றுமைக்கண்ணும்" என்பதனுன் ஈற்று வல்லெழுத்துப்பெற்றது. நிலாஅமுற்றமென்பது "ஒட்டுதற்கொழுகிய வழக்கு" அன்மையின் அத்துப் பெருதாயிற்று. ஈண்டு வருமொழி வரையாதுகூறினமையின் நிலாஅத்துஞான்ருன் என இயல்புகணத்துக்கண்ணும் ஏற்பன கொள்க. (உகூ)

உஉகூ. யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவு
மாமுப் பெயரு மெல்லெழுத்து மிகுமே.

இது வருமொழி வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். யாமரக் கிளவியும்=யாவென்னும் மரத்தை உணர நின்ற சொல்லும்: பிடாவும்=பிடாவென்னுஞ் சொல்லும்: தளாவும்=தளாவென்னுஞ் சொல்லும்: ஆம் முப்பெயரும் மெல்லெழுத்து மிகும்=ஆகிய மூன்று பெயரும் வல்லெழுத்துமிகாது மெல்லெழுத்துமிக்கு முடியும். எ - று.

உ-ம். யாஅங்கோடு பிடாஅங்கோடு தளாஅங்கோடு செதிள் தோல் பூ எனவரும். வருமொழித்தொழிலாகிய மெல்லெழுத்து வகுப்பவே வல்லெழுத்து விலக்கிற்றாம். இதற்கு விலக்காமையின் அகரம்பெற்றது. (உஎ)

உருO. வல்லெழுத்து மிகினு மான மில்லை.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது, அகரத்தோடு மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்தும் பெறுமென்றலின்.

இ - ள். வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை=முற்கூறிய மூன்றுபெயர்க்கும் மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்குமுடியினுங் குற்றமில்லை. எ - று.

உ-ம். யாஅக்கோடு பிடாஅக்கோடு தளாஅக்கோடு செதிள் தோல் பூ எனவரும். மானமில்லை என்றதனால் இம்மூன்றற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. யாவின்கோடு பிடாவின்கோடு தளாவின்கோடு எனவரும். சாரியை பெறவே அகரம் வீழ்ந்தது.

இன்னும் இதனானே யாஅத்துக்கோடு பிடாஅத்துக்கோடு தளாஅத்துக்கோடு என அத்துப்பெறுதலுங் கொள்க, அகரமும் வல்லெழுத்தும் பெறுதலின்.

யாமரக்கிளவியென்பதனைக் "குறியதன்முன்னர்" என்பதன் பின் வையாதவதனான் இராவிற்கொண்டான் நிலாவிற்கொண்டான் என உருபிற்குச்சென்றசாரியை பொருட்கட்சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. (உஅ)

உருக. மாமரக் கிளவியு மாவு மாவு
மாமுப் பெயரு மவற்றோ ரன்ன

வகரம் வல்லெழுத் தவையவ ணிலையா
னகர மொற்று மாவு மாவும்.

இஃது எய்தியது விலக்கி எய்தாததெய்துவித்தது. இம்மூன்றும் வல்லெழுத்துப்பெறா என்றலின் எய்தியது விலக்கிற்று. மாமரத்துக்கு அகரமும் ஙஞநம ஒற்றும் ஏனையவற்றிற்கு னகர ஒற்றும் எய்தாத தெய்துவித்தது.

இ-ள். மாமரக் கிளவியும் ஆவும் மாவும் ஆம் முப்பெயரும் அவற்றோரன்ன = மாமரமாகியசொல்லும் ஆவென்னுஞ்சொல்லும் மாவென்னுஞ்சொல்லுமாகிய மூன்றுபெயரும் யாமரம் முதலிய மூன்றோடும் ஒருதன்மையவாய் மெல்லெழுத்துப்பெற்று முடியும்: ஆவும் மாவும் அகரம் அவண் நிலையா னகரம் ஒற்றும் = அவற்றுள் ஆவும் மாவும் புணர்ச்சியிடத்து அகரம் நிலைபெறாவாய் னகர ஒற்றுப் பெற்று முடியும்: எனவே அருத்தாபத்தியான் மாமரத்திற்கு அகரம் நிலைபெற்று ஙஞநம ஒற்றும் பெறுமாயிற்று: அவை வல்லெழுத்து அவண் நிலையா = அம்மூன்றுபெயரும் முற்கூறிய வல்லெழுத்துப் புணர்ச்சியிடத்து நிலைபெறாவாய் வரும். எ - று.

அவணிலையா என்றதனை இரண்டிடத்துங் கூட்டுக.

உ-ம். மாஅங்கோடு செதிள் தோல் பூ ஆன்கோடு மான்கோடு செவி தலை புறம் எனவரும்.

ஆவும் மாவும் அவற்றோரன்ன என்று ஞாபகமாகக் கூறியவதனல் மாங்கோடென அகரமின்றியும் வரும்.

இனி அவண் என்றதனற் காயாங்கோடு நுணுங்கோடு ஆணுங்கோடு என்றாற்போலப் பிறவும் மெல்லெழுத்துப்பெறுதலும், அங்காக்கொண்டான் இங்காக்கொண்டான் உங்காக்கொண்டான் எங்காக்கொண்டான் என இவற்றுள் ஏழாம்வேற்றுமையிடப்பொருள் உணர நின்ற இடைச்சொற்கள் வல்லெழுத்துப்பெறுதலும், ஆவின்கோடு மாவின்கோடு எனச் சிறுபான்மை இன்பெறுதலும், பெற்றுழி வல்லெழுத்துவீழ்வுங் கொள்க.

மாட்டேற்றான் மூன்றுபெயரும் வல்லெழுத்துப் பெறாது மெல்லெழுத்துப்பெற்றவாறும் மாமரம் அகரம்பெற்றவாறும் இச்சூத்திரத்தின் கண்ணழிவான் உணர்க. (உகூ)

உகூஉ. ஆனொற் றகரமொடு நிலையிட னுடைத்தே.

இஃது அவற்றுள் ஆனென்றதற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ - ள். ஆனொற்று = ஆவென்னுஞ் சொன்முன்னர்ப் பெற்றுநின்ற னகரவொற்று: அகரமொடும் நிலையிடன் உடைத்து = அகரத்தோடு கூடி நிற்கும் இடனும் உடைத்து. எ - று.

இடனுடைத்தென்றவதனால் வன்கணமொழிந்த கணத்து இம்முடிபெனக் கொள்க.

உ-ம். "ஆன்நெய்தெளித்துநானநீவி" "ஆனமணிகறங்குங்கானத்தாங்கண்" எனவரும். அகரமொடும் என்ற உம்மையால் அகரமின்றிவருதலே பெரும்பான்மை. ஆனெய்தெளித்து ஆன்மணி ஆன்வால் எனவரும். (௩0)

௩௩௩. ஆன்முன் வரூஉ மீகார பகரந்
தான்மிகத் தோன்றிக் குறுகலு முரித்தே.

இஃது ஆனென்பதற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ள். ஆன்முன் வரூஉம் ஈகாரபகரம் = ஆனென்னுஞ் சொன்முன்னர் வருமொழியாய் வருகின்ற ஈகாரத்தோடுகூடிய பகரமாகிய மொழி: தான் மிகத்தோன்றி = அப்பகரமாகிய தான் மிக்கு நிற்ப நிலைமொழி னகரத்திற்குக் கேடு தோன்றி: குறுகலும் உரித்து = ஈகாரம் இகரமாகக் குறுகிநிற்றலும் உரித்து. எ - று.

உ-ம். ஆப்பி எனவரும்.

உம்மை எதிர்மறையாகலான் ஆன்பீ என்றுமாம். (௩க)

உ௩ச. குறியத னிறுதிச் சினைகெட வுகர
மறிய வருதல் செய்யுளு ளுரித்தே.

இஃது ஆகார ஈற்றுட் சிலவற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள். குறியதன் இறுதிச்சினை கெட = குற்றெழுத்தின் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது இரண்டுமாத்திரையில் ஒருமாத்திரை கெட்டு அஃது அகரமாய் நிற்க: உகரம் அறிய வருதல் செய்

யுளுள் உரித்து=ஆண்டு உகரம் புலப்படவருதல் செய்யுளிடத்து உரித்து. எ - று.

உ-ம். "இறவுப் புறத்தன்ன பிணர்படு தடவுமுதற்—சுறவுக் கோட்டன்ன முள்ளிலைத் தாழை" "புறவுப்புறத் தன்ன புன்கா யுகாய்" எனவரும். உகரம் வருப்பவே நிலைமொழி அகரங் கெட்டது. அதிகாரவல்லெழுத்து விலக்காமையின் நின்றுமுடிந்தது. இனி நிலைமொழித்தொழில் வரையாதுகூறினமையின் இயல்புக ணத்திற்கும் இவ்விதி எய்திற்ருகலின் ஆண்டுவரும் உகரம் புலப்படவாராமையும் உணர்க. சுறவுயர்கொடி அரவுயர்கொடி முழவுறழ் தோள் என இவை குறியதனிறுதிச்சினை கெட்டு வருமொழி உயிர் முதன்மொழியாய் வருதலின் வகர உடம்படுமெய்பெற்று உகரம் பெருது முடிந்தன. இவற்றிற்கு இரண்டாமுருபுவிரிக்க. மூன்ருவதுமாம். (ஙஉ)

உஙடு. இகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது இகர ஈற்றுப்பெயர்க்கு அல்வழிமுடிபு தொகைமரபிற் கூறி ஈண்டு வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள். இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்=இகர ஈற்றுப் பெயர்ச்சொன்முன்னர் அதிகாரத்தாற் கசதப முதன்மொழி வந்துழி: வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகும்=வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயிற் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். கிளிக்கால் சிறகு தலை புறம் எனவரும். புலி நரி என்றற்போல்வனவும் அவை.

இனிக் கிளிகுறுமை கிளிக்குறுமை எனக் குணம்பற்றிவந்த உறழ்ச்சிமுடிபு மேல் "வல்லெழுத்துமிகினும்" என்னுஞ் சூத்திரத்து "ஒல்வழியறிதல்" என்பதனுற் கொள்க. (ஙங)

உஙசு. இனியணி யென்னுங் காலையு மிடனும்
வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டு மன்ன.

இஃது எய்தாததெய்துவித்தது, இவ் ஈற்று இடைச்சொற்கும் வினைச்சொற்கும் முடிபு கூறுதலின்.

இ - ள். இனி அணி என்னுங் காலையும் இடனும்=இனி யென்றும் அணியென்றுஞ் சொல்லப்படுகின்ற காலத்தையும் இடத்தையும் உணரநின்ற இடைச்சொல்லும்: வினையெஞ்சு கிளவியும்= இவ் ஈற்று வினையெச்சமாகிய சொல்லும்: சுட்டும்=இவ் ஈற்றுச்சுட்டாகிய இடைச்சொல்லும்: அன்ன=முற்கூறியவாறே வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். இனிக்கொண்டான் அணிக்கொண்டான் தேடிக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், இக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும் வரும். இவ்விடைச்சொன்மூன்றும் இப்பொழுதுகொண்டான் அணிய இடத்தேகொண்டான் இவ்விடத்துக்கொற்றன் என உருபின்பொருள்படவந்த வேற்றுமையாதலின் வேறோதிமுடித்தார். (௩.௪)

உ௩ள. இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி
நின்ற விகர முகர மாத
றொன்றியன் மருங்கிற் செய்யுளு ளுரித்தே.

இஃது இவ் ஈற்று வினையெச்சத்துள் ஒன்றற்குச் செய்யுண் முடிபு கூறுகின்றது.

இ - ள். இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி நின்ற இகரம் உகரம் ஆதல்=இன்றியென்று சொல்லப்படும் வினையெச்சக்குறிப்பின் இறுதிக்கண் நின்ற இகரம் உகரமாகத் திரிந்து முடிதல்: தொன்றியல் மருங்கிற் செய்யுளுள் உரித்து=பழகநடந்த கூற்றையுடைய செய்யுளுள் உரித்து. எ - று.

உ-ம். "உப்பின்றுபுற்கை யுண்கமாகொற்கையோனே."

நின்ற என்றதனால் வினையெச்சத்திற்குமுன் எய்திய வல்லெழுத்து வீழ்க்க.

தொன்றியன்மருங்கின் என்றதனன் அன்றியென்பதூஉஞ் செய்யுளில் இம்முடிபு எய்துதல் கொள்க. "இடனன்றுதுறத்தல்வல்லியோரே" "வாளன்றுபிடியாவன்கணுடவர்" "நாளன்றுபோகி" எனவரும். முற்றியலிகரந் திரிந்து குற்றியலுகரமாய் நின்றது. (௩.௫)

உ௩அ. சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே.

இஃது இகர ஈற்றுச் சுட்டுப்பெயர் இயல்புகணத்தோடு முடியுமாறு கூறுதலின் எய்தாததெய்துவித்தது.

இ - ள். சுட்டின் இயற்கை = இகர ஈற்றுச் சுட்டின் இயல்பு: முன் கிளந்தற்று = முன் அகர ஈற்றுச் சுட்டிற்குக் கூறிய தன்மைத் தாம். எ - று.

என்றது "சுட்டின்முன்னர் ஞநமத்தோன்றின்" என்பது முதலிய நான்குசூத்திரத்தானுங் கூறிய இலக்கணங்களை அவை மென்கணத்து மெல்லெழுத்து மிகுதலும் இடைக்கணத்தும் உயிர்க்கணத்தும் வகரம்பெறுதலுஞ் செய்யுட்கண் வகரங்கெட்டுச் சுட்டு நீடலுமாம்.

இஞ்ஞாண் நூல் மணி எனவும், இவ்யாழ் இவ்வட்டு எனவும், இவ்வடை இவ்வாடை இவ்விலை இவ்வீயம் இவ்வுரல் இவ்வூர்தி இவ்வெழு இவ்வேணி இவ்வையம் இவ்வொடு இவ்வோக்கம் இவ்வௌவியம் எனவும், ஈவயின் எனவும் வரும்.

"ஈகாண்டோன்றுமெஞ்சிறுநல்லூரே" என்றதுங் "கள்வனேவல்லன் கணவனென்காற்சிலம்பு—கொள்ளும்விலைப் பொருட்டாற் கொன்றாரே யீதொன்று" என்றதும் இதுவென்னுஞ் சுட்டுமுதல் உகர ஈறாதலின் அது செய்யுளகத்துப் புறனடையான் முடியுமென உணர்க. (௩௬)

உ௩௬. பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே.

இஃது இவ்வீற்று அல்வழிகளுள் அளவுப்பெயருள் ஒன்றற்குத் தொகைமரபினுள் எய்திய ஏயென்சாரியை விலக்கி வேறுமுடிபு கூறுகின்றது.

இ - ள். தூணிக் கிளவிமுன் பதக்கு வரின் = தூணியாகிய அளவுப்பெயரின்முன்னர்ப் பதக்கு என்னும் அளவுப்பெயர் வருமாயின்: முதற் கிளந்து எடுத்த வேற்றுமை இயற்று = முன்பு விதந்தெடுத்த வேற்றுமைமுடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். தூணிப்பதக்கு எனவரும். இஃது உம்மைத்தொகை.

வருமொழி முற்கூறியவதனான் அடையொடுவந்துழியும் இவ்விதிகொள்க. இருதூணிப்பதக்கு முத்தூணிப்பதக்கு என ஒட்டுக. கிளந்தெடுத்தவென்றதனாற் தூணிக்கொள் சாமை தோரை பாளிதம் எனப் பொருட்பெயர்முன் வந்துழியும், இருதூணிக்கொள் என அது தான் அடையடுத்துழியுந், தூணித்தூணி தொடித்தொடி

காணிக்காணி பூணிப்பூணி எனத் தன்முன்னர்த் தான்வந்துழியும் இவ்விதிகொள்க.

இன்னும் இதனானே தன்முன்னர்த் தான்வந்துழியும் அது தான் அடையடுத்து வந்துழியும் இக்குச்சாரியை பெறுதலுங் கொள்க. தூணிக்குத்தூணி இருதூணிக்குத்தூணி எனவரும். இவற்றுட் பண்புத்தொகையும் உள. (௩௭)

உ௪௦. உரிவரு காலை நாழிக் கிளவி
யிறுதி யிகர மெய்யொடுங் கெடுமே
டகர மொற்று மாவயி னான.

இதுவும் அது.

இ - ள். உரிவரு காலை=நாழிமுன்னர் உரி வருமொழியாய் வருங்காலத்து: நாழிக் கிளவி=அந்நாழியென்னுஞ்சொல்: இறுதி இகரம் மெய்யொடுங் கெடும்=தன் இறுதியினின்ற இகரந் தானேறிய மெய்யொடுங் கெடும்: ஆவயின் ஆன டகரம் ஒற்றும்=அவ்விடத்து டகரம் ஒற்றாய்வரும். எ - று.

உ-ம். நாடுரி எனவரும். இதனான் யகாரமும் விலக்குண்டது.

வருமொழிமுற்கூறியவதனான் இருநாடுரி முந்நாடுரி எனவும் ஒட்டுக.

இறுதியிகரமென முன்னும் ஓர் இகரம் உள்ளதுபோலக் கூறியவதனான் ஈண்டை நிலைமொழியும் வருமொழியும் நிலைமொழியாய் நின்று பெயரோடு வல்லெழுத்துமிக்கு முடிதலுங்கொள்க. நாழிக்காயம் உரிக்காயம் சுக்கு தோரை பாளிதம் என வரும். (௩௮)

உ௪௧. பனியென வரூஉங் கால வேற்றுமைக்
கத்து மின்னுஞ் சாரியை யாகும்.

இஃது இகர ஈற்று வேற்றுமையுள் ஒன்றற்கு வல்லெழுத்தினோடு சாரியைபெறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். பனியென வரூஉங் கால வேற்றுமைக்கு=பனியென்று சொல்ல வருகின்ற நோயன்றிக் காலத்தை உணரநின்ற வேற்றுமைமுடிபுடைய பெயர்க்கு: அத்தும் இன்னுஞ் சாரியை ஆகும்=அத்தும் இன்னுஞ் சாரியையாக வரும். எ - று.

உ-ம். பனியத்துக்கொண்டான் பனியிற்கொண்டான் சென்ருன் தந்தான் போயினுன் எனவரும்.

வேற்றுமையென்றதனுன் இன்பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. (ஙகூ)

உசஉ. வளியென வரூஉம் பூதக் கிளவியு
மவ்விய னிலையல் செவ்வி தென்ப.

இதுவும் அது.

இ-ள். வளியென வரூஉம் பூதக் கிளவியும்=வளியென்று சொல்ல வருகின்ற இடக்கரல்லாத ஐம்பெரும்பூதங்களில் ஒன்றை உணரநின்ற சொல்லும்: அவ்வியல் நிலையல் செவ்விதென்ப=முன்னைக்கூறிய அத்தும் இன்னும்பெறுஉ, அவ்வியல்பின்கண் நிற்றல் செவ்விதென்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். வளியத்துக்கொண்டான் வளியிற்கொண்டான் சென்ருன் தந்தான் போயினுன் எனவரும்.

செவ்விதென்றதனுன் இன்பெற்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. (சo)

உசங. உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

இது மரப்பெயரில் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதிக்கின்றது.

இ-ள். உதிமரக் கிளவி=உதித்தலென்னுந் தொழிலன்றி உதியென்னும் மரத்தினை உணரநின்றசொல்: மெல்லெழுத்து மிகும்=வல்லெழுத்துமிகாது மெல்லெழுத்துமிக்கு முடியும். எ-று.

உ-ம். உதிங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

அம்முச்சாரியை விதிக்கின்ற புளிமரத்தினை இதன்பின்வைத்தமையான் உதியங்கோடு என இதற்கும் அம்முப்பெறுதல் கொள்க. இஃது இக்காலத்து ஒதியென மருவிற்று. (சக)

உசச. புளிமரக் கிளவிக் கம்மே சாரியை.

இது வல்லெழுத்து விலக்கி அம்மு வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள். புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை = சுவையன்றிப் புளியென்னும் மரத்தினை உணரநின்ற சொல்லிற்கு அம்மென்னுஞ் சாரியை வரும். எ - று.

உ-ம். புளியங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

சாரியைப்பேற்றிடை முன்னர்ச்சூத்திரத்து எழுத்துப்பேறு கூறியவதனால் அம்முப்பெற்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. ()

உசரு. ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே.

இது வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகும் = அம் மரப்பெயரன்றிச் சுவைப்புளி உணரநின்றபெயர் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்துமிக்கு முடியும். எ - று.

உ-ம். புளிங்கூழ் சாறு தயிர் பாளிதம் எனவரும். பாளிதம் பாற்சோறு. இவற்றிற்கு இரண்டாமுருபு விரிக்க. (சா)

உசசு. வல்லெழுத்து மிகினு மான மில்லை
யொல்வழி யறிதல் வழக்கத் தான.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். வல்லெழுத்து மிகினும் மானமில்லை = சுவைப்புளி மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்குமுடியினுங் குற்றமில்லை: ஒல்வழி அறிதல் வழக்கத்தான = பொருந்தும் இடம் அறிக வழக்கிடத்து. எ - று.

உ-ம். புளிக்கூழ் சாறு தயிர் பாளிதம் எனவரும்.

ஒல்வழி என்றதனாற் புளிச்சாறு போல ஏனைய வழக்குப் பயிற்சி இலவென்று கொள்க.

வழக்கத்தான என்றதனான் இவ ஈற்றுக்கண் எடுத்தோத்தும் இலேசுமின்றி வருவனவெல்லாவற்றிற்கும் ஏற்குமாறு செய்கையறிந்து முடித்துக்கொள்க. அவை இன்னினிக்கொண்டான் அண்ணணிக்கொண்டான் என்பன அடையடுத்தலின் "இனியணி" என்றவழி முடியாவாய் வல்லெழுத்துப்பெற்றன. கப்பிதந்தை சென்னிதந்தை என்பன "அஃறிணைவிரவுப்பெயர்" என்பதனுள் இயல்

பெய்தாது ஈண்டு வருமொழித் தகர அகரங் கெட்டுக் கப்பிந்தை சென்னிந்தை என முடிந்தது.

கூதாளி கணவிரி என்பனவற்றிற்கு அம்முக்கொடுத்து இகரங் கெடுத்துக் கூதாளங்கோடு கணவிரங்கோடு செதிள் தோல் பூ என முடிக்க. "கூதளநறும்பூ" எனக் குறைந்தும் வரும். இனி இவை மகர ஈறும் வழங்கும். அது "வெண்கூதாளத்துத் தண்பூங் கோதையர்" என அத்துப்பெற்று மகரங்கெட்டுங் "கணவிரமாலை யிடூஉக்கழிந்தன்ன" என மகரங்கெட்டுங் கணவிரங்கோடு என மெல்லெழுத்துப்பெற்றும் நிற்கும்.

கட்டி என நிறுத்தி இடி அகல் எனத் தந்து டகரத்தின் இகரங்கெடுத்துக் கட்டிடி கட்டகல் என முடிக்க. பருத்திக்குச் சென்றானென ஈற்றுவல்லெழுத்தும் இக்குங் கொடுத்து முடிக்க. துளியத்துக்கொண்டான் துளியிற்கொண்டான் என அத்தும் இன்னுங் கொடுத்து முடிக்க. புளிங்காய்வேட்கைத்தன்று எனவும் புளிம்பழம் எனவும் அம்முப்பெறாது மெல்லெழுத்துப்பெற்று முடிதலுங் கொள்க. இன்னும் இதனானே உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்துக் கெடுத்துக் கிளியின்கால் புளியின்கோடு உதியின்கோடு என முடிக்க. (சுசு)

உசஎ. நாண்முற் றோன்றுந் தொழினிலைக் கிளவிக்
கானிடை வருத லைய மின்றே.

இஃது ஈற்றுவல்லெழுத்து விலக்கி ஆன் சாரியை விதிக்கின்றது.

இ - ள். நாள் முற் தோன்றுந் தொழினிலைக் கிளவிக்கு= இகர ஈற்று நாட்பெயர்களின்முன்னர்த் தோன்றுந் தொழிற்சொற்கு: ஆன் இடைவருதல் ஐயமின்று=ஆன் சாரியை இடைவந்து முடிதல் ஐயமின்று. எ - று.

உ -ம். பரணியாற்கொண்டான் சோதியாற்கொண்டான் சென்றான்தந்தான்போயினான் எனவரும். ஐயமின்றென்றதனால் இயைபுவல்லெழுத்து வீழ்க்க. இதற்குக் கண்ணென் உருபு விரிக்க. (சு௫)

உசஅ. திங்கண் முன்வரி னிக்கே சாரியை.

இஃது இயைபுவல்லெழுத்தினோடு இக்குவகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

இ - ள். திங்கள் முன்வரின் இக்கே சாரியை=திங்களை உண ரநின்ற இகர ஈற்றுப் பெயர்களின்முன்னர்த் தொழினிலைக்கிளவி* வரின் வருஞ் சாரியை இக்குச் சாரியையாம். எ - று.

உ-ம். ஆடிக்குக்கொண்டான் சென்றான் தந்தான் போயி னான் என இயைபுவல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. இதற்குங் கண்ணென் உருபு விரிக்க. (உசு)

உசகூ. ஈகார விறுதி யாகார வியற்றே.

இஃது ஈகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறு கின்றது.

இ - ள். ஈகார இறுதி ஆகார இயற்று=ஈகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் ஆகார ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெ ழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். ஈக்கடிது தீக்கடிது சிறிது தீது பெரிது எனவரும். ()

உருo. நீயென் பெயரு மிடர்க்கப் பெயரு
மீயென மரீஇய விடம்வரை கிளவியு
மாவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கலும் எய்தாததெய்துவித்தலுங் கூறு கின்றது.

இ - ள். நீ என் பெயரும் இடக்கர்ப் பெயரும்=நீயென்னும் பெயரும் இடக்கர்ப்பெயராகிய ஈகார ஈற்றுப்பெயரும்: மீயென மரீஇய இடம் வரை கிளவியும்=மீயென்று சொல்ல மருவாய் வழங்கின ஓரிடத்தை வரைந்து உணர்த்துஞ் சொல்லும்: ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும்=புணருமிடத்து முற்கூறிய வல்லெ ழுத்துப் பெறாது இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். நீகுறியை சிறியை தீயை பெரியை எனவும், பீகுறிது சிறிது தீது பெரிது எனவும் இவையிற்றுக்குப் பொதுவான் எய் திய வல்லெழுத்து விலக்குண்டன. மீகண் செவி தலை புறம் இஃது இலக்கணத்தோடு பொருந்திய மருவாதலின் எய்தாததெய்து வித்தது.

நீயென்பது அஃறிணைவிரவுப்பெயருள் அடங்காதோவெ னின் மேல் நின்கையெனத் திரிந்து முடிதலின் அடங்காதாயிற்று.

மீகண் என்பது மேலிடத்துக்கண்ணென வேற்றுமையெனினும் இயல்புபற்றி உடன்கூறினர். (சஅ)

உருக. இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉ
முடனிலை மொழியு முளவென மொழிப.

இது வல்லெழுத்து மிகுக என்றலின் எய்தியதிகந்துபடாமற் காத்தது.

இ - ள். இடம் வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம் = இடத்தை வரைந்து உணர்த்தும் மீயென்னுஞ் சொல்லின்முன்னர் இயல்பாய் முடிதலேயன்றி வல்லெழுத்து மிக்கும் முடியும்; உடனிலை மொழியும் உள என மொழிப = தம்மில் ஓசையியைந்து நிற்றலையுடைய மொழிகளும் உளவென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

உ-ம். மீக்கோள் மீப்பல் எனவரும்.

உடனிலையென்றதனான் மீங்குழி மீந்தோல் என மெல்லெழுத்துப்பெற்று முடிவனவுங் கொள்க. (சகூ)

உருஉ. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது ஈகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமைக்கண்ணும் அதனோரற்று = ஈகார ஈற்றுப் பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும் ஆகார ஈற்று அல்வழிபோல வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும். எ - று.

உ-ம். ஈக்கால் சிறகு தலை புறம் தீக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவரும். (ருo)

உருங. நீயெ னொருபெய ருருபிய னிலையு
மாவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, வல்லெழுத்து விலக்கி னகரவொற்றே பெறுக என்றலின்.

இ - ள். நீயென் ஒருபெயர் உருபியல் நிலையும் = நீயென்னும் ஓரெழுத்தொருமொழி உருபுபுணர்ச்சிக்கண் நெடுமுதல்குறுகி னகரம் ஒற்றி நின்றாற்போல ஈண்டுப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் முடி

யும்: ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும்=அவ்வாறு முடிபுழி இயைபுவல்லெழுத்து மிகா. எ - று.

உ-ம். நின்கை செவி தலை புறம் எனவரும்.

இஃது ஈகார ஈறு இகர ஈறாய் இகர ஈறு னகர ஈறாய் நின்றுழியும் 'நீயெனொருபெயர்' என்றலிற் றிரிந்ததன் றிரிபதுவே யாயிற்று. இயற்கையாகுமெனவே நிலைமொழித்தொழில் அதிகார வல்லெழுத்தை விலக்காதாயிற்று. (௫க)

உ௫௪. உகர விறுதி யகர வியற்றே.

இஃது உகர ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். உகர இறுதி அகர இயற்று=உகர ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் அகர ஈற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். கடுக்குறிது சிறிது தீது பெரிது எனவரும். (௫உ)

உ௫௫. சுட்டின் முன்னரு மத்தொழிற் றாகும்.

இஃது உகர ஈற்றுச் சுட்டு வன்கணத்தோடு முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். சுட்டின் முன்னரும் அத்தொழிற்று ஆகும்=உகர ஈற்றுச் சுட்டின்முன்னும் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்துமிக்கு முடியும். எ - று.

உ-ம். உக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவரும். ()

உ௫௬. ஏனவை வரினே மேனிலை யியல.

இஃது உகர ஈற்றுச் சுட்டு ஒழிந்த கணங்களோடு முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். ஏனவை வரின்=உகர ஈற்றுச் சுட்டின்முன் வல்லெழுத்தல்லாத மென்கணம் முதலிய மூன்றும் வரின்: மேல் நிலை இயல=அகர ஈற்றுச் சுட்டு முடிந்தாற்போல ஞநமத் தோன்றின் ஒற்று மிக்கும் யவ்வரினும் உயிர்வரினும் வகரம் ஒற்றியுஞ் செய்யுளில் நீண்டு முடியும். எ - று.

உ-ம். உஞ்ஞாண் நூல் மணி எனவும், உவயாழ் உவ்வட்டு எனவும் உவவடை உவவாடை எனவும், ஊவயினா எனவும் வரும். (ருச)

உருஎ. சுட்டுமுத லிறுதி யியல்பா கும்மே.

இஃது இவ் ஈற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி இயல்பு கூறுகின்றது.

இ-ள். சுட்டு முதல் இறுதி=சுட்டெழுத்தினை முதலாக வுடைய உகர ஈற்றுப்பெயர்: இயல்பாகும்=முற்கூறிய வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். அதுகுறிது இதுகுறிது உதுகுறிது சிறிது தீது பெரிது எனவரும்.

முற்கூறியவை சுட்டுமாத்திரை, இவை சுட்டுப்பெயராக உணர்க. (ருரு)

உருஅ. அன்றுவரு காலை யாவா குதலு
மைவரு காலை மெய்வரைந்து கெடுதலுஞ்
செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப.

இஃது இவ் ஈற்றுச் சுட்டுமுதற் பெயர்க்கு ஓர் செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ-ள். அன்றுவருகாலை ஆவாகுதலும்=அதிகாரத்தால் நின்ற சுட்டுமுதல் உகர ஈற்றின்முன்னர் அன்றென்னும் வினைக்குறிப்புச் சொல் வருங்காலத்து அத் தகரவொற்றின்மேல் ஏறிநின்ற உகரம் ஆகாரமாய்த் திரிந்து முடிதலும்: ஐ வரு காலை மெய்வரைந்து கெடுதலும்=அதன்முன்னர் ஐயென்னுஞ் சாரியை வருங்காலத்து அத் தகரவொற்று நிற்க அதன்மேல் ஏறிய உகரங் கெடுதலும்: செய்யுண்மருங்கின் உரித்தென மொழிப=செய்யுட்கண் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர். எ - று.

உ-ம். அதாஅன்றம்ம இதாஅன்றம்ம உதாஅன்றம்ம "அதாஅன்றென்பவெண்பாயாப்பே" எனவும், அதைமற்றம்ம இதைமற்றம்ம உதைமற்றம்ம எனவும் வரும்.

மொழிந்தபொருளோடொன்றவவ்வயின்முடியாததனை முட்டின்றிமுடித்தலென்பதனால் அதன்று இதன்று உதன்று என உகரங்கெட்டுத் தகரவொற்று நிற்றல்கொள்க. (ருசு)

உடுக. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது இவ் ஈற்றுப் பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமைக்கண்ணும்=உகர ஈற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும்: அதனோரற்று=அகர ஈற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்துமிக்குமுடியும். எ - று.

உ-ம். கடுக்காய் செதிள் தோல் பூ எனவும், கடுக்கடுமை எனவும் வரும். (நின)

உகூ0. எருவுஞ் செருவு மம்மொடு சிவணித்
திரிபிட னுடைய தெரியுங் காலை
யம்மின் மகரஞ் செருவயிற் கெடுமே
தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை.

இஃது அவ் ஈற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியைவிதியும் ஒன்றற்கு வல்லெழுத்தினோடு சாரியைவிதியுஞ் சாரியை பெறுதவழி வல்லெழுத்து மெல்லெழுத்துப் பேறுங் கூறுகின்றது.

இ - ள். எருவுஞ் செருவும் அம்மொடு சிவணி=எருவென்னுஞ் சொல்லுஞ் செருவென்னுஞ் சொல்லும் அம்முச் சாரியையோடு பொருந்தி: திரிபு இடனுடைய தெரியுங் காலை=அதிகார வல்லெழுத்துப் பெறுமற் றிரியும் இடனுடைய ஆராயுங்காலத்து: அம்மின் மகரஞ் செருவயிற் கெடும்=ஆண்டு அம்முச்சாரியையினது ஈற்றின் மகரஞ் செருவென்னுஞ் சொல்லிடத்துக் கெட்டு முடியும்: வல்லெழுத்து மிகூஉம்=ஆண்டுச் செருவின்கண் வல்லெழுத்து மிக்குமுடியும்: இயற்கைத் தம் ஒற்று மிகூஉம்=அம்முப் பெறுதவழி இரண்டிற்குந் தமக்கு இனமாகிய வல்லொற்றும் மெல்லொற்றும் மிக்குமுடியும். எ - று.

உ-ம். எருவென நிறுத்திக் குழி சேறு தாது பூழி எனத் தந்து அம்முக்கொடுத்து "அம்மினிறுதிகசதக்காலை" என்பதனால் எருவங்குழி சேறு தாது பூழியென முடிக்க. செருவென நிறுத்திக் களம் சேனை தானை பறை எனத் தந்து இடை அம்முக்கொடுத்து மகரங் கெடுத்து வல்லெழுத்துக்கொடுத்துச் செருவக்களம் சேனை தானை பறையென முடிக்க. இனி அம்முப் பெறுதவழி எருக்குழி எருங்

குழி என வல்லெழுத்தும் மெல்லெழுத்துங் கொடுத்து முடிக்க. இனிச் செருவிற்கு ஏற்புழிக்கோடலென்பதனாற் செருக்களமென வல்லெழுத்தே கொடுத்துமுடிக்க.

தெரியுங்காலை என்றதனான் எருவின்குறுமை செருவின் கடுமை என உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி வல்லெழுத்து வீழ்தலும் எருவஞாற்சி செருவஞாற்சி என இயல்பு கணத்துக்கண் அம்முப்பெறுதலுங் கொள்க. மகரம் "மென்மையு மிடைமையும்" என்பதனாற் கெடுக்க.

தம்மொற்றுமிகூஉம் என உடம்பொடுபுணர்த்துச் சூத்திரஞ் செய்தலின் உகரம் நீடவருதலுங் கொள்க. வரூஉம் தரூஉம் படூஉம் எனவரும். (ருஅ)

உகூக. ழகர வுகர நீடிட னுடைத்தே
யுகரம் வருத லாவயி னான.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது, வல்லெழுத்தி னோடு உகரம் பெறுதலின்.

இ - ள். ழகர உகரம் நீடிடன் உடைத்து = உகர ஈற்றுச் சொற்களுள் ழகரத்தோடு கூடிய உகர ஈற்றுச்சொல் நீண்டு முடியும் இடனுடைத்து: ஆவயின் ஆன உகரம் வருதல் = அவ்விடத்து உகரம் வந்து முடியும். எ - று.

உ-ம். எழூஉக்கதவு சிறை தானை படை எனவரும்.

நீடிடனுடைத்து என்றதனான் நீளாதும் உகரம்பெறாதும் வரு மாயிற்று. குழூத்தோற்றம் எனவரும்.

இன்னும் இதனாற் பழூக்காயென அல்வழிக்கண்ணும் இவ் விதியின்றி வருதல்கொள்க.

ஆவயினான என்றதனாற் பெரும்பான்மை செய்யுட்கண் நீண்டு உகரம்பெற்று "எழூஉத்தாங்கியகதவுமலைத்தவர் குழூஉக் களிற்றுக்குறும்புடைத்தலின்" எனவும் "பழூஉப்பல்லன்ன பரு வுகிர்ப்பாவடி" எனவும் வருதல் கொள்க. (ருகூ)

உசுஉ. ஒடுமரக் கிளவி யுதிமர வியற்றே.

இஃது அவ ஈற்று மரப்பெயருள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

இ - ள். ஒடுமரக் கிளவி = ஒடுவென்னும் மரத்தினை உணர நின்ற சொல்: உதிமர இயற்று = உதியென்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்துப் பெற்று முடியும். எ - று.

உ-ம். ஒடுங்கோடு செதிள் தோல் பூ எனவரும். மரமென்றார் ஒடுவென்னும் நோயை நீக்குதற்கு.

முன்னர் உதிமரத்தின்பின்னர் அம்முப் பெறுகின்ற புளிமரம் வைத்த இயைபான் இதற்கு அம்முப்பேறுங் கொள்க. ஒடுவங்கோடு எனவரும். (சுய)

உசுரு. சுட்டுமுத விறுதி யுருபிய னிலையு
மொற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை.

இது சுட்டுப்பெயர்க்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தது.

இ - ள். சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும் = சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுச்சொற்கள் பொருட்புணர்ச்சிக்கண்ணும் உருபுபுணர்ச்சியிற் கூறிய இயல்பிலே நின்று அன் சாரியை பெற்று உகரங்கெட்டு முடியும்: வல்லெழுத்து இயற்கை ஒற்று இடைமிகாஅ = வல்லெழுத்து இயற்கையாகிய ஒற்று இடைக்கண் மிகா. எ - று.

உ-ம். அதன்கோடு இதன்கோடு உதன்கோடு செதிள் தோல் பூ எனவரும். ஒற்றிடைமிகா எனவே சாரியை வருப வல்லெழுத்து வீழாவென்பது பெற்றாம்.

வல்லெழுத்தியற்கையென்றதனான் உகர ஈற்றுள் எருவுஞ் செருவும் ஒழித்து ஏனையவற்றிற்கும் உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. கடுவின்குறை ஒடுவின்குறை எழுவின்புறம் கொழுவின்கூர்மை எனவரும். இன்னும் இதனானே உதுக்காண் என்றவழி வல்லெழுத்து மிகுதலுங் கொள்க. (சுக)

உசுச. ஊகார விறுதி யாகார வியற்றே.

இது நிறுத்தமுறையானே ஊகார ஈறு அல்வழிக்கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ஊகார இறுதி ஆகார இயற்று=ஊகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் ஆகார ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். கழூஉக்கடிது கொண்மூக்கடிது சிறிது தீது பெரிது எனவரும். (சுஉ)

உசுரு. வினையெஞ்சு கிளவிக்கு முன்னிலை மொழிக்கு
நினையுங் காலை யவ்வகை வரையார்.

இஃது இவ் ஈற்று வினையெச்சத்திற்கு மிக்குமுடியுமென்றலின் எய்தாததெய்துவித்ததூஉம் முன்னிலைவினைக்கு இயல்பும் உறழ்பும் மாற்றுதலின் எய்தியது விலக்கியதூஉம் நுதலிற்று.

இ - ள். வினையெஞ்சுகிளவிக்கும்=ஊகார ஈற்று வினையெச்சமாகிய சொற்கும்: முன்னிலை மொழிக்கும்=முன்னிலைவினைச் சொற்கும்: நினையுங் காலை அவ்வகை வரையார்=ஆராயுங்காலத்து அவ்வல்லெழுத்து மிக்குமுடியுங் கூற்றினை நீக்கார். எ - று.

உ-ம். உண்ணூக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், கைதூக்கொற்றா சாத்தா தேவா பூதா எனவும்வரும்.

நினையுங்காலை என்றதனான் இவ் ஈற்று உயர்திணைப்பெயர்க்கும் அல்வழிக்கண் வல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. ஆடூஉக்குறியன் மகடூஉக்குறியள் எனவரும். உயர்திணைப்பெயர் எடுத்தோதி முடிப்பாராதலின் அம்முடிபுபெறாமை ஈற்றுப்பொதுவிதியான் முடியாது இலேசான் முடித்தாம். (சுரு)

உசுசு. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது ஊகார ஈறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமைக்கண்ணும் அதனோரற்று=ஊகார ஈறு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும் ஆகார ஈற்று அல்வழிபோல வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். கழூஉக்கடுமை சிறுமை தீமை பெருமை கொண்மூக்குழாம் செலவு தோற்றம் பறைவு எனவரும். (சுசு).

உகூஎ. குற்றெழுத் திம்பரு மோரெழுத்து மொழிக்கு
நிற்றல் வேண்டு முகரக் கிளவி.

இஃது இயைபுவல்லெழுத்தினோடு உகரம் வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். குற்றெழுத்து இம்பரும்=குற்றெழுத்தின்பின் வந்த ஊகார ஈற்று மொழிக்கும்: ஓரெழுத்து மொழிக்கும்=ஓரெழுத்தொருமொழியாகிய ஊகார ஈற்று மொழிக்கும்: உகரக் கிளவி நிற்றல் வேண்டும்=உகரமாகிய எழுத்து நிற்றலைவிரும்பும் ஆசிரியன். எ - று.

உ-ம். உடூஉக்குறை செய்கை தலை புறம் எனவும், தூஉக்குறை செய்கை தலை புறம் எனவும் வரும்.

நிற்றல் என்றதனான் உயர்திணைப்பெயர்க்கும் வல்லெழுத்தும் உகரமுங் கொடுக்க. ஆடூஉக்கை மகடூஉக்கை செவி தலை புறம் எனவரும். இவை தொகைமரபினுள் இயல்பாதல் எய்தியவற்றை ஈண்டு இருவழிக்கண்ணும் முடித்தார், ஈற்றுப் பொது ஒப்புமை கண்டு. (சா௫)

உகூஅ. பூவெ னொருபெய ராயியல் பின்றே
யாவயின் வல்லெழுத்து மிகுதலு முரித்தே.

இஃது ஊகார ஈற்றுள் ஒன்றற்கு உகரமும் இயைபுவல்லெழுத்தும் விலக்கிப் பெரும்பான்மை மெல்லெழுத்துஞ் சிறுபான்மை வல்லெழுத்தும் பெறுமென எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். பூவென் ஒருபெயர் இயல்பு இன்று=பூவென்னும் ஊகார ஈற்றையுடைய ஒருபெயர் மேற்கூறிய உகரமும் வல்லெழுத்தும் பெற்றுமுடியும் அவ்வியல்பின்மையை உடைத்து: ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து=அவ்விடத்து மெல்லெழுத்து மிக்குமுடிதலேயன்றி வல்லெழுத்து மிக்குமுடிதலும் உரித்து. எ - று.

உ-ம். பூங்கொடி சோலை தாமம் பந்து எனவும், பூக்கொடி செய்கை தாமம் பந்து எனவும் வரும்.

பூவென்பது பொலிவென்னும் வினைக்குறிப்பை உணர்த்தாது நிற்றற்கு ஒருபெயரென்றார். (சாசா

உசுகூ. ஊவெ னொருபெய ராவொடு சிவணும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, உகரமும் வல்லெழுத்தும் விலக்கி னகரம் விதித்தலின்.

இ - ள். ஊவென் ஒருபெயர் = ஊவெனத் தசையை உணர்த்திநின்ற ஓரெழுத்தொருமொழி: ஆவொடு சிவணும் = ஆகார ஈற்றில் ஆவென்னுஞ்சொல் வல்லெழுத்துப்பெறாது னகர ஒற்றுப் பெற்று முடிந்தாற்போல னகர ஒற்றுப் பெற்று முடியும். எ - று.

உ-ம். ஊவென நிறுத்தி னகர ஒற்றுக்கொடுத்து ஊன்குறை செய்கை தலை புறம் என முடிக்க. ஊவென்பது தசையை உணர்த்திநின்ற வழக்கு ஆசிரியர் நூல்செய்த காலத்து வழக்கு. அன்றித் தேயவழக்கேனும் உணர்க. (சுஎ)

உஎ0. அக்கென் சாரியை பெறுதலு முரித்தே
தக்கவழி யறிதல் வழக்கத் தான.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். அக்கென் சாரியை பெறுதலும் உரித்து = அதிகாரத்தான் நின்ற ஊவென்னும் பெயர் முற்கூறிய னகரத்தோடு அக்கென்னுஞ் சாரியை பெற்று முடிதலும் உரித்து: வழக்கத்தான தக்கவழி அறிதல் = அம்முடிபு வழக்கிடத்துத் தக்க இடம் அறிக. எ-று.

தக்கவழியறிதல் என்றதனாற் சாரியைபெற்றுழி னகரம் விலக்குண்ணாது நிற்றலும் முன் மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலுங் கொள்க.

உ-ம். ஊனக்குறை செய்கை தலை புறம் எனவரும்.

வழக்கத்தான என்றதனான் ஊகார ஈற்றுச் சொல்லிற்கு உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்துக் கெடுக்க. கொண்மூவின்குழாம் உடூஉவின்றலை ஊவின் குறை எனவரும். (சுஅ)

உஎக. ஆடூஉ மகடூஉ வாயிரு பெயர்க்கு
மின்னிடை வரினு மான மில்லை.

இது "குற்றெழுத்திம்பரும்" என்பதனுள் நிற்றலென்ற இலேசான் எய்திய வல்லெழுத்தேயன்றிச் சாரியையும் வருத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்தியது.

இ - ள். ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்=ஆடூஉ மகடூஉவா*கிய உயர்திணைப்பெயர் இரண்டிற்கும்: இன் இடைவரினும் மானம் இல்லை=முன்னெய்திய வல்லெழுத்தேயன்றி இன்சாரியை இடையேவரினுங் குற்றமில்லை. எ - று.

உ-ம். ஆடூஉவின்கை மகடூஉவின்கை செவி தலை புறம் எனவரும்.

மானமில்லை என்றதனான் இன்பெற்றுழி மேல் எய்திய வல்லெழுத்து வீழ்க்க. (சுகூ)

உஎஉ. எகர வொகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய வென்மனார் புலவர்
தேற்றமுஞ் சிறப்பு மல்வழி யான.

இஃது எகர ஒகரம் ஈறும் இடம் உணர்த்துகின்றது.

இ - ள். தேற்றமுஞ் சிறப்பும் அல்வழி ஆன=தெளிவுபொருளுஞ் சிறப்புப்பொருளும் அல்லாத வேற்றுமைப்பொருண்மையிடத்து அளபெடுத்துக் கூறுதலின் உளவாகிய: எகர ஒகரம் பெயர்க்கு ஈறாகா=எகர ஒகரங்கள் பெயர்க்கு ஈறாய் வாரா, வினைக்கு ஈறாய்வரும்: முன்னிலை மொழிய என்மனார் புலவர்=அவைதாந் தன்மையினும் படர்க்கையினும் வாரா, முன்னிலைச்சொல்லிடத்தனவாமென்று கூறுவர் புலவர். எ - று.

எனவே தெளிவுபொருளினுஞ் சிறப்புப்பொருளினும் வந்து பெயர்க்கு ஈறும் இடைச்சொல்லாகிய எகர ஒகரம் மூன்றிடத்திற்கும் உரியவாமென்று பொருளாயிற்று. என இங்ஙனம் அருத்தாபத்தியாற் கொண்டதற்கு இலக்கணம் மேலைச்சூத்திரத்தாற் கூறுப.

உ-ம். எஎக்கொற்றா ஓஒக்கொற்றா சாத்தா தேவா பூதா எனவரும்.

இவை எனக்கு ஒரு கருமம்பணி எனவும், இங்ஙனஞ் செய்கின்றதனை ஒழி எனவும் முன்னிலையேவற்பொருட்டாய் வந்தன. இதற்கு வல்லெழுத்துப் பெறுமாறு மேலேகூறுப. (எ0)

உஎங. தேற்ற வெகரமுஞ் சிறப்பி னொவ்வு
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்து எய்தாததெய்து வித்தது.

இ - ள். தேற்ற எகரமுஞ் சிறப்பின் ஓவவும் மேற்கூறு இயற்கை = முன்னர் அருத்தாபத்தியாற் பெயர்க்கண் வருமென்ற தேற்றப்பொருண்மையில் எகரமுஞ் சிறப்புப்பொருண்மையில் ஓகரமும் மூன்றிடத்தும் வருமென்ற இலக்கணத்தனவாம்: வல்லெழுத்து மிகா = வல்லெழுத்து மிக்குமுடியா, எனவே முன்னிலைக்கண் வருமென்ற எகர ஒகரங்கள் வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். யானேஎகொண்டேன் நீயேஎகொண்டாய் அவனேஎ கொண்டான் எனவும் யானோஒகொடியன் நீயோஒகொடியை அவனோஒகொடியன் எனவும் பெயர்க்கண் ஈறாய் இயல்பாய்வந்தவாறு காண்க. இது முன்னர் எய்திய இலக்கணம் இகவாமற்காத்தார். முன் நின்ற சூத்திரத்தின் முன்னிலைக்கும் வல்லெழுத்து மிகுத்து எய்தாததெய்துவித்தார். இச்சூத்திரத்திற்கு அளபெடுத்தல் "தெளிவினேயும்" என்னுஞ் சூத்திரத்தாற்கொள்க. எனவே முடிவுபெற்றுழி இங்ஙனம் இடைச்சொல்லும் எடுத்தோதிப் புணர்ப்பரென்பதூஉம் பெற்றாம். (எக)

உஎச. ஏகார விறுதி யூகார வியற்றே.

இது நிறுத்தமுறையானே ஏகார ஈறு அல்வழிக்கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ஏகார இறுதி = ஏகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண்: ஊகார இயற்று = ஊகார ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்துவந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். ஏக்கடிது சேக்கடிது சிறிது தீது பெரிது எனவரும். ()

உஎரு. மாறுகோ ளெச்சமும் வினவு மெண்ணுங்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது இடைச்சொற்கள் இயல்பாய்ப் புணர்கவென எய்தாததெய்துவித்தது.

இ - ள். மாறுகோள் எச்சமும் = மாறுகோடலையுடைய எச்சப் பொருண்மைக்கண்வரும் ஏகார ஈற்று இடைச்சொல்லும்: வினவும் = வினப்பொருண்மைக்கண் வரும் ஏகார ஈற்று இடைச்சொல்

லும்: என்னும்=என்னும்பொருண்மைக்கண் வரும் ஏகார ஈற்று இடைச்சொல்லும்: கூறிய வல்லெழுத்து இயற்கையாகும்=முற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். யானேகொண்டேன் சென்றேன் தந்தேன் போயினேன் என்புழி யான்கொண்டிலேனென மாறுகொண்ட ஒழிபுபட நின்றது. நீயேகொண்டாய் சென்றாய் தந்தாய் போயினாய் எனவும் நிலனே நீரே தீயே வளியே கொற்றனே சாத்தனே எனவும் வரும்.

கூறிய என்றதனாற் பிரிநிலை ஏகாரமும் ஈற்றசை ஏகாரமும் இயல்பாய் முடிதல் கொள்க. அவருள் இவனே கொண்டான் எனவும் "கழியே, சிறுகுரனெய்தலொடுபாடோவாதே-கடலே, பாடெழுந்தொலிக்கும்" எனவும் வரும். (எங)

உஎச. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது இவ் ஈற்று வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமைக்கண்ணும்=ஏகார ஈற்று வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும்: அதனோரற்று=ஊகார ஈறு அல்வழிபோல வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். ஏக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும், வேக்குடம் சாடி தூதை பானை எனவும் வரும்.

வேக்குடம் வேதலையுடைய குடமென விரியும். (எச)

உஎஎ. ஏயெ னிறுதிக் கெகரம் வருமே.

இது வல்லெழுத்தினோடு எகரம் விதித்தலின் எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். ஏயென் இறுதிக்கு எகரம் வரும்=அவ்வேற்றுமைக்கண் ஏயென்னும் இறுதிக்கு எகரம் வரும். எ - று.

உ-ம். ஏஎக்கொட்டில் சாலை துளை புழை எனவரும்.

வருமொழி வரையாதுகூறினமையின் இயல்புகணத்துக்கண்ணும் வருமெனக் கொள்க. ஏஎஞெகிழ்ச்சி நேர்மை எனவரும். உரையிற்கோடலால் எகரம் ஏற்புழிக்கொள்க. (எரு)

உஎஅ. சேவென் மரப்பெய ரொடுமர வியற்றே.

இஃது அவ ஈற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

இ - ள். சே என் மரப்பெயர்=பெற்றமன்றிச் சேவென்னும் மரத்தினை உணரநின்ற பெயர்: ஒடுமர இயற்று=ஒடுமரம்போல மெல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். சேங்கோடு செதிள் தோல் பூ எனவரும். (எசு)

உஎகூ. பெற்ற மாயின் முற்ற வின்வேண்டும்.

இஃது இயைபுவல்லெழுத்து விலக்கி இன் வகுத்தது.

இ - ள். பெற்றம் ஆயின்=முற்கூறிய சேவென்பது பெற்றத்தினை உணர்த்தியபொழுதாயின்: முற்ற இன் வேண்டும்=முடிய இன்சாரியை பெற்று முடியவேண்டும். எ - று.

உ-ம். சேவின்கோடு செவி தலை புறம் எனவரும்.

முற்ற என்றதனானே முற்கூறிய சேவென்னும் மரப்பெயர்க்கும் ஏவென்பதற்கும் உருபிற்கு எய்திய சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்தல்கொள்க. சேவின்கோடு செதிள் தோல் பூ எனவும், ஏவின்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும்.

சாரியைப்பேறு வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்தும் இன்பெறுதல்கொள்க. சேவினலம் மணி வால் சேவினியில் சேவினடை சேவினுட்டம் எனவரும்.

இன்னும் இதனானே இயல்புகணத்துக்கண் இன்பெறாது வருதலுங்கொள்க. செய்யுட்கண் "தென்றற்கு வீணைக்குச் சேமணிக்குக் கோகிலத்திற்—கன்றிற்கு" எனவரும். (எஎ)

உஅo. ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது ஐகார ஈறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது. தொகைமரபினுள் "வேற்றுமையல்வழி இஐயென்னும்" என்பதன்கண் அல்வழிமுடித்தார்.

இ - ள். ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்=ஐகார ஈற்றுப் பெயர்ச்சொன்முன்னா அதிகாரத்தாற் கசதப முதனமொழி வந்துழி: வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகும்=வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயிற் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும். எ - று.

உ-ம். யானைக்கோடு செவி தலை புறம் எனவரும்.

வேற்றுமையாயின் என்றதனுன் உருபுபுணர்ச்சிக்கண்ணும் யானையைக்கொணர்ந்தானென வல்லெழுத்து மிகுதல்கொள்க. ()

உஅக. சுட்டுமுத விறுதி யுருபிய னிலையும்.

இது வல்லெழுதலினோடு வற்று வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். சுட்டுமுதல் இறுதி=சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார ஈற்றுப்பெயர்: உருபியல் நிலையும்=உருபுபுணர்ச்சியிற்கூறிய இயல்புபோலப் பொருட்புணர்ச்சிக்கண் வற்றுப் பெற்று முடியும். எ - று.

உ-ம். அவையற்றுக்கோடு இவையற்றுக்கோடு உவையற்றுக்கோடு செவி தலை புறம் எனவரும். இதனை "வஃகான்மெய்கெட" என்பதனுன் முடிக்க. (எகூ)

உஅஉ. விசைமரக் கிளவியு ஞெமையு நமையு
மாமுப் பெயருஞ் சேமர வியல.

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். விசைமரக் கிளவியும்=விசைத்தற்றொழிலன்றி விசையென்னும் மரத்தை உணரநின்ற சொல்லும்: ஞெமையும்=ஞெமையென்னும் மரத்தினை உணரநின்ற சொல்லும்: நமையும்=நமையென்னும் மரத்தினை உணரநின்ற சொல்லும்: ஆ முப்பெயரும்=ஆகிய அம்மூன்றுபெயரும்: சேமர இயல=வல்லெழுத்து மிகாது சேமரம்போல மெல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். விசைங்கோடு ஞெமைங்கோடு நமைங்கோடு செதிள் தோல் பூ எனவரும். இவை கசதப முதலிய மொழிமேற் தோன்றும் மெல்லெழுத்து என்று உணர்க. (அ0)

உஅங. பனையு மரையு மாவிரைக் கிளவியு
நினையுங் காலை யம்மொடு சிவணு
மையெ னிறுதி யரைவரைந்து கெடுமே
மெய்யவ ணொழிய வென்மனார் புலவர்.

இஃது இயைபுவல்லெழுத்து விலக்கி அம்மு வகுத்தது.

இ - ள். பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும் = பனையென்னும்பெயரும் அரையென்னும்பெயரும் ஆவிரையென்னும் பெயரும்: நினையுங் காலை அம்மொடு சிவணும் = ஆராயுங்காலத்து வல்லெழுத்து மிகாது அம்முச்சாரியையொடு பொருந்தி முடியும்: ஐயென் இறுதி அரைவரைந்து கெடும் = அவ்விடத்து ஐயென்னும் ஈறு அரையென்னுஞ் சொல்லை நீக்கி ஏனை இரணடிற்குங் கெடும்: மெய் அவண் ஒழிய என்மனார் புலவர் = தன்னான் ஊரப்பட்ட மெய்கெடாது அச்சொல்லிடத்தே நிற்க என்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். பனை ஆவிரை என நிறுத்தி அம்மு வருவித்து ஐகாரங் கெடுத்து ஒற்றின்மேலே அகரமேற்றிப் பனங்காய் ஆவிரங்கோடு செதிள் தோல் பூ எனவரும். அரையென நிறுத்தி அம்முக்கொடுத்து ஐகாரங்கெடாது அரையங்கோடு செதிள் தோல் பூ என முடிக்க. வல்லெழுத்துக்கேடு மேலே "கடிநிலையின்று" என்றதனாற் கூறுதும்.

நினையுங்காலையென்றதனாற் றூதுணை வழுதுணை தில்லை ஓலை தாழை என நிறுத்தி அம்முக்கொடுத்து ஐகாரங் கெடுத்துத் தூதுணங்காய் வழுதுணங்காய் தில்லங்காய் ஓலம்போழ் தாழங்காய் எனமுடிக்க. (அக)

உஅச. பனையின் முன்ன ரட்டுவரு காலை
நிலையின் றாகு மையெ னுயிரே
யாகாரம் வருத லாவயி னான.

இது நிலைமொழிச் செய்கை நோக்கி எய்தாததெய்துவித்தது.

இ - ள். பனையின் முன்னர் அட்டு வரு காலை = முற்கூறியவாறன்றிப் பனையென்னுஞ்சொன்முன்னர் அட்டென்னுஞ்சொல் வருமொழியாய் வருங்காலத்து: நிலையின்று ஆகும் ஐயென் உயிர் = நிற்றலில்லையாகும் ஐயென்னும் உயிர்: ஆவயின் ஆன ஆகாரம்

வருதல்=அவ்விடத்து ஆகாரம் வந்து அம்மெய்ம்மேலேறி முடிக. எ - று.

உ-ம். பனாஅட்டு எனவரும். இதற்கு மூன்றாவதும் ஆறாவதும் விரியும்.

ஆவயினான என்றதனால் ஓராநயம் விச்சாவாதி என்னும் வேற்றுமைமுடிபுங் கேட்டாமூலம் பாறுங்கல் என்னும் அல்வழிமுடிபுங் கொள்க. இவற்றுள் வடமொழிகளை மறுத்தலும் ஒன்று. ()

உஅரு. கொடிமுன் வரினே யையவ ணிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி.

இது மேல் ஐகாரங் கெடுத்து அம்முப்பெறுக என்றார், ஈண்டு அது கெடாதுநிற்க என்றலின் எய்தியது இகந்துபடாமற் காத்தது. அம்மு விலக்கி வல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்ததுமாம்.

இ-ள். முன் கொடி வரின்=பனையென்னுஞ் சொன்முன்னர்க் கொடியென்னுஞ் சொல்வரின்: ஐ அவண் நிற்ப=கேடு ஓதிய ஐகாரம் ஆண்டுக் கெடாது நிற்ப: வல்லெழுத்து மிகுதி கடிநிலையின்று=வல்லெழுத்து மிக்குமுடிதல் நீக்குநிலைமையின்று. எ - று.

உ-ம். பனைக்கொடி எனவரும். இதற்கு இரண்டாவதும் மூன்றாவதும் விரியும்.

கடிநிலையின்று என்றதனான் ஐகார ஈற்றுப்பெயர்களெல்லாம் எடுத்தோத்தானும் இலேசானும் அம்முச்சாரியையும் பிறசாரியையும் பெற்றுழி அதிகார வல்லெழுத்துக் கெடுத்துக்கொள்க.

இன்னும் இதனானே உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. பனையின்குறை அரையின்கோடு ஆவிரையின்கோடு விசையின்கோடு ஞெமையின் கோடு நமையின்கோடு எனவும் தூதுணையின்காய் வழுதுணையின்காய் உழையின்கோடு வழையின்கோடு எனவும் வரும்.

பனைத்திரள் பனைந்திரள் என்னும் உறழ்ச்சிமுடிபு தொகைமரபினுட் புறனடையாற் கொள்க; அல்வழியுமாதலின். அன்றி ஈண்டு அவணென்றதனாற் கொள்வாரும் உளர். (அரு)

உஅசு. திங்களு நாளு முந்துகிளந் தன்ன.

இஃது இயைபுவல்லெழுத்திேனடு இக்குச்சாரியையும் வல்லெழுத்து விலக்கி ஆன்சாரியையும் வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதியுங் கூறுகின்றது.

இ-ள். திங்களும் நாளும்=ஐகார ஈற்றுத் திங்களை உணரநின்ற பெயரும் நாளை உணரநின்ற பெயரும்: முந்து கிளந்தன்ன= இகர ஈற்றுத் திங்களும் நாளும் போல இக்கும் ஆனும் பெற்று முடியும். எ - று.

உ-ம். சித்திரைக்குக்கொண்டான் கேட்டையாற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும். சித்திரை நாளாயின் ஆன்சாரியை கொடுக்க. வல்லெழுத்துக்கேடு முன்னர்க் "கடிநிலையின்று" என்றதனாற் கொள்க.

திங்கள் முற்கூறிய முறையன்றிக்கூற்றினால் உழைங்கோடு அமைங்கோடு உடைங்கோடு என மெல்லெழுத்துக் கொடுத்துங் கலைங்கோடு கலைக்கோடு என உறழ்ச்சி எய்துவித்துங் கரியவற்றுக் கோடு குறியவற்றுக்கோடு நெடியவற்றுக்கோடு என ஐகார ஈற்றுப் பண்புப்பெயர்க்கு வற்றுக் கொடுத்து ஐகாரங்கெடுத்து வற்றுமிசையொற்றென்று ஒற்றுக்கெடுத்தும் அவையத்துக்கொண்டான் அவையிற்கொண்டான் என அத்தும் இன்னுங்கொடுத்தும் பனையின் மாண்பு கேட்டையினாட்டினான என இயல்புகணத்துக்கண் இன்சாரியை கொடுத்தும் முடிக்க. ஐகார ஈறு இன்சாரியை பெறுதல் தொகைமரபினுட் கூறாமையின் ஈண்டுக்கொண்டாம். (அச)

உஅஎ. மழையென் கிளவி வளியிய னிலையும்.

இது வல்லெழுத்திேனடு அத்து வகுத்தலின் எய்தியதன் மேற் சிறப்புவிதியும் இயைபுவல்லெழுத்து விலக்கி இன் வகுத்தலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதியுங் கூறுகின்றது.

இ-ள். மழையென்கிளவி=மழையென்னும் ஐகார ஈற்றுச் சொல்: வளியியல் நிலையும்=வளியென்னுஞ் சொல் அத்தும் இன்னும் பெற்றுமுடிந்த இயல்பின்கண்ணே நின்று முடியும். எ - று.

உ-ம். மழையத்துக்கொண்டான் மழையிற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும்.

ஈண்டு இன்பெற்றுழி வல்லெழுத்துக்கேடு "கடிநிலையின்று" என்றதனாற்கொள்க. சாரியைப்பேறு வருமொழி வரையாதுகூறி

னமையின் இயல்புகணைத்துக்கண்ணும் கொள்க. மழையத்துஞான்றுன் மழையின்ஞான்றுன் நிறுத்திஞன் மாட்டிஞன் வந்தான் அடைந்தான் என ஒட்டுக. (அரு)

உஅஅ. செய்யுண் மருங்கின் வேட்கை யென்னு
மையெ னிறுதி யவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுத லென்மனார் புலவர்
டகார ணகார மாதல் வேண்டும்.

இது வேற்றுமைக்கட் செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள். செய்யுள் மருங்கின் வேட்கை என்னும் ஐயென் இறுதி=செய்யுளிடத்து வேட்கையென்னும் ஐகார ஈற்றுச்சொல்: அவா முன் வரின்=அவாவென்னுஞ்சொற்கு முன்னர் வரின்: மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்=அவ் ஐகாரந் தான் ஊர்ந்த மெய்யோடுங் கூடக் கெடுமென்று கூறுவர் புலவர்: டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும்=அவ்விடத்துநின்ற டகார ஒற்று ணகார ஒற்ருய்த் திரிதல்வேண்டும். எ - று.

உ-ம். வேணவாநலியவெய்யவுயிரா" எனவரும்.

வேட்கையாவது பொருள்கள்மேற் றோன்றும் பற்றுள்ளம். அவாவாவது அப்பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேல் நிகழும் ஆசை. எனவே வேட்கையாலுண்டாகிய அவாவென மூன்றனுருபு விரிந்தது. இதனை வேட்கையும் அவாவுமென அல்வழி யென்பாரும் உளர். இங்ஙனங் கூறுவார் பாறங்கல் என்பதனை அம்முக்கொடுத்து ஈண்டு முடிப்பர். (அசு)

உஅகூ. ஓகார விறுதி யேகார வியற்றே.

இஃது ஓகார ஈற்று அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். ஓகார இறுதி ஏகார இயற்று=ஓகார ஈற்றுப் பெயர்ச்சொல் ஏகார ஈற்று அல்வழியின் இயல்பிற்ருய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். ஓக்கடிது சோக்கடிது சிறிது தீது பெரிது எனவரும்.

உகூ0. மாறுகொ ளெச்சமும் வினவு மையமுங்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது இடைச்சொன்முடிபு கூறலின் எய்தாததெய்துவித்தது.

இ - ள். மாறுகொள் எச்சமும் = மாறுபாட்டினைக்கொண்ட எச்சப்பொருண்மையை ஒழிபாகவுடைய ஓகாரமும்: வினாவும் = வினாப்பொருண்மையையுடைய ஓகாரமும்: ஐயமும் = ஐயப்பொருண்மையையுடைய ஓகாரமும்: கூறியவல்லெழுத்து இயற்கையாகும் = முற்கூறிய வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். யானோகொண்டேன் எனவும் நீயோகொண்டாய் எனவும் பத்தோபதினொன்றோ புற்றோபுதலோ எனவும் வரும்.

கூறிய என்றதனான் "யானோ தேறேனவர் பொய்வழங் கலரே" எனப் பிரிநிலையும் நன்றோதீதோகண்டது எனத் தெரிநிலையும் ஓஒகொண்டான் எனச் சிறப்புங் "குன்றுறழ்ந்த களிறென்கோ கொய்யுளை மாவென்கோ" என எண்ணுநிலையும் வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடிதல்கொள்க. இதனானே ஈற்றசை வருமேனும் உணர்க. (அஅ)

உகக. ஒழிந்தத னிலையு மொழிந்தவற் றியற்றே.

இதுவும் அது.

இ - ள். ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற்று இயற்று = ஒழியிசை ஓகாரத்தினது நிலையும் முற்கூறிய ஓகாரங்களின் இயல்பிற்றாய் இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். கொளலோகொண்டான் செலலோசென்றான் தரலோதந்தான் போதலோபோயினான் என ஓசைவேற்றுமையான் ஒருசொற் றோன்றப் பொருள் தந்து நிற்கும். (அகூ)

உகஉ. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே
யொகரம் வருத லாவயி னான.

இஃது ஓகார ஈற்று வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமைக்கண்ணும் அதனோரற்று = ஓகார ஈறு வேற்றுமைக்கண்ணும் அவ் ஏகார ஈற்று அல்வழியோடு ஒத்து வல்லெழுத்து மிக்குமுடியும்: ஆவயினான ஒகரம் வருதல் = அவ்விடத்து ஒகரம் வருக. எ - று.

உ-ம். ஓஒக்கடுமை கோஒக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவரும். (கூ0)

உகூரு. இல்லொடு கிளப்பி னியற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கிற்று. என்னை? முன்னர் வன்கணம் வந்துழி ஒகரம் பெறுகவென வரைந்துகூறாதும் நிலைமொழித்தொழில் வரையாதுங் கூறலின் நான்குகணத்துக்கண்ணுஞ் சேறலின்.

இ - ள். இல்லொடு கிளப்பின் இயற்கையாகும் = ஓகார ஈற்றுக் கோவென்னும் மொழியினை இல்லென்னும் வருமொழியோடு சொல்லின் ஒகரம் மிகாது இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். கோவில் எனவரும். கோவென்றது உயர்திணைப்பெயரன்றோவெனின், கோவந்ததென்று அஃறிணையாய் முடிதலின் அஃறிணைப்பாற்பட்டதென்க. (கூக)

உகூச. உருபிய னிலையு மொழியுமா ருளவே
யாவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இது வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். உருபியல் நிலையும் மொழியுமாருள = ஓகார ஈற்றுச் சிலபொருட்புணர்ச்சிக்கண் உருபுபுணர்ச்சியது இயல்பிலேநின்று ஒன்சாரியை பெற்று முடியும் மொழிகளும் உள: ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும் = அவ்விடத்து வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். கோஒன்கை செவி தலை புறம் எனவரும்.

சாரியைப்பேறு வருமொழி வல்லெழுத்தை விலக்காமை இதனானும் பெற்றாம். (கூஉ)

உகூரு. ஔகார விறுதிப் பெயர்நிலை முன்ன
ரல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
யவ்விரு வீற்று முகரம் வருதல்
செவ்வி தென்ப சிறந்திசி னோரே.

இஃது ஔகார ஈறு இருவழியும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர் = ஔகாரம் இறுதியாகிய பெயர்ச்சொன்முன்னர் வல்லெழுத்து முதன்மொழி

வருமொழியாய் வரின்: அல்வழியானும் வேற்றுமைக்கண்ணும் = அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும்: வல்லெழுத்து மிகுதல் வரைநிலையின்று = வல்லெழுத்து மிக்குமுடிதல் நீக்குநிலைமையின்று: அவ் இரு ஈற்றும் உகரம் வருதல் செவ்விதென்ப சிறந்திசினோர் = அவவிருகூற்று முடிபின்கண்ணும் நிலைமொழிக்கண் உகரம்வந்து முடிதல் செவ்விதென்று சொல்லுவர் சிறந்தோர். எ - று.

உ-ம். கௌவுக்கடிது சிறிது தீது பெரிது எனவும் கடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும்.

செவ்விதென்றதனான் மென்கணத்தும் இடைக்கணத்தும் உகரம்பெறுதல் கொள்க. கௌவுஞெமிர்ந்தது ஞெமிர்ச்சி எனவும் வெளவுவலிது வலிமை எனவும் வரும்.

நிலைமொழியென்றதனாற் கௌவின்கடுமை என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்வுங்கொள்க.

இன்னும் இதனானே ஐகாரமும் இகரமும் வேற்றுமைக்கண் உருபு தொகையாயுழி இயல்பாதல் கொள்க, (கஙு)

ஏழாவது உயிர்மயங்கியல் முற்றிற்று.

எட்டாவது

புள்ளிமயங்கியல்.

உகக. ஞகாரை யொற்றிய தொழி[illegible]பெயர் முன்ன
ரல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே
யுகரம் வருத லாவயி னான.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே உயிரீறுபுணர்த்துப் புள்ளியீறு வன்கணத்தோடுஞ் சிறுபான்மை ஏனைக்கணத்தோடும் புணருமாறு கூறலின் இவ்வோத்துப் புள்ளிமயங்கியலென்னும் பெயர்த்தாயிற்று.

இச்சூத்திரம் ஞகார ஈறு வன்கணத்தோடு இருவழியும் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர் = ஞகாரம் ஈற்றின்கண் ஒற்றாகநின்ற தொழிற்பெயரின்முன்னர்: அல்லது

கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும் = அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமையைச் சொல்லுமிடத்தும்: வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகும் = வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வரின் அவ்வல்லெழுத்து வருமொழிக்கண் மிக்குமுடியும்: ஆவயின் ஆன உகரம் வருதல் = அவ்விடத்து உகரம் வருக. எ-று.

உ-ம். உரிஞுக்கடிது சிறிது தீது பெரிது எனவும் உரிஞுக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும். (௧)

௨௯௭. ஞநமவ வியையினு முகர நிலையும்.

இஃது அவ் ஈறு மென்கணத்தோடும் இடைக்கணத்து வகரத்தோடும் முடியுமென எய்தாததெய்துவித்தது.

இ - ள். ஞநமவ இயையினும் உகரம் நிலையும் = அஞ்ஞகர ஈறு வன்கணமன்றி ஞநமவ முதன்மொழி வருமொழியாய்வரினும் நிலைமொழிக்கண் உகரம் நிலைபெற்றுமுடியும். எ - று.

உ-ம். உரிஞுஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும்.

யகரத்தோடும் உயிரோடும் புணருமாறு தொகைமரபினுள் "உகரமொடுபுணரும்" என்பதனாற் கூறினார். (௨)

௨௯௮. நகர விறுதியு மதனோ ரற்றே.

இது நகர ஈறு முற்கூறிய கணங்களோடு அல்வழிக்கண் முடியுமாறு கூறி எய்தாததெய்துவிக்கின்றது.

இ - ள். நகர இறுதியும் = நகர ஈற்றுப்பெயரும் முற்கூறிய கணங்களோடு புணரும்வழி: அதனோரற்று = அஞ்ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வல்லெழுத்துவந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு உகரம்பெற்றும் ஞநமவ வந்துழி உகரம்பெற்றும் முடியும். எ - று.

உ-ம். பொருநுக்கடிது வெரிநுக்கடிது சிறிது தீது பெரிது எனவும் ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் வரும். முடிபு ஒப்புமைநோக்கி நகர ஈறு ஈண்டுப் புணர்த்தார். ஈண்டு வேற்றுமையொழித்தது மாட்டேறுசென்றதென்று உணர்க. (௩)

௨௯௯. வேற்றுமைக் குக்கெட வகர நிலையும்.

இது நிலைமொழி உகரம்விலக்கி அகரம்வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். வேற்றுமைக்கு=அந்நகர ஈறு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கு: உக்கெட அகரம் நிலையும்=மேலெய்திய உகரங் கெட அகரத்தோடு நிலைபெற்றுப் புணரும். எ - று.

உ-ம். பொருநக்கடுமை வெரிநக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவரும். அகரநிலையுமென்னுது உகரங்கெட என்றதனான் உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்வுஞ் சிறுபான்மை உகரப்பேறுங் கொள்க. வெரிநின்குறை பொருநின்குறை உரிஞின் குறை எனவும் "உயவல் யானை வெரிநுச் சென்றனன்" எனவும் வரும். யானையினது முதுகின்மேற் சென்றனன் என விரிக்க.

பொருந் என்பது ஒருசாதிப்பெயரும் பொருந்துதலென்னும் வினைப்பெயருமாம். (௪)

௩௦௦. வெரிநெ னிறுதி முழுதுங் கெடுவழி
வருமிட னுடைத்தே மெல்லெழுத் தியற்கை.

இஃது அந்நகர ஈற்றுள் ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். வெரிந் என் இறுதி=வெரிநென்று சொல்லப்படும் நகர ஈற்றுமொழி: முழுதுங் கெடுவழி=த[illegible] ஈற்று நகரம் முன் பெற்ற உகரத்தோடு எஞ்சாமைக் கெட்ட இடத்து: மெல்லெழுத்து இயற்கை வரும் இடன் உடைத்து=மெல்லெழுத்துப்பெறும் இயல்பு வந்து முடியும் இடனுடைத்து. எ - று.

உ-ம். வெரிங்குறை செய்கை தலை புறம் எனவரும். மெல்லெழுத்து வருமொழிநோக்கி வந்தது. "வெயில்வெரிநிறுத்தபயிலிதழ்ப்பசுங்குடை" என்பதில் நகர இகரமே இட்டெழுதுப. (௫)

௩௦௧. ஆவயின் வல்லெழுத்து மிகுதலு முரித்தே.

இஃது அதற்கு எய்தாததெய்துவித்தது.

இ - ள். ஆவயின்=அவ்வெரிந் என்னுஞ் சொல் அவ்வாறு ஈறு கெட்டு நின்ற இடத்து: வல்லெழுத்து மிகுதலும்

உரித்து=மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்குமுடிதலும் உரித்து. எ - று.

உ-ம். வெரிக்குறை செய்கை தலை புறம் எனவரும். (சு)

௩0௨. ணகார விறுதி வல்லெழுத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது நிறுத்தமுறையானே ணகார ஈறு வேற்றுமைப்பொருட்கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ணகார இறுதி=ணகார ஈற்றுப்பெயர்: வல்லெழுத்து இயையின்=வல்லெழுத்து முதன்மொழி வந்து இயையின்: டகாரமாகும் வேற்றுமைப் பொருட்கு=டகாரமாகத் திரிந்து முடியும் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண். எ - று.

உ-ம். மட்குடம் சாடி தூதை பானை எனவரும். மண்கை புண்கை என்பன இரண்டாவதன் திரிபின் முடிந்தன.

கவண்கால் பரண்கால் என்பன மேல் முடித்தும். (எ)

௩0௩. ஆணும் பெண்ணு மஃறிணை யியற்கை.

இஃது இவ் ஈற்று விரவுப்பெயருட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். ஆணும் பெண்ணும்=ஆணென்னும் விரவுப்பெயரும் பெண்ணென்னும் விரவுப்பெயரும்: அஃறிணை இயற்கை=தொகைமரபினுள் "மொழிமுதலாகும்" என்பதன்கண் அஃறிணைப் பெயர் முடிந்த இயல்புபோலத் தாமும் வேற்றுமைக்கண் இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். ஆண்கை பெண்கை செவி தலை புறம் எனவரும்.

இது தொகைமரபினுள் "அஃறிணைவிரவுப்பெயர்" என்பதனுள் முடிந்த இயல்பன்றோவெனின், இவை ஆண்டு முடிந்தன போலத் தத்தம் மரபின் வினையாற் பாலறியப்படுவன அன்றி இருதிணைக்கண்ணும் அஃறிணையாய் முடிதலின் அஃறிணைப்பெயரது இயல்போடு மாட்டெறிந்து முடித்தாரென்க. ஆண்கடிது பெண்கடிது என்னும் அல்வழிமுடிபு "மொழிமுதலாகும்" என்பதன்கண் வருமொழி முற்கூறியவதனான் முடிக்க. (அ)

௩௦௪. ஆண்மரக் கிளவி யரைமர வியற்றே.

இது திரிபுவிலக்கிச் சாரியைவகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ-ள். ஆண்மரக் கிளவி = ஆண்பாலை உணர்த்தாது ஆணென்னும் மரத்தினை உணரநின்ற சொல்: அரை மர இயற்று = அரையென்னும் மரம் அம்முப்பெற்ற இயல்பிற்றாய்த் தானும் அம்முப் பெற்று முடியும். எ - று.

உ-ம். ஆணங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

ஒன்றெனமுடித்தலான் இயல்புகணத்துங் கொள்க. ஆணநார் இலை எனவரும்.

விரவுப்பெயரன்றென்றற்கு மரமென்றார். (கூ)

௩௦௫. விண்ணென வருஉங் காயப் பெயர்வயி
னுண்மையு முரித்தே யத்தென் சாரியை
செய்யுண் மருங்கிற் றொழில்வரு காலை.

இது செய்யுளுட் திரிபு விலக்கிச் சாரியை வகுத்தது.

இ-ள். விண் எனவருஉங் காயப் பெயர்வயின் = விண்ணென்று சொல்லவருகிற ஆகாயத்தை உணரநின்ற பெயர்க்கண்: அத்து என் சாரியை மிகுதலும் உரித்து = அத்தென்னுஞ் சாரியை உண்டாதலும் உரித்து இல்லையாதலும் உரித்து: செய்யுள் மருங்கிற் றொழில் வரு காலை = செய்யுளிடத்துத் தொழிற்சொல் வருங் காலத்து. எ - று.

உ-ம். "விண்ணத்துக்கொட்கும் வண்ணத்தமரர்" "விண்ணத்துக்கொட்கும் விரைசெலலூர்தியோய்" எனவும் "விண்குத்துநீள் வரைவெற்பகளைபவோ" எனவும் வரும். விண்ணென்னுங்குறிப்பினை நீக்குதற்குக் காயமென்றார்.

விண்வத்துக்கொட்கும் என உடம்படுமெய் புணர்ந்துநிற்றலுங் கொள்க. அதிகார வல்லெழுத்தன்மையிற் சாரியை வல்லெழுத்துக் கொடுக்க. (கㄖ)

௩௦௬. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது இவ் ஈற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி உகரமும் வல்லெழுத்தும் விதிக்கின்றது.

இ - ள். தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல= அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகார ஈற்றுத் தொழிற் பெயரது இயல்பிற்றாய் வன்கணம் வந்துழி வல்லெழுத்தும் உகரமும் பெற்றும் மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும் முடியும். எ - று.

உ-ம். மண்ணுக்கடிது பண்ணுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், மண்ணுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும்.

எல்லாமென்றதனாற் தொழிற்பெயரல்லனவும் உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் இன்சாரியைபெற்றும் புணர்வனகொள்க. வெண்ணுக்கரை "தாழ்பெயல் கனைகுரல்கடுப்பப் பண்ணுப்பெயர்த்து" எண்ணுப்பாறு வெண்ணின்கரை என வரும். (கக)

௩௦௭. கிளைப்பெய ரெல்லாங் கொளத்திரி பிலவே.

இஃது இவற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி இயல்புகூறுதலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ள். கிளைப் பெயரெல்லாம்=ணகார ஈற்றுள் ஓரினத்தை உணரநின்ற பெயரெல்லாம்: கொளத் திரிபு இல=திரிபுடைய வென்று கருதும்படியாகத் திரிதலின்றாய் இயல்பாய் முடியும்.எ-று.

உ-ம். உமண் என நிறுத்திக் குடி சேரி தோட்டம் பாடி எனத் தந்துமுடிக்க.

இனி எல்லாமென்றதனாற் பிற சாரியைபெற்று முடிவனவும் இயல்பாய் முடிவனவுங் கொள்க. மண்ணப்பத்தம் எண்ணநொலை எனவும் கவண்கால் பரண்கால் எனவும் கொள்க.

கொள என்றதனால் ஏழாம்வேற்றுமைப்பொருண்மை உணரநின்ற இடைச்சொற்கள் திரிந்து முடிவனவுங் கொள்க. அங்கட் கொண்டான் இங்கட்கொண்டான் உங்கட்கொண்டான் எங்கட் கொண்டான் எனவும், ஆங்கட்கொண்டான் ஈங்கட்கொண்டான் ஊங்கட்கொண்டான் யாங்கட்கொண்டான் எனவும், அவட்கொண்

டான் இவட்கொண்டான் உவட்கொண்டான் எவட்கொண்டான் எனவும் ஒட்டுக. (க௨)

௩௦அ. வேற்றுமை யல்வழி யெண்ணெ னுணவுப்பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே.

இஃது அவ்வீற்றுள் ஒன்று அல்வழியுள் வேற்றுமைமுடிபு போலத் திரிந்து முடியுமாறு கூறுகின்றது.

இ-ள். வேற்றுமை அல்வழி=வேற்றுமையல்லாத இடத்து: எண்ணென் உணவுப்பெயர்=வரையறைப்பொருண்மை உணர்த்தாது எண்ணென்று சொல்லப்படும் உணவினை உணர்த்தும்பெயர்: வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்து=வேற்றுமையது திரிந்து முடியும் இயல்பு நிற்றலும் உரித்து. எ - று.

உ-ம். எட்கடிது சிறிது தீது பெரிது எனவரும். உம்மை யாற் றொகைமரபினுள் "மொழிமுதலாகும்" என்றதனாற் கூறிய இயல்பு பெரும்பான்மையாயிற்று.

அஃது எண்கடிது என வரும். (க௩)

௩௦௯. முரணென் றொழிற்பெயர் முதலிய னிலையும்.

இஃது இவ் ஈற்றுட் தொழிற்பெயருள் ஒன்றற்குத் தொழிற் பெயர்க்கு எய்திய உகரமும் வல்லெழுத்தும் விலக்கி இவ் ஈற்று அல்வழிமுடிபும் வேற்றுமைமுடிபும் எய்துவித்தது.

இ - ள். முரண் என் தொழிற்பெயர்=மாறுபாடு உணர்த்தும் முரணென்னுந் தொழிற்பெயர்: முதலியல் நிலையும்=தொகைமரபிற் கூறிய அல்வழிக்கட் திரியாது முடிந்த இயல்பின்கண்ணும் ஈண்டு வேற்றுமைக்கட் திரிந்து முடிந்த இயல்பின்கண்ணும் நிலைபெற்று முடியும். எ - று.

உ-ம். முரண்கடிது சிறிது தீது பெரிது ஞெகிழ்ந்தது நீண்டது மாண்டது வலிது எனவும், முரட்கடுமை சேனை தானை பறை எனவும் முரண்ஞெகிழ்ச்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும். இதனைத் தொழிற்பெயரெல்லாம் என்றதன்பின் வையாத முறையன்றிக் கூற்றினான் முரண்கடுமை முரட்கடுமை அரண்கடுமை அரட்கடுமை என்னும் உறழ்ச்சியுங் கொள்க. (க௪)

௩க௦. மகர விறுதி வேற்றுமை யாயிற்
றுவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே.

இது முறையானே மகர ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். மகர இறுதி வேற்றுமை ஆயின்=மகர ஈற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்ணாயின்: துவரக் கெட்டு வல்லெழுத்து மிகும்=அந்நிலைமொழி மகரம் முற்றக் கெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும். எ - று.

உ-ம். மரக்கோடு செதிள் தோல் பூ எனவரும். முண்டகக் கோதை எனவும் வரும்.

துவர என்றதனான் இயல்புகணத்துக்கண்ணும் உயர்திணைப் பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் மகரக்கேடு கொள்க. மரஞாண் மரநூல் இவற்றிற்கு நான்கனுருபு விரிக்க. மரமணி யாழ் வட்டு அடை ஆடை என ஒட்டுக. நங்கை எங்கை செவி தலை புறம் எனவும் தங்கை செவி தலை புறம் எனவும் வரும். ஈண்டு மகரக்கேடே கொள்க. முடிபுமேற்கூறுப. (கரு)

நகக. அகர ஆகாரம் வரூஉங் காலை
யீற்றுமிசை யகர நீடலு முரித்தே.

இஃது அவ் ஈற்று முடிபு வேற்றுமையுடையன கூறுகின்றது.

இ - ள். அகர ஆகாரம் வரூஉங் காலை=அகரமுதன்மொழியும் ஆகாரமுதன்மொழியும் வருமொழியாய் வருங்காலத்து: ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்து=மகர ஒற்றின்மேல் நின்ற அகரம் நீண்டுமுடிதலும் உரித்து நீடாமையும் உரித்து. எ - று.

உ-ம். மரம் குளம் என நிறுத்தி மகரங்கெடுத்து அடி ஆம்பல் எனத் தந்து ரகர ளகரங்களில் நின்ற அகரம் ஆகாரமாக்கி மராஅடி குளாஅம்பல் என முடிக்க.

மேற் "செல்வழி யறிதல் வழக்கத் தான" என்பதனாற் குளாஅம்பலென்புழி ஆகாரத்தை அகரமாக்குக.

உம்மையான் மரவடி குளவாம்பல் என நீடாமையுங் கொள்க.

வருமொழி முற்கூறியவதனான் இவ் ஈற்றுப் பிறவும் வேறுபட முடிவன கொள்க. கோணக்கோணம் கோணவட்டம் எனவரும். இவற்றிற்கு உள்ளென்னும் உருபு விரிக்க.

கோணகோணத்திற்கு வல்லெழுத்துக்கேடு மேலைச்சூத்திரத்து இலேசாற்கொள்க. (௧௬)

௩௧௨. மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே
செல்வழி யறிதல் வழக்கத் தான.

இது மகரங்கெட்டு வல்லெழுத்து மிகுதலோடு மெல்லெழுத்தும் உறழ்க என்றலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். மெல்லெழுத்து உறழும் மொழியுமாருள = மகர ஈற்றுள் வல்லெழுத்தினோடு மெல்லெழுத்துப் பெற்று உறழ்ந்து முடியும் மொழிகளும் உள: வழக்கத்து ஆன செல்வழி அறிதல் = வழக்கத்தின்கண்ணும் வழங்கும் இடம் அறிக. எ - று.

உ-ம். குளங்கரை குளக்கரை சேறு தாது பூழி எனவரும். இவற்றுட் குளங்கரை குளக்கரை போல அல்லன ஒத்த உறழ்ச்சியாய் வழங்காவென்றற்குச் செல்வழியறிதலென்றார்.

வழக்கத்தான என்றதனான் குளத்துக்கொண்டான் ஈழத்துச் சென்றான் குடத்துவாய் பிலத்துவாய் என்றாற்போல்வன மகரங்கெட்டு அத்துப்பெற்றன. இவை "அத்தேவற்றே" என்பதனான் ஒற்றுக் கெடாதாயிற்று, அஃது அல்வழிக்குக் கூறுதலின். மழகளிறு என்பது "மழவுங் குழவு மிளமைப் பொருள." என்ற உரிச்சொல். அது மகர ஈறன்று. சண்பகங்கோடு என்பது வழக்கிடத்துச் செல்லாது.

இன்னும் இதனானே மகரங் கெடாதுநிற்பனவுங் கொள்க. "புலம்புக்கனனே" "கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ" எனவரும். (௧௭)

௩௧௩. இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே.

இஃது இவ் ஈற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

இ - ள். இல்ல மரப் பெயர் = புக்கு உறையும் இல்லன்றி இல்லமென்னும் மரத்தினை உணரநின்ற சொல்: விசை மர இயற்று = விசையென்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும். எ - று.

உ-ம். இல்லங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

மேலைச்சூத்திரத்து "வழக்கத்தான" என்றதனான் மகரக்கேடு கொள்க. (கஅ)

௩கச. அல்வழி யெல்லா மெல்லெழுத் தாகும்.

இது மகரம் அல்வழிக்கட் டிரிக என முற்கூறாமையின் எய்தாததெய்துவித்தது.

இ - ள். அல்வழியெல்லாம் மெல்லெழுத்தாகும்=மகர ஈறு அல்வழிக்கணெல்லாம் மெல்லெழுத்தாய்த் திரிந்துமுடியும். எ-று.

உ-ம். மரங்குறிது சிறிது தீது பெரிது எனவரும். மரம்பெரிது என்புழித் திரிபின்றென்பது ஆணைகூறலென்னும் உத்தி.

இனி எல்லாமென்றதனால் அல்வழிக்கண் மகர ஈறு பிறவாற்றான் முடிவனவெல்லாம் முடிக்க. வட்டத்தடுக்கு சதுரப்பலகை ஆய்தப்புள்ளி வேழக்கரும்பு கலக்கொள் சுக்கு தோரை பயறு நிலக்கண் என்னும் பண்புப்பெயர்கள் மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்குமுடிந்தன. ஆய்தவுலக்கை அகரமுதல இவை இயல்புகணத்துக்கண் மகரங்கெட்டு முடிந்தன. எல்லாருங்குறியர் நாங்குறியேம் இவை உயர்திணைப்பெயர் மகரந் திரிந்து மெல்லெழுத்தாய் முடிந்தன. கொல்லுங்கொற்றன் உண்ணுஞ்சாத்தன் கவளமாந்துமலை கெழுநாடன் பொருமாரன் தாவுபரி பறக்குநாரை ஓடுநாகம் ஆடுபோர் வருகாலம் கொல்லும்யானை பாடும்பாணன் என இவை மகரந் திரிந்துங் கெட்டும் நிலைபெற்றும் வந்த பெயரெச்சம்.

இன்னும் இதனானே இயல்புகணத்துக்கண்ணும் மகரங் கெடுதலுங் கெடாமையுங் கொள்க. மரஞான்றது நீண்டது மாண்டது எனவும், மரம்யாது வலிது அடைந்தது எனவும் வரும். இன்னும் இதனானே பவளவாயென உவமத்தும் நிலநீரென எண்ணிடத்துங் கேடுகொள்க. (கக)

௩கரு. அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுத லாவயி னான.

இது மகர ஈற்று அல்வழிக்கண் இம்மொழி இம்முடிபு எய்துக என்றலின் எய்தாததெய்துவித்தது.

இ - ள். அகம் என் கிளவிக்குக் கை முன் வரின் = அகமென்னுஞ் சொல்லிற்குக் கையென்னுஞ் சொல் முன்னே வருமாயின்: முதனிலை ஒழிய முன்னவை கெடுதலும் = முன்னின்ற அகரங்கெடாது நிற்ப அதன்முன்னின்ற ககரமும் மகரவொற்றுங் கெட்டு முடிதலுங் கெடாதுநின்று முடிதலும்: வரைநிலை இன்றே யாசிரியர்க்க = நீக்குநிலைமையின்று ஆசிரியர்க்கு: ஆவயின் ஆன மெல்லெழுத்து மிகுதல் = அவை கெட்டவழி மெல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். அங்கை எனவரும். அகங்கை எனக் கெடாதுமுடிந்தவழி அல்வழியெல்லாம் என்றதனன் மகரந் திரிந்துமுடிதல் கொள்க. இது பண்புத்தொகை. அதிகாரத்தானும் பொருளனுக் கானும் வேற்றுமைத்தொகையன்மை உணர்க. (௨௦)

௩௧௬. இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலு முரித்தே செய்யு ளான.

இஃது இலமென்பது முற்றுவினைச்சொல்லாகாது குறிப்பாகிய உரிச்சொல்லாய் நிற்குங்கால் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். இலம் என் கிளவிக்கு = இல்லாமையென்னுங் குறிப்பாகிய உரிச்சொற்கு: படு வரு காலை = உண்டாதலென்னும் வினைக் குறிப்புப்பெயர் வருமொழியாய் வருங்காலத்து: செய்யுளான நிலையலும் உரித்து = செய்யுளிடத்து மகரக்கேடுந் திரிபுமின்றி நிற்றலும் உரித்து. எ - று.

எனவே உம்மையாற் பிறசொல் வருங்காலத்துக் கேடுந் திரிபும் பெற்றுநிற்றலும் உரித்தெனக் கொள்க.

உ-ம். "இலம்படுபுலவரேற்றகைநிறைய" இதற்கு இல்லாமை உண்டாகின்ற புலவரெனப் பொருள்கூறுக. "இலம்பாடுநாணுத்தரும்" என்கின்றதோவெனின், இல்லாமை உண்டாதல் நாணுத்தருமென்று பொருள்கூறுக. இதனை நெற்பாடு பெரிதென்றாற்போலக் கொள்க. இது பொருளிலமென முற்றுவினைச்சொல்லாமாறும் உணர்க. இலநின்றதெனக் கெட்டவாறும் இலங்கெடவியந்தான் இலஞ்சிறிதாக இலந்தீதென்று எனக் கசதக்கள் வரும்வழித் திரிந்தவாறுங் காண்க.

எல்லாமென்றதனுன் இலம்வருவதுபோலும் இலம்யாரிடத்தது என வகர யகரங்களின்முன்னர்க் கெடாதுநிற்றல் கொள்க.

இதனை இலத்தாற்பற்றப்பட்டபுலவரென வேற்றுமையென்ருரால் உரையாசிரியரெனின், பற்றப்பட்ட புலவரென்பது பெயரெச்சமாதலிற் பற்றவென்னுந் தொழில் தோற்றுவிக்கின்ற முதனிலைச்சொல்லைச் சூத்திரத்து ஆசிரியர் எடுத்தோதிற்றிலராதலானும் படுவென்பதுதானும் புலவரென்னும் பெயரோடு முடியுங்கால் இரண்டுகாலமுங் காட்டும் ஈறுகள் தொக்க முதனிலைச்சொல்லாய் நிற்றலின் அதனை எடுத்தோதினுராதலானும் ஆசிரியர்க்கு அங்ஙனங் கூறுதல் கருத்தன்மை உணர்க.

அன்றியும்பற்றப்பட்ட என்புழி இரண்டுமுதனிலை கூடி ஒன்ருய்நின்று பற்றுதலைச்செய்யப்பட்ட எனப்பொருள் தாராமையானும் அவ்வழியதிகாரமாதலானும் அதுபொருளன்மை உணர்க. ()

ங௬எ. அத்தொடு சிவணு மாயிரத் திறுதி
யொத்த வெண்ணு முன்வரு காலை.

இது இவ் ஈற்றுள் எண்ணுப்பொருள் ஒன்றற்குத் தொகைமரபினுள் "உயிரும் புள்ளியு மிறுதி யாகி" என்பதனுன் எய்திய ஏயென் சாரியை விலக்கி அத்து வகுக்கின்றது.

இ - ள். ஆயிரத்து இறுதி=ஆயிரமென்னும் எண்ணுப்பெயரின் மகரம்: ஒத்த எண் முன்வருகாலை=தனக்கு அகப்படும் மொழியாய்ப் பொருந்தின எண்ணுப்பெயர் தன்முன் வருங்காலத்து: அத்தொடு சிவணும்=தொகைமரபிற்கூறிய ஏயென்சாரியை ஒழித்து அத்துச்சாரியையோடு பொருந்தி முடியும். எ - று.

உ-ம். ஆயிரத்தொன்று ஆயிரத்தொன்பது என ஒன்றுமுதல் ஒன்பதின்காறும் ஒட்டுக. மகரத்தை அத்தின்மிசையொற்றென்று கெடுத்து "அத்தினகரமகரமுனையில்லை" என்று முடிக்க. ஆயிரத்தொருபது என்ருற்போல்வனவற்றிற்கும் ஒட்டுக.

நிலைமொழி முற்கூருததனுன் ஆயிரத்துக்குறை கூறு முதல் என்பனவுங் கொள்க. இன்னும் இதனுனே ஆயிரப்பத்தென்புழி மகரங்கெடுத்து வல்லொற்று மிகுத்துமுடிக்க. (உஉ)

ங௬அ. அடையொடு தோன்றினு மதனோ ரற்றே.

இஃது "அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய" என்றமையின் அவ்வெண்ணுப்பெயரை அடையடுத்து முடிக்கின்றது.

இ - ள். அடையொடு தோன்றினும் = அவ்வாயிரமென்னும் எண்ணுப்பெயர் அடையடுத்த மொழியோடு வரினும்: அதனோரற்று = முற்கூறியதனோடு ஒருதன்மைத்தாய் அத்துப்பெற்று முடியும். எ - று.

உ-ம். பதினாயிரத்தொன்று இரண்டு இருபதினாயிரத்தொன்று ஆறாயிரத்தொன்று நூறாயிரத்தொன்று மூந்நூறாயிரத்தொன்று ஐந்நூறாயிரத்தொன்று என ஒட்டுக. முன்னர் இலேசினான் முடிந்தவற்றையும் அடையடுத்து ஒட்டுக. பதினாயிரத்துக்குறை புறங்கூறு முதல் எனவும் நூறாயிரப்பத்து எனவும் வரும். (உங)

ஙககூ. அளவு நிறையும் வேற்றுமை யியல.

இஃது அவ்வெண்ணின்முன்னர் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வந்தால் முடியுமாறு கூறுதலின் எய்தாததெய்துவித்தது.

இ - ள். அளவும் நிறையும் = அதிகாரத்தால் ஆயிரந் தானே நின்றுழியும் அடையடுத்து நின்றுழியும் அளவுப்பெயரும ...றைப்பெயரும் வந்தால்: வேற்றுமை இயல = மகர ஈற்று வேற்றுமையோடு ஒத்து வல்லெழுத்து வந்துழி மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கும் இயல்புகணம் வந்துழித் துவர என்னும் இலேசான் எய்திய மகரங் கெடடும் புணரும். எ - று.

உ-ம். ஆயிரம் பதினாயிரம் நூறாயிரம் என நிறுத்திக் கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டில் அகல் உழக்கு எனவும் கஃசு கழஞ்சு தொடி துலாம் பலம் எனவுந் தந்து ஒட்டுக.

வேற்றுமையியல எனவே தாம் வேற்றுமையல்லவாயின. ()

ஙஉ0. படர்க்கைப் பெயரு முன்னிலைப் பெயருந்
தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயி னுருபிய னிலையு
மெல்லெழுத்து மிகுத லாவயி னான.

இஃது உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் உருபியலுள் முடிந்தவாறே ஈண்டுப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் முடிகவென எய்தாததெய்துவித்தது.

இ - ள். படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும்=எல்லாருமென்னும் படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் எல்லீருமென்னும் முன்னிலைப்பெயரும்: தொடக்கங் குறுகும் பெயர்நிலைக்கிளவியும்=கிளைத்தொடர்ச்சிப் பொருளவாய் நெடுமுதல் குறுகிமுடியுந் தாம் நாம் யாமென்னும் பெயராகிய நிலைமையையுடைய சொல்லும்: வேற்றுமையாயின் உருபியல் நிலையும்=வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணாயின் உருபுபுணர்ச்சிக்குக் கூறிய இயல் பின்கண்ணே நின்று முடியும்: ஆவயின் ஆன மெல்லெழுத்து மிகுதல்=மேல் நெடுமுதல் குறுகும் மொழிக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியும். எ - று.

எல்லாருமென்பதனை மகர ஒற்றும் உகரமுங் கெடுத்து ரகரப்புள்ளியை நிறுத்திக் கை செவி தலை புறம் எனத் தந்து இடையிலே தம்முச்சாரியையும் இறுதியிலே உம்முச்சாரியையுங் கொடுத்து எல்லார்தங்கையும் செவியும் தலையும் புறமும் என முடிக்க. இதற்கு "அம்மினிறுதி" என்னுஞ் சூத்திரத்துட் "தன்மெய்" என்றதனாற் பிறசாரியைக்கண் மகர ஒற்றுத் திரிந்து "ஙஞநவாகும்" எனச் செய்கைசெய்து முடிக்க. எல்லீருமென்பதற்கு இடையிலே நும்முச்சாரியையும் இறுதியிலே உம்முச்சாரியையுங் கொடுத்து முற்கூறிய செய்கைகளெல்லாஞ் செய்து எல்லீர்நுங்கையும் செவியும் தலையும் புறமும் எனமுடிக்க. தாம் நாம் என்பனவற்றை "ஏனையிரண்டு நெடுமுதல்குறுகும்"எனக் குறுக்கி"மகரவிறுதி"என்பதனான் மகரங்கெடுத்துத் தங்கை நங்கை செவி தலை புறம் என முடிக்க. யாம் என்பதனை ஆகாரத்தை எகரமாக்கி யகர ஒற்றைக்கெடுத்து "மகரவிறுதி" என்றதனால் மகரங்கெடுத்து எங்கை செவி தலை புறம் என முடிக்க. தொடக்கங் குறுகுவனவற்றிற்கு இச்சூத்திரத்தான் மெல்லெழுத்து மிகுக்க.

உருபியல் நிலையும் என்பதனான் வேற்றுமையாதல் பெறுநிற்கவும் பின்னும் வேற்றுமையாயினென்ற மிகையானே படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் இயல்புகணத்து ஞகாரமும் நகாரமும் வந்துழித் தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் பெறுதலும் மகரங்கெட்டு உம்முப்பெறுதலும் ஆவயினான என்றதனான் ஒற்று இரட்டுதலுங் கொள்க. எல்லார்தஞ்ஞாணும் எல்லீர்நுஞ் ஞாணும் நூலும் எனவரும்.

இனித் தொடக்கங்குறுகுவனவற்றிற்கும் அவ்விரண்டு இலேசானும் மகரங்கெடுதலும் ஒற்று இரட்டுதலுங் கொள்க. தஞ்ஞாண் நஞ்ஞாண் எஞ்ஞாண் நூல் எனவரும்.

இன்னும் ஆவயினை என்றதனானே எல்லார்தம் எல்லீர்நும் என நின்றவற்றின் முன்னர் ஏனை மணி யாழ் வட்டு அடை என்பன வந்துழி மகரங்கெடாமையும் உம்முப்பெறுதலுங்கொள்க.

இன்னும் இதனானே தொடக்கங் குறுகுவனவற்றிற்குந் தம் மணி யாழ் வட்டு அடை என மகரங் கெடாமையுங் கொள்க.

இன்னும் இதனானே தமகாணம் நமகாணம் எமகாணம் நும காணம் என உருபீற்றுச் செய்கைகளுங் கொள்க.

இன்னும் இதனானே நும் என்பதற்கு மகரத்தை மெல்லொற்றாக்கி நுங்கை செவி தலை புறம் எனவருதலும், நுஞ்ஞாண் என ஒற்றிரட்டுதலும் நும்வலி என மகரங் கெடாது நிற்றலுங் கொள்க.

இன்னும் இதனானே எல்லார்கையும் எல்லீர்கையும் எனத்தம் மும் நும்மும் பெறாதுநிற்றலுங் கொள்க. (௨௫)

௩௨௧. அல்லது கிளப்பி னியற்கை யாகும்.

இது முற்கூறிய மூன்றுபெயர்க்கும் அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். அல்லது கிளப்பின் இயற்கையாகும் = அம்மூன்று பெயரும் அல்வழியைச் சொல்லுமிடத்து இயல்பாய்முடியும். எ-று.

ஈண்டு இயற்கையென்றது சாரியைபெறாமைநோக்கி. இவற்றின் ஈறுதிரிதல் "அல்வழியெல்லாம்" என்பதனுள் எல்லாமென்றதனாற் கொள்க.

உ-ம். எல்லாருங்குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், எல்லீருங்குறியீர் சிறியீர் தீயீர் பெரியீர் எனவும், தாங்குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், தாங்குறிய சிறிய தீய பெரிய எனவும், நாங் குறியம் சிறியம் தீயம் பெரியம் எனவும், யாங்குறியேம் சிறியேம் தீயேம் பெரியேம் எனவும் வரும்.

இன்னும் எல்லாமென்றதனானே இவற்றின்முன்னர் ஞகார நகாரம் வந்தால் அவை அவ்வொற்றாய்த் திரிதல் கொள்க. எல்லாருஞ்ஞான்றார் நீண்டார் எல்லீருஞ்ஞான்றீர் நீண்டீர் எனவும் தாஞ் ஞான்றார் நீண்டார் எனவும் நாஞ்ஞான்றாம் நீண்டாம் எனவும் யாஞ்ஞான்றேம் நீண்டேம் எனவும் வரும்.

இனி எல்லாரும்வந்தார் யாத்தார் அடைந்தார் எல்லிரும்வந்தீர் யாத்தீர் அடைந்தீர் எனவும், தாம்வந்தார் யாத்தார் அடைந்தார் எனவும், நாம்வருதும் யாத்தும் அடைதும் யாம்வருவேம் யாப்பேம் அடைவேம் எனவும் ஏனைக்கணங்களின் முன்னர் மகரந்திரியாதுநிற்றலும் "உயிரீறாகிய உயர்திணைப்பெயரும்" என்பதனான் முடியும். (உகூ)

௩௨௨. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணு
மெல்லா மெனும்பெய ருருபிய னிலையும்
வேற்றுமை யல்வழிச் சாரியை நிலையாது.

இஃது இவ் ஈற்றுள் விரவுப்பெயருள் ஒன்றற்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் உருபியலோடு மாட்டெறிந்து எய்தாததெய்துவித்தது.

இ - ள், அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும் = அல்வழிக்கட் சொல்லினும் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கட் சொல்லினும்: எல்லாமெனும் பெயர் உருபியல் நிலையும் = எல்லாமென்னும் விரவுப்பெயர் உருபுபுணர்ச்சியின் இயல்பிலேநின்று முடியும்: வேற்றுமையல்வழிச் சாரியை நிலையாது = அப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியல்லாத இடத்து வற்றுச்சாரியை நில்லாதாய் முடியும். எ - று.

உருபியனிலையும் என்றமாட்டேறு அல்வழிக்கண் உம்முப்பெற்று நிற்றலும் பொருட்புணர்ச்சிக்கண் வற்றும் உம்மும் பெற்று நிற்றலும் உணர்த்திற்று.

உம்முச்சாரியை ஒன்றுமே பெற்று முடிகின்ற அல்வழியினையும் வற்றும் உம்மும்பெற்று முடிகின்ற வேற்றுமையோடு உடனோதி அதுவும் வற்றுப்பெறுமாறுபோல மாட்டெறிந்த மிகையானே வன்கணத்து அல்வழிக்கண் நிலைமொழி மகரக்கேடும் வருமொழி வல்லெழுத்துப்பேறும் மென்கணத்து மகரங்கெட்டு உம்முப்பெற்றும் பெறாதும் வருதலும் ஏனைக்கணத்து மகரங்கெட்டு உம்முப்பெற்றும் மகரங்கெடாது உம்முப்பெறாதும் வருதலுங்கொள்க.

உ-ம். எல்லாக்குறியவும் சிறியவும் தீயவும் பெரியவும் எனவும், எல்லாஞாணும் நூலும் மணியும் எனவும், எல்லாஞான்றன நீண்டன மாண்டன எனவும், எல்லாயாழும் வட்டும் அடையும்

எனவும், எல்லாம்வாடின ஆடின எனவும் வரும். இனி வேற்றுமைக்கண் எல்லாவற்றுக்கோடும் செவியும் தலையும் புறமும் என இவைவற்றும் உம்மும்பெற்றன. இவற்றிற்கு மகரம் வற்றின்மிசையொற்றென்று கெடுக்க. இனி மென்கணத்துக்கண் எல்லாவற்றுஞாணும் நூலும் மணியும் எனவும், ஏனைக்கணத்துக்கண் எல்லாவற்றியாப்பும் வலியும் அடையும் எனவும் வரும். ஏனைக்கணமும் வற்றும் உம்மும் பெற்றன. (உஎ)

௩உ௩. மெல்லெழுத்து மிகினு மான மில்லை.

இஃது ஒருசார் வல்லெழுத்தை விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். மெல்லெழுத்து மிகினும் மானமில்லை = அவ்வெல்லாமென்பது அல்வழிக்கண் மேல் இலேசினாற் கூறிய வல்லெழுத்தேயன்றி மெல்லெழுத்து மிக்குமுடியினுங் குற்றமில்லை. எ - று.

எனவே வல்லெழுத்துமிகுதலே பெரும்பான்மையாயிற்று. முற்கூறிய செய்கைமேலே இது கூறினமையின் மகரக்கேடும் உம்முப்பேறுங் கொள்க.

எல்லாங்குறியவும் சிறியவும் தீயவும் பெரியவும் எனவரும்.

மானமில்லை என்றதனான் உயர்திணைக்கண் வன்கணத்து மகரங்கெட்டு வல்லெழுத்துமிக்கு இறுதி உம்முப்பெற்று முடிதலும் இயல்புகணத்துக்கண் மகரங்கெட்டு உம்முப்பெற்று முடிதலுங் கொள்க. எல்லாக்கொல்லரும் சான்றாரும் தச்சரும் பார்ப்பாரும் குறியரும் சிறியரும் தீயரும் பெரியரும் எனவும், எல்லாஞான்றாரும் நாய்கரும் மணியகாரரும் வணிகரும் அரசரும் எனவும் வரும்.

இன்னும் இதனானே உயர்திணைக்கண் எல்லாங்குறியரும் சிறியரும் தீயரும் பெரியரும் என மகரங்கெட்டு மெல்லெழுத்து மிக்கு உம்முப்பெறுதலும் எல்லாங்குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், குறியீர் குறியம் எனவும் உம்முப்பெறாது வருதலுங் கொள்க.

இன்னும் இதனானே இடைக்கணத்தும் உயிர்க்கணத்தும் மகரங்கெடாது உம்மின்றி வருதலுங் கொள்க. எல்லாம்வந்தேம் அடைந்தேம் எனவரும். (உஅ)

௩உ௪. உயர்திணை யாயி னுருபிய னிலையும்.

இஃது எல்லாமென்பதற்கு உயர்திணைமுடிபு கூறுகின்றது.

இ - ள். உயர்திணையாயின் உருபியல் நிலையும் = எல்லாமென்பது உயர்திணையாய்நிற்குமாயின் உருபுபுணர்ச்சியின் இயல்பிற்றாய் இடைக்கண் நம்மும் இறுதிக்கண் உம்மும்பெற்று முடியும். எ - று.

உருபியலுள் "எல்லா மெனனு மிறுதி முன்னர்—வற்றென் சாரியை" வகுத்ததனான் வற்றின்மிசையொற்றென்று மகரங்கெடுத்த அதிகாரத்தான் "உயர்திணை யாயி னம்மிடை வரும்" என நம்மின்முன்னும் மகரங்கெடுத்தார், அதனோடு ஈண்டு மாட்டெறிதலின் அது கொண்டு ஈண்டும் மகரங்கெடுக்க. "அம்மினிறுதி" என்புழித் "தன்மெய்" என்றதனான் நம்முச்சாரியையினது மகரந் திரிதல்கொள்க.

எல்லாநங்கையும் செவியும் தலையும் புறமும் என ஒட்டுக.

வருமொழி வரையாதுகூறலின் எல்லாநஞ்ஞாற்சியும் நீட்சியும் என ஏற்பனவற்றோடு முடிபு அறிந்து ஒட்டுக. (உ௯)

௩உ௫. நும்மெ னொருபெயர் மெல்லெழுத்து மிகுமே.

இது மகர ஈற்றிற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

இ - ள். நும்மென் ஒருபெயர் மெல்லெழுத்து மிகும் = நும்மென்று சொல்லப்படுகின்ற விரவுப்பெயர் பொருட்புணர்ச்சிக்கண் மெல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

நுங்கை செவி தலை புறம் எனவரும். "மகரவிறுதி" என்பதனான் மகரங்கெடுக்க.

ஒன்றெனமுடித்தலென்பதனான் உங்கை என வருவதூஉங் கொள்க. துவர என்றதனான் ஞகர நகரங்கள் வந்துழி மகரங்கெடுதலும் ஒருபெயர் என்றதனான் ஒற்றுமிகுதலுங் கொள்க. நுஞ்ஞாண் நூல் எனவரும். இன்னும் ஒருபெயர் என்றதனான் நும் மணி யாழ் வட்டு அடை என மகரங்கெடாமையும் கொள்க. (௩0)

௩உ௬. அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
யுக்கெட நின்ற மெய்வயி னீவர

இப்பிடை நிலைஇ யீறுகெட ரகர
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
யப்பான் மொழிவயி னியற்கை யாகும்.

இது நும்மென்பதற்கு அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை = நும்மென்பதனை அல்வழிக்கட் கூறுமிடத்து: உ கெடநின்ற மெய்வயின் ஈவர = நகரத்துள் உகரங்கெட்டுப்போக ஒழிந்துநின்ற நகரவொற்றிடத்தே ஈகாரம் வந்து நிற்ப: இ இடைநிலைஇ ஈறுகெட = ஓர் இகரம் இடையிலேவந்து நிலைபெற்று மகரமாகிய ஈறு கெட்டுப்போக: புள்ளி ரகரம் நிற்றல் வேண்டும் = ஆண்டுப் புள்ளிபெற்று ஒரு ரகரம் வந்துநிற்றலை விரும்பும் ஆசிரியன்: அப்பால் வயின்மொழி = அக்கூற்றினையுடைய நிலைமொழியிடத்து வருஞ்சொல்: இயற்கை யாகும் = இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். நீயிர்குறியீர் சிறியீர் தீயீர் பெரியீர் எனவரும்.

சொல்லுங்காலையென்றதனானே நீயிர்ஞான்றீர் நீண்டீர் மாண்டீர் யாத்தீர் வாடினீர் அடைந்தீர் என ஏனைக்கணத்திலும் ஒட்டுக. (௩க)

௩உஎ. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இது வேற்றுமைக்கண் மகரங்கெட்டு வல்லெழுத்துமிக்கும் அல்வழிக்கண் மெல்லெழுத்தாய்த்திரிந்தும் வருமென எய்தியதனை விலக்கி ஞகர ஈற்றுத் தொழிற்பெயர்போல நிற்குமெனப் பிறிது விதி வகுத்தது.

இ - ள். தொழிற்பெயரெல்லாம் = மகர ஈற்றுத் தொழிற்பெயரெல்லாம்: தொழிற்பெயர் இயல = ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் போல அல்வழியினும் வேற்றுமையினும் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் இயல்புகணத்து உகரமும் பெற்றுமுடியும். எ - று.

உ-ம். செம்முக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், செம்முக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும். தும்முச்செறுப்பவென்பதும் அது. இவை "குறியதன்முன்னர்த் தன்னுரு விரட்டல்".

எல்லாமென்றதனான் உகரம்பெறாது நாட்டங்கடிது ஆட்டங் கடிது என மெல்லெழுத்தாய் அல்வழிக்கட் திரிதலும் நாட்டக்க டுமை ஆட்டக்கடுமை என வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுத லுங் கொள்க. (௩௨)

௩௨அ. ஈமுங் கம்மு முருமென் கிளவியு
மாமுப் பெயரு மவற்றோ ரன்ன.

இது பொருட்பெயருட் சில தொழிற்பெயரோடு ஒத்துமுடிக என எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். ஈமுங் கம்மும் உருமென்கிளவியும் ஆ முப்பெயரும் = ஈமென்னுஞ்சொல்லுங் கம்மென்னுஞ்சொல்லும் உருமென்னுஞ் சொல்லுமாகிய அம்மூன்றுபெயரும்: அவற்றோரன்ன = முற்கூறிய தொழிற்பெயரோடு ஒருதன்மையவாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் இயல்புகணத்து உகரமும் பெற்று முடியும். எ - று.

ஈம் என்பது சுடுகாடு; கம் தொழில்.

உ-ம். ஈமுக்கடிது கம்முக்கடிது உருமுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், ஈமுக்கடு மை கம்முக்கடுமை உருமுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் ஒட்டுக.

கிளவியென்றதனான் வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண் ணும் உயிர்வருவழி உகரம்பெறாது ஈமடைவு ஈமடைந்தது என நிற்றலுங் கொள்க.

தன்னினமுடித்தலென்பதனான் அம்மு தம்மு நம்மு எனச் சா ரியைக்கண்ணும் உகரம்வருதல் கொள்க. (௩௩)

௩௨௯. வேற்றுமை யாயி னேனை யிரண்டுந்
தோற்றம் வேண்டு மக்கென் சாரியை.

இது மேல் முடிபுகூறிய மூன்றனுள் இரண்டற்கு வேற்று மைக்கண் வேறோர் முடிபு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமையாயின் = வேற்றுமைப்பொருட்புணர்ச் சியாயின்: ஏனை இரண்டுந் தோற்றம் வேண்டும் அக்கென் சாரி யை = இறுதியில் உருமொழிந்த இரண்டும் அக்கென்னுஞ் சாரியை, தோன்றி முடிதலை வேண்டும் ஆசிரியன். எ - று.

உ-ம். ஈமக்குடம் கம்மக்குடம் சாடி தூதை பானை எனவும், ஞாற்சி நெருப்பு மாட்சி விறகு எனவும் ஒட்டுக.

அக்கு வகுப்பவே நிலைமொழித்தொழிலாகிய உகரங் கெட்டு முற்கூறிய வல்லெழுத்து விலக்கப்படாமையின் நின்று முடிந்தது.

வன்கணத்திற்கு முன்னின்ற சூத்திரத்திற் கூறியது குணவேற்றுமைக்கென்றும் ஈண்டுக் கூறியது பொருட்புணர்ச்சிக்கென்றுங் கொள்க. (௩௪)

௩௩0. வகார மிசையு மகாரங் குறுகும்.

இது முன்னர் "அரையளவு குறுகல்" எனவும் "னகாரை முன்னர்" எனவுங் கூறிய மகரம் இருமொழிக்கண்ணுங் குறுகுமென அதன் ஈற்றகத்து எய்தாததெய்துவிக்கின்றது.

இ - ள். வகாரமிசையும் மகாரங்குறுகும் = மகாரம் ஒருமொழிக்கண்ணேயன்றி வகாரத்தின்மேலுங் குறுகும். எ - று.

உ-ம். நிலம்வலிது வரும்வண்ணக்கன் எனவரும். (௩௫)

௩௩௧. நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன
வத்து மான்மிசை வரைநிலை யின்றே
யொற்று மெய்கெடுத லென்மனார் புலவர்.

இஃது இவ் ஈற்று நாட்பெயர்க்கு வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள். நாட்பெயர்க் கிளவி மேற் கிளந்தன்ன = மகர ஈற்று நாட்பெயர் இகர ஈற்று நாட்பெயர்போல ஆன்சாரியைபெற்று முடியும்: அத்தும் ஆன்மிசை வரைநிலை இன்று = அத்துச்சாரியை ஆன் சாரியைமேலும் பிறசாரியைமேலும் வருதல் நீக்குநிலைமையின்று: ஒற்று மெய்கெடுதல் என்மனார் புலவர் = ஆண்டு நிலைமொழி மகர ஒற்றுக் கெடுக என்று கூறுவர் புலவர். எ - று.

உம்மையை ஆன்மிசையுமென மாறுக.

உ-ம். மகத்தாற்கொண்டான் ஓணத்தாற்கொண்டான் சென்றான் தந்தான் பேயினுன் என்க. ஏனைநாட்களோடும் ஒட்டுக. மகர ஒற்றுக் கெடுத்து "அத்தினகரமகரமுனையில்லை" என அகரங்கெடுத்துக் "குற்றியலுகரமுமற்றென" என ஆனேற்றி "ஆனின கரமும்" என்றதனுன் றகரமாக்கி முடிக்க. மகத்துஞான்றுகொண்

டான் சென்றான் தந்தான் போயினான் என ஞான்றென்னுஞ் சாரி யைமேல் அத்து வந்தது.

வரையாதுகூறினமையின் இம்முடிபு நான்குகணத்துங் கொள்க. மகத்தான்ஞாற்றினான் நிறுத்தினான் மாய்ந்தான் வந்தான் அடைந்தான் எனவரும். (௩௬)

௩௩உ. ணகார விறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது நிறுத்தமுறையானே ணகர இறுதி வேற்றுமைக்கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ணகார இறுதி வல்லெழுத்து இயையின் றகாரமாகும்=ணகார ஈற்றுப்பெயர் வல்லெழுத்துமுதன்மொழி வருமொழியாய் வந்து இயையின் றகாரமாகும்: வேற்றுமைப்பொருட்கு= வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண். எ - று.

உ-ம். பொற்குடம் சாடி தூதை பானை எனவரும். (௩௭)

௩௩௩. மன்னுஞ் சின்னு மானு மீனும்
பின்னு முன்னும் வினையெஞ்சு கிளவியு
மன்ன வியல வென்மனார் புலவர்.

இஃது அவ் ஈற்று அசைநிலை இடைச்சொற்களும் ஏழாம்வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற இடைச்சொற்களும் வினையெச்சமும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். மன்னுஞ் சின்னும் ஆனும் ஈனும் பின்னும் முன்னும் வினையெஞ்சுகிளவியும் = மன்னென்னுஞ்சொல்லுஞ் சின்னென்னுஞ்சொல்லும் ஆனென்னுஞ்சொல்லும் ஈனென்னுஞ்சொல்லும் பின்னென்னுஞ்சொல்லும் முன்னென்னுஞ்சொல்லும் வினையெச்சமாகியசொல்லும்: அன்ன இயல என்மனார் புலவர்=முற்கூறிய இயல்பினையுடையவாய் ணகரம் றகரமாய் முடியுமென்று சொல்லுவர் புலவர். எ - று.

உ-ம். "அதுமற்கொண்கன்றேரே" "காப்பும்பூண்டிசிற்கடையும் போகல்" எனவும், ஆற்கொண்டான் ஈற்கொண்டான் பிற்கொண்டான் முற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், வரிற்கொள்ளும் செல்லும் தரும் போம் எனவும் வரும்.

பெயராந்தன்மையவாகிய ஆன் ஈன் என்பனவற்றை முற்கூறுதலாற் ஆன்கொண்டான் ஈன்கொண்டான் எனத் திரியாமையுங்கொள்க.

பின் முன் என்பன பெயரும் உருபும் வினையெச்சமுமாய் நிற்றலிற் பெயர் ஈண்டுக் கூறினர். ஏனைய உருபியலுள்ளும் வினையெஞ்சுகிளவியென்பதன்கண்ணும் முடியும். அப்பெயரை முற்கூறுதலாற் பின்கொண்டான் முன்கொண்டான் எனத் திரியாமையுங்கொள்க.

இயலவென்றதனான் ஊனென்னுஞ் சுட்டு ஊன்கொண்டானென இயல்பாய் முடிதல் கொள்க. (௩அ)

௩௩௪. சுட்டுமுதல் வயினு மெகரமுதல் வயினு
மப்பண்பு நிலையு மியற்கைய வென்ப.

இஃது இவ் ஈற்றுள் ஏழாம்வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொற்கு முடிபுகூறுகின்றது.

இ - ள். சுட்டு முதல் வயினும் = சுட்டெழுத்தினை முதலாகவுடைய வயினென்னுஞ்சொல்லும்: எகர முதல் வயினும் = எகரமாகிய முதல்வினாவினையுடைய வயினென்னுஞ்சொல்லும்: அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப = மேல் னகரம் றகரமாமென்ற தன்மை நிலைபெற்று முடியும் இயல்பையுடையவென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

உ-ம். அவ்வயிற்கொண்டான் இவ்வயிற்கொண்டான் உவ்வயிற்கொண்டான் எவ்வயிற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும்.

இயற்கைய என்றதனாற் திரியாது இயல்பாய் முடிவனவுங் கொள்க. (௩௯)

௩௩௫. குயினென் கிளவி யியற்கை யாகும்.

இது னகாரந் திரியாது இயல்பாக என்றலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். குயினென்கிளவி இயற்கையாகும் = குயினென்னுஞ் சொற் திரியாது இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். குயின்குழாம் செலவு தோற்றம் பறைவு எனவரும். குயினென்பது மேகம். அஃது அஃறிணைப்பெயர்.

தொகைமரபினுள் உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் இயல்பாகவென்றார்.

குயின் வினையுமாம்.

இயற்கை என்றதனாற் கான்கோழி கோன்குணம் வான்கரை என வருவனவுங் கொள்க. (௪௦)

ௗ௩௬. எகின்மர மாயி னாண்மர வியற்றே.

இது திரிபுவிலக்கி அம்மு வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ-ள். எகின் மரமாயின் = எகினென்பது புள்ளன்றி மரப் பெயராயின்: ஆண்மர இயற்று = ஆண்மரத்தின் இயல்பிற்றாய் அம் முப்பெற்று முடியும். எ - று.

எகினங்கோடு செதிள் தோல் பூ எனவரும். (௪௧)

ௗ௩எ. ஏனை யெகினே யகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்.

இதுவும் அது, திரிபுவிலக்கி அகரம் விதித்தலின்.

இ-ள். ஏனை எகினே அகரம் வரும் = மரமல்லாத எகின் நிலைமொழிக்கண் அகரம்பெற்று முடியும்: வல்லெழுத்தியற்கை மிகுதல் வேண்டும் = ஆண்டு வருமொழி வல்லெழுத்தியல்பு மிக்கு முடிதலை வேண்டும் ஆசிரியன். எ - று.

உ-ம். எகினக்கால் செவி தலை புறம் எனவரும்.

மேலைச்சூத்திரத்தோடு இதனை ஒன்றாக ஓதாததனான் இயல் புகணத்தும் அகரப்பேறு கொள்க. எகினஞாற்சி நீட்சி மாட்சி வலிமை யாப்பு அடைவு எனவரும்.

இயற்கையென்றதனான் அகரத்தோடு மெல்லெழுத்துப்பேறுங் கொள்க. எகினங்கால் செவி தலை புறம் எனவரும்.

இனிச் சிறுபான்மை எகின்சேவல் எகினச்சேவல் பெடை என்பன ஆறனுருபு விரிவுழி ஈண்டை இலேசான் முடிக்க. பண்பு கருதியவழி இவ்வோத்தின் புறனடையான் முடிக்க. (சஉ)

௩௩அ. கிளைப்பெய ரெல்லாங் கிளைப்பெய ரியல.

இது னகரந் திரிதலை விலக்கி இயல்பாக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். கிளைப்பெயரெல்லாம் = னகர ஈற்றுக் கிளைப்பெய ரெல்லாம்: கிளைப்பெயர் இயல = ணகர ஈற்றுக் கிளைப்பெயர்போலத் திரியாது இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். எயின்குடி சேரி தோட்டம் பாடி எனவரும். எயின் வந்தது என்று அஃறிணைக்கும் எய்துதலிற் தொகைமரபினுள் முடியாதாயிற்று, ஆண்டு உயர்திணைக்கே கூறுதலின்.

இனி எல்லாமென்றதனானே எயினக்கன்னி பிள்ளை என அக்கும் வல்லெழுத்தும் பெறுதலும், எயினவாழ்வு என வல்லெழுத்துப்பெறாமையுங் கொள்க.

இன்னும் இதனானே பார்ப்பனக்கன்னி குமரி சேரி பிள்ளை என ஆகாரங்குறுகி அக்கும் வல்லெழுத்துங் கொடுத்தும் பார்ப்பனவாழ்க்கை என வல்லெழுத்துக்கொடாதும் முடிக்க.

இன்னும் இதனானே நான்குகணத்துக்கண்ணும் வெள்ளாளனென நின்றதனை அன்கெடுத்துப் பிரித்து ளகாரவொற்றினை ணகாரவொற்றாக்கி வெள்ளாண்குமரி பிள்ளை மாந்தர் வாழ்க்கை ஒழுக்கம் எனமுடிக்க.

இன்னும் இதனானே முதலெழுத்தை நீட்டி ளகாரவொற்றினைக் கெடுத்து வேளாணெனமுடிக்க.

இதனானே பொருநவாழ்க்கையும் முடிக்க.

வேட்டுவக்குமரியென்பது மரூஉவழக்கு. (சங)

௩௩௯. மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே.

இதுவும் அது, தன் திரிபு வல்லெழுத்தினோடு உறழ்க என்றலின்.

இ - ள். மீனென்கிளவி வல்லெழுத்து உறழ்வு = மீனென்னுஞ் சொற் றிரிபு வல்லெழுத்தினோடு உறழ்ந்துமுடியும். எ - று.

உ-ம். மீன்கண்* மீற்கண் மீன்சினை மீற்சினை மீன்றலை மீற்றலை மீன்புறம் மீற்புறம் எனவரும். (௪௪)

௩௪0. தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை யொத்தலும் வல்லெழுத்து மிகுதலு
மாமுறை யிரண்டு முரிமையு முடைத்தே
வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை.

இதுவும் அது, மேலதனோடு மாட்டெறிதலின்.

இ - ள். தேன் என் கிளவி வல்லெழுத்து இயையின் = தேனென்னுஞ்சொல் வல்லெழுத்துமுதன்மொழி வருமொழியாய் வரின்: மேல் நிலை ஒத்தலும் = மீனென்பதற்குக் கூறிய திரிபுறழ்ச்சி நிலை ஒத்துமுடிதலும்: வல்லெழுத்து மிகுதலும் = வருமொழிவல்லெழுத்து மிக்குமுடிதலுமாகிய: ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்து = அம்முறைமையினையுடைய இரண்டினையும் உரித்தாதலையும் உடைத்து: வல்லெழுத்து மிகுவழி இறுதியில்லை = வல்லெழுத்து மிக்குவருமிடத்து இறுதியினின்ற னகரங் கெடும். எ - று.

உரிமையுமென்னும் உம்மை "மெல்லெழுத்துமிகினும்" என மேல்வருகின்றதனை நோக்கிற்று.

உ-ம். தேன்குடம் தேற்குடம் சாடி தூதை பானை என மேனிலை ஒத்தன. தேக்குடம் சாடி தூதை பானை என னகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கன. (௪௫)

௩௪௧. மெல்லெழுத்து மிகினு மான மில்லை.

இதுவும் அது, உறழ்ச்சியும் வல்லெழுத்தும் விலக்கி மெல்லெழுத்து விதித்தலின்.

இ - ள். மெல்லெழுத்து மிகினும் மானமில்லை = முற்கூறிய தேனென்கிளவி வல்லெழுத்து வந்தால் அவ்வல்லெழுத்து மிகுதலேயன்றி மெல்லெழுத்து மிகினுங் குற்றமில்லை. எ - று.

னகரக்கேடு அதிகாரத்தாற் கொள்க.

உ-ம். தேங்குடம் சாடி தூதை பானை எனவரும். (௪௬)

௩௪௨. மெல்லெழுத் தியையி னிறுதியொ டுறழும்.

இது தொகைமரபினுள் "வேற்றுமைக்கண்ணும் வல்லெழுத் தல்வழி" என்பதனாற் கூறிய இயல்பை விலக்கி உறழுமென்றலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். மெல்லெழுத்து இயையின் = அத்தேனென்கிளவி மெல்லெழுத்து முதன்மொழி வந்து இயையின்: இறுதியொடு உறழும் = நிலைமொழியிறுதியின் னகரவொற்றுக் கெடுதலுங் கெடாமையுமாகிய உறழ்ச்சியாய் முடியும். எ - று.

உ-ம். தேன்ஞெரி தேஞெரி தேனுனி தேநுனி தேன்மொழி தேமொழி எனவரும்.

மேல் "ஆமுறை" என்றதனாற் றேஞெரி தேஞ்ஞெரி தேநுனி தேந்நுனி தேமொழி தேம்மொழி என னகரங்கெட்டுத் தத்தம் மெல்லெழுத்து மிக்கும் மிகாதும் முடிந்தனவுங் கொள்க.

இனி மேல் "மானமில்லை" என்றதனான் ஈறு கெட்டு மெல்லெழுத்து மிகாது இயல்பாய் முடிவனவுங் கொண்டு தேஞெரி தேநுனி தேமொழி என்பன காட்டின் அவை முற்கூறியவற்றுள் அடங்குமென்க. (௪௭)

௩௪௩. இறாஅற் றோற்ற மியற்கை யாகும்.

இஃது அத்தேனென்பதற்கு உயிர்க்கணத்து ஒருமொழிமுடிபு வேற்றுமை கூறுகின்றது.

இ - ள். இறாஅற் தோற்றம் = தேனென்னுஞ் சொல் இறாவென்னும் வருமொழியது தோற்றத்துக்கண்: இயற்கையாகும் = நிலைமொழியின் னகரங் கெடாதே நின்று இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். தேனிறால் எனவரும். (௪௮)

௩௪௪. ஒற்றுமிகு தகரமொடு நிற்றலு முரித்தே.

இதுவும் அதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்து = அத்தேனென்பது இறாலொடு புணருமிடத்துப் பிறிதுமோர் தகரத்தோடு நின்று முடிதலும் உரித்து. எ - று.

"வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை" என்றதனான் நிலைமொழி ஈறு கெடுக்க. தகரம் மிகுமென்னாது ஒற்றுமிகும்தகரமென்றதனான் ஈரொற்றாக்குக.

உ-ம். தேத்திறால் தேன்னிறால் எனவரும்.

மேலைச்சூத்திரத்தோடு இதனையொன்றாக ஓதாததனாற் பிறவருமொழிக்கண்ணும் இம்முடிபு கொள்க. தேத்தடை தேத்தீ எனவரும்.

தோற்றமென்றதனாற் தேனடை தேனீ என்னும் இயல்புங் கொள்க. (சக)

௩சரு. மின்னும் பின்னும் பன்னுங் கன்னு
மந்நாற் சொல்லுந் தொழிற்பெய ரியல.

இஃது அல்வழிக்கண் இயல்பாயும் வேற்றுமைக்கட் திரிந்தும் வருக என எய்துவித்தமுடிபை விலக்கித் தொழிற்பெயரியல்பாமெனப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். மின்னும் பின்னும் பன்னுங் கன்னும் அந்நாற்சொல்லும் = மின்னென்னுஞ்சொல்லும் பின்னென்னுஞ்சொல்லும் பன்னென்னுஞ்சொல்லுங் கன்னென்னுஞ்சொல்லுமாகிய அந்நான்கு சொல்லும்: தொழிற்பெயர் இயல = அல்வழியினும் வேற்றுமையினும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர்போல வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்றுமுடியும். எ - று.

"மின்னுச்செய்விளக்கத்துப் பின்னுப்பிணியவிழ்ந்த" எனவும், பன்னுக்கடிது கன்னுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், மின்னுக்கடுமை பின்னுக்கடுமை பன்னுக்கடுமை கன்னுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும்.

தொழிற்பெயரெல்லாந் தொழிற்பெயரியல என்று ஓதாதுகிளந்தோதினார் இவை தொழினிலைக்கண்ணன்றி வேறு தம்பொருளுணரநின்றவழியும் இம்முடிபு எய்துமென்றற்கு.

மின்னென்பது மின்னுதற்றொழிலும் "மின்னுநிமிர்ந்தன்ன" என மின்னெனப்படுவதோர் பொருளும் உணர்த்தும். ஏனையவும் அன்ன. (ருo)

௩௪௬. வேற்றுமை யாயி னேனை யெகினொடு
தோற்ற மொக்குங் கன்னென் கிளவி.

இது நிலைமொழிக்கண் உகரம்விலக்கி அகரம்வகுத்தலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். வேற்றுமையாயின் ஏனை எகினொடு தோற்றம் ஒக்கும் = வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயின் ஒழிந்த மரமல்லாத எகினேடு தோற்றம் ஒத்து அகரமும் வல்லெழுத்தும் பெற்றுமுடியும்: கன் என் கிளவி = கன்னென்னுஞ்சொல். எ - று.

உ-ம். கன்னக்குடம் சாடி தூதை பானை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவரும். கன்னக்கடுமை எனக் குணவேற்றுமையுஞ் சிறுபான்மை கொள்க.

தோற்றமென்றதனல் அல்வழிக்கண் வன்கணத்து அகரமும் மெல்லெழுத்தும் ஏனைக்கணத்து அகரமுங் கொள்க. கன்னங்கடிது சிறிது தீது பெரிது எனவுங் கன்னஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவரும். கன்னங்கடுமை எனக் குணவேற்றுமைக்கண்ணும் இவ்விதி கொள்க.

“பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி” என்பதோவெனின், அது மகர ஈற்றுப் பொருட்பெயர். (௫௧)

௩௪௭. இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட வகர நிலையு
மெய்யொழித் தன்கெடு மவ்வியற் பெயரே.

இஃது “அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே” என்றதற்கு ஈண்டுத் திரிபுகூறலின் எய்தாததெய்துவித்தது.

இ - ள். இயற்பெயர்முன்னர்த் தந்தை முறைவரின் = இவ்வீற்று விரவுப்பெயருள் இயற்பெயரின் முன்னர்த் தந்தையென்னும் முறைப்பெயர் வருமொழியாய் வருமாயின்: முதற்கண் மெய்கெட அகரம் நிலையும் = அத்தந்தையென்பதன் முதற்கணின்ற தகரவொற்றுக்கெட அதன்மேலேறிநின்ற அகரங் கெடாதுநிற்கும்: அவ்வியற்பெயர் மெய்யொழித்து அன் கெடும் = அந்நிலைமொழியாகிய இயற்பெயர் அன்னென்னுஞ்சொல்லில் அகரம் ஏறிநின்ற மெய்யை ஒழித்து அவ்வன் தான் கெட்டுமுடியும். எ - று.

உ-ம். சாத்தந்தை கொற்றந்தை எனவரும்.

முதற்கண்மெய்யென்றதனால் சாத்தன்றந்தை கொற்றன்றந்தை என்னும் இயல்புமுடிபுங் கொள்க. (ருஉ)

ருசஅ. ஆதனும் பூதனுங் கூறிய வியல்பொடு
பெயரொற் றகரந் துவரக் கெடுமே.

இது மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். ஆதனும் பூதனும் = முற்கூறிய இயற்பெயருள் ஆதனும் பூதனும் என்னும் இயற்பெயர்கள் தந்தையென்னும் முறைப்பெயரோடு முடியுங்கால்: கூறிய இயல்பொடு = முற்கூறிய நிலைமொழி அன் கெடுதலும் வருமொழித் தகரவொற்றுக் கெடுதலுமாகிய செய்கைகளுடனே: பெயரொற்று அகரந் துவரக்கெடும் = நிலைமொழிப்பெயரில் அன்கெட நின்ற தகரவொற்றும் வருமொழியிற் தகரவொற்றுக்கெட நின்ற அகரமும் முற்றக்கெட்டு முடியும். எ-று.

உ-ம். ஆந்தை பூந்தை எனவரும்.

இயல்பென்றதனாற் பெயரொற்றும் அகரமுங் கெடாதே நிற்றலுங் கொள்க. ஆதந்தை பூதந்தை எனவரும்.

இனித் துவரவென்றதனன் அழான் புழான் என நிறுத்தித் தந்தை என வருவித்து நிலைமொழி னகரமும் வருமொழித் தகரமும் அகரமுங் கெடுத்து அழாந்தை புழாந்தை என முடிக்க. (ருங)

ருசக. சிறப்பொடு வருவழி யியற்கை யாகும்.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். சிறப்பொடு வருவழி = அவ்வியற்பெயர் பண்பு அடுத்து வரும்வழி: இயற்கையாகும் = முற்கூறிய இருவகைச்செய்கையுந் தவிர்ந்து இயல்பாய்முடியும். எ - று.

உ-ம். பெருஞ்சாத்தன்றந்தை பெருங்கொற்றன்றந்தை என வரும். கொற்றங்கொற்றன்றந்தை சாத்தங்கொற்றன்றந்தை என்றாற்போல்வன பண்பன்றி அடை அடுத்தனவாதலிற் புறனடையான் முடிக்க. (ருச)

ருரு0. அப்பெயர் மெய்யொழித் தன்கெடு வழியு
நிற்றலு முரித்தே யம்மென் சாரியை
மக்கண் முறைதொகூஉ மருங்கி னான.

இது மேலதற்கு வேறோர் வருமொழிக்கண் எய்தாததெய்து வித்தது.

இ - ள். அப்பெயர் மக்கள் ஆன முறை தொகூஉம் மருங்கி னும்=அவ்வியற்பெயர் முன்னர்த் தந்தையன்றி மகனாகிய முறைப் பெயர் வந்து தொகுமிடத்தினும்: மெய்யொழித்து அன் கெடுவழி அம்மென் சாரியை நிற்றலும் உரித்து=அவ்வியற்பெயரிற் தான் ஏறிய மெய் நிற்க அன்கெட்டு அம்முச்சாரியை வந்து நிற்றலும் உரித்து. எ - று.

ஆன என்பதனை மக்களோடும் உம்மையை மருங்கினோடுங் கூட்டுக. முறைதொகூஉமருங்கினென்றது இன்னாற்கு மகனென் னும் முறைப்பெயராய்ச் சேருமிடத்தென்றவாறு.

உ-ம். கொற்றங்கொற்றன் சாத்தங்கொற்றன் என நிலைமொழி அன் கெட்டுழி அம்மு வந்தது. இவற்றிற்கு அதுவெனுருபு விரி யாது அதன் உடைமைப்பொருள் விரிக்க. இது முறைப்பெயர்.

இனி உம்மையாற் கொற்றங்குடி சாத்தங்குடி எனப் பிற பெயர் தொக்கனவுங் கொள்க.

மெய்யொழித்தென்றதனானே கொற்றமங்கலம் சாத்தமங்க லம் என்பனவற்றின்கண் அம்மின் மகரங்கெடுதலும் வேட்டமங்க லம் வேட்டங்குடி என்பனவற்றின் நிலைமொழியொற்று இரட்டுதெ லுங் கொள்க. (ருரு)

கூருக. தானும் பேனுங் கோனு மென்னு
மாமுறை யியற்பெயர் திரிபிட னிலவே.

இது மேலதற்கு ஒருவழி எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். தானும் பேனுங் கோனும் என்னும் ஆமுறை இயற் பெயர்=அவ்வியற்பெயருட் தானும் பேனுங் கோனுமென்னும் அம் முறையினையுடைய இயற்பெயர்கள் தந்தையொடும் மக்கள் முறை மையொடும் புணரும்வழி: திரிபிடனில=முற்கூறிய திரிபுகளின்றி இயல்பாய் முடியும். எ - று.

உ-ம். தான்றந்தை பேன்றந்தை கோன்றந்தை எனவும் தான் கொற்றன் பேன்கொற்றன் கோன்கொற்றன் எனவும் வரும். பேன் கோன் என்பன முற்காலத்து வழக்கு. இவை தொகைமரபினுள்

"அஃறிணைவிரவுப்பெயர்" என்புழி இயல்பாயினவேனும் ஈண்டு இவ் ஈற்றிற்குத் திரிபுகூறுதலின் அதனையும்விலக்கி இயல்பாமென்ப தூஉங் கூறினர். (ருசா)

கூருஉ. தான்யா னெனும்பெய ருருபிய னிலையும்.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, தொகை மரபினுள் 'அஃறிணைவிரவுப்பெயர்' என்பதனனே இயல்பாய் நின்ற தான் என்பதனையும் "உயிரீறாகிய" என்பதனல் இயல் பாய்நின்ற யானென்பதனையும் அவ்வியல்புவிலக்கி உருபியலோடு மாட்டெறிதலின்.

இ - ள். தான் யான் எனும் பெயர் = தானென்னும் விரவுப் பெயரும் யானென்னும் உயர்திணைப்பெயரும்: உருபியல் நிலையும் = உருபியலிற் கூறிய இயல்பிலே நிலைபெற்றுத் தானென்பது நெடுமு தல்குறுகித் தன்னென்றும் யானென்பது ஆகாரம் எகாரமாய் யக ரங்கெட்டு என்னென்றும் முடியும். எ - று.

உ-ம். தன்கை என்கை செவி தலை புறம் எனவரும்.

வருமொழி வரையாதுகூறினமையின் இயல்புகணத்துக்கண் ணுந் தன்ஞாண் என்ஞாண் நூல் மணி யாழ் வட்டு அடை ஆடை எனவரும். (ருஎ)

கூருகூ. வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலுந்
தோற்ற மில்லை யென்மனர் புலவர்.

இஃது அல்வழிக்கண் இயல்பாக என்றலின் எய்தாததெய்து வித்தது.

இ - ள். வேற்றுமை அல் வழி = முற்கூறிய தான் யானென் பன வேற்றுமைப்புணர்ச்சியல்லாதவிடத்து: குறுகலுந் திரிதலுந் தோற்றமில்லை என்மனர் புலவர் = தானென்பது நெடுமுதல்குறுகு தலும் யானென்பது அவ்வாறுதிரிதலுந் தோற்றமின்றி இயல்பாய் முடியுமென்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். தான்குறியன் சிறியன் தீயன் பெரியன் ஞான்றன் நீண்டான் மாண்டான் வலியன் எனவும், யான்குறியேன் சிறி யேன் தீயேன் பெரியேன் ஞான்றேன் நீண்டேன் மாண்டேன் வலியேன் எனவும் வரும்.

தோற்றமென்றதனுன் வேற்றுமைக்கண் அவ்வாறன்றி னகரந் திரிதலுங்கொள்க. தற்புகழ் தற்பாடி எற்புகழ் எற்பாடி எனவரும். (ருஅ)

ஙடுச. அழனே னிறுதிகெட வல்லெழுத்து மிகுமே.

இது வேற்றுமைக்கண் அகரந் திரியாது கெடுக என்றலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். அழன் என் இறுதி கெட = அழனென்னுஞ்சொல் தன் ஈற்று னகரங் கெட: வல்லெழுத்து மிகும் = வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். அழக்குடம் சாடி தூதை பானை எனவரும். அழக்குடமென்பது பிணக்குடத்தை. (ருகூ)

ஙடுரு. முன்னென் கிளவி முன்னர்த் தோன்று
மில்லென் கிளவிமிசை றகர மொற்ற
றொல்லியன் மருங்கின் மரீஇய மரபே.

இது "மருவின்றொகுதி" என்பதனுற் கூறிய இலக்கணமுருக்களில் ஒன்றற்கு முடிபுகூறுகின்றது.

இ - ள். முன் என் கிளவி முன்னர்த் தோன்றும் இல் என் கிளவிமிசை = முன்னென்னுஞ் சொல்லின்முன்னே வரும் இல்லென்னுஞ் சொல்லின்மேலே: றகரம் ஒற்றல் = ஒரு றகரவொற்று வந்துநின்று முடிதல்: தொல்லியல் மருங்கின் மரீஇய மரபு = பழையதாகிய இயல்பினையுடைய வழக்கிடத்து மருவிவந்த இலக்கண முடிபு. எ - று.

உ-ம். முன்றில் எனவரும். இன்முன் என நிற்கற்பாலது முன்றிலென்று தலைதடுமாறுதலின் மருவாயிற்று. முன்னென்பதற்கு ஒற்றிரட்டுதல் இலக்கணமேனும் அதுவன்றித் தனக்கு இனமாயதோர் றகரவொற்றுப்பெறுதலின் வேறுமுடிபாயிற்று. (சுO)

உடுசு. பொன்னென் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ்
செய்யுண் மருங்கிற் றொடரிய லான.

இஃது அவ் ஈற்றுப் பெயரொன்றற்குச் செய்யுள்முடிபு கூறுதலின் எய்தாததெய்துவித்தது.

இ - ள். பொன் என் கிளவி ஈறு கெட=பொன்னென்னுஞ் சொல் தன்னீறுகிய னகரங்கெடாநிற்க: முன்னர் லகார மகாரம் முறையிற் தோன்றும்=அதன்முன்னர் லகரமும் மகரவொற்றும் முறையானே வந்துநிற்கும்: செய்யுள் மருங்கிற் தொடரியலான= அங்ஙனம் நிற்பது செய்யுளிடத்துச் சொற்கள் தம்முட் தொடர்ச் சிப்படும் இயல்பின்கண். எ - று.

முறையினென்றதனன் மகரம் ஒற்றுதல்கொள்க.

உ-ம். "பொலம்படப்பொலிந்தகொய்சுவற்புரவி" என்வரும்

தொடரியலான என்றதனுனே வன்கணத்துக்கண்ணும் லகரம் நிற்க மகரம் வல்லெழுத்திற்கேற்ற மெல்லெழுத்தாகத் திரிதல் கொள்க. "பொலங்கலஞ்சுமந்த பூண்டாங்கிளமுலை" "பொலஞ்சுடராழிப்பூண்டதேரே" "பொலந்தேர்க்குட்டுவன்" என வரும்.

இன்னும் இதனுனே "பொலநறுந்தெரியல்" "பொலமலரா விரை" என்றாற்போல மகரங்கெட்டுப் பிறகண்த்து முடிதலுங் கொள்க. (சுக)

௩௫௭. யகர விறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே.

இது முறையானே யகர ஈற்றிற்கு வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள். யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்=யகர ஈற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்: வல்லெழுத்து மிகும்=வல்லெழுத்து முதன்மொழி வந்து இயையின் அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். நாய்க்கால் செவி தலை புறம் எனவரும். (சுஉ)

௩௫௮. தாயென் கிளவி யியற்கை யாகும்.

இது விரவுப்பெயருள் ஒன்றற்கு எய்திய வல்லெழுத்து விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். தாயென் கிளவி இயற்கையாகும்=தாயென்னுஞ் சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாய்முடியும். எ - று.

உ-ம். தாய்கை செவி தலை புறம் எனவரும்

மேலைச்சூத்திரத்தான் மிகுதியுங் கூறுதலின் அஃறிணைவிர வுப்பெயருள் அடங்காதாயிற்று. (சுங)

ஙருகூ. மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே.

இஃது எய்தாததெய்துவித்தது, தாயென்பது அடையடுத் துழி வல்லெழுத்து மிகுக என்றலின்.

இ - ள். மகன்வினைகிளப்பின் = தாயென்னுஞ்சொல் தனக்கு அடையாய் முன்வந்த மகனது வினையைப் பின்னாக ஒருவன் கூறு மிடத்து: முதல் நிலை இயற்று = இவ் ஈற்றுள் முதற்கட்கூறிய நிலை மையின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். மகன்றாய்க்கலாம் செரு நிறத்தல் பகைத்தல் எனவ ரும். மகன் தாயோடு கலாய்த்த கலாம் எனவிரியும். ஏனையவற் றிற்கும் ஏற்கும் உருபு விரிக்க. வினை ஈண்டுப் பகைமேற்று. (சுச)

ஙசு0. மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே.

இஃது எய்தாததெய்துவித்தது.

இ - ள். மெல்லெழுத்து உறழும் மொழியுமாருள = யகர ஈற் றுள் அதிகாரவல்லெழுத்தினோடு மெல்லெழுத்து மிக்கு உறழ்ந்து முடிவனவும் உள. எ - று.

உ-ம். வேய்க்குறை வேய்ங்குறை செய்கை தலை புறம் எனவரும். (சுரு)

ஙசுக. அல்வழி யெல்லா மியல்பென மொழிப.

இஃது அவ் ஈற்று அல்வழிக்கு எய்தாததெய்துவித்தது.

இ - ள். அல்வழி எல்லாம் இயல்பென மொழிப = யகர ஈற்று அல்வழியெல்லாம் இயல்பாய் முடியும் என்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். நாய்கடிது சிறிது தீது பெரிது எனவரும்.

எல்லாமென்றதனால் அவ்வாய்க்கொண்டான் இவ்வாய்க் கொண்டான் உவ்வாய்க்கொண்டான் எவ்வாய்க்கொண்டான் சென் றான் தந்தான் போயினான் என உருபின்பொருள்பட முடிவனவும்

தாய்க்கொண்டான் தூய்ப்பெய்தான் என்றாற்போலும் வினையெச்சமும் பொய்ச்சொல் மெய்ச்சொல் எய்ப்பன்றி என்றாற்போலும் பண்புத்தொகையும் வேய்கடிது வேய்க்கடிது என்னும் அல்வழியுறழ்ச்சிமுடிவுங் கொள்க. (சசு)

ங௬உ. ரகார விறுதி யகார வியற்றே.

இது நிறுத்தமுறையானே ரகார ஈற்று வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

(இ) - ள். ரகார இறுதி = ரகார ஈற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்: யகார இயற்று = யகார ஈற்று இயல்பிற்றாய் வல்லெழுத்துவந்துழி அவ்வல்லெழுத்துமிக்குமுடியும். எ - று.

உ-ம். தேர்க்கால் செலவு தலை புறம் எனவரும்.

இம் மாட்டேற்றினை யகர ஈற்று வேற்றுமை அல்வழியென்னும் இரண்டையுங் கருதி மாட்டெறிந்தாரென்பார் அல்வழிமுடிபும் ஈண்டுக்காட்டுவர். யாம் இவ்வோத்தின் புறனடையாற் காட்டுதும்.

இது ழகர ஈற்றிற்கும் ஒக்கும்.

மாட்டேற்றான் உறழ்ச்சியுங்கொள்க. வேர்ங்குறை வேர்க்குறை எனவரும். (சஎ)

ங௬ங. ஆரும் வெதிருஞ் சாரும் பீரு
மெல்லெழுத்து மிகுதன் மெய்பெறத் தோன்றும்.

இஃது இவ் ஈற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ) - ள். ஆரும் வெதிருஞ் சாரும் பீரும் = ஆரென்னுஞ்சொல்லும் வெதிரென்னுஞ்சொல்லுஞ் சாரென்னுஞ்சொல்லும் பீரென்னுஞ்சொல்லும்: மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத்தோன்றும் = மெல்லெழுத்து மிக்குமுடிதல் மெய்ம்மைபெறத் தோன்றும். எ-று.

உ-ம். ஆர்ங்கோடு வெதிர்ங்கோடு சார்ங்கோடு பீர்ங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

பீர் மரமென்பார் பீர்ங்கோடென்பர். "பீர்வாய்ப்பிரிந்த நீர் நிறைமுறைசெய்து" என்றாற்போலச் சான்றோர் பலருஞ் செய்யுள் செய்தவாறு காண்க.

மெய்பெற என்றதனான் "ஆரங்கண்ணியடுபோர்ச்சோழர்" என ஆர் அம்முப்பெறுதலும் "மாரிப்பீரத்தலர்சிலர்கொண்டே" எனப் பீர் அத்துப்பெறுதலுங்கொள்க. இதனை அதிகாரப்புறனடையான் முடிப்பாரும் உளர்.

இன்னும் இதனானே கூர்ங்கதிர்வேல் ஈர்ங்கோதை என்றாற் போலவுங் குதிர்ங்கோடு விலர்ங்கோடு அயிர்ங்கோடு துவர்ங்கோடு சிலிர்ங்கோடு என்றாற்போலவும் மெல்லெழுத்துமிகுவனகொள்க.

இன்னும் இதனானே துவரங்கோடு என அம்முப்பெறுதலுங் கொள்க. (சுஅ)

௩௬௪. சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

இ - ள். சார் என் கிளவி காழ் வயின் வலிக்கும்=சாரென்பது காழென்பதனோடு புணருமிடத்து வல்லெழுத்து மிக்குப்புணரும். எ - று.

உ-ம். சார்க்காழ் எனவரும். சாரினது வித்தென்பதே பொருள். இதனை வயிரமெனிற் கிளந்தோதுவாரென்று உணர்க. (சுகூ)

௩௬௫. பீரென் கிளவி யம்மொடு சிவணும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

இ - ள். பீர் என் கிளவி அம்மொடு சிவணும்=பீரென்னுஞ் சொல் மெல்லெழுத்தேயன்றி அம்முப்பெற்றும் முடியும். எ - று.

உ-ம். பீரங்கொடி செதிள் தோல் பூ எனவும், "பொன்போற் பீரமொடு பூத்தபுதன்மலர்" எனவும் வரும். உம்மை இறந்தது தழீஇயிற்று. (எ0)

௩௬௬. லகார விறுதி னகார வியற்றே.

இது முறையானே லகார ஈற்றை வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கட் புணர்க்கின்றது.

இ - ள். லகார இறுதி னகார இயற்று=லகார ஈற்றுப்பெயர் வன்கணம் வந்துழி னகார ஈற்று இயல்பிற்றாய் லகரம் றகரமாய்த் திரிந்துமுடியும். எ - று.

உ-ம். கற்குறை சிறை தலை புறம் நெற்கதிர் சோறு தலை புறம் எனவரும். (எக)

௩௬எ. மெல்லெழுத் தியையி னகார மாகும்.

இது னகாரமாமென்றலின் அவற்றிற்கு எய்தாததெய்துவித்தது.

இ - ள். மெல்லெழுத்து இயையின் னகாரமாகும் = அவ் ஈறு மென்கணம் வந்து இயையின் னகாரமாகத் திரிந்துமுடியும். எ - று.

உ-ம். கன்ஞெரி நுனி முரி எனவரும்.

இச்சூத்திரத்தினை வேற்றுமையிறுதிக்கண் அல்வழியது எடுத்துக்கோடற்கட் சிங்கநோக்காக வைத்தமையான் அல்வழிக்கும் இம்முடிபுகொள்க. கன்ஞெரிந்தது நீண்டது மாண்டது எனவரும்.

௩௬அ. அல்வழி யெல்லா முறழென மொழிப.

இஃது அவ் ஈற்று அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். அல்வழியெல்லாம் உறழென மொழிப = இவ் ஈற்று அல்வழிகளெல்லாந் தந்திரிபு வல்லெழுத்தினோடு உறழ்ந்துமுடியுமென்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். கல்குறிது கற்குறிது சிறிது தீது பெரிது எனவரும்.

எல்லாமென்றதனாற் கல்குறுமை கற்குறுமை சிறுமை தீமை பெருமை எனக் குணம்பற்றிவந்த வேற்றுமைக்கும் உறழ்ச்சி கொள்க.

இன்னும் இதனானே வினைச்சொல்லீறு திரிந்தனவும் உருபுதிரிந்தனவுங் கொள்க. வந்தானற்கொற்றன் பொருவானற்போகான் எனவும் அத்தாற்கொண்டான் இத்தாற்கொண்டான் உத்தாற்கொண்டான் எத்தாற்கொண்டான் எனவும் வரும்.

அக்காற்கொண்டான் என்றாற்போலப் பிறவும் முடிபு உள்ளனவெல்லாம் இதனான் முடித்துக்கொள்க. (எ௩)

௩௬௯. தகரம் வருவழி யாய்த நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே.

இது லகரம் றகரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரியு மென்றலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். தகரம் வருவழி ஆய்தம் நிலையலும்=தகரம் முதலாகிய மொழி வந்தால் லகரம் றகரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரிந்துநிற்றலும்: புகர் இன்று என்மனூர் புலமையோர்=குற்றமின்றென்று சொல்லுவார் ஆசிரியர். எ - று.

உ-ம். கஃறீது கற்றீது எனவரும்.

புகரின்றென்றதனால் "நெடியதனிறுதி" என்பதனுள் வேறீது வேற்றீது என்னும் உறழ்ச்சிமுடிபுங் கொள்க. (எச)

௩அ௦. நெடியத னிறுதி யியல்புமா ருளவே.

இஃது "அல்வழியெல்லாமுறழ்" என்றதனை விலக்கி இயல்பாக என்றலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். நெடியதன் இறுதி இயல்புமாருள=நெட்டெழுத்தின் ஈற்று லகார ஈறு குறியதன் இறுதிக்கண் நின்ற லகாரம்போலத் திரிந்து உறழ்தலேயன்றி இயல்பாய் முடிவனவும் உள. எ-று.

உ-ம். பால்கடிது சிறிது தீது பெரிது எனவரும். இயல்பாகாது திரிந்தன வேற்கடிது என்றாற்போல்வன. (எரு)

௩அக. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லு
மல்லது கிளப்பினும் வேற்றுமை யியல.

இஃது அல்வழிக்கண் உறழ்ந்துமுடிக என்றதனை வேற்றுமை முடிபென்றலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்=நெல்லென்னுஞ் சொல்லுஞ் செல்லென்னுஞ்சொல்லுங் கொல்லென்னுஞ்சொல்லுஞ் சொல்லென்னுஞ்சொல்லுமாகிய இந்நான்குசொல்லும்: அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல=அல்வழியைச் சொல்லுமிடத்துந் தாம் வேற்றுமைமுடிபின் இயல்பிற்றாய் லகரம் றகரமாய்த் திரிந்து முடியும். எ - று.

உம்மை சிறப்பு.

உ-ம். நெற்காய்த்தது செற்கடிது கொற்கடிது சொற்கடிது சிறிது தீது பெரிது எனவரும். (எசா)

கஅஉ. இல்லென் கிளவி யின்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலு மையிடை வருதலு
மியற்கை யாதலு மாகாரம் வருதலுங்
கொளத்தகு மரபி னாகிட னுடைத்தே.

இஃது இவ் ஈற்று வினைக்குறிப்புச்சொல்லுள் ஒன்றற்கு எய்தாததெய்துவித்தது.

இ - ள். இல்லென்கிளவி இன்மைசெப்பின் = இல்லென்னுஞ் சொல் இருப்பிடமாகிய இல்லை உணர்த்தாது ஒருபொருளினது இல்லாமையை உணர்த்தும் இடத்து: வல்லெழுத்து மிகுதலும் = வல்லெழுத்து முதன்மொழி வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடிதலும்: ஐ இடை வருதலும் = ஐகாரம் இடையே வருதலும்: இயற்கையாதலும் = இரண்டும் வாராது இயல்பாய்முடிதலும்: ஆகாரம் வருதலும் = ஆகாரம்வந்து முடிதலுமாகிய இந்நான்குமுடிபும்: கொளத்தகு மரபின் = சொற்குமுடிபாகக் கொளத்தகும் முறையானே: ஆகிடனுடைத்து = தன்முடிபாம் இடன் உடைத்து. எ - று.

கொளத்தகுமரபினென்றதனான் வல்லெழுத்துமுதன்மொழி வந்துழி ஐகாரம்வருதலும், ஐகாரம்வந்துழி வல்லெழுத்துமிகுதலும் மிகாமையும், ஆகாரம் வந்துழி வல்லெழுத்து மிக்குமுடிதலுங் கொள்க.

உ-ம். இல்லெனநிறுத்திக் கொற்றன் சாத்தன் தெளிவு பொருள் எனத் தந்து வல்லெழுத்தும் ஐகாரமுங்கொடுத்து இல்லைக் கொற்றனென ஏனையவற்றோடும் ஒட்டுக.

இன்னும் அவ்வாறேநிறுத்தி ஐகாரமே கொடுத்து இல்லை கொற்றன் சாத்தன் தெளிவு பொருள் என வல்லெழுத்து மிகாது முடிக்க.

இன்னுங் கொளத்தகுமரபினென்றதனான் ஏனைக்கணத்தின் முன்னும் ஐகாரமே கொடுத்து இல்லைஞாண் நூல் மணி வானம் ஆடை என ஒட்டுக.

இஃது இல்லென்பதோர் முதனிலை நின்று வருமொழியோடு இங்ஙனம் புணர்ந்ததென்பது உணர்தற்கு இல்லென்கிளவியென்றும் இயற்கையாதலுமென்றுங் கூறினார். இம்முடிபு வினையியலுள் விரவுவினைக்கண் "இன்மைசெப்பல்" என்புழி "இல்லை இல்" என்று

உரைகூறியவதனானும் அவனில்லை என்றாற்போல்வன உதாரண மாக எல்லா ஆசிரியருங் காட்டியவாற்றானும் உணர்க.

இதனானே இங்ஙனம்புணர்த்தசொல்லன்றி இல்லை என ஐகார ஈறாய்நிற்பதோர்சொல் இன்மையும் உணர்க. ஆயின் இன் மைமுதலியவற்றையும் இவ்வாறே புணர்க்கவெனின் அவைவரு மொழியின்றி ஒருசொல்லாய்நிற்றலிற் புணராராயினர்.

இனி இயல்புவருமாறு:-எண்ணில்குணம் செய்கை துடி பொருள் எனவும் பொய்யில்ஞானம் மையில்வாண்முகம் எனவும் வரும்.

இனி ஆகாரம்வருமாறு:-இல்லாக்கொற்றன் சாத்தன் தேவன் பொருள் என ஆகாரம் வல்லெழுத்துப்பெற்றன. பிற்கூறிய இரண் டும் இல்லென்னும் வினைக்குறிப்புமுதனிலையடியாகத் தோன்றிய பெயரெச்சமறை தொக்கும் விரிந்தும் நின்றன.

இயல்புமுற்கூறாததனால் இம்முடிபிற்கு வேண்டுஞ் செய்கை செய்க. தாவினீட்சி என்றாற்போல வேறுபட வருவனவற்றிற் கும் வேண்டுஞ் செய்கைசெய்து முடிக்க. (எள)

௩அ௩. வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே.

இஃது இருவழியுந் திரிந்தும் உறழ்ந்தும் வருமென எய்திய தனைவிலக்கித் தொழிற்பெயரோடு மாட்டெறிதலிற் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். வல் என் கிளவி = வல்லென்னுஞ்சொல் அல்வழிக் கண்ணும் வேற்றுமைக்கண்ணும்; தொழிற்பெயர் இயற்று = ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வன்கணத்து உகரமும் வல் லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்துவகாரத்தும் உகரமும் பெற்றுமுடியும். எ - று.

உ-ம். வல்லுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் வல்லுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும். (எஅ)

௩அச. நாயும் பலகையும் வரூஉங் காலை
யாவயி னுகரங் கெடுதலு முரித்தே
யுகரங் கெடுவழி யகர நிலையும்.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். நாயும் பலகையும் வரூஉங் காலை=வல்லென்பதன் முன் நாயென்னுஞ்சொல்லும் பலகையென்னுஞ்சொல்லும் வருமொழியாய் வருங்காலத்து: ஆவயின் உகரங் கெடுதலும் உரித்து= அவ்விடத்து உகரங் கெடாதுநிற்றலேயன்றிக் கெட்டு முடியவும் பெறும்: உகரங் கெடுவழி அகரம் நிலையும்=அவ்வுகரங் கெடுமிடத்து அகரம் நிலைபெற்று முடியும். எ - று.

உ-ம். வல்லநாய் வல்லப்பலகை எனவரும்.

உம்மை எதிர்மறையாகலான் உகரங் கெடாதேநின்று வல்லுநாய் வல்லுப்பலகை என வருதலுங் கொள்க.

அகரம் நிலையுமென்றது உகரங்கெடுமென்றதனாற் பிற வருமொழிக்கண்ணும் இவ்வகரப்பேறு கொள்க. வல்லக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவரும். (எக)

ருஅரு. பூல்வே லென்றா வாலென் கிளவியொ
டாமுப் பெயர்க்கு மம்மிடை வருமே.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். பூல் வேல் என்றா ஆலென்கிளவியொடு ஆமுப்பெயர்க்கும்=பூலென்னுஞ்சொல்லும் வேலென்னுஞ்சொல்லும் ஆலென்னுஞ்சொல்லுமாகிய அம்மூன்றுபெயர்க்கும்: அம் இடைவரும்=வேற்றுமைக்கட் திரிபின்றி அம்முச்சாரியை இடைவந்து முடியும். எ - று.

உ-ம். பூலங்கோடு வேலங்கோடு ஆலங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்தும் ஒட்டுக. பூலஞெரி வேலஞெரி ஆலஞெரி நீழல் விறகு எனவரும். என்றா என எண்ணிடையிட்டமையாற் பூலாங்கோடு பூலாங்கழி என ஆகாரம் பூலுக்குக்கொள்க. (அo)

ருஅசு. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது இவ் ஈற்றுத் தொழிற்பெயர்க்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணுந் திரிபும் உறழ்ச்சியும் விலக்கித் தொழிற்பெயரோடு மாட்டெறிதலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். தொழிற்பெயரெல்லாம் = லகார ஈற்றுத் தொழிற் பெயரெல்லாம்: தொழிற்பெயர் இயல = ஞகார ஈற்றுத் தொழிற் பெயரின் இயல்பினவாய் இருவழியும் வன்கணத்து உகரமும் வல் லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்றுமுடியும். எ - று.

உ-ம். புல்லுக்கடிது கல்லுக்கடிது வல்லுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் வல்லுக்க டுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை என வும் வரும். இவற்றிற்குப் புல்லுதல் கல்லுதல் வல்லுதல் எனப் பொருளுரைக்க.

இனி எல்லாமென்றதனாற் தொழிற்பெயர்விதி எய்தாது பிற விதி எய்துவனவுங் கொள்க. கன்னல்கடிது பின்னல்கடிது கன் னற்கடுமை பின்னற்கடுமை எனவும் வரும். இதனானே மென்க ணம் வந்துழிப் பின்னன்ஞான்றது நீண்டது மாண்டது பின்னன் ஞாற்சி நீட்சி மாட்சி என ஒட்டுக.

இனி ஆடல் பாடல் கூடல் நீடல் முதலியனவும் அல்வழிக் கண் இயல்பாயும் வேற்றுமைக்கட் திரிந்தும் முடிதல் இதனாற் கொள்க. (௮௧)

௩௮௭. வெயிலென் கிளவி மழையிய னிலையும்.

இது திரிபுவிலக்கி அத்தும் இன்னும் வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். வெயில் என் கிளவி மழையியல் நிலையும் = வெயி லென்னுஞ்சொல் மழையென்னுஞ்சொற் போல அத்தும் இன்னும் பெற்றுமுடியும். எ - று.

மழையென்பதனை "வளியென வரூஉம்" என்பதனுடனும் வளியென்பதனைப் "பனியென வரூஉம்" என்பதனுடனும் மாட் டெறிந்தவாறுகாண்க.

உ-ம். வெயிலத்துக்கொண்டான் வெயிலிற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும். இஃது அத்துமிசை யொற்றுக் கெடாதுநின்ற இடம். இஃது "அவற்றுமுன் வரூஉம் வல். லெழுத்து" மிக்கது. அதிகாரவல்லெழுத்தின்மையின் இயல்புகணத் துங் கொள்க, சாரியை வருமொழி வரையாதுகூறினமையின். ()

௩அஅ. சுட்டுமுத லாகிய வகர விறுதி
முற்படக் கிளந்த வுருபிய னிலையும்.

இது முறையானே வகர ஈறு வேற்றுமைக்கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். சுட்டுமுதலாகிய வகர இறுதி = வகர ஈற்றுப் பெயர் நான்கனுட் சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகர ஈற்றுப்பெயர் மூன்றும்: முற்படக் கிளந்த உருபியல் நிலையும் = முற்படக்கூறிய உருபுபுணர்ச்சியின் இயல்பிற்றாய் வற்றுப்பெற்று முடியும். எ - று.

உ-ம். அவற்றுக்கோடு இவற்றுக்கோடு உவற்றுக்கோடு செவி தலை புறம் எனவரும்.

முற்படக்கிளந்த என்றதனானே வற்றினோடு இன்னும் பெறுதல் கொள்க. அவற்றின்கோடு இவற்றின்கோடு உவற்றின்கோடு செவி தலை புறம் என ஒட்டுக. இஃது ஏனைக்கணத்தோடும் ஒட்டுக.

௩அகூ. வேற்றுமை யல்வழி யாய்த மாகும்.

இது மேலனவற்றிற்கு அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமையல்வழி ஆய்தமாகும் = அச்சுட்டுமுதல்வகரம் வன்கணத்துக்கண் வேற்றுமையல்லாத இடத்து ஆய்தமாய்த் திரிந்துமுடியும். எ - று.

உ-ம். அஃகடிய இஃகடிய உஃகடிய சிறிய தீய பெரிய என வரும். இவ்வழக்கு இக்காலத்து அரிது. (அச)

௩௯௦. மெல்லெழுத் தியையி னவ்வெழுத் தாகும்.

இஃது எய்தாததெய்துவித்தது.

இ - ள். மெல்லெழுத்து இயையின் அவ்வெழுத்தாகும் = அவ்வகர ஈறு மென்கணம்வந்து இயையுமாயின் அவ்வகரவொற்று அவ்வவமெல்லெழுத்தாய்த் திரிந்துமுடியும். எ - று.

உ-ம். அஞ்ஞாண் இஞ்ஞாண் உஞ்ஞாண் நூல் மணி எனவரும். (அரு)

௩௯க. ஏனவை புணரி னியல்பென மொழி

இதுவும் அது, அவ ஈறு ஏனைக்கணங்களோடு புணருமாறு கூறுதலின்.

இ - ள். ஏனவை புணரின் = அச்சுட்டுமுதல் வகர ஈற்றோடு இடைக்கணமும் உயிர்க்கணமும் வந்து புணருமாயின்: இயல்பென மொழிப = அவ்வகரந் திரியாது இயல்பாய்முடியுமென்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். அவ்யாழ் இவ்யாழ் உவ்யாழ் வட்டு அடை ஆடை என ஒட்டுக.

ஈண்டுக் கூறியது நிலைமொழிக்கென்றும் ஆண்டு "நின்ற சொன்முனியல்பாகும்" என்றது வருமொழிக்கென்றும் உணர்க. ()

௩அஉ. ஏனை வகரந் தொழிற்பெய ரியற்றே.

இஃது எய்தாததெய்துவித்தது.

இ - ள். ஏனைவகரம் = "வகரக்கிளவி நான்மொழியீற்றது" என்றதனுள் ஒழிந்துநின்ற உரிச்சொல்லாகிய வகரம் இருவழியும்: தொழிற்பெயர் இயற்று = ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்றுமுடியும். எ - று.

உ-ம். தெவவுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், தெவவுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும்.

உரையிற்கோடலென்பதனாற் தெம்முனை என வகரவொற்று மகரவொற்றாகத் திரிதல்கொள்க. (அஎ)

௩அ௩. ழகார விறுதி ரகார வியற்றே.

இது நிறுத்தமுறையானே ழகார ஈற்று வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள். ழகார இறுதி ரகார இயற்று = ழகார ஈற்றுப்பெயர் வன்கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகார ஈற்றின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும். எ - று.

உ-ம். பூழ்க்கால் சிறகு தலை புறம் எனவரும். (அஅ)

௩அ௪. தாழெண் கிளவி கோலொடு புணரி
னக்கிடை வருத லுரித்து மாகும்.

இஃது இவ் ஈற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது, வல்லெழுத்தினோடு அக்கு வகுத்தலின்.

இ-ள். தாழ் என் கிளவி கோலொடு புணரின்=தாழென்னுஞ்சொற் கோலென்னுஞ்சொல்லோடு புணரும் இடத்து: அக்கு இடைவருதலும் உரித்தாகும்=வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குச்சாரியை இடையேவந்து நிற்றலும் உரித்து. எ - று.

எனவே அக்குப்பெறாது வல்லெழுத்து மிகுதல் வலியுடைத்தாயிற்று.

உ-ம். தாழக்கோல் தாழ்க்கோல் எனவரும்.

இது தாழைத் திறக்குங் கோல் என விரியும். (அ௯)

௩அ௫. தமிழென் கிளவியு மதனோ ரற்றே.

இதுவும் அது.

இ-ள். தமிழ் என் கிளவியும்=தமிழென்னுஞ்சொல்லும்: அதனோரற்று=வல்லெழுத்து மிக்குமுடிதலேயன்றி அக்குச்சாரியையும் பெற்று முடியும். எ - று.

அதனோரற்றே என்றதனால் இதற்குத் தமிழ்க்கூத்தென வல்லெழுத்துமிகுதலே வலியுடைத்து.

உ-ம். தமிழக்கூத்து சேரி தோட்டம் பள்ளி எனவரும். தமிழையுடையகூத்து எனவிரிக்க. தமிழவரையர் என்றாற்போல வல்லெழுத்துப்பெறாது அக்குப்பெற்றன "உணரக்கூறிய" என்னும் புறனடையாற்கொள்க. தமிழநாடு தமிழ்நாடு என ஏனைக்கணத்து முடிபு "எப்பெயர்முன்னரும்" எனபதனுள் "முற்ற" என்றதனான் முடித்தாம். (௯0)

௩அ௬. குமிழென் கிளவி மரப்பெய ராயிற்
பீரென் கிளவியொ டோரியற் றாகும்.

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்தும் அம்மும் வருதலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ-ள். குமிழ் என் கிளவி மரப்பெயர் ஆயின்=குமிழென்னுஞ்சொற் குமிழ்த்தலென்னுந் தொழிலன்றி மரப்பெயராயின்: பீர் என் கிளவியொடு ஓர் இயற்று ஆகும்=பீரென்னுஞ்சொல்லோடு ஓரியல்பிற்றாய் ஒருவழி மெல்லெழுத்தும் ஒருவழி அம்மும் பெற்றுமுடியும். எ - று.

உ-ம். குமிழ்ங்கோடு குமிழங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

ஓரியற்றென்றதனாற் பிறவற்றிற்கும் இம்முடிபு கொள்க. மகிழ்ங்கோடு மகிழங்கோடு என ஒட்டுக. (௬௧)

௩௭௭. பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே.

இது வல்லெழுத்தினோடு மெல்லெழுத்துப் பெறுக என்றலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ-ள். பாழ் என் கிளவி மெல்லெழுத்து உறழ்வு=பாழென்னுஞ்சொல்லீறு வல்லெழுத்தினோடு மெல்லெழுத்துப்பெற்று உறழ்ந்துமுடியும். எ - று.

உ-ம். பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு சேரி தோட்டம் பாடி என ஒட்டுக. இது பாழுட்கிணறு என விரியும், பாழ்த்தகிணறு என வினைத்தொகை முடியாமையின். (௬௨)

௩௭௮. ஏழென் கிளவி யுருபிய னிலையும்.

இஃது எண்ணுப்பெயர் இவ்வாறு முடிக என்றலின் எய்தாத தெய்துவித்தது.

இ-ள். ஏழ் என் கிளவி=ஏழென்னும் எண்ணுப்பெயர் இறுதி: உருபியல் நிலையும்=உருபுபுணர்ச்சிக்கட் கூறிய இயல்பின் கண்ணே நிலைபெற்று அன் பெற்றுமுடியும். எ - று.

அஃது "அன்னென்சாரியையேழனிறுதி" என்பதாம்.

உ-ம். ஏழன்காயம் சுக்கு தோரை பயறு எனவரும். இவைபு வல்லெழுத்து ஓத்தின்புறனடையான் வீழ்க்க. இஃது ஏழனாற் கொண்டகாயம் என விரியும். (௬௩)

௩௭௯. அளவு நிறையு மெண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலு முகரம் வருதலுங்
கடிநிலை யின்றே யாசிரி யற்க.

இது மேலதற்கு எய்தாததெய்துவித்தது.

இ - ள். அளவும் நிறையும் எண்ணும் வருவழி = அவ்வே ழென்பதன்முன்னர் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப் பெயரும் வருமொழியாய் வருமிடத்து: நெடுமுதல் குறுகலும் உக ரம் வருதலுங் கடிநிலையின்றே ஆசிரியற்க = முன்னின்ற நெட்டெ ழுத்தின் மாத்திரை குறுகலும் ஆண்டு உகரம் வருதலும் நீக்குநிலை மையின்று ஆசிரியற்கு. எ - று.

உ-ம். எழுகலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும், எழுகழஞ்சு தொடி பலம் எனவும், எழுமூன்று எழுநான்கு எனவும் வரும்.

நிலையென்றதனான் வன்கணத்துப் பொருட்பெயர்க்கும் இம் முடிபுகொள்க. எழுகடல் சிலை திசை பிறப்பு எனவரும். (௬௯)

௩௭0. பத்தென் கிளவி யொற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டு மாய்தப் புள்ளி.

இது மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது, வரு மொழிநோக்கி விதித்தலின்.

இ - ள். பத்து என் கிளவி ஒற்றிடை கெடுவழி = அவ்வேழ னோடு பத்தென்பது புணருமிடத்து அப்பத்தென்கிளவி இடை யொற்றுக் கெடுவழி: ஆய்தப்புள்ளி நிற்றல்வேண்டும் = ஆய்தமாகிய புள்ளி நிற்றலை விரும்பும் ஆசிரியன். எ - று.

உ-ம். எழுபஃது எனவரும். (௭0)

௩௭௧. ஆயிரம் வருவழி யுகரங் கெடுமே.

இது நெடுமுதல்குறுகிநின்று உகரம்பெறுது என்றலின் எய்தி யது ஒருமருங்கு மறுத்தது.

இ - ள். ஆயிரம் வருவழி = ஏழென்பதன்முன் ஆயிரமென் னும் எண்ணுப்பெயர் வருமொழியாய் வருமிடத்து: உகரங்கெ டும் = நெடுமுதல்குறுகிநின்று உகரம்பெறுது முடியும். எ - று.

உ-ம். எழாயிரம் என வரும். (௭௧)

௩௭௨. நூறூர்ந்து வரூஉ மாயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்க மின்றே.

இஃது எய்தியது முழுவதூஉம் விலக்கிற்று, உகரங்கெட்டு அதன்மேலே நெடுமுதல்குறுகாது என்றலின்.

இ - ள். நூறு ஊர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்கு = அவ்வேழென்பது நூறென்னுஞ்சொன்மேல் வரும் ஆயிரமென்னுஞ் சொல்லிற்கு: கூறிய நெடுமுதல் குறுக்கமின்று = முற்கூறிய நெடுமுதல் குறுகி உகரம்பெறுதலின்று. எ - று.

உ-ம். ஏழ்நூறாயிரம் எனவரும்.

கூறிய என்றதனான் நெடுமுதல்குறுகி உகரம்பெற்று எழுநூறாயிரமெனவும் வரும்.

இதனானே ஏழாயிரமென மேல் முதனிலை குறுகாமையுங் கொள்க.

இதனானே எழுஞாயிறு எழுநாள் எழுவகை என இயல்புகணத்து நெடுமுதல் குறுகி உகரம்பெறுதலுங் கொள்க. (கஎ)

நகூந. ஐயம் பல்லென வரூஉ மிறுதி
யல்பெய ரெண்ணினு மாயிய னிலையும்.

இதுவும் அது.

இ - ள். ஐ அம் பல் என வரூஉம் இறுதி = அவ்வேழன்முன்னர் ஐயென்றும் அம்மென்றும் பல்லென்றும் வருகின்ற இறுதிகளையுடைய: அல்பெயர் எண்ணினும் = பொருட்பெயரல்லாத எண்ணுப்பெயராகிய தாமரை வெள்ளம் ஆம்பல் என்பன வந்தாலும்: ஆ இயல் நிலையும் = நெடுமுதல்குறுகி உகரம்பெறாது அவ்வியல்பின் கண்ணே நின்று முடியும். எ - று.

உ-ம். ஏழ்தாமரை ஏழ்வெள்ளம் ஏழாம்பல் எனவரும். (கஅ)

நகூச. உயிர்முன் வரினு மாயிய றிரியாது.

இதுவும் அது.

இ - ள். உயிர்முன் வரினும் = அவ்வேழென்பதன்முன்னர் அளவுப்பெயரும் எண்ணுப்பெயருமாகிய உயிர்முதன்மொழி வரினும்: ஆ இயல் திரியாது = நெடுமுதல்குறுகி உகரம்பெறாது முடியும் இயல்பிற் றிரியாதுமுடியும். எ - று.

உ-ம். ஏழகல் ஏழுழக்கு ஏழொன்று ஏழிரண்டு எனவரும். ()

௩௯௫. கீழென் கிளவி யுறழத் தோன்றும்.

இஃது இவ் ஈற்றுள் ஒன்றற்கு வேற்றுமைக்கண் உறழ்ச்சி கூறுகின்றது.

இ - ள். கீழ் என் கிளவி உறழத் தோன்றும்=கீழென்னுஞ் சொல் உறழ்ச்சியாய்த்தோன்றி முடியும். எ - று.

தோன்றுமென்றதனுன் நெடுமுதல்குறுகாது வல்லெழுத்துப் பெற்றும் பெறாதும் வருமென்ற இரண்டும் உறழ்ச்சியாய் வருமென்று கொள்க. இயைபுவல்லெழுத்து அதிகாரத்தாற்கொள்க.

உ-ம். கீழ்க்குளம் கீழ்குளம் சேரி தோட்டம் பாடி எனவரும்.

௩௯௬. ளகார விறுதி ணகார வியற்றே.

இது நிறுத்தமுறையானே ளகார ஈற்றுச்சொல் வேற்றுமைக் கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ளகார இறுதி ணகார இயற்று=ளகார ஈற்றுப் பெயர் ணகார ஈற்றின் இயல்பிற்றாய் வன்கணம்வந்துழி டகாரமாய்த் திரிந்துமுடியும். எ - று.

உ-ம். முட்குறை சிறை தலை புறம் எனவரும். (௧0௧)

௩௯௭. மெல்லெழுத் தியையின் ணகார மாகும்.

இது மேலதற்கு மென்கணத்துமுடிபு கூறுகின்றது.

இ - ள். மெல்லெழுத்து இயையின் ணகாரமாகும்=ளகார ஈறு மெல்லெழுத்துமுதன்மொழி வருமொழியாய் வந்து இயையின் ணகாரமாய்த் திரிந்துமுடியும். எ - று.

உ-ம். முண்ஞெரி நுனி மரம் எனவரும்.

இதனை வேற்றுமையிறுதிக்கண் அல்வழியது எடுத்துக்கோடற்கட் சிங்கநோக்காக வைத்தலின் அல்வழிக்கும் இம்முடிபு கொள்க. முண்ஞெரிந்தது நீண்டது மாண்டது எனவரும். (௧0௨)

௩௯௮. அல்வழி யெல்லா முறழென மொழிப.

இது மேலதற்கு அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். அல்வழியெல்லாம்=ளகார ஈறு அல்வழிக்கணெல்லாம்: உறழெனமொழிப=திரியாதும் டகரமாய்த் திரிந்தும் உறழ்ந்துமுடியுமென்று சொல்லுவர் புலவர். எ - று.

உ-ம். முள்கடிது முட்கடிது சிறிது தீது பெரிது எனவரும்.

எல்லாமென்றதனாற் குணவேற்றுமைக்கண்ணும் இவ்வுறழ்ச்சி கொள்க. முள்குறுமை முட்குறுமை சிறுமை தீமை பெருமை எனவும், கோள்கடுமை கோட்கடுமை வாள்கடுமை வாட்கடுமை எனவும் ஒட்டுக.

இதனானே அதோட்கொண்டான் இதோட்கொண்டான் உதோட்கொண்டான் எதோட்கொண்டான் சென்றான் தந்தான் போயினானென உருபு வாராது உருபின் பொருள்பட வந்தனவுங் கொள்க. (௧0௩)

௩௯௯. ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வரூஉங் காலை யான.

இது மேலதற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, 'தகரம் வருவழி உறழ்ச்சியேயன்றி ஆய்தமாகத் திரிந்து உறழ்க என்றலின்.

இ - ள். தகரம் வரூஉங் காலையான=தகரமுதன்மொழி வருமொழியாய் வருங்காலத்து: ஆய்தம் நிலையலும் வரைநிலையின்று=ளகாரம் டகாரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரிந்து நிற்றலும் நீக்கும் நிலைமையின்று. எ - று.

உ-ம். முஃடீது முட்டீது எனவரும். (௧0௪)

௪00. நெடியத னிறுதி யியல்பா குநவும்
வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையலும்
போற்றல் வேண்டு மொழியுமா ருளவே.

இது மேலதற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். நெடியதன் இறுதி இயல்பு ஆகுநவும்=அவ் ஈற்று நெடியதன் இறுதி திரியாது இயல்பாய் முடிவனவற்றையும்: வேற்றுமை அல் வழி வேற்றுமை நிலையலும்=வேற்றுமையல்லாத

இடத்து வேற்றுமையின் இயல்பையுடையவாய்த் திரிந்து முடிதலை யும்: போற்றல் வேண்டும் மொழியுமாருள=போற்றுதல் வேண் டுஞ் சொற்களும் உள. எ - று.

உ-ம். கோள்கடிது வாள்கடிது சிறிது தீது பெரிது எனவும், "புட்டேம்பப்புயன்மாறி" எனவும் வரும்.

போற்றல்வேண்டும் என்றதனால் உதளங்காய் செதிள் தோல் பூ என அம்முப் பெறுதலுங் கொள்க. உதளென்பது யாட்டினை உணர்த்துங்கால் முற்கூறிய முடிபுகள் இருவழிக்கும் ஏற்றவாறே முடிக்க. உதட்கோடு உதள்கடிது உதணன்று என ஒட்டுக. "மோ த்தையுந் தகரு முதளு மப்பரும்" என்றார் மரபியலில். (சுOரு)

சுOசு. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது இவ் ஈற்றுத் தொழிற்பெயர்க்கு இருவழியும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள். தொழிற்பெயரெல்லாம்=ளகார ஈற்றுத் தொழிற் பெயரெல்லாம் இருவழியும்: தொழிற்பெயர் இயல=ஞகார ஈற் றுத் தொழிற்பெயர்போல வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்று முடியும். எ - று.

உ-ம். துள்ளுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், துள்ளுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும்.

எல்லாமென்றதனானே இருவழியுந் தொழிற்பெயர்கள் உகர மும் வல்லெழுத்தும் பெறாது திரிந்துந் திரியாதும் முடிவனவுங் கொள்க. கோள்கடிது கோட்கடிது கோள்கடுமை கோட்கடுமை என்பன போல்வன பிறவும் வரும்.

இனி வாள்கடிது வாட்கடிது சிறிது தீது பெரிது எனவும், வாள்கடுமை வாட்கடுமை எனவுங் காட்டுக. வாள், கொல்லுதல். ()

சுOஎ. இருளென் கிளவி வெயிலிய னிலையும்.

இது திரிபுவிலக்கி அத்தும் இன்னும் வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள். இருள் என் கிளவி=இருளென்னுஞ்சொல் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்: வெயிலியல் நிலையும்=வெயிலென்னுஞ்சொற்போல அத்தும் இன்னும் பெற்றுமுடியும். எ - று.

உ-ம். இருளத்துக்கொண்டான் இருளிற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும்.

சாரியை வரையாதுகூறினமையின் இயல்புகணத்தும் ஒட்டுக. இருளத்துஞான்றான் நீண்டான் மாண்டான் இருளின்ஞான்றான் நீண்டான் மாண்டான் எனவரும். (௧௦எ)

௪௦௯. புள்ளும் வள்ளுந் தொழிற்பெய ரியல.

இதுவும் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, திரிபும் இயல்பும் விலக்கித் தொழிற்பெயர்விதி வகுத்தலின்.

இ - ள். புள்ளும் வள்ளும்=புள்ளென்னுஞ்சொல்லும் வள்ளென்னுஞ்சொல்லும் இருவழிக்கண்ணும்: தொழிற்பெயர் இயல=ஞகார ஈற்றுத் தொழிற்பெயர்போல வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்றுமுடியும். எ - று.

உ-ம். புள்ளுக்கடிது வள்ளுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், புள்ளுக்கடுமை வள்ளுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும்.

இதனைத் "தொழிற்பெயரெல்லாம்" என்பதன்பின் வையாததனால் இருவழியும் வேற்றுமைத்திரிபு எய்தி முடிவனவுங்கொள்க: புட்கடிது வட்கடிது சிறிது தீது பெரிது எனவும், புட்கடுமை வட்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும், புண்ஞான்றது நீண்டது மாண்டது எனவும், புண்ஞாற்சி நீட்சி மாட்சி எனவும் வரும். புள்ளுவலிது புள்வலிது புள்ளுவன்மை புள்வன்மை என வகரத்தின் முன்னர் உகரம் பெற்றும் பெறாதும் வருதலின் "நின்றசொன்முனியல்பாகும்" என்றதனான் முடியாமை உணர்க. இது வள்ளிற்கும் ஒக்கும். (௧௦அ)

௪௧௦. மக்க ளென்னும் பெயர்ச்சொ லிறுதி
தக்கவழி யறிந்து வலித்தலு முரித்தே.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, "உயிரீறா கிய உயர்திணைப்பெயர்" என்பதனுட் கூறிய இயல்பு விலக்கித் திரி புவகுத்தலின்.

இ - ள். மக்கள் என்னும் பெயர்ச்சொல் இறுதி = மக்களென் னும்பெயர்ச்சொல்லிறுதி இயல்பேயன்றி: தக்கவழி அறிந்து வலித் தலும் உரித்து = தக்க இடம் அறிந்து வல்லொற்றாகத் திரிந்து முடி தலும் உரித்து. எ - று.

தக்கவழியென்றார் பெரும்பான்மை மக்கள் உடம்பு உயிர்நீங் கிக் கிடந்தகாலத்தின் அஃது இம்முடிபுபெறும் என்றற்கு.

உ-ம். மக்கட்கை செவி தலை புறம். "இக்கிடந்தது மக்கட் டலை" என்பதனான் அவ்வாறுதல் கொள்க. மக்கள்கை செவி தலை புறம் எனத் திரியாதுநின்றது உயிருண்மை பெற்று.

இனிச்சிறுபான்மை மக்கட்பண்பு மக்கட்சுட்டு என வும் வரும். (௪0௪)

௪0௫. உணரக் கூறிய புணரியன் மருங்கிற்
கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே.

இஃது இவ்வோத்தின்கண் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்றவற்றிற்கெல்லாம் இதுவே ஓத்தாகக்கொண்டு சாரி யை பெறுவனவற்றிற்குச் சாரியையும் எழுத்துப் பெறுவனவற் றிற்கு எழுத்துங் கொடுத்து முடித்துக்கொள்க என்கின்றது.

இ - ள். உணரக் கூறிய புணரியன் மருங்கின் = உணரக்கூறப் பட்ட புள்ளியீறு வருமொழியோடு புணரும் இயல்பிடத்து: கண்டு செயற்கு உரியவை = மேல் முடித்த முடிபன்றி வழக்கினுட் கண்டு முடித்தற்கு உரியவைதோன்றியவழி: கண்ணினர் கொளல் = அவற் றையுங் கருதிக்கொண்டு ஏற்றவாறே முடிக்க. எ - று.

உ-ம். மண்ணப்பத்தம் என அல்வழிக்கண் ணகர ஈறு அக்குப் பெற்றது. மண்ணங்கட்டி என அம்முப்பெற்றது. பொன்னப்பத்தம் என னகர ஈறு அக்குப்பெற்றது. பொன்னங்கட்டி என அம்முப் பெற்றது. கானங்கோழி என வேற்றுமைக்கண் அம்முப்பெற்றது. மண்ணுங்கட்டி கானுங்கோழி என்பன மரூஉ. வேயின்றலை என யகர ஈற்று உருபிற்குச் சென்றசாரியை பொருட்கட்சென்றுழி வல் லெழுத்துக் கெடுக்க. நீர்குறிது என ரகர ஈறு அல்வழிக்கண் இயல்

பாயிற்று. வேர்குறிது வேர்க்குறிது இது ரகர ஈறு அல்வழி உறழ்ச்சி. வடசார்க்கூரை மேல்சார்க்கூரை இவை வல்லெழுத்து மிக்க மரூஉமுடிபு. அம்பர்க்கொண்டான் இம்பர்க்கொண்டான் உம்பர்க்கொண்டான் எம்பர்க்கொண்டான் என இவ் ஈறு ஏழனுருபின் பொருள்பட வந்தன வல்லொற்றுப்பெற்றன. தகர்க்குட்டி புகர்ப்போத்து என்பன பண்புத்தொகை கருதிற்றேல் ஈண்டு முடிக்க. வேற்றுமையாயின் முன்னர் முடியும். விழலென்னும் லகர ஈறு வேற்றுமைக்கண் றகரமாகாது னகரமாய் முடிதல்கொள்க. விழன் காடு செறு தாள் புறம் என வரும். கல்லம்பாறை உசிலங்கோடு எலியாலங்காய் புடோலங்காய் என அவ் ஈறு அம்முப்பெற்றது. கல்லாம்பாறை என்பது மரூஉ. அழலத்துக்கொண்டான் என அவ் ஈறு அத்துப்பெற்றது. அழுக்கற்போர் புழுக்கற்சோறு என்பன அவ் ஈற்று அல்வழித்திரிபு. யாழ்குறிது என்பது ழகர ஈற்று அல்வழியியல்பு. வீழ்குறிது வீழ்க்குறிது என்பன அவ் ஈற்று அல்வழியுறழ்ச்சி. தாழப்பாவை என்பது அவ் ஈற்று அல்வழி அக்குப்பெற்றது. யாழின்கோடு செய்கை தலை புறம் என அவ் ஈற்று உருபிற்குச் சென்றசாரியை பொருட்கட்சென்றுழி வல்லெழுத்து வீழ்க்க. முன்றிலைவாழ்வு முன்றிலைப்பரிசு ஒருநாளைக்குழவி ஒருதிங்களைக்குழவி என்றாற்போல்வன ளகார ஈறு ஐகாரமும் அதனோடு வல்லெழுத்தும் பெறுதல்கொள்க. பிறவும் இவ்வோத்தின் வேறுபட வருவன வெல்லாங் கொணர்ந்து இதனான்முடிக்க. குளத்தின்புறம் மரத்தின்புறம் என உருபிற்கு எய்திய அத்தோடு இன்பெறுதலுங் கொள்க.

இனிக் "கடிசொல்லில்லை" என்பதனான் வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணும் வந்து திரிந்து முடியுஞ் சொற்களும் உள. அவற்றைக் கண்ணினர்கொளலே என்பதனான் மண்ணுக்குப்போனான் பொன்னுக்குவிற்றான் பொருளுக்குப்போனான் நெல்லுக்குவிற்றான் கொள்ளுக்குக்கொண்டான் பதினேழு என்றாற்போல வழக்கின்கண் உகரம்பெறுவனவும், "விண்ணுக்குமேல்" "மண்ணுக்குநாப்பண்" "பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்—சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றினவா—னெல்லுக்கு—நூறாறொநூறென்பா னுடங்கிடைக்கும் வன்முலைக்கு—மாறாமா லன்றளந்த மண்." என்றாற்போலச் செய்யுட்கண் உகரம்பெறுவனவும், பிறவும் முடிக்க. பற்கு நெற்கு என்பன முதலியவுங் கொள்க. இவை உருபின்பொருள்பட வாராது உருபின்கண் வந்தனவேனும் ஈண்டுக் காட்டினும், ஆண்டுப் "புள்ளியிறுதியும்"என்னும் உருபியற்குத்

திரத்து இலேசுகோடற்கு இடனின்றென்று கருதி. இனி அச் சூத்திரத்துத் "தேருங்காலை" என்றதனுன் முடித்தலும் ஒன்று. ()

எட்டாவது புள்ளிமயங்கியல் முற்றிற்று.

ஒன்பதாவது

குற்றியலுகரப்புணரியல்.

௪0௬. ஈரெழுத்தொருமொழியுயிர்த்தொடரிடைத்தொட
ராய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொட
ராயிரு மூன்றே யுகரங் குறுகிடன்.

என்பது சூத்திரம். இவவோத்துக் குற்றியலுகரமென்று கூறப்பட்ட எழுத்துப் பொருட்பெயரோடும் எண்ணுப்பெயர்முதலியவற்றோடும் புணரும் முறைமை உணர்த்தினமையிற் குற்றியலுகரப்புணரியலென்னும் பெயர்த்தாயிற்று. இது "மெய்யேயுயிரென்றாயீரியல" என்றவற்றுள் உயிரினது விகாரமாய்நின்ற குற்றுகரத்தை இருமொழிக்கண்ணும் புணர்க்கின்றமையின் மேலை யோத்தினோடு இயைபுடைத்தாயிற்று. இத்தலைச்சூத்திரம் மொழிமரபினகத்து இருவழிய என்ற குற்றுகரம் இதனகத்து இனைத்துமொழியிறுதி வருமென்று அவற்றிற்குப் பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது. அப்பெயர்பெயர் அம்முறைமுறை அத்தொகை தொகை. "தொடர்மொழியிற்று" வருமென்று ஆண்டுக்கூறியவதனை ஈண்டு ஐந்துவகைப்படுத்தி அதனோடு "நெட்டெழுத்திம்பரும்" என்றது ஒன்றேயாதலின் அதனையுங்கூட்டி அறுவகைத்தென்றார்.

இ - ள். ஈரெழுத்தொருமொழி = இரண்டெழுத்தாகிய ஒரு மொழியும்: உயிர்த்தொடர் = உயிர் மேல்வரும் மெய்யைத்தொடர்ந்து நின்ற சொல்லும்: இடைத்தொடர் = இடையொற்று மேல் வரும் மெய்யைத்தொடர்ந்து நின்ற சொல்லும்: ஆய்தத்தொடர் மொழி = ஆய்தமாகிய எழுத்து மேல்வரும் மெய்யைத்தொடர்ந்து நின்ற சொல்லும்: வன்றொடர் = வல்லொற்று மேல்வரும் மெய்யைத்தொடர்ந்து நின்ற சொல்லும்: மென்றொடர் = மெல்லொற்று மேல்வரும் மெய்யைத்தொடர்ந்து நின்ற சொல்லும்: ஆயிருமூன்றே = ஆகிய அவவாறுசொல்லுமே: உகரங் குறுகு இடன் = குற்றியலுகரங் குறுகிவரும் இடன். எ - று.

உ-ம். நாகு வரகு தெள்கு எஃகு கொக்கு குரங்கு எனவரும்.

இதனை ஏழென்று கொள்வார்க்குப் பிண்ணாக்கு சுண்ணாம்பு ஆமணக்கு முதலியன முடியாமை உணர்க. (க)

சுoஎ. அவற்றுள்,
ஈரொற்றுத் தொடர்மொழி யிடைத்தொட ராகா.

இஃது அவ்வாறனுள் ஒன்றற்கு எய்தியதுவிலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ-ள். அவற்றுள்=அவ்வாறனுள்: ஈரொற்றுத் தொடர் மொழி=இரண்டொற்று இடைக்கட் தொடர்ந்து நிற்குஞ் சொல் லிற்கு இடையின ஒற்று முதல் நின்றால்: இடைத்தொடராகா= மேல் இடையினந் தொடர்ந்துநில்லா வல்லினமும் மெல்லினமுந் தொடர்ந்துநிற்கும். எ-று.

உ-ம். ஆர்க்கு ஈர்க்கு நொய்ம்பு மொய்ம்பு எனவரும். (உ)

சுoஅ. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணு
மெல்லா விறுதியு முகர * நிலையும்.

இஃது "இடைப்படிற்குறுகுமிடனுமாருண்டே" என்றதனாற் புணர்மொழிக்கண் அரைமாத்திரையினுங் குறுகுமென எய்தியதனை விலக்கி "அவ்வியனிலையு மேனைமூன்றே." என்றவிதியே பெறு மென்கின்றது.

இ-ள். அல்லது கிளப்பினும்=அல்வழியைச் சொல்லுமி டத்தும்: வேற்றுமைக்கண்ணும்=வேற்றுமைப்புணர்ச்சிக்கண்ணும்: எல்லா இறுதியும் உகரம் நிலையும்=ஆறு ஈற்றின்கண்ணும் உகரந் தன் அரைமாத்திரையைப் பெற்றுநிற்கும். எ-று.

வருமொழியானல்லது அல்வழியும் வேற்றுமையும் விளங்கா மையின் 'அல்லதுகிளப்பினும் வேற்றுமைக்கண்ணும்' எனவே இருமொழிப்புணர்ச்சியென்பது பெற்றாம். இவ்விருமொழிக்கட் பழைய அரைமாத்திரைபெற்றே நிற்குமென்றார். அன்றி இருமொ ழிப்புணர்ச்சிக்கண் ஒருமாத்திரைபெறுமென்றார்க்குப் பன்மொழிப் புணர்ச்சியாகிய செய்யுளிலக்கணங் குற்றுகரத்தான் நேர்பசை நிரை பசை கோடலும் அவற்றான் அறுபது வஞ்சிச்சீர்கோடலும் பத் தொன்பதினாயிரத்திருநூற்றுத்தொண்ணூற்றொரு தொடைகோட

* நிறையும் எனவும் பாடம்.

லும் இன்றாய் முற்றியலுகரமாகவே கொள்ளவேண்டுதலின் மாறு கொளக்கூறலென்னுங் குற்றந் தங்குமென்று உணர்க.

உ-ம். நாகுகடிது வரகுகடிது நாகுகடுமை வரகுகடுமை என வரும். இவை தம் அரைமாத்திரை பெற்றன. ஏனையவற்றோடும் ஒட்டுக.

இனி இது "மால்யாறுபோந்து கால்சுரந்துபாய்ந்து" எனத் தொடர்மொழிக்கண்ணும் அரைமாத்திரை பெற்றது என்னுக்கால் வஞ்சிச்சீரின்றாமாறு உணர்க. (௩)

௪௦௯. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை யியற்கை நிலையலு முரித்தே.

இது முன்னின்ற சூத்திரத்தான் அரைமாத்திரைபெறும் என்றதனை விலக்கி "இடைப்படிற்குறுகுமிடனும்" என்றதனான் அரைமாத்திரையினுங் குறுகுமென்று ஆண்டுவிதித்தது ஈண்டு வல்லொற்றுத்தொடர்மொழிக்கண்ணே வருமென்கின்றது.

இ-ள். வல்லொற்றுத் தொடர்மொழி=வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரம்: வல்லெழுத்து வருவழி=வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வருமிடத்து: தொல்லை இயற்கை நிலையலும் உரித்து="இடைப்படிற்குறுகும்" என்பதனாற் கூறிய அரைமாத்திரையினுங் குறுகி நிற்கும் என்ற இயல்பிலே நிற்றலும் உரித்து. எ-று.

உம்மை எதிர்மறை.

உ-ம். கொக்குக்கடிது கொக்குக்கடுமை என அரைமாத்திரையிற்குறைந்தவாறு குரங்குகடிதென்பது முதலியவற்றோடு படுத்துச் செவிகருவியாக உணர்க.

முன்னின்றசூத்திரத்து * உகரநிறையுமென்று பாடம் ஓதி அதற்கு உகரம் அரைமாத்திரையிற் சிறிது மிக்குநிற்குமென்று பொருள் கூறி இச்சூத்திரத்திற்குப் பழைய அரைமாத்திரைபெற்று நிற்குமென்று கூறுவாரும் உளர். (௪)

௪௧௦. யகரம் வருவழி யிகரங் குறுகு
முகரக் கிளவி துவரத் தோன்றாது.

* சீர்நிலை கோடற்கண் இவ்வாசிரியரும் நிறையுமெனறாரெப.

இது குற்றியலிகரம் புணர்மொழியகத்து வருமாறு கூறுகின்றது.

இ - ள். யகரம் வருவழி உகரக்கிளவி துவரத் தோன்றாது= யகரமுதன்மொழி வருமொழியாய் வருமிடத்து நிலைமொழிக்குற்றுகரவெழுத்து முற்றத்தோன்றாது: இகரங் குறுகும்=ஆண்டு ஓர் இகரம் வந்து அரைமாத்திரைபெற்று நிற்கும். எ - று.

உ-ம். நாகியாது வரகியாது தெள்கியாது எஃகியாது கொக்கியாது குரங்கியாது எனவரும். துவர என்றார், ஆறு ஈற்றின்கண்ணும் உகரங் கெடுமென்றற்கு. (ரு)

சகக. ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.

இது முற்கூறிய ஆறனுள் முன்னர்நின்ற இரண்டற்கும் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிமுடிபு கூறுகின்றது.

இ - ள். ஈரெழுத்துமொழியும் உயிர்த்தொடர்மொழியும்= ஈரெழுத்தொருமொழிக் குற்றுகர ஈற்றிற்கும் உயிர்த்தொடர்மொழிக் குற்றுகர ஈற்றிற்கும்: வேற்றுமையாயின்=வேற்றுமைப்பொருட் புணர்ச்சியாயின்: இன ஒற்று இடைமிக=இனமாகிய ஒற்று இடையிலேமிக: வல்லெழுத்து மிகுதி தோற்றம் வேண்டும்=வல்லெழுத்துமிகுதி தோன்றி முடிதலை விரும்பும் ஆசிரியன். எ - று.

உ-ம். யாட்டுக்கால் செவி தலை புறம் எனவும், முயிற்றுக்கால் சினை தலை புறம் எனவும் வரும். கயிற்றுப்புறம் வயிற்றுத்தீ என்பனவுமாம்.

தோற்றம் என்றதனான் ஏனைக்கணத்தும் இம்முடிபுகொள்க. யாட்டுஞாற்சி நிணம் மணி வால் அதள் எனவும், முயிற்றுஞாற்சி நிணம் முட்டை வலிமை அடை ஆட்டம் எனவும் வரும். (சா)

சகஉ. ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே
யத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே.

இஃது எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ - ள். ஒற்று இடை இனம் மிகா மொழியுமாருள=முற்கூறிய இரண்டனுள் இனவொற்று இடைமிக்கு முடியாத மொழிக

ளும் உள: வல்லெழுத்து மிகல் அத்திறத்தில்லை=வல்லொற்று மிக்குமுடிதல் அக்கூற்றுளில்லை. எ - று.

உ-ம். நாகுகால் செவி தலை புறம் எனவும், வரகு கதிர் சினை தாள் பதர் எனவும் வரும்.

அத்திறமென்றதனுன் உருபிற்கு எய்திய சாரியை பொருட்கட் சென்றவழி இயையபுவல்லெழுத்து வீழ்க்க. யாட்டின்கால் முயிற்றின்கால் நாகின்கால் வரகின்கதிர் எனவரும்.

அத்திறமென்றதனுன் ஏனைக்கணத்தும் ஒற்றிடைமிகாமை கொள்க. நாகுஞாற்சி நீட்சி மாட்சி வலிமை என ஒட்டுக. (எ)

சகரு. இடையொற்றுத் தொடரு மாய்தத் தொடரு
நடையா வியல வென்மனார் புலவர்.

இஃது இடைநின்ற இரண்டற்கும் முடிபுகூறுகின்றது.

இ - ள். இடையொற்றுத்தொடரும் ஆய்தத்தொடரும்=இடையொற்றுத்தொடர்மொழிக் குற்றுகர ஈறும் ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகர ஈறும்: நடை ஆ இயல என்மனார் புலவர்=நடைபெற நடக்குமிடத்து முற்கூறிய அவ்வியல்புமுடிபினையுடைய என்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். தெள்குகால் சிறை தலை புறம் எனவும், எஃகுகடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும். (அ)

சகச. வன்றொடர் மொழியு மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்.

இது பின்னின்ற இரண்டற்கும் முடிபுகூறுகின்றது.

இ - ள். வன்றொடர்மொழியும் மென்றொடர்மொழியும்=வன்றொடர்மொழிக் குற்றுகர ஈறும் மென்றொடர்மொழிக் குற்றுகர ஈறும்: வந்த வல்லெழுத்து ஒற்று இடை மிகும்=வருமொழியாய் வந்த வல்லெழுத்தினது ஒற்று இடையிலே மிக்குமுடியும்: மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம்=அவ்விரண்டனுள் மெல்லொற்றுத்தொடர்மொழிக்கண் நின்ற மெல்லொற்றெல்லாம்: இறுதி வல்லொற்று=இறுதிக்கணின்ற வல்லொற்றும்: கிளை ஒற்று ஆகும்=கிளையாகிய வல்லொற்றுமாய் முடியும். எ - று.

இறுதி வல்லொற்று வருதலாவது குற்றுகரம் ஏறிநின்ற வல்லொற்றுத் தானே முன்னர்வந்து நிற்றலாம். கிளைவல்லொற்றுவருதலாவது ணகாரத்திற்கு டகாரமும் னகாரத்திற்கு றகாரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்கிக் கிளையாமாதலின் அவை முன்னர் வந்து நிற்றலாம்.

உ-ம். கொக்குக்கால் சிறகு தலை புறம், குரங்குக்கால் செவி தலை புறம், குரக்குக்கால் செவி தலை புறம், எட்குக்குட்டி செவி தலை புறம், எற்புக்காடு சுரம் தலை புறம் எனவரும். அற்புத்தளை என்பது அன்பினாற்செய்ததளையென வேற்றுமையும் அன்பாகியதளையென அல்வழியுமாம்.

வந்த என்றதனான் இவ்விரண்டிற்கும் உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. கொக்கின்கால் குரங்கின்கால் எனவரும்.

எல்லாமென்றதனாற் பறம்பிற்பாரி குறும்பிற்சான்றார் என மெல்லொற்றுத் திரியாமையுங் கொள்க.

ஒற்றென்ற மிகுதியான் இயல்புகணத்துக்கண்ணும் குரக்கு ஞாற்சி நிணம் முகம் விரல் உகிர் என மெல்லொற்றுத் திரிந்துவருமாறு கொள்க. சிலப்பதிகாரமென்பதும் அது.

வன்றொடர்மொழி இயல்புகணத்துக்கண் வருதல் "ஞநமயவ" என்பதனான் முடியும். (கூ)

சகரு. மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது, அம்மு வருத்தலின்.

இ-ள். மரப்பெயர்க்கிளவிக்கு அம்மே சாரியை=குற்றியலுகர ஈற்று மரப்பெயர்க்கு வருஞ் சாரியை அம்முச்சாரியை. எ-று.

உ-ம். தேக்கங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

கமுகங்காய் தெங்கங்காய் சீழ்கம்புல் கம்பம்புலம் பயற்றங்காய் என்றாற்போலும் புல்லினையும் மரமென அடக்கி மாறுகொளக் கூறலெனத் தழீஇக்கொண்ட சிதைவென்பதாம் இச்சூத்திரமென்று உணர்க. (கO)

சககூ. மெல்லொற்று வலியா மரப்பெயரு முளவே.

இது மென்றொடர்மொழிக்கு எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ - ள். மெல்லொற்று வலியா மரப்பெயரும் உள=மெல்லொற்று வல்லொற்றாகத் திரியாது மெல்லொற்றாய் முடியும் மரப்பெயரும் உள. எ - று.

உ-ம். புன்கங்கோடு செதிள் தோல் பூ எனவும், குருந்தங்கோடு செதிள் தோல் பூ எனவும் வரும்.

வலியாமரப்பெயருமுள எனவே வலிக்கும் மரப்பெயரும் உளவென்றுகொள்க. வேப்பங்கோடு கடப்பங்காய் ஈச்சங்குலை எனவரும். (கக)

சகஎ. ஈரெழுத்துமொழியும் வல்லொற்றுத் தொடரு
மம்மிடை வரற்கு முரியவை யுளவே
யம்மர பொழுகு மொழிவயி னான.

இஃது ஈரெழுத்தொருமொழிக்கும் வன்றொடர்மொழிக்கும் எய்தாததெய்துவித்தது, முன்னர் எய்தியதனைவிலக்கி அம்மு வகுத்தலின்.

இ - ள். ஈரெழுத்துமொழியும் வல்லொற்றுத்தொடரும்= ஈரெழுத்தொருமொழிக் குற்றியலுகரமும் வன்றொடர்மொழிக் குற்றியலுகரமும்: அம் இடை வரற்கும் உரியவை உள=முன் முடித்துப்போந்த முடிபுகளன்றி அம்முச்சாரியை இடையேவந்து முடிதற்கு உரியனவும் உள: யாண்டெனின்; அம்மரபு ஒழுகும் மொழிவயினான=அவ்விலக்கணம் நடக்கும் மொழியிடத்து. எ - று.

உ-ம். ஏறங்கோள் சூதம்போர் வட்டம்போர் புற்றம்பழஞ்சோறு எனவரும்.

உம்மை எதிர்மறையாகலின் அம்முப்பெறாதன நாகுகால் கொக்குக்கால் என முன்னர்க் காட்டினவேயாம்.

அம்மரபொழுகும் என்றதனால் அரசக்கன்னி முரசக்கடிப்பு என அக்கும் வல்லெழுத்துங் கொடுத்தும் அரசவாழ்க்கை முரசவாழ்க்கை என அக்குக் கொடுத்தும் முடிக்க.

இன்னும் அதனானே இருட்டத்துக்கொண்டான் விளக்கத்துக்கொண்டான் என அத்தும் வல்லெழுத்துங் கொடுத்தும் மயி

லாப்பிற்கொற்றன் பறம்பிற்பாரி என இன் கொடுத்துங் கரியதன் கோடு நெடியதன்கோடு என அன் கொடுத்தும் முடிக்க. (௧௨)

௪௧அ. ஒற்றுநிலை திரியா தக்கொடு வரூஉ
மக்கிளை மொழியு முளவென மொழிப.

இது மென்றொடர்மொழியுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். ஒற்று நிலை திரியாது அக்கொடு வரூஉம் = ஒற்று முன்னின்ற நிலைதிரியாது அக்குச்சாரியையோடும் பிறசாரியையோடும் வரும்: அக்கிளை மொழியும் உள என மொழிப = அக்கிளையான சொற்களும் உள என்று சொல்லுவர் ஆசிரியர். எ - று.

இதற்கு உம்மையை முன்னர்மாறுக.

உ-ம். குன்றக்கூகை மன்றப்பெண்ணை எனவரும், உம்மையாற் கொங்கத்துழவு வங்கத்துவாணிகம் என அத்தும் பெற்றன.

நிலையென்றதனான் ஒற்று நிலைதிரியா அதிகாரத்துக்கண் வருஞ் சாரியைக்கு இயைபுவல்லெழுத்து வீழ்க்க. அக்கிளையென்றார், இரண்டுசாரியை தொடர்ந்து முடிவனவும் உளவென்றற்கு. பார்ப்பனக்குழவி சேரி தோட்டம் பிள்ளை என அன்னும் அக்கும் வந்தன. இவற்றிற்கு உடைமை விரிக்க. பார்ப்பினுட்குழவி என்றுமாம். பார்ப்பானாகிய குழவி என்றால் ஈண்டு முடியாதென்று உணர்க. பார்ப்பனமகன் பார்ப்பனவனிதை என்பனவும் பார்ப்பான்சாதி உணர்த்தின. (௧௩)

௪௧௯. எண்ணுப்பெயர்க் கிளவி யுருபிய னிலையும்.

இது குற்றுகர ஈற்று எண்ணுப்பெயரோடு பொருட்பெயர் முடிக்கின்றது.

இ - ள். எண்ணுப்பெயர்க் கிளவி = எண்ணுப்பெயராகிய சொற்கள் பொருட்பெயரோடு புணருமிடத்து: உருபியல் நிலையும் = உருபுபுணர்ச்சியின் இயல்பின்கண்ணே நின்று அன்பெற்றுப் புணரும். எ - று.

உ-ம். ஒன்றன்காயம் இரண்டன்காயம் சுக்கு தோரை பயறு என ஒட்டுக. ஒன்றனாற்கொண்டகாயமென விரியும். வருமொழி

வரையாது கூறினமையின் இயல்புகணத்துக்கண்ணும் கொள்க. ஒன்றன்ஞாண் நூல் மணி யாழ் வட்டு அடை எனவரும். மேலைச் சூத்திரத்து "நிலை" என்றதனான் இயைபுவல்லெழுத்து வீழ்க்க.(கச)

சஉ0. **வண்டும் பெண்டு மின்னொடு சிவணும்.**

இது மென்றொடர்மொழியுட் சிலவற்றிற்குப் பிறமுடிபு கூறுகின்றது.

இ - ள். வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்=வண்டென்னுஞ்சொல்லும் பெண்டென்னுஞ்சொல்லும் இன்சாரியையோடு பொருந்தி முடியும். எ - று.

உ - ம். வண்டின்கால் பெண்டின்கால் எனவரும். இதற்கு முற்கூறிய இலேசினான் வல்லெழுத்து வீழ்க்க. (கரு)

சஉக. **பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்.**

இது மேற்கூறியவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். பெண்டு என் கிளவிக்கு அன்னும் வரையார்=பெண்டென்னுஞ்சொற்கு இன்னேயன்றி அன்சாரியைவருதலையும் நீக்கார் ஆசிரியர். எ - று.

உ-ம். பெண்டன்கை செவி தலை புறம் எனவரும். (கசு)

சஉஉ. **யாதெ னிறுதியுஞ் சுட்டுமுத லாகிய**
வாய்த விறுதியு முருபிய னிலையும்.

இஃது ஈரெழுத்தொருமொழிக் குற்றியலுகரத்துள் ஒன்றற்குஞ் சுட்டுமுதலாகிய ஆய்தத்தொடர்மொழிக்குற்றியலுகரத்திற்கும் வேறுமுடிபு கூறுகின்றது.

இ - ள். யாது என் இறுதியுஞ் சுட்டு முதலாகிய ஆய்த இறுதியும்=யாதென்னும் ஈறுஞ் சுட்டெழுத்துமுதலாகிய ஆய்தத்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும்: உருபியல் நிலையும்=உருபுபுணர்ச்சியின் இயல்பின்கண்ணே நின்று அன்பெற்றுச் சுட்டுமுதலிறுதி ஆய்தங்கெட்டுமுடியும். எ - று.

உ-ம். யாதன்கோடு அதன்கோடு இதன்கோடு உதன்கோடு செவி தலை புறம் எனவரும். ஆய்தங்கெடாமுன்னே அன்னின் அகரத்தைக் குற்றுகரத்தின்மேல் ஏற்றுக, ஆய்தங்கெட்டால் அது முற்றுகரமாய்நிற்றலின். (கள)

சஉங. முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டு மல்வழி யான.

இது முற்கூறியவற்றுட் சுட்டுமுதலுகரத்திற்கு ஒருவழி அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ-ள். முன்னுயிர் வருமிடத்து=சுட்டுமுதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றுகர ஈற்றின்முன்னே உயிர்முதன்மொழி வருமிடத்து: ஆய்தப்புள்ளி மன்னல் வேண்டும்=ஆய்தவொற்று முன்போலக் கெடாது நிலைபெற்றுமுடிதலை விரும்பும் ஆசிரியன்: அல்வழியான=அல்வழிக்கண். எ - று.

உ-ம். அஃது இஃது உஃது என நிறுத்தி அடை ஆடை இலை ஈயம் உரல் ஊர்தி எழு ஏணி ஐயம் ஒடுக்கம் ஓக்கம் ஔவியம் என ஒட்டுக.

முன்னென்றதனான் வேற்றுமைக்கண்ணும் இவ்விதிகொள்க. அஃதடைவு அஃதோட்டம் என ஒட்டுக. இவற்றிற்கு இரண்டாமுருபு விரிக்க. இன்னும் இதனானே ஏனை இலக்கணம் முடியுமாறு அறிந்து முடிக்க. (கஅ)

சஉச. ஏனைமுன் வரினே தானிலை யின்றே.

இது மேலவற்றிற்குப் பிறகணத்தோடு அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ-ள். ஏனை முன் வரின்=முற்கூறிய ஈறுகளின்முன்னர் உயிர்க்கணமல்லன வருமாயின்: தான் நிலையின்று=அவ்வாய்தங் கெட்டுமுடியும். எ - று.

உ-ம். அதுகடிது இதுகடிது உதுகடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது என ஒட்டுக. (கக)

சஉரு. அல்லது கிளப்பி னெல்லா மொழியுஞ்
சொல்லிய பண்பி னியற்கை யாகும்.

இஃது ஆறு ஈற்றுக் குற்றுகரத்திற்கும் அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். அல்லதுகிளப்பின் = அல்வழியைச்சொல்லுமிடத்து: எல்லாமொழியும் = ஆறு ஈற்றுக் குற்றுகரமும்: சொல்லிய பண்பின் இயற்கையாகும் = மேல் ஆசிரியன் கூறிய குணத்தையுடைய இயல்பாய்முடியும். எ - று.

உ-ம். நாகுகடிது வரகுகடிது தெள்குகடிது எஃகுகடிது குரங்குகடிது சிறிது தீது பெரிது எனவரும். ஏனைக் கணத்துக்கண் "நின்றசொன்முன்னியல்பாகும்" என்றதனாற் கொள்க.

எல்லாமொழியும் என்றதனால் வினைச்சொல்லும் வினைக்குறிப்புச்சொல்லும் இயல்பாய்முடிதல் கொள்க. கிடந்ததுகுதிரை கரிதுகுதிரை எனவரும்.

சொல்லிய என்றதனான் இருபெயரொட்டுப்பண்புத்தொகை வன்கணத்துக்கண் இனவொற்றுமிக்கு வல்லெழுத்துப்பெற்று முடிதலும் இயல்புகணத்துக்கண் இனவொற்றுமிக்கு முடிதலுங் கொள்க. கரட்டுக்காணம் குருட்டுக்கோழி திருட்டுப்புலையன் களிற்றுப்பன்றி வெளிற்றுப்பனை எயிற்றுப்பல் எனவும் வரட்டாடு குருட்டெருது எனவும் வரும்.

பண்பினென்றதனால் மெல்லொற்று வல்லொற்றாய் ஐகாரம் பெற்று முடிவனவும், மெல்லொற்று வல்லொற்றாய் ஐகாரமும் வல்லெழுத்தும் பெற்றுமுடிவனவும், மெல்லொற்று வல்லொற்றாகாது ஐகாரமும் வல்லெழுத்தும் பெற்றுமுடிவனவுங் கொள்க. ஓர்யாட்டையானை ஐயாட்டையெருது எனவும் அற்றைக்கூத்தர் இற்றைக்கூத்தர் எனவும் மன்றைத்தூதை மன்றைப்பானை பண்டைச்சான்றோர் எனவும் வரும். (௨௦)

௪௨௬. **வல்லொற்றுத்தொடர்மொழிவல்லெழுத்துமிகுமே.**

இஃது அவ் ஆறு ஈற்றுள் ஒன்றற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள். வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகும் = வல்லொற்றுத்தொடர்மொழிக் குற்றுகர ஈறு வல்லெழுத்து வருவழி வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று.

உ-ம். கொக்குக்கடிது பாக்குக்கடிது பட்டுக்கடிது சிறிது தீது பெரிது எனவரும். (௨௧)

சஉஎ. சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியு
மாயிய றிரியா வல்லெழுத் தியற்கை.

இதுவும் அவ் ஆறு ஈற்றுள் ஒன்றன்கண் ஏழாம்வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற இடைச்சொற்கு முடிபுகூறுகின்றது.

இ - ள். சுட்டுச் சினை நீடிய மென்றொடர் மொழியும் = சுட்டாகிய சினையெழுத்து நீண்ட மென்றொடர்க் குற்றுகர ஈறும்: யாவினா முதலிய மென்றொடர் மொழியும் = யாவென்னும் வினாமுதலாகிய மென்றொடர்மொழிக் குற்றுகர ஈறும்: வல்லெழுத்தியற்கை ஆ இயல் திரியா = வல்லெழுத்துப்பெற்று முடியுந் தன்மையாகிய அவ்வியல்பிற் றிரியாது முடியும். எ - று.

உ-ம். ஆங்குக்கொண்டான் ஈங்குக்கொண்டான் ஊங்குக் கொண்டான் யாங்குக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும்.

இயற்கையென்றதனான் மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈற்று வினையெச்சம் இயல்பாயும் வன்றொடர்மொழிக் குற்றியலுகர ஈற்று வினையெச்சம் மிக்கும் முடிவனகொள்க. இருந்துகொண்டான் ஆண்டுசென்றான் தந்துதீர்ந்தான் வந்துபோயினான் எனவும் செத்துக்கிடந்தான் செற்றுச்செய்தான் உய்த்துக்கொண்டான் நட்டுப்போனான் எனவும் வரும். (உஉ)

சஉஅ. யாவினா மொழியே யியல்பு மாகும்.

இது மேலனவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது, வல்லெழுத்துவிலக்கி இயல்பாமென்றலின்.

இ - ள். யா வினா மொழியே இயல்புமாகும் = அவற்றுள் யாவென்னும் வினாவையுடைய சொல் முற்கூறியவாறன்றி இயல்பாயும் முடியும். எ - று.

உ-ம். யாங்குகொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும். இஃது எப்படியென்னும் வினாப்பொருளை உணர்த்திற்று. உம்மையான் மிக்குமுடிதலே வலியுடைத்து. ஏகாரம் பிரிநிலை. (உ௩)

சஉகூ. அந்நான் மொழியுந் தந்நிலை திரியா.

இது மேலனவற்றிற்கு நிலைமொழிச்செய்கை கூறுகின்றது.

இ - ள். அந்நான்மொழியும் = சுட்டுமுதன்மூன்றும் யாமுதன் மொழியுமாகிய அந்நான்குமொழியும்: தம் நிலை திரியா = தம் மெல் லொற்றாய தன்மை திரிந்து வல்லொற்றாகாது முடியும். எ - று.

உதாரணம் முற்காட்டியவே. தந்நிலையென்றதனான் மெல் லொற்றுத் திரியாது வல்லெழுத்து மிக்குமுடிவன பிறவுங் கொள்க. அங்குக்கொண்டான் இங்குக்கொண்டான் உங்குக்கொண்டான் எங்குக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும்.

இனி முன்னர் யா மொழியென்றது வினாவென்றதனான் ஏழாவதன் இடப்பொருட்டாகிய பிறவும் இயல்பாய் முடிவனவுங் கொள்க. முந்துகொண்டான் பண்டுகொண்டான் இன்றுகொண் டான் அன்றுகொண்டான் என்றுகொண்டான் எனவரும். (உச)

சரு0. உண்டென் கிளவி யுண்மை செப்பின்
முந்தை யிறுதி மெய்யொடுங் கெடுதலு
மேனிலை யொற்றே ளகார மாதலு
மாமுறை யிரண்டு முரிமையு முடைத்தே
வல்லெழுத்து வரூஉங் காலை யான.

இது மென்றொடர்மொழியுள் வினைக்குறிப்பாய் நின்றதோர் சொற் பண்பை உணர்த்துங்கால் வேறுமுடிபு பெறுதல் கூறு கின்றது.

இ - ள். உண்டென்கிளவி உண்மைசெப்பின் = உண்டென் னுஞ்சொல் வினைக்குறிப்பையுணர்த்தாது ஒருபொருள் தோன்றுங் காற் தோன்றி அது கெடுந்துணையும் உண்டாய்நிற்கின்ற தன்மை யாகிய பண்பை உணர்த்திநிற்குமாயின்: முந்தை இறுதி மெய்யொ டுங் கெடுதலும் = முன்னர்நின்ற குற்றுகரந் தான் ஏறிநின்ற மெய் யொடுங்கெடுதலும்: மேனிலை ஒற்றே ளகாரமாதலும் = அதற்கு மேல் நின்ற ணகார ஒற்று ளகார ஒற்றாதலுமாகிய: ஆ முறை இரண்டும் உரிமையும் உடைத்து = அம்முறைமையினையுடைய இரண்டுநிலையும் உரித்து அஃது உரித்தன்றி முன்னர்நின்ற நிலை யிலே கேடுந் திரிபும் இன்றி நிற்றலும் உடைத்து: வல்லெழுத்து வரூஉங் காலை யான = வல்லெழுத்து முதன்மொழியாய் வருங் காலத்து. எ - று.

வல்லெழுத்து அதிகாரத்தால் வாராநிற்ப வல்லெழுத்துவருஉங்காலை என்றதனான் அவ்விருமுடிபும் உளது பண்பையுணர்த்தும் பகரம்வரும் மொழிக்கண்ணேயென்பதூஉம் ஏனைக் கசதக்களிலும் இயல்புகணத்தினும் உண்டெனநின்று வினைக்குறிப்பாயுஞ் சிறுபான்மை பண்பாயும் நிற்குமென்பதூஉங் கொள்க.

உ-ம். உள்பொருள் உண்டுபொருள் எனவரும். இது பொருண்மைசுட்டாது உண்மைத்தன்மைப்பண்பை ஈண்டு உணர்த்திற்று. இனி உண்டுகொணம் உண்டுசாக்காடு உண்டுதாமரை உண்டு ஞானம் நூல் மணி யாழ் வட்டு அடை ஆடை என வருவனவெல்லாங் கேடுந் திரிபுமின்றி வினைக்குறிப்பாயுஞ் சிறுபான்மை பண்பாயும் நின்றன. இவற்றின்வேறுபாடு வினையியலுள் வினைக்குறிப்பு ஓதும்வழி உணர்க.

உள்பொருளென்பது பண்புத்தொகை முடிபன்றோவெனின், அஃது ஓசை ஒற்றுமைபடச் சொல்லும் வழியது போலும். இஃது ஓசை இடையறவுபடச் சொல்லும் வழியதென்க. (உ௫)

சங௧. இருதிசை புணரி னேயிடை வருமே.

இது குற்றுகர ஈற்றுத் திசைப்பெயர்க்கு அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ-ள்: இரு திசை புணரின் = இரண்டு பெருந்திசையுந் தம்மிற் புணரின்: ஏ இடை வரும் = ஏயென்னுஞ் சாரியை இடைநின்று புணரும். எ - று.

உ-ம். தெற்கேவடக்கு கிழக்கேமேற்கு இவை உம்மைத்தொகை. (உ௬)

சஙஉ. திரிபுவேறு கிளப்பி னொற்று முகரமுங்
கெடுதல் வேண்டு மென்மனார் புலவ
ரொற்றுமெய் திரிந்து னகார மாகுந்
தெற்கொடு புணருங் காலை யான.

இது பெருந்திசைகளோடு கோணத்திசைகள் புணர்த்தலின் எய்தாததெய்துவித்தது.

இ-ள். திரிபு வேறு கிளப்பின் = அப்பெருந்திசைகளோடு கோணத்திசைகளை வேறாகப் புணர்க்குமிடத்து: ஒற்றும் உகரமுங்

கெடுதல் வேண்டும் என்மனார் புலவர் = அவ்வுகரம் ஏறிநின்ற ஒற்றும் அவ் ஈற்று உகரமுங் கெட்டுமுடிதல்வேண்டுமென்று சொல்லுவர் புலவர்: தெற்கொடு புணருங் காலை = அது தெற்கென்னுந் திசையொடு புணருங்காலத்து: ஆன ஒற்று மெய்திரிந்து னகாரமாகும் = அத்திசைக்குப் பொருந்திநின்ற றகார ஒற்றுத் தன்வடிவுதிரிந்து னகர ஒற்றாய் நிற்கும். எ - று.

திரிந்தென்றதனான் வடக்கென்பதன்கண் நின்ற ககர ஒற்றுக் கெடுத்து முடித்துக்கொள்க.

உ-ம். வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு தென்மேற்கு எனவரும்.

வேறென்றதனாற் திசைப்பெயரோடு பொருட்பெயர்வரினும் இம்முடிபு கொள்க. வடகடல் வடசுரம் வடவேங்கடம் தென்குமரி தென்சுரம் தென்னிலங்கை எனவரும்.

மெய்யென்றதனான் உயிர் கெட்டுந்திரிந்தும் மெய் கெட்டும் முடிவனவும் உள, திசைப்பெயர்முன்னர்ப் பொருட்பெயர்வந்துழியென்று உணர்க. கிழக்கு என்பது கரை கூரை என்பவற்றோடு புணருமிடத்துக் கீழ்கரை கீழ்கூரை என நிலைமொழியிறுதி உகரம் மெய்யொடுங்கெட்டு அதன்மேல்நின்ற ககர ஒற்றும் ழகரத்தில் அகரமுங் கெட்டு முதலெழுத்துநீண்டு முடிந்தன. மேற்கு, கரை கூரை, மீகரை மீகூரை என நிலைமொழி ஈற்று உகரம் மெய்யொடுங்கெட்டு அதன்மேல்நின்ற றகர ஒற்றுங் கெட்டு ஏகாரம் ஈகாரமாகி முடிந்தன. இன்னும் இதனானே மேன்மாடு மேல்பால் மேலைச்சேரி என்றாற்போல்வனவுஞ் செய்கையறிந்துமுடிக்க. (உஎ)

௪௩௩. ஒன்றுமுத லாக வெட்ட னிறுதி
யெல்லா வெண்ணும் பத்தன் முன்வரிற்
குற்றிய லுகர மெய்யொடுங் கெடுமே
முற்ற வின்வரூஉ மிரண்டலங் கடையே.

நிறுத்தமுறையானே ஆறு ஈற்றுக் குற்றுகரமும் புணருமாறு உணர்த்தி இனி அவ் ஈற்று எண்ணுப்பெயர் முடிக்கின்றார்; இஃது அவற்றுட் பத்தென்னும் எண்ணுப்பெயரோடு எண்ணுப்பெயர் வந்து புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ஒன்று முதலாக எட்டன் இறுதி எல்லா எண்ணும் = ஒன்றென்னும் எண்முதலாக எட்டென்னும் எண்ணீறா

யுள்ள எல்லா எண்ணுப்பெயர்களும்: பத்தன் முன் வரின்=பத்தென்னும். எண்ணுப்பெயரின்முன் வரின்: குற்றியலுகரம் மெய்யொடுங் கெடும்=அப்பத்தென்னுஞ்சொல்லிற் குற்றுகரந் தான் ஏறி நின்ற. மெய்யோடுங் கெடும்: இரண்டலங்கடை முற்ற இன்வரூஉம்=ஆண்டு இரண்டல்லாத எண்ணுப்பெயர்களிடத்து முடிய இன்சாரியை இடைவந்து புணரும். எ - று.

உ-ம். பதினொன்று பதின்மூன்று பதினான்கு பதினைந்து பதினாறு பதினேழு பதினெட்டு எனவரும்.

நிலைமொழி முற்கூறுதலாற் பிறவெண்ணின் முன்னர்ப் பிறபெயர்வந்துழியும் இன்பெறுதல் கொள்க. ஒன்பதின்கூறு ஒன்பதின்பால் எனவரும். முற்றவென்றதனாற் பதினென்கெண்புழி வந்த இன்னின் னகரம் வருமொழிக்கட் கருவிசெய்து கெடுத்து முடிக்க.

௪௩௪. பத்த னொற்றுக்கெட னகார மிரட்ட
லொத்த தென்ப விரண்டுவரு காலை.

இது மேல் இன்பெறுதென்று விலக்கிய இரண்டற்குப் பிறிது விதி கூறுகின்றது.

இ - ள். பத்தன் ஒற்றுக் கெட னகாரம் இரட்டல்=பத்தென்னுஞ் சொல்லின் நின்ற தகர ஒற்றுக் கெட னகர ஒற்று இரட்டித்து வருதல்: இரண்டு வருகாலை ஒத்ததென்ப=இரண்டென்னுமெண் வருங்காலத்திற் பொருந்திற்றென்பர் ஆசிரியர். எ - று.

உ-ம். பன்னிரண்டு எனவரும்.

"குற்றியலுகர மெய்யொடுங்கெடும்" என்ற விதி இதற்கும் மேலனவற்றிற்குங் கொள்க. (௨௯)

௪௩௫. ஆயிரம் வரினு மாயிய றிரியாது.

இஃது ஆயிரமென்னும் எண்ணுப்பெயர்வரின் வரும் முடிபு கூறுகின்றது.

இ - ள். ஆயிரம்வரினும் ஆயியல் திரியாது=முற்கூறிய பத்தன்முன்னர் ஒன்று முதலியனவேயன்றி ஆயிரமென்னுமெண் வந்தாலும் ஈறுகெட்டு இன்பெற்று முடியும் இயல்பிற் றிரியாது. எ-று.

உ-ம். பதினாயிரம் எனவரும்.

உம்மை இறந்தது தழீஇயிற்று. (௩௦)

சகசு. நிறையு மளவும் வரூஉங் காலையுங்
குறையா தாகு மின்னென் சாரியை.

இஃது எண்ணுப்பெயரோடு நிறைப்பெயரும் அளவுப்பெயரும் புணர்கின்ற புணர்ச்சி கூறுகின்றது.

இ-ள். நிறையும் அளவும் வரூஉங் காலையும் = முற்கூறிய பத்தென்பதன்முன்னர் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் வருங் காலத்தும்: இன்னென் சாரியை குறையாதாகும் = அவ் இன்னென்னுஞ்சாரியை குறையாது வந்து முடியும். எ - று.

*உ-ம். பதின்கழஞ்சு தொடி பலம் எனவும் பதின்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும் பதிற்றகல் பதிற்றுழக்கு எனவும் வரும்.

குறையாதாகுமென்றதனாற் பொருட்பெயரும் எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் வந்துழியும் இன் கொடுத்து வேண்டுஞ்செய்கை செய்துமுடிக்க. பதிற்றுவேலி யாண்டு அடுக்கு முழம் எனவும் பதின்றிங்கள் எனவும் பதிற்றுத்தொடி எனவும் வரும். பதிற்றொன்று என்பதுபோல இரண்டுமுதற் பத்தளவும் ஒட்டுக.

இவ் ஈற்றின் னகரம் றகரமாதல் "அளவாகுமொழிமுதல்" என்பதனுள் "நிலையிய" என்றதனான் முடிக்க. இவற்றிற்கு ஒற்றிரட்டுதலும் உகரம்வருதலும் வல்லெழுத்துப்பெறுதலும் "ஒன்றுமுதலாக" என்பதனுள் "முற்ற" என்றதனாற்கொள்க. (௩௧)

சகஎ. ஒன்றுமுத லொன்பா னிறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட வாய்தம்
வந்திடை நிலையு மியற்கைத் தென்ப
கூறிய வியற்கை குற்றிய லுகர
மாற னிறுதி யல்வழி யான.

இஃது எண்ணுப்பெயரோடு பத்தென்னும் எண்ணுப்பெயர்க்கு முடிபுகூறுகின்றது.

இ-ள். ஒன்றுமுதல் ஒன்பான் இறுதிமுன்னர் = ஒன்றுமுதல் ஒன்பது ஈறாகக் கூறுகின்ற எண்ணுப்பெயர்களின்முன்னர்: நின்ற பத்தன் ஒற்றுக்கெட = வருமொழியாக வந்துநின்ற பத்தென்னுஞ் சொல்லினது தகர ஒற்றுக்கெட: ஆய்தம் வந்து இடைநிலை

யும இயற்கைத்தென்ப = ஆய்தமானது வந்து இடையே நிலைபெறும் இயல்பையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர்: ஆறன் இறுதி அல்வழியான = அவற்றுள் ஆறென்னும் ஈறல்லாதவிடத்து: குற்றியலுகரங் கூறிய இயற்கை = குற்றியலுகரம் முற்கூறிய இயற்கையாய் மெய்யொடுங்கெட்டு முடியும். எ - று.

இங்ஙனம் வருமாறு மேற்சூத்திரங்களுட் காட்டுதும்.

வந்தென்றதனால் ஆய்தமாகத் திரியாது தகரவொற்றுக்கெட்டு ஒருபது என்று நிற்றலுங் கொள்க. (௩௨)

௪௩௮. முதலீ ரெண்ணினொற்று ரகர மாகு
முகரம் வருத லாவயி னான.

இது மேற்கூறியவற்றிற் சிலவற்றிற்கு நிலைமொழிச்செய்கை கூறுகின்றது.

இ - ள். முதலீரெண்ணினொற்று ரகரம் ஆகும் = அவற்றின் முதற்கண் நின்ற இரண்டெண்ணினுடைய னகர ஒற்றும் ணகர ஒற்றும் ரகர ஒற்றாகத் திரிந்துநிற்கும்: ஆவயினான உகரம் வருதல் = அவ்விடத்து உகரம் வருக. எ - று.

உ-ம். ஒருபஃது எனவரும். ஒன்றென்பதன் ஈற்றுக் குற்றுகரம் மெய்யொடுங்கெடுத்து னகர ஒற்றினை ரகர ஒற்றாக்கி உகர மேற்றி ஒருவென நிறுத்தி நின்ற பத்தென்பதன் தகர ஒற்றுக்கெடுத்து ஆய்தமாக்கிப் பஃதென வருவித்து ஒருபஃது என முடிக்க. மேல்வருவனவற்றிற்குஞ் சூத்திரங்களாற் கூறுஞ் சிறப்புவிதி ஒழிந்தவற்றிற்கு இதுவே முடிபாகக் கொள்க. (௩௩)

௪௩௯. இடைநிலை ரகர மிரண்டெ னெண்ணிற்கு
நடைமருங் கின்றே பொருள்வயி னான.

இதுவும் அது.

இ - ள். இரண்டெனெண்ணிற்கு இடைநிலை ரகரம் = இரண்டென்னுமெண்ணிற்கு இடைநின்ற ரகரம்: பொருள்வயினான = அம்மொழி பொருள்பெறும் இடத்து: நடைமருங்கின்று = நடக்கும் இடமின்றிக் கெடும். எ - று.

உ-ம். இருபஃது எனவரும். இதற்கு ரகரவுயிர்மெய் இதனைக் கெடுத்து ஏனைய கூறியவாறே கூட்டிமுடிக்க.

பொருளெனவே எண்ணல்லாப் பெயருங் கொள்க. இருகடல் இருவினை இருபிறப்பு எனவரும். (௩௪)

௪௪0. மூன்று மாறு நெடுமுதல் குறுகும்.

இதுவும் அது.

இ - ள். மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்=மூன்றென்னுமெண்ணும் ஆறென்னுமெண்ணும் நெடுமுதல் குறுகி முடியும். எ-று.

அறு எனக் குறுக்கிப் பஃது என வருவித்து அறுபஃது என முடிக்க. (௩௫)

௪௪௧. மூன்ற னொற்றே பகார மாகும்.

இதுவும் அது.

இ - ள். மூன்றன் ஒற்றே பகாரமாகும்=மூன்றென்னும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்றுப் பகர ஒற்றாய் முடியும். எ - று.

உ-ம். முப்பஃது எனவரும். (௩௬)

௪௪௨. நான்க னொற்றே றகார மாகும்.

இதுவும் அது.

இ - ள். நான்கன் ஒற்றே றகாரமாகும்=நான்கென்னும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று றகர ஒற்றாய் முடியும். எ - று.

உ-ம். நாற்பஃது எனவரும். (௩௭)

௪௪௩. ஐந்த னொற்றே மகார மாகும்.

இதுவும் அது.

இ - ள். ஐந்தனொற்றே மகாரமாகும்=ஐந்தென்னுமெண்ணின்கண் நின்ற நகர ஒற்று மகர ஒற்றாய் முடியும். எ - று.

உ-ம். ஐம்பஃது எனவரும்.

ஏழு குற்றியலுகர ஈறன்மை உருபியலுட் காண்க. (௩௮)

௪௪௪. எட்ட னொற்றே ணகார மாகும்.

இதுவும் அது.

இ - ள். எட்டன்ஒற்றே ணகாரமாகும் = எட்டென்னுமெண்ணின்கண் நின்ற டகர ஒற்று ணகர ஒற்றாய் முடியும். எ - று.

உ-ம். எண்பஃது எனவரும். (௩௯)

௪௪௫. ஒன்பா னொகரமிசைத் தகர மொற்று
முந்தை யொற்றே ணகார மிரட்டும்
பஃதென் கிளவி யாய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
யொற்றிய தகரம் றகர மாகும்.

இஃது எய்தாததெய்துவித்தது.

இ - ள். ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும் = ஒன்பது என நிறுத்திப் பஃது என வருவித்துமுடிக்குங்கால், நிலைமொழியாகிய ஒன்பதென்னும் எண்ணினது ஒகரத்திற்குமுன்னாக ஒரு தகர ஒற்றுத் தோன்றிநிற்கும்: முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும் = முன்சொன்ன ஒகரத்திற்குமுன்னர் நின்ற ணகர ஒற்று ணகர ஒற்றாய் இரட்டித்து நிற்கும்: பஃதென் கிளவி ஆய்த பகரங்கெட = வருமொழியாகிய பஃதென்னுஞ்சொற் தன்கண் ஆய்தமும் பகரமுங் கெட்டுப்போக: ஊகாரக் கிளவி நிற்றல் வேண்டும் = நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின்பின்னர் ஊகாரமாகிய எழுத்து வந்து நிற்றலை ஆசிரியன் விரும்பும்: ஒற்றிய தகரம் றகரமாகும் = வருமொழியாகிய பத்தென்பதன் ஈற்றின்மேலேறிய உகரங்கெடாது பிரிந்துநிற்ப ஒற்றாய்நின்ற தகரம் றகர ஒற்றாய் நிற்கும். எ - று.

உ-ம். தொண்ணூறு எனவரும். இதனை ஒற்றாய்வந்துநின்ற தகர ஒற்றின்மேல் நிலைமொழி ஒகரத்தை ஏற்றித் தொவ்வாக்கி ணகர ஒற்று இரட்டி அதன்மேல் வருமொழிக்கட் பகரமும் ஆய்தமுங்கெட வந்த ஊகாரமேற்றித் தொண்ணூவாக்கிப் பகரவாய்தமென்றாத முறையன்றிக்கூற்றினான் நிலைமொழிக்கட் பகரமும் ஆய்தமுங் கெடுத்துக் குற்றியலுகரம் மெய்யொடுங்கெடுத்து வருமொழி இறுதித் தகர ஒற்றுத் திரிந்துநின்ற றகர ஒற்றின்மேலே நின்ற உகரமேற்றித் தொண்ணூறென முடிக்க. (௪0)

௪௪௬. அளந்தறி கிளவியு நிறையின் கிளவியுங்
கிளந்த வியல தோன்றுங் காலை.

இது மேற்கூறிய ஒன்றுமுதல் ஒன்பானெண்களோடு அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியுந் தோன்றுங் காலை=முற்கூறிய ஒன்றுமுதல் ஒன்பான்களின்முன்னர் அளந்தறியப்படும் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வந்து தோன்றுங்காலத்து: கிளந்த இயல=ஆறன் ஈறு அல்வழிக் குற்றுகரம் மெய்யொடுங் கெட்டு முதலிரெண்ணினொற்று ரகாரமாய் உகரம் வந்து இடைநிலை ரகரங்கெட்டு மூன்றும் ஆறும் நெடுமுதல்குறுகி நான்கனொற்று வன்கணத்து றகரமாய் எட்டனொற்று ணகாரமாய் முடியும். எ - று.

உ-ம். ஒருகலம் இருகலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும் ஒருகழஞ்சு இருகழஞ்சு கஃசு தொடி பலம் எனவும் வரும். அகல் உழக்கு என்பன முன்னர் முடித்தும். இவை முதலிரெண்ணின் செய்கை.

தோன்றுங்காலையென்றதனான் இவ்வெண்ணின்முன்னர் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாதுநின்ற எண்ணுப்பெயர்களெல்லாம் இவ்விதியும் பிறவிதியும் எய்துவித்து முடித்துக்கொள்க. ஒருமூன்று ஒருநான்கு இருமூன்று இருநான்கு ஒருகால் இருகால் ஒருமுந்திரிகை இருமுந்திரிகை ஒருமுக்கால் இருமுக்கால் என்பன பிறவுங் கொணர்ந்து ஒட்டுக. இனிப் பிறவிதி எய்துவன ஓரொன்று ஓரிரண்டு ஓரைந்து ஓராறு ஓரேழு ஓரெட்டு ஓரொன்பது எனவும் ஈரொன்று ஈரிரண்டு ஈரைந்து ஈராறு ஈரேழு ஈரெட்டு ஈரொன்பது எனவும் மூவொன்று மூவிரண்டு மூவைந்து மூவாறு மூவேழு மூவெட்டு மூவொன்பது எனவும் "முதலிரெண்ணின்முனுயிர்" என்னுஞ் சூத்திரத்தான் உயிர்க்கு எய்திய பிறவிதியும் "மூன்றன்முதனிலைநீடலுமுரித்து" என்ற பிறவிதியும் பெற்றுப் பிறசெய்கைகளும் பெற்று முடிந்தன. நாலொன்று நாலிரண்டு நாலைந்து நாலாறு நாலேழு நாலெட்டு நாலொன்பது என்பன "நான்கனொற்றேலகாரமாகும்" என்ற விதிபெற்று முடிந்தன. பிறவும் இவ்வாறேயன்றி அளவும் நிறையுமன்றிவருவனவெல்லாம் இவ்விலேசான் முடிக்க. (சக)

சசஎ. மூன்ற னொற்றே வந்த தொக்கும்.

இது மேல் மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறுமுடிபு கூறுகின்றது.

இ - ள். மூன்றனொற்றே வந்ததொக்கும் = மூன்றாமெண்ணின் கணின்ற னகர ஒற்று வருமொழியாய் வந்த அளவுப்பெயர் நிறைப் பெயர்களின் முன்னர் வந்த வல்லெழுத்தோடு ஒத்த ஒற்றாய்த் திரிந்து முடியும். எ - று.

உ-ம். முக்கலம் சாடி தூதை பானை எனவும் முக்கழஞ்சு கஃசு தொடி பலம் எனவும் வரும்.

"நான்கனொற்றே றகாரமாகும்" என்ற முன்னை மாட்டேறு நிற்றலின் நாற்கலம் சாடி தூதை பானை எனவும் நாற்கழஞ்சு தொடி பலம் எனவும் வரும். (௬௨)

௪௪௮. ஐந்த னொற்றே மெல்லெழுத் தாகும்.

இதுவும் அது.

இ - ள். ஐந்தனொற்றே மெல்லெழுத்தாகும் = ஐந்தாவதன் கண் நின்ற நகர ஒற்று வருமொழி வல்லெழுத்துக்கு ஏற்ற மெல் லெழுத்தாகத் திரிந்து முடியும். எ - று.

உ-ம். ஐங்கலம் சாடி தூதை பானை எனவும் ஐங்கழஞ்சு தொடி பலம் எனவும் வரும். ஏகாரம் ஈற்றசை. (௬௩)

௪௪௯. கசதப முதன்மொழி வரூஉங் காலை.

இது முற்கூறிய மூன்றற்கும் ஐந்தற்கும் வருமொழி வரை யறுக்கின்றது.

இ - ள். கசதப முதன்மொழி வரூஉங் காலை = மூன்றனொற்று வந்தொப்பதூஉம் ஐந்தனொற்று மெல்லெழுத்தாவதூஉம் அவ்வ ளவுப்பெயர் ஒன்பதினும் வன்கணமாகிய கசதபக்கள் முதன்மொ ழியாய் வந்த இடத்து. எ - று.

அது முன்னர்க்காட்டினும். ஆறு "நெடுமுதல்குறுகும்" என்ற மாட்டேற்றானே ஆறு நெடுமுதல் குறுகிநின்றது.

உ-ம். அறுகலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும் அறுகழஞ்சு தொடி பலம் எனவும் வரும். அகல் உழக்கு என்பன மேற்காட்டினும். ஏழு குற்றுகர ஈறன்மையின் மாட் டேறு ஏலாதாயிற்று. (௬௪).

சருo. நமவ வென்னு மூன்றொடு சிவணி
யகரம் வரினு மெட்டன்மு னியல்பே.

இது வேண்டாதுகூறி வேண்டியது முடிக்கின்றது, "ஞநம யவ" என்னுஞ் சூத்திரத்துட் கூறியவற்றைக் கூறுதலின்.

இ - ள். எட்டன்முன் = எட்டென்பதன்முன்னர்: நமவ என்னும் மூன்றொடு சிவணி அகரம் வரினும் = அளவுப்பெயர்களின் முன்னர் மெல்கணத்து இரண்டும் இடைக்கணத்து ஒன்றுமாகிய நமவ என்னும் மூன்றனோடு பொருந்தி உயிர்க்கணத்து அகரம் வரினும், உம்மையான் உயிர்க்கணத்து உகரம் வரினுங் கூறாத வல்லெழுத்துக்கள் வரினும்: இயல்பு = முற்கூறியவாறே டகாரம் ணகாரமாய் வேறோர் விகாரமின்றி இயல்பாய் முடியும். எ - று.

நமவவென்னும் மூன்றும் வந்தாற்போல அகரம்வரினுமென்பது பொருள்.

உ-ம். எண்ணாழி மண்டை வட்டி எனவும் எண்ணகல் எண்ணுழக்கு எனவும் எண்கலம் சாடி தூதை பானை எனவும் வரும்.

ஒன்றெனமுடித்தலான் வன்கணத்து நிறைப்பெயருங் கொள்க. எண்கழஞ்சு தொடி பலம் எனவரும்.

இவ்வேண்டாகூறலான் எண்ணகலெனக் குற்றுகர ஈறாய்க் கேடுந் திரிவும் பெற்று உயிர்வருமொழியான தொடர்மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்க. (சரு)

சருக. ஐந்து மூன்று நமவரு காலை
வந்த தொக்கு மொற்றிய னிலையே.

இதுவும் மேல் மாட்டேற்றோடு ஒவ்வாமுடிபு கூறுகின்றது.

இ - ள். ஐந்தும் மூன்றும் நம வருகாலை = ஐந்தென்னுமெண்ணும் மூன்றென்னுமெண்ணும் நகரமுதன்மொழியும் மகரமுதன் மொழியும் வருமொழியாய் வருங்காலத்து: ஒற்றியல் நிலை = நிலைமொழிக்கண் நின்ற ஒற்று நடக்கும் நிலைமைகூறின்: வந்தது ஒக்கும் = மேற்கூறியவாறே மகரமும் பகரமுமாகாது வருமொழிமுதல் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய்முடியும். எ - று.

உ-ம். ஐந்நாழி ஐம்மண்டை முந்நாழி மும்மண்டை எனவரும்.

மூன்றும் ஐந்தும் என்னாத முறையன்றிக் கூற்றினால் நாழுழி நான்மண்டை என்புழி நிலைமொழி னகரம் றகரமாகாது நின்ற வாறே நின்று முடிதலும் வருமொழிமுதனின்ற நகரம் னகரமாகத் திரிய நிலைமொழிநகரங் கெடுதலுங் கொள்க. (சகூ)

சருஉ. மூன்ற னொற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத் துருவா கும்மே.

இதுவும் அது.

இ - ள். மூன்றனொற்று = மூன்றுமெண்ணின்கணின்ற னகர ஒற்று: வகரம் வருவழி = வகரமுதன்மொழி வருமிடத்து: தோன்றிய வகரத்து உருவாகும் = அவ்வருமொழியாய்த் தோன்றிய வக ரத்தின் வடிவாய் முடியும். எ - று.

உ-ம். முவ்வட்டி எனவரும்.

தோன்றிய என்றதனானே முதல் நீண்டு வகர ஒற்றின்றி மூவட்டி என்றுமாம். (சஎ)

சருங. நான்க னொற்றே லகார மாகும்.

இதுவும் அது.

இ - ள். நான்கனொற்று = நான்காமெண்ணின்கணின்ற னகர ஒற்று: லகாரமாகும் = வகரமுதன்மொழிவந்தால் லகர ஒற்றாகத் திரிந்து முடியும். எ - று.

உ-ம். நால்வட்டி எனவரும். (சஅ)

சருச. ஐந்த னொற்றே முந்தைய துகெடுமே.

இதுவும் அது.

இ - ள். ஐந்தனொற்று = ஐந்தாமெண்ணின்கணின்ற நகர ஒற்று: முந்தையது கெடும் = வகரமுதன்மொழிவந்தால் முன்னின்ற வடிவு கெட்டு முடியும். எ - று.

உ-ம். ஐவட்டி எனவரும்.

முந்தையென்றதனால் நகர ஒற்றுக் கெடாது வகர ஒற்றாகத் திரிந்து ஐவ்வட்டியெனச் சிறுபான்மைவரும். (சகூ)

சருரு. முதலீ ரெண்ணின்மு னுயிர்வரு காலைத்
தவவெென மொழிப வுகரக் கிளவி
முதனிலை நீட லாவயி னான.

இது மாட்டேற்றான் எய்திய உகரத்திற்குக் கேடுகூறி முதனீள்க என்றலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ள். முதலீரெண்ணின் முன் உயிர் வருகாலை = ஒரு இரு என முடிந்துநின்ற இரண்டெண்ணின் முன்னர் உயிர்முதன்மொழி வருமொழியாய் வருங்காலத்து: உகரக்கிளவி தவவென மொழிப = நிலைமொழியுகரமாகிய எழுத்துக் கெடுதலாமென்று சொல்லுவர் புலவர்: ஆவயினான முதனிலை நீடல் = அவவிரண்டெண்ணின்கணின்ற முதலெழுத்துக்கள் நீண்டு முடியும். எ - று.

உ-ம். ஓரகல் ஈரகல் ஒருழக்கு ஈருழக்கு எனவரும். (௫௦)

சருசா. மூன்று நான்கு மைந்தென் கிளவியுந்
தோன்றிய வகரத் தியற்கை யாகும்.

இதுவும் அது.

இ - ள். மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும் = மூன்றென்னுமெண்ணும் நான்கென்னுமெண்ணும் ஐந்தென்னுமெண்ணும் தோன்றிய வகரத்து இயற்கையாகும் = முன்னர்த் தோன்றிநின்ற வகரம் வருமொழிக்குக் கூறிய இயல்பாக மூன்றின்கண் வகர ஒற்றாயும். நான்கின்கண் லகர ஒற்றாயும் ஐந்தின்கண் ஒற்றுக்கெட்டும் முடியும். எ - று.

உ-ம். முவ்வகல் முவவுழக்கு என இதற்குத் தோன்றிய என்றதனால் ஒற்றிரட்டுதல் கொள்க. நாலகல் நாலுழக்கு ஐயகல் ஐயுழக்கு எனவரும்.

தோான்றிய என்றதனால் மேல் மூன்றென்பது முதல்நீண்ட இடத்து நிலைமொழி னகரவொற்றுக் கெடுத்துக்கொள்க. இயற்கை யென்றதனாற் தொடர்மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்க. “மூன்றனொற்றே” முதலிய மூன்று சூத்திரமுங் கொணர்ந்து முடிக்க. (௫க)

சருஎ. மூன்றன் முதனிலை நீடலு முரித்தே
யுழக்கென் கிளவி வழக்கத் தான.

இது முன்னர்க் குறுகுமென்றதனை நீண்டுமுடிக என்றலின் எய்தியது விலக்கிற்று.

இ - ள். மூன்றன் முதனிலை நீடலும் உரித்து=மூன்றென்னுமெண்ணின் முதனின்ற எழுத்து நீண்டுமுடிதலும் உரித்து, அஃதியாண்டெனின்: உழக்கு என் கிளவி வழக்கத்தான=உழக்கென்னுஞ் சொன்முடியும் வழக்கிடத்து. எ - று.

உ - ம். மூவுழக்கு எனவரும்.

வழக்கத்தான என்பதனான் அகலென்கிளவிக்கு முதனிலை நீடலுங் கொள்க. மூவகல் எனவரும். இன்னும் அதனானே நிலைமொழி னகர ஒற்றுக் கெடுக்க.

மூழக்கு மூழாக்கென்னும் மருமுடிபு இவ்வோத்தின் புறனடையான் முடிக்க. (௫௨)

௪௫௮. ஆறென் கிளவி முதனீ டும்மே.

இதுவும் அது.

இ - ள். ஆறென்கிளவி=ஆறென்னுமெண்ணுப்பெயர் அகல் உழக்கு என்பனவரின்: முதல் நீடும்=முன்னர்க் குறுகிநின்ற முதலெழுத்து நீண்டு முடியும். எ - று.

அறுவென்றது ஆறென்றார், திரிந்ததன்றிரிபது என்னும் நயத்தால்.

உ-ம். ஆறகல் ஆறுழக்கு எனவரும். (௫௩)

௪௫௯. ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே.

இது குற்றுகரம் மெய்யொடுங் கெடாது நின்று இன் பெறுக என்றலின் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது=அளவும் நிறையும் வருவழி ஒன்பதென்னும் எண்ணின் இறுதிக்குற்றுகரந் தன்வடிவு நிலைதிரியாதுநின்று: சாரியைமொழி இன் பெறல்வேண்டும்=சாரியைச்சொல்லாகிய இன் பெற்று முடிதலை விரும்பும் ஆசிரியன். எ - று.

உ-ம். ஒன்பதின்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும் கழஞ்சு தொடி பலம் எனவும் வரும்.

சாரியைமொழியென்றதனான் இன்னோடு உகரமும் வல்லெழுத்துங் கொடுத்துச் செய்கைசெய்து முடிக்க. ஒன்பதிற்றுக்கலம் சாடி என எல்லாவற்றோடும் ஒட்டுக.

உருபென்பதனான் ஒன்பதிற்றென ஒற்றிரட்டுதல் எல்லாவற்றிற்குங் கொள்க.

இன்னும் இதனானே ஒன்பதினாழியென்புழி வந்த இன்னின் னகரக்கேடுங் கொள்க. "அளவாகுமொழிமுதல்" என்பதனானும் "நிலைஇய" என்னும் இலேசானும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க. (ருச)

சகூ0. நூறுமுன் வரினுங் கூறிய வியல்பே.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான்களோடு நூறென்பதனைப் புணர்க்கின்றது.

இ - ள். முன் = ஒன்றுமுதல் ஒன்பான்களின்முன்னர்: நூறு வரினும் = நூறென்னுமெண்ணுப்பெயர் வந்தாலும்: கூறிய இயல்பு = மேற் பத்தென்பதனோடு புணரும்வழிக் கூறிய இயல்பு எய்தி முடியும். எ - று.

அது குற்றுகரம் மெய்யொடுங்கெட்டு மூன்றும் ஆறும் நெடுமுதல்குறுகி முதலீரெண்ணினொற்று ரகரமாய் உகரம்பெற்று இடைநிலை ரகரம் இரண்டன்கட் கெட்டு முடிதலாம்.

உ-ம். ஒருநூறு இருநூறு அறுநூறு எண்ணூறு எனவரும். இவை மாட்டேற்றான் முடிந்தன. மாட்டேறு ஒவ்வாதன மேற் கூறிமுடிப்ப. (ருரு)

சகூக. மூன்ற னொற்றே நகார மாகும்.

இது மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறுமுடிபு கூறுகின்றது.

இ - ள். மூன்றனொற்றே நகாரமாகும் = மூன்றுமெண்ணின்கணின்ற னகரவொற்று நகரவொற்றாகும். எ - று.

உ-ம். முந்நூறு எனவரும். (ருகா)

௪௬௨. நான்கு மைந்து மொற்றுமெய் திரியா.

இதுவும் அது.

இ - ள். நான்கும் ஐந்தும் ஒற்று மெய்திரியா = நான்கென்னு மெண்ணும் ஐந்தென்னுமெண்ணுந் தம்மொற்றுக்கள் நிலைதிரியாது முடியும். எ - று.

உ-ம். நானூறு ஐந்நூறு எனவரும்.

மெய்யென்றதனான் நானூறென்புழி வருமொழி நகரத்துள் ஊகாரம் பிரித்து "லனவெனவரூஉம்" என்பதனான் னகரவொற் றாக்கி ஊகாரமேற்றி நிலைமொழி னகரங் கெடுத்துக்கொள்க. (௬௭)

௪௬௩. ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகார மிரட்டு
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊவா வாகு மியற்கைத் தென்ப
வாயிடை வருத லிகார ரகார
மீறுமெய் கெடுத்து மகர மொற்றும.

இதுவும் அது.

இ - ள். ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்று = ஒன்பதென் னுமெண்ணின் முதனின்ற ஒகரம் மேற் பத்தென்பதனோடு புண ருஞ்வழிக் கூறியவாறு போல ஒரு தகரம் ஒற்றி அதன்மேல் ஏறி முடியும்: முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும் = அவ ஒகரத்தின்முன் னின்ற னகர ஒற்று ளகர ஒற்றாய் இரட்டித்து நிற்கும்: நூறென் கிளவி நகார மெய்கெட ஊ ஆவாகும் இயற்கைத்தென்ப = வருமொ ழியாகிய நூறென்னுமெண்ணுப்பெயர் நகரமாகிய மெய்கெட அதன்மேல் ஏறிய ஊகாரம் ஆகாரமாம் இயல்பையுடைத்தென் ப புலவர்: ஆயிடை இகர ரகரம் வருதல் = அம்மொழியிடை ஓர் இகரமும் ரகாரமும் வருக: ஈறு மெய் கெடுத்து மகரம் ஒற்றும் = ஈறாகிய குற்றுகரத்தினையும் அஃது ஏறிநின்ற றகர ஒற்றினையுங் கெடுத்து ஓர் மகர ஒற்று வந்து முடியும். எ - று.

மெய்யென்பதனான் நிலைமொழிக்கட் பகரங்கெடுக்க.

உ-ம். தொள்ளாயிரம் எனவரும்.

இதனை ஒன்பதென்னும் ஒகரத்தின்முன்னர் வந்த தகர ஒற்றின்மேலே ஒகரத்தையேற்றிப் பகரங் கெடுத்துக் குற்றியலுகரம் மெய்யொடுங்கெடுத்துநின்ற னகர ஒற்றினை இரண்டு ளகர ஒற்றாக்கி நூறென்பதன் நகரங்கெடுத்து ஊகாரம் ஆகாரமாக்கி ளகரத்தின் மேலேற்றி இகரமும் ரகரமும் வருவித்து விகாரப்பட்ட உயிராகிய ஆகாரத்தின்முன் உடம்படுமெய் யகாரம் வருவித்து றகர உகரங் கெடுத்து மகர ஒற்று வருவித்து முடிக்க. (௫அ)

சசுச. ஆயிரக் கிளவி வரூஉங் காலை
முதலீ ரெண்ணி னுகரங் கெடுமே.

இஃது அவ் ஒன்றுமுதல் ஒன்பான்களோடு ஆயிரம் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். ஆயிரக் கிளவி வரூஉங் காலை = ஆயிரமென்னுஞ் சொல் ஒன்றுமுதல் ஒன்பான்கள் முன் வருங்காலத்து: முதல் ஈரெண்ணின் உகரம் கெடும் = ஒரு இரு என்னும் இரண்டெண்ணின்கட்பெற்று நின்ற உகரங் கெட்டு முடியும். எ - று.

உகரங்கெடுமெனவே ஏனையன முன்னர்க்கூறியவாறே நிற்றல் பெற்றாம்.

உ-ம். ஓராயிரம் இராயிரம் எனவரும். (௫௯)

சசுரு. முதனிலை நீடினு மான மில்லை.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். முதனிலை நீடினும் மானமில்லை = அம்முதலீரெண்ணின் முதற்கணின்ற ஒகார இகாரங்கள் நீண்டுமுடியினுங் குற்றமில்லை. எ - று.

உ-ம். ஓராயிரம் ஈராயிரம் எனவரும். (௬0)

சசுசு. மூன்ற னொற்றே வகார மாகும்.

இது மூன்றென்னுமெண் ஆயிரத்தோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். மூன்றனொற்றே வகாரமாகும் = மூன்றென்னுமெண்ணின்கணின்ற னகர ஒற்று வகர ஒற்றாகத் திரிந்துமுடியும். எ - று.

உ-ம். முவ்வாயிரம் எனவரும்.

முன்னிற் சூத்திரத்து நிலை என்றதனான் இதனை முதனிலை நீட்டி வகர ஒற்றுக் கெடுத்து மூவாயிரம் என முடிக்க. (சுக)

சகூஎ. நான்க னொற்றே லகார மாகும்.

இது நான்கென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். நான்கனொற்றே லகாரமாகும் = நான்கென்னுமெண்ணின்கணின்ற னகர ஒற்று லகர ஒற்றாகத் திரிந்துமுடியும். எ - று.

உ-ம். நாலாயிரம் எனவரும். (சுஉ)

சகூஅ. ஐந்த னொற்றே யகார மாகும்.

இஃது ஐந்தென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ஐந்தனொற்றே யகாரமாகும் = ஐந்தென்னுமெண்ணின்கணின்ற நகர ஒற்று யகர ஒற்றாகத் திரிந்துமுடியும். எ - று.

ஐயாயிரம் எனவரும். (சுஙு)

சகூகூ. ஆறன் மருங்கிற் குற்றிய லுகர
மீறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்.

இஃது ஆறென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ஆறன் மருங்கிற் குற்றியலுகரம் = ஆறென்னுமெண்ணின்கணின்ற குற்றியலுகரம் நெடுமுதல்குறுகி அறுவென முற்றுகரமாய்நிற்றலின்; மெய் ஒழிய ஈறு கெடுதல்வேண்டும் = அது தானேறிய மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாதுநிற்ப முற்றுகரமாகிய ஈறுதான் கெட்டுப் புணர்தலை விரும்பும் ஆசிரியன். எ-று.

உ-ம். அறுயிரம் எனவரும்.

முன்னர் "நெடுமுதல்குறுகும்" என்றவழி அறுவெனநின்ற முற்றுகரத்திற்கே ஈண்டுக் கேடுகூறினாரென்பது பெற்றாம்,என்னை? குற்றியலுகரமாயின் ஏறிமுடிதலின். இது குற்றுகரந் திரிந்து முற்றுகரமாய் நிற்றலின் ஈண்டு முடிபுகூறினார். முற்றியலுகரம் ஈறு மெய்யொழியக் கெடுமெனவே குற்றுகரங் கெடாது ஏறிமுடியுமென்பது அருத்தாபத்தியாற் பெறுதும். ஆறுயிரம் எனவரும்.

ம் நுங்கென்றதனாற் பிறபொருட்பெயர்க்கண்ணும் நெடுமுதல் குறுகாது நின்று முடிதல்கொள்க. ஆறுகுவதே எனவரும். (௬௪)

சஎ௦. ஒன்பா னிறுதி யுருவுநிலை திரியா
இன்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே.

இஃது ஒன்பதென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ஒன்பான் இறுதி=ஒன்பதென்னுமெண்ணின் இறுதிக் குற்றுகரம்; உருவுநிலை திரியாது=தன்வடிவுநிலை திரிந்து கெடாது: சாரியை மரபு இன் பெறல்வேண்டும்=சாரியையாகிய மரபினையுடைய இன் பெற்றுமுடிதலை விரும்பும் ஆசிரியன். எ - று.

உ-ம். ஒன்பதினாயிரம் எனவரும்.

உருவென்றும் நிலையென்றுஞ் சாரியைமரபென்றுங் கூறிய மிகையால் ஆயிரமல்லாத பிறவெண்ணின்கண்ணும் பொருட்பெயரிடத்தும் இன்னும் உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் முடிபுகொள்க. ஒன்பதிற்றுக்கோடி ஒன்பதிற்றொன்பது ஒன்பதிற்றுத்தடக்கை ஒன்பதிற்றெழுத்து எனவரும்.

இன்னும் இவ்விலேசானே வேறொருமுடிபின்மையிற் கூறாதொழிந்த எண்ணாயிரமென்றவழி ஒற்றிரட்டுதலும் ஈண்டுக் கூறியவற்றிற்கு ஒற்றிரட்டுதலுங் கொள்க. "அளவாகுமொழிமுதல்" என்பதனுள் "நிலைஇய" என்றதனான் னகரம் றகரமாதல்கொள்க.()

சஎக. நூறா யிரமுன் வரூஉங் காலை
நூற னியற்கை முதனிலைக் கிளவி.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான்களோடு நூறென்னுமெண் அடையடுத்த ஆயிரம் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். நூறாயிரம் முன் வரூஉங் காலை=நூறாயிரமென்னும் அடையடுத்தமொழி ஒன்றுமுதல் ஒன்பான்கள் முன் வருமொழியாய் வருங்காலத்து: முதனிலைக் கிளவி நூறன் இயற்கை=ஒன்றென்னும் முதனிலைக்கிளவி ஒன்று முன் நூறென்னுமெண்ணோடு முடிந்தாற்போல விகாரமெய்தி முடியும். எனவே வழிநிலைக்கிளவியாகிய இரண்டுமுதலிய எண்கள் விகாரமெய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும். எ - று.

உ-ம. ஒருநூறாயிரம் எனவரும். ஏனையன இருநூறாயிரம் இரண்டுநூறாயிரம மூந்நூறாயிரம் மூன்றுநூறாயிரம் நானூறாயிரம் நான்குநூறாயிரம் ஐந்நூறாயிரம் ஐந்துநூறாயிரம் அறுநூறாயிரம ஆறுநூறாயிரம் எண்ணூறாயிரம் எட்டுநூறாயிரம் ஒன்பதுநூறாயிரம் எனவரும். இவவிகாரப்பட்டன வற்றிற்குக் குற்றுகரம் மெய்யொடுங்கெடுத்து முதலீரெண்ணினொற்று ரகரமாக்கி உகரம் வருவித்து மூன்றும் ஆறும் நெடுமுதல்குறுக்கி மூன்றனொற்று நகரமாக்கி நான்கும் ஐந்தும் ஒற்றுமெய்திரியாவாக்கி எட்டனொற்று ணகாரமாக்கி இலேசுகளாற்கொண்ட செய்கைகளில் வேண்டுவன வுங் கொணர்ந்து முடிக்க.

ஏற்புழிக்கோடலென்பதனாற் றொள்ளாயிரமென்ற முடிபினோடு மாட்டேறு சென்றதேனும் அவவாறு முடியாதென்று கொள்க. முன்னென்பதனான் இன் சாரியைபெற்று ஒன்பதினாறாயிரம் என்றுமாம். நிலையென்றதனான் மூன்றும் ஆறும் இயல்பாக முடிவுழி நெடுமுதல்குறுகாமை கொள்க. (சுசு)

சஎஉ. நூறென் கிளவி யொன்றுமுத லொன்பாற் கீறுசினை யொழிய வினவொற்று மிகுமே.

இது நூறென்பதனோடு ஒன்றுமுதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ-ள். நூறு என் கிளவி = நூறென்னுமெண்ணுப்பெயர்: ஒன்று முதல் ஒன்பாற்கு = ஒன்றுமுதல் ஒன்பான்களோடு புணருமிடத்து: ஈறு சினையொழிய = ஈறாகிய குற்றுகரந் தன்னாற் பற்றப்பட்ட மெய்யொடுங்கெடாதுநிற்ப:இன ஒற்று மிகும் = அச்சினைக்கு இனமாகிய றகர ஒற்று மிக்குமுடியும். எ - று.

உ-ம். நூற்றொன்று எனவரும். இரண்டுமுதல் ஒன்பது அளவுஞ் செய்கையறிந்து ஒட்டுக.

ஈறுசினை என்று ஓதிய மிகையான் நூறென்பதனோடு பிற எண்ணும் பிறபொருட்பெயரும் இவவிதியும் பிறவிதியும் எய்திமுடிதல்கொள்க. நூற்றுப்பத்து நூற்றுக்கோடி நூற்றுத்தொண்ணூறு எனவும் நூற்றுக்குறை நூற்றிதழ்த்தாமரை நூற்றுக்காணம் நூற்றுக்கான்மண்டபம் எனவும் இன ஒற்று மிக்கனகொள்க. இன்னும் இதனானே இருநூற்றொன்று இரண்டுநூற்றொன்று என நூறு அடையடுத்தவழியுங் கொள்க. (சுஎ)

சஎங. அவையூர் பத்தினு மத்தொழிற் றாகும்.

இஃது அந்நூறென்பதனோடு ஒன்றுமுதல் ஒன்பான்கள் அடையடுத்தவழிப் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். அவை ஊர் பத்தினும் = அந்நூறென்பது நின்று முற் கூறிய ஒன்றுமுதல் ஒன்பான்களை ஊர்ந்து வந்த பஃதென்பதனோடு புணருமிடத்தும்: அத்தொழிற்றாகும் = ஈறு சினையொழிய இன ஒற்று மிக்குமுடியும். எ - று.

உ-ம். நூற்றொருபஃது இருபஃது முப்பஃது நாற்பஃது ஐம் பஃது அறுபஃது எழுபஃது எண்பஃது எனவரும். மற்றும் நூற் றொன்பது அவை ஊரப்பட்டுவந்தது அன்மை உணர்க.

ஆகுமென்றதனான் ஒருநூற்றொருபஃது இருநூற்றொரு பஃது என நிலைமொழி அடையடுத்து முடியும் முடிபுங்கொள்க.()

சஎச. அளவு நிறையு மாயிய றிரியாது
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையு
முற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.

இது நூறென்பதனோடு அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள். அளவும் நிறையும் ஆயியல் திரியாது = நூறென்பத னோடு அளவுப்பெயரும் நிறைப்பெயரும் புணருமிடத்து முற்கூறிய இயல்பிற் றிரியாது இன ஒற்று மிக்குமுடியும்: குற்றியலுகரமும் வல்லெழுத்தியற்கையும் = அவ்விடத்துக் குற்றியலுகரங் கெடா மையும் இன ஒற்று மிக்கு வன்றொடர்மொழியாய் நிற்றலின் வருமொழி வல்லெழுத்து மிகும் இயல்பும்: முற் கிளந்தன்ன என் மனார் புலவர் = "வல்லொற்றுத்தொடர்மொழி வல்லெழுத்துமிகு மே" என வன்றொடர்மொழிக்குக் கூறிய தன்மையவாய் முடியு மென்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். நூற்றுக்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும் கழஞ்சு தொடி பலம் எனவும் வரும்.

திரியாதென்றதனால் நூறென்பது அடையடுத்த வழியும் இவ் விதி கொள்க. அஃது ஒருநூற்றுக்கலம் இருநூற்றுக்கலம் என வரும். (சாக)

சஎ௫. ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
யொன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற வாய்தங் கெடுதல் வேண்டும்.

இஃது ஒன்றுமுதல் எட்டு ஈறாகிய எண்கள் அடையடுத்த பத்தனோடும் ஒன்றுமுதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ - ள். ஒன்று முதலாகிய பத்து ஊர் கிளவி=ஒன்றுமுதல் எட்டு ஈறாகப் பத்தென்னும் எண் ஏறி ஒருசொல்லாகி நின்ற ஒரு பஃது முதலிய எண்கள்: ஒன்றுமுதல் ஒன்பாற்கு=ஒன்றுமுதல் ஒன்பான்கள் வருமொழியாய் வந்து புணரும் இடத்து: நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும்=பஃதென்பதன்கண் நின்ற ஆய்தங் கெட்டு முடிதலை விரும்பும் ஆசிரியன்: ஒற்று இடைமிகும்=ஆண்டு இன ஒற்றாகிய ஒரு தகர ஒற்று இடைமிக்கு முடியும். எ - று.

உ-ம். ஒருபத்தொன்று இருபத்தொன்று ஒருபத்திரண்டு இருபத்திரண்டு என எல்லாவற்றோடும் ஒட்டுக. இவற்றுள் ஒருபத்தொன்று ஒருபத்திரண்டு என்னும் எண்கள் அதிகாரத்தால் நின்ற நூறென்பதனோடு அடுத்துவருமென்று உணர்க. (எ0)

சஎ௬. ஆயிரம் வரினே யின்னென் சாரியை
யாவயி னொற்றிடை மிகுத லில்லை.

இஃது ஒருபஃது முதலியவற்றோடு ஆயிரத்தைப் புணர்க்கின்றது.

இ - ள். ஆயிரம் வரின் இன்னென் சாரியை=அவ்வொன்று முதலாகிய பத்து ஊர் கிளவி ஆயிரத்தோடு புணரும் இடத்து இன் சாரியை பெறும்: ஆவயின் ஒற்று இடைமிகுதல் இல்லை=அவ்விடத்துத் தகர ஒற்று இடைவந்து மிகாது. எ - று.

உ-ம். ஒருபதினாயிரம் இருபதினாயிரம் என எண்பதின்காறும் ஒட்டுக. இவை நூற்றொருபதினாயிரம் எனவும் வரும்.

ஆவயின் என்றதனான் நூறாயிரத்தொருபத்தீராயிரம் என்றாற்போல அத்துப் பெறுதலும் பிறவுங்கொள்க. (எக)

சஎஎ. அளவு நிறையு மாயிய றிரியா.

இஃது ஒன்று முதலாகிய பத்து ஊர் கிளவிமுன்னர் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் புணர்க்கின்றது.

இ - ள். அளவும் நிறையும் ஆயியல் திரியா=ஒருபஃது முதலிய எண்களின்முன்னர் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வந்தால் ஒற்று இடைமிகாது இன்சாரியை பெற்று முடியும். எ - று.

உ-ம். ஒருபதின்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும், ஒருபதின்கழஞ்சு தொடி பலம் எனவும் வரும். இவற்றிற்கு நூறு அடையடுத்து ஒட்டுக.

திரியா என்றதனான் ஒருபதிற்றுக்கலம் இருபதிற்றுக்கலம் என்னுந் தொடக்கத்தனவற்றின்கண் இன்னின் அகரம் றகரமாகத்திரிந்து இரட்டுதலும் உகரமும் வல்லெழுத்தும் பெறுதலுங் கொள்க. இன்னும் இதனானே ஒருபதினாழி என்றவழி வருமொழி நகரந் திரிந்துழி நிலைமொழி னகரக்கேடுங் கொள்க.

அளவு நிறையு மதனோ ரன்ன என்று பாடம் ஓதுவார் முன்னர்ச் சூத்திரத்து "ஆவயின்" என்றதனானும் அதன்முன்னர்ச் சூத்திரத்து "நின்ற" என்றதனானும் இவற்றை முடிப்பார். (எஉ)

சஎஅ. முதனிலை யெண்ணின்முன் வல்லெழுத்து வரினு
ஞநமத் தோன்றினும் யவவந் தியையினு
முதனிலை யியற்கை யென்மனார் புலவர்.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான்களோடு பொருட்பெயரைப் புணர்க்கின்றது.

இ - ள். முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்= ஒன்றென்னும் எண்ணின்முன் வல்லெழுத்து முதன்மொழி வரினும்: ஞநம தோன்றினும்=ஞநமக்களாகிய மெல்லெழுத்து முதன்மொழிவரினும்; யவ வந்து இயையினும்=யவக்களாகிய இடையெழுத்து முதன்மொழிவரினும்: முதனிலை இயற்கை என்மனார் புலவர்=அவ்வொன்றுமுதல் ஒன்பான்கள் முன்னெய்திய முடிபுநிலைமை எய்தி முடியுமென்று கூறுவர் புலவர். எ - று.

எனவே வழிநிலையெண்ணாகிய இரண்டு முதலாகிய எண்கள் அம்மூன்றுகணமும் முதன்மொழியாய் வரின் முதனிலைமுடிபாகிய விகாரம் எய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும்.

உ-ம். ஒருகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவும் இருகல் இரண்டுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவும் ஒட்டுக. இவ்வெண்களிற் குற்றியலுகரம் மெய்யொடுங் கெட்டு முதலீரெண்ணின் ஒற்று ரகாரமாய் உகரம் வந்தது. இருகல் முதலியவற்றிற்கு இடைநிலை ரகாரங் கெடுக்க.

முக்கல் மூன்றுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு என ஒட்டுக. இதற்கு நெடுமுதல்குறுக்கி "மூன்றனொற்றேவந்த தொக்கும்" என்பதனான் முடிக்க. முன்னர் எண்ணுப்பெயரும் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வருவழிக் கூறிய விகாரங்களிற் பொருட்பெயர்க்கும் ஏற்பன கொணர்ந்துமுடித்து எல்லாவற்றிற் கும் நிலையென்றதனான் ஒற்றுத் திரித்து முடிக்க. அவை மூன்றற் கும் ஐந்தற்கும் ஞகரம் வருவழி ஞகர ஒற்றாதலும் மூன்றற்கு யகரம் வருவழி வகர ஒற்றாதலுமாம். நாற்கல் நான்குகல் சுனை துடி பறை நான்ஞாண் நான்குஞாண் நூல் மணி யாழ் வட்டு ஐங்கல் ஐந்துகல் சுனை துடி பறை ஐஞ்ஞாண் ஐந்து ஞாண் நூல் மணி ஐயாழ் ஐந்துயாழ் ஐவட்டு ஐந்துவட்டு அறுகல் ஆறுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எண்கல் எட்டுக்கல் சுனை துடி பறை எண்ஞாண் எட்டுஞாண் நூல் மணி யாழ் வட்டு ஒன்பதுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு என ஒட்டுக. ஒன்பதின்கல் எனச் சென்றதேனும் வழக்கின்மையின் ஒழிக்க. இன்னும் மாட்டேறின்றி வருவனவற்றிற்கெல்லாம் முடிபு நிலையென்றதனான்முடிக்க. (எசு)

சஎகூ. அதனிலை யுயிர்க்கும் யாவரு காலை
முதனிலை யொகர மோவா கும்மே
ரகரத் துகரந் துவரக் கெடுமே.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான்களோடு பொருட்பெயருள் உயிர்முதன்மொழி முடியுமாறும் மேற்கூறிய யகாரம் வேறுபட முடியுமாறுங் கூறுகின்றது.

இ - ள். முதனிலைக்கு=ஒன்றென்னும் எண்ணின் திரிபாகிய ஒரு என்னும் எண்ணிற்கு: உயிரும் யாவும் வருகாலை=உயிர்முதன் மொழியும் யாமுதன்மொழியும் வருமொழியாய் வருங்காலத்து; அதன் நிலை=அம்முதனிலையின் தன்மை இவ்வாறும்: ஒகரம் ஓவா கும்=ஒகரம் ஓகாரமாய் நீளும்: ரகரத்து உகரந் துவரக் கெடும்= ரகரத்துமேனின்ற உகரம் முற்றக்கெட்டு முடியும். எ - று.

நான்காவதனை முதனிலையோடு கூட்டி அதன்கண் நின்ற உம்மையை உயிரோடும் யாவோடுங் கூட்டுக. எனவே வழிநிலை யெண்கள் உயிர்முதன்மொழி வந்த இடத்து முற்கூறியவாறே இரு வாற்றானும் முடியும்.

உ-ம். ஓரடை ஓராகம் ஓரிலை ஓரீட்டம் ஓருலை ஓரூசல் ஓரெழு ஓரேடு ஓரையம் ஓரொழுங்கு ஓரோலை ஓரௌவியம் எனவரும்

குற்றியலுகரம் மெய்யொடுங்கெடுத்து முதலெண்ணிறொற்று ரக ரமாக்குக., ஓர்யாழ் ஓர்யானை எனவரும். துவர என்றதனான் இரண்டென்னும் எண்ணின் இகரத்தை நீட்டி ரகரத்துள் உகரத் தைக் கெடுத்து ஈரசை ஈர்யானை எனவும், மூன்றென்னும் எண் ணின் னகரவொற்றுக் கெடுத்து மூவசை மூயானை எனவும் முடிக்க. இவை செய்யுண்முடிபு. இன்னும் இதனானே இங்ஙனம் வருவன பிறவும் அறிந்து முடித்துக்கொள்க. (எச)

சஅ0. இரண்டுமுத லொன்பா னிறுதி முன்னர்
வழங்கியன் மாவென் கிளவி தோன்றின்
மகர வளவொடு நிகர லுரித்தே.

இஃது இரண்டுமுதல் ஒன்பான்களின்முன்னர் அளவு முத லிய மூன்றற்கும் உரிய மாவென்பது புணருமாறு கூறுகின்றது.

இ - ள். இரண்டுமுதல் ஒன்பான் இறுதிமுன்னர் = இரண் டென்னுமெண் முதலாக ஒன்பதென்னுமெண் ஈறாக நின்ற எண் ணுப்பெயர்களின்முன்னர்: வழங்கு இயல் மா என் கிளவி தோன் றின் = வழக்கின்கண்ணே நடந்த அளவுமுதலியவற்றிற்கு உரிய மா வென்னுஞ் சொல் வருமொழியாய் வரின்: மகர அளவொடு நிக ரலும் உரித்து = அவவெண்ணுப் பெயர்களின் முன்னர்த் தந்து புணர்க்கப்படும் மண்டையென்னும் அளவுப்பெயரோடு ஒத்து விகா ரப்பட்டு முடிதலும் உரித்து; உம்மையான் விகாரப்படாது இயல் பாய்முடிதலும் உரித்து. எ - று.

வழக்கியல் வழங்கியலென விகாரம். மகர அளவு மகரமுதன் மொழியாகிய அளவுப்பெயரெனப் பண்புத்தொகை. அஃது "அளந் தறிகிளவியும்" என்பதனுள் ஒருமண்டை என முடித்ததாம்.

உ-ம். இருமா மும்மா நான்மா ஐம்மா அறுமா எண்மா ஒன் பதின்மா என முன்னர்க்கூறிய சூத்திரங்களான் விகாரப்படுத்தி முடிக்க. இனி உம்மையான் விகாரப்படுத்தாது இரண்டுமா மூன் றுமா நான்குமா ஐந்துமா ஆறுமா எட்டுமா ஒன்பதுமா எனமுடிக்க. புள்ளிமயங்கியலுள் "அளவுநிறையும்" என்னுஞ் சூத்திரத்தான் நெடுமுதல் குறுகி உகரம் வந்து புணருமாறு கூறினார், அதனான் எண்டு ஏழுமா என முடிக்க. ஏழ்மாவென முடிதல் வழக்கின்று.

இரண்டுமுதல் ஒன்பானென்று எடுத்தோதினமையின் ஒன் றற்கு ஒருமாவென்னும் முடிபேயன்றி ஒன்றுமாவென்னும் முடிபு இல்லையாயிற்று.

வழங்கியன்மா என்றூர் விலங்குமாலை நீக்குதற்கு. (எரு)

சஅக. லனவென வரூஉம் புள்ளி யிறுதிமுன்
னும்முங் கெழுவு முளப்படப் பிறவு
மன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான.

இது புள்ளிமயங்கியலுள் ஒழிந்துநின்ற செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள். லன என வரூஉம் புள்ளி இறுதிமுன் = லகார னகாரமென்று கூற வருகின்ற புள்ளியீற்றுச் சொற்களின்முன்னர்: உம்முங் கெழுவும் உளப்பட = உம்மென்னுஞ் சாரியையுங் கெழுவென்னுஞ் சாரியையும் உட்பட: பிறவும் அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி = பிறசாரியையும் அப்பெற்றிப்பட்ட மரபினையுடைய மொழியிடத்தே தோன்றி: செய்யுட் தொடர்வயின் மெய்பெற நிலையும் = செய்யுட்சொற்களைத் தொடர்புபடுத்திக் கூறுமிடத்துப் பொருள்பட நிற்கும்: வேற்றுமை குறித்த பொருள்வயினான வேற்றுமையைக் குறித்த பொருட்புணர்ச்சிக்கண். எ - று.

உ-ம். "வானவரிவில்லுந்திங்களும்போலும்" இதற்கு உம்மென்னுஞ் சாரியையின் மகரத்தை "அம்மினிறுதி" என்னுஞ் சூத்திரத்துட் "தன்மெய்" என்றதனாற் பிறசாரியையுந் திரியுமென நகர ஒற்றாக்கி நிலைமொழி லகர ஒற்றின்மேல் உயிரேற்றி முடிக்க. வில்லுந்திங்களும்போலுமென்பதற்கு வில்லிடைத்திங்கள்போலுமென ஏழனுருபு விரித்துப் பொருளுரைக்க. "கல்கெழுகானவர்நலகுறுமகளே" இதற்குக் கல்லைக்கெழீஇயின என உரைக்க. "மாநிதிக்கிழவனும்போன்ம்." இதற்குக் கிழவனைப்போன்மென உரைக்க. இவவும்மை சிறப்பன்று. "கான்கெழுநாடு" இதற்குக் கானைக்கெழீஇய என உரைக்க.

இனி அன்னமரபின்மொழியிடை என்றதனாற் கெழுவென்றது பிறசொல்லிடத்தே "பணைகெழுபெருந்திறற்பலவேன்மன்னர் துறைகெழுமாந்தை" என இயல்பாகவருவனவும் "வளங்கெழுதிருநகர்பயங்கெழுமாமழை" என் நிலைமொழியீற்றெழுத்துத் திரிய வருவனவுங் கொள்க.

இன்னும் இதனானே இச்சாரியையது உகரக்கேடும் எகர நீட்சியுங் கொள்க. "பூக்கேழ்தொடலைநுடங்கவெழுந்து" "துறை-

கேழூரன்கொடுமைநாணி" இவற்றிற்கு இரண்டாவதும் ஏற்புழி மூன்றாவதும் விரிக்க. "செங்கேழ்மென்கொடி" என்புழிக் கெழு வென்னும் உரிச்சொல் "எழுத்துப்பிரிந்திசைத்தல்" என்பதனான் நீண்டதென்று உணர்க. மெய்யென்றதனாற் பூக்கேழென்புழி வல் லொற்று மிகுதல் கொள்க.

இன்னுஞ்சான்றோர் செய்யுட்கட் பிறசாரியை பெற்று விகா ரங்கள் எய்தி முடிவனவற்றிற்கெல்லாம் இச்சூத்திரமே விதியாக முடித்துக்கொள்க. (௭௬)

சஅ௨. உயிரும் புள்ளியு மிறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினு மிசையினுந் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியு
முயர்திணை யஃறிணை யாயிரு மருங்கி
னைம்பா லறியும் பண்புதொகு மொழியுஞ்
செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்
மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியுந்
தம்மியல் கிளப்பிற் றம்முற் றாம்வரூஉ
மெண்ணின் றொகுதி யுளப்படப் பிறவு
மன்னவை யெல்லா மருவின் பாத்திய
புணரியு னிலையிடை யுணரத் தோன்றா.

இஃது இவ்வதிகாரத்திற் புணர்க்கப்படாத சொற்கள் இவை யென அவற்றை எடுத்து உணர்த்துகின்றது.

இ - ள். உயிரும் புள்ளியும் இறுதியாகி = கூறுங்கால் உயி ரும் புள்ளியும் ஈறாக நிற்பதோர் சொல்லாகி: குறிப்பினும் பண் பினும் இசையினுந் தோன்றி = குறிப்பினானும் பண்பினானும் இசை யினானும் பிறந்து: நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும் = ஒருவழிப்பட வாராத சொற்றன்மை குறைந்த சொற்களாகிய உரிச்சொற்களும்: உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின் = உயர்திணை அஃறிணையென்னும் அவ்விரண்டிடத்தும் உளவாகிய: ஐம்பால் அறியும் பண்பு தொகு மொழியும் = ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்துபாலினையும் அறிதற்குக் காரண மாகிய பண்புகொள்பெயர் தொகுந் தொகைச்சொல்லும்: செய்யுஞ் செய்த என்னுங் கிளவியின் = செய்யுஞ் செய்த என்னும் பெய ரெச்சச்சொற்களினுடைய: மெய் ஒருங்கு இயலுந் தொழில் தொகு மொழியும் = காலங்காட்டும் உம்மும் அகரமும் ஒருசொற்கண்ணே

சேர நடக்கும் புடைபெயர்ச்சி தொக்குநிற்குஞ் சொற்களும்: தம் இயல் கிளப்பின்=தமது தன்மை கூறுமிடத்து: தம் முன் தாம் வரூஉம் எண்ணின்றொகுதி உளப்பட=நிறுத்தசொல்லுங் குறித்து வருகிளவியுமாய் வாராது தம்முன்னர்த் தாமே வந்து நிற்கும் எண்ணுப்பெயரினது தொகுதியும் உளப்பட:அன்ன பிறவும் எல்லாம்= அத்தன்மையாகிய பிறவுமெல்லாம்: மருவின் பாத்திய=உலகத்து மருவிநடந்த வழக்கினது பகுதியைத் தம் இலக்கணமாகவுடைய: புணரியல் நிலை இடையுணரத் தோன்றா=ஒன்றனோடொன்று புணருதல் நடந்த தன்மை இடம்விளங்கத் தோன்றா. எ - று.

உ-ம். கண் விண்ணவிணைத்தது விண்விணைத்தது இவை குறிப்புரிச்சொல்; ஆடை வெள்ளவிளர்த்தது வெள்விளர்த்தது இவை பண்புரிச்சொல்; கடல் ஒல்லவொலித்தது ஒல்லொலித்தது இவை இசையுரிச்சொல். "ஒல்லொலிநீர் பாய்லதே போலுந் துறைவன்" என்றார் செய்யுட்கண்ணும். இவை உயிரீறும் புள்ளியீறும் நிற்றலின் ஒன்றன்கண் அடக்கலாகாமையின் நெறிப்படவாரா என்றார். விண்ணவிணைத்தது தெறிப்புத்தோன்றத் தெறித்ததென்றும் விண்விணைத்தது தெறிப்புத்தெறித்ததென்றும் ஆம். ஏனையவற்றிற்கும் இவ்வாறே உணர்க. இங்ஙனம் நிற்றலிற் தன்மை குறைந்த சொல்லாயிற்று. "வினையேகுறிப்பே" என்னுஞ் சூத்திரத்திற் கூறிய என என்பதனை இவற்றொடு கூட்டியவழி இடைச்சொல்லாதலின் விண்ணெனவிணர்த்தது எனப் புணர்க்கப்படுமாறு உணர்க.

இனிக் கரும்பார்ப்பான் கரும்பார்ப்பனி கரும்பார்ப்பார் கருங்குதிரை கருங்குதிரைகள் எனவரும் இவற்றுட் கரியனாகிய பார்ப்பான் கரியளாகியபார்ப்பனி கரியராகியபார்ப்பார் கரியதாகிய குதிரை கரியனவாகியகுதிரைகள் என ஐம்பாலினையும் உணர்த்தும் பண்புகொள்பெயர் தொக்கவாறு காண்க. இவற்றுட் கருமை என்னும் பண்புப்பெயர் தொக்கதேற் கருமையாகிய பார்ப்பானென விரித்தல்வேண்டும். அங்ஙனம் விரியாமையிற் பண்புகொள்பெயர் தொக்கதென்று உணர்க.

வெற்றிலை வெற்றுப்பிலி வெற்றடி வெற்றெனத்தொடுத்தல் என்றாற்போல்வனவற்றுள் வெறுவிதாகிய இலையென்பது பாக்குங்கோட்டுநூறுங்கூடாததாய பண்புணர்த்தி ஈறு தொகுதலின் மருவின்பாத்தியவாய் நின்று ஒற்றடுத்தது. ஈறுகுன்றலின் ஒற்றடுத்தது. வெறுவிதாகிய உப்பிலியென்றது சிறிதும் உப்பிலியென நின்றது. ஏனையவும் அன்ன. இங்ஙனம் ஐம்பாலுந் தொகுத்தற்கு உரிய முதனிலையாதலிற் புணர்த்தலாகாமைகூறினார்.

இனி ஆடரங்கு செய்குன்று புணர்பொழுது அரிவாள் கொல்யானை செல்செலவு என நிலம் முதலாகிய பெயரெச்சத்தொக்க வினைத்தொகைகளை விரிக்குங்கால் ஆடினவரங்கு எனச் செய்த என்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த அகர ஈறு இறப்பு உணர்த்தியும், ஆடாநின்றவரங்கு ஆடுமரங்கு எனச் செய்யுமென்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த உம்மீறு நிகழ்வும் எதிர்வும் உணர்த்தியும், அவற்றானைய புடைபெயர்ச்சியைத் தோற்றுவித்து இரண்டு பெயரெச்சமும் ஒருசொற்கண் ஒருங்கு தொக்குநிற்றலின் அதனை ஒரு பெயரெச்சத்தின்கண் அடக்கிப் புணர்க்கலாகாமையிற் புணர்க்கலாகாதென்றார். உம்மிறுதி நிகழ்வும் எதிர்வும் உணர்த்துமாறு "வினையின்றொகுதி" என்னும் எச்சவியற் சூத்திரத்துட் கூறுதும். இவ் உம்மீறு இரண்டு காலமும் ஒருங்குணர்த்துதற் சிறப்பு நோக்கிச் செய்த என்பதனை ஆசிரியர் முற்கூறாராயினர்.

இனிப் பத்து எனநிறுத்திப் பத்தெனத் தந்து புணர்க்கப்படாது பப்பத்தெனவும் பஃபத்தெனவும் வழங்குமாறு உணர்க. ஒரோவொன்றென்பதும் அது. அதுதானே ஓரொன்றோரொன்றாகக் கொடு என்றாற் புணர்க்கப்படும்.

இனி அன்னபிறவும் என்றதனானே உண்டானென்புழி உண்ணென்னும் முதனிலையுங் காலங்காட்டும் டகரமும் இடனும்பாலும் உணர்த்தும் ஆனும் ஒன்றனோடொன்று புணர்க்கப்படா, அவை நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியும் அன்மையின். கரியனென்புழிக் கருமையென நிறுத்தி அன்னெனத் தந்து புணர்க்கப்படா, அது இன்னனென்னும் பொருடருதலின். ஏனைவினைச்சொற்களும் இவ்வாறே பிரித்துப் புணர்க்கலாகாமை உணர்க. இன்னும் அதனானே கொள்ளெனக்கொண்டான் என்புழிக் கொள்ளென்பதனை என என்பதனோடு புணர்க்கப்படாமையும் ஊரன் வெற்பன் முதலிய வினைப்பெயர்களும் பிறவும் புணர்க்கப்படாமையுங் கொள்க. இவ்வாசிரியர் புணர்க்கப்படாத இச்சொற்களையும் வடநூற்கண் முடித்த அனகன் அனபாயன் அகளங்கன் முதலிய வடசொற்களையும் பின்னுள்ளோர் முடித்தல் முதனூலோடு மாறுகொளக்கூறலாமென்று உணர்க. (எஎ)

சஅரு. கிளந்த வல்ல செய்யுளுட் டிரிநவும்
வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய வியற்கையின் வேறுபடத் தோன்றின்

வழங்கியன் மருங்கி னுணர்ந்தன ரொழுக்க
னன்மதி நாட்டத் தென்மனார் புலவர்.

இஃது இவ்வதிகாரத்து எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்றவற்றையெல்லாம் இதனானே முடிக்க என அதிகாரப் புறனடை கூறுகின்றது.

இ - ள். கிளந்த அல்ல செய்யுளுட் திரிநவும் = முன்னர் எடுத்தோதப்பட்டன அல்லாத சொற்கள் செய்யுளிடத்துத் திரிந்து முடிவனவும்: வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும் = நால்வகை வழக்கும் நடக்குமிடத்து மருவுதலோடு திரிந்துமுடிவனவும்: விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின் = முன்னர்க் கூறிய இலக்கணமுறைமையினின்றும் வேறுபடத் தோன்றுமாயின் அவற்றை: நன்மதி நாட்டத்து = நல்ல அறிவினது ஆராய்ச்சியாலே: வழங்கியன் மருங்கின் = வழக்கு முடிந்து நடக்குமிடத்தே: உணர்ந்தனர் ஒழுக்கல் என்மனார் புலவர் = முடிபுவேறுபாடுகளை அறிந்து நடாத்துக என்று கூறுவர் புலவர். எ - று.

உ-ம். தடவுத்திரை என உகரமும் வல்லெழுத்தும் பெற்றுந் தடவுநிலை என உகரம் பெற்றும் அகர ஈற்று உரிச்சொல் வந்தது. அதவத்தங்கனி என வேற்றுமைக்கண் அகர ஈறு அத்துப்பெற்றது. கசதபத்தோன்றின் என அகர ஈற்றின்முன்னர்த் தகரங்கெடுக்க. "நறவங்கண்ணிநற்போர்ச்செம்பியன் - குரவநீடிய கொன்றையங்கானல்" என ஆகார இறுதி குறியதனிறுதிச்சினை கெட்டு இருவழியும் அம்முப்பெற்றன. "முழவுமாதொலைச்சியபைந் நிணப்பிளவைப் - பிணவுநாய்முடுக்கியதடியொடுவிரைஇ" என அவ்வீறு அல்வழிக்கண் அம்முப்பெறாத முடிபுபெற்றன. "திண்வளிவிசித்தமுழவொடாகுளி" "சுறவெறிமீன்" "இரவழங்குசிறுநெறி" இவை உகரம்பெறாமல் வந்தன. "கள்ளியங்காட்டபுள்ளியம்பொறிக்கலை" என இகர ஈறு வேற்றுமைக்கண் அம்முப்பெற்றன. "தீயினன்னவொண்செங்காந்தள்" என ஈகார ஈறு வேற்றுமைக்கண் இன்பெற்றது. "நல்லொழுக்கங்காக்குந்திருவத்தவர்" என உகர ஈறு வேற்றுமைக்கண் அத்துப்பெற்றது. "ஏப்பெற்றமான் பிணைபோல" என ஏகார ஈறு வேற்றுமைக்கண் எகரம்பெறாது வந்தது. "கைத்துண்டாம்போழ்தே" "கைத்தில்லார்நல்லர்" எனவும் "புன்னையங்கானல்" "முல்லையந்தொடையல்" எனவும் ஐகார ஈறு வேற்றுமைக்கண் அத்தும் அம்மும் பெற்றன. "அண்ணல்கோயில் வண்ணமே" என ஓகார ஈறு யகர உடம்படுமெய் பெற்றது.

இனி "அஞ்செவிநிறையவாவின்" என அல்வழிக்கட் ககரமும் அகரமுங் கெட்டன. "மரவம்பாவைவயிரூரப்பருகி" "மரவநாகம்வணங்கிமாற்கனம்" என இருவழியும் மகரம் விகாரப்பட்டு அம்முப் பெற்றன. "காரெதிர்கானம்பாடினேமாக" "பொன்னந்திகிரிமுன்சமத்துருட்டி" "பொன்னங்குவட்டிற்பொலிவெய்தி" என னகர ஈறு இருவழியும் அம்முப்பெற்றன. "வேர்பிணிவெதிரத்துக்கால்பொருநாலிசை" என ரகர ஈறு வேற்றுமைக்கண் அத்துப்பெற்றது. நாவலந்தண்பொழில் கானலம்பெருந்துறை என லகர ஈறு வேற்றுமைக்கண் அம்முப்பெற்றன. நெய்தலஞ்சிறுபறை இஃது அல்வழிக்கண் அம்முப்பெற்றது. "ஆயிடையிருபேராண்மைசெய்தபூசல்" என்புழி ஆயிடையென்பது உருபாதலின் "நீடவருதல்" என்பதனுன் முடியாது நீண்டு வகர ஒற்று வேறுபட முடிந்தது. தெம்முனை எனத் தெவ்வென்புழி வகரங்கெட்டு மகர ஒற்றுப்பெற்று முடிந்தது. அ என்னுஞ் சுட்டு "அன்றியனைத்தும்" எனத் திரிந்தது. "முதிர்கோங்கின்முகை" எனவுங் "காய்மாண்டதெங்கின்பழம்" எனவுங் குற்றுகர ஈறு இன்பெறுதலுங் கொள்க. "தொண்டுதலையிட்டபத்துக்குறை" என ணகரம் இரட்டாது தகர ஒற்று டகர ஒற்றாய்க் குற்றியலுகரம் ஏறிமுடிந்தது.

இங்ஙனஞ் செய்யுளுட் பிறவுந் திரிவன உளவேனும் இப்புறனடையான் முடிக்க. அருமருந்தானென்பது ரகரவுகரங்கெட்டு அருமந்தானென முடிந்தது. சோழனுடு சோணுடு என அன்கெட்டு முடிந்தது. பாண்டிநாடும் அது. தொண்டைமானுடு தொண்டைநாடென ஈற்றெழுத்துச் சில கெட்டுமுடிந்தது. மலையமானுடு மலாடு என முதலெழுத்தொழிந்தன பலவுங் கெட்டுமுடிந்தது. பொதுவிலென்பது பொதியிலென உகரந்திரிந்து இகரமாய் யகர உடம்படுமெய்பெற்று முடிந்தது. பிறவும் இவ்வாறே திரிந்து மருவி வழங்குவன எல்லாம் இப்புறனடையான் அமைத்துக்கொள்க.

கூ - வது குற்றியலுகரப்புணரியல் முற்றிற்று.

எழுத்ததிகாரம்முற்றிற்று.

நூலின்மரபுமொழிமரபுநுண்பிறப்பு
மேலைப்புணர்ச்சிதொகைமரபு—பாலா
முருபியலின்பின்னுயிர்புள்ளிமயக்கந்
தெரிவரியகுற்றுகரஞ்செப்பு.

எழுத்ததிகாரத்துச்சூத்திரங்களெல்லா
மொழுக்கியவொன்பதோத்துள்ளும்—வழுக்கின்றி
நானூற்றிருநாற்பான்மூன்றென்றுநாவலர்கண்
மேனூற்றுவைத்தார்விரித்து.

சூத்திர அகராதி.

சூத்திரம்.	பக்கம்.
அஆஉஊ	௧௨௨
அஆவென்னும்	௧௨௬
அஇஉஅம்	௩௬
அஃறிணைவிரவுப்பெயர்	௧௦௬
அகமென்கிளவிக்குக்	௧௯௩
அகர ஆகாரம்	௧௯௧
அகர இகரம்	௫௨
அகர உகரம்	௫௨
அகரத்திம்பர்	௫௨
அகரவிறுதிப்	௧௩௭
அக்கென்சாரியை	௧௭௨
அகீடையொடுதோன்றினு	௧௯௫
அணரிநுனிநா	௬௮
அண்ணஞ்சேர்ந்த	௬௯
அண்ணநண்ணிய	௬௭
அதனிலையுயிர்க்கும்	௨௭௪
அத்தவண்வரினும்	௧௪௭
அத்திடைவரூஉங்	௧௧௮
அத்தினகரம்	௮௮
அத்தேவற்றே	௯௨
அத்தொடுசிவணும்	௧௯௫
அந்நான்மொழியுந்	௨௫௦
அப்பெயர்மெய்யொழித்	-௨௧௩
அம்மினிறுதி	௮௯
அம்மூவாறும்	௩௧
அரையளவுகுறுகன்	௨௬
அரையெனவரூஉம்	௧௧௬
அல்லதன்மருங்கிற்	௨௦௧
அல்[illegible]குகிளப்பினியற்கை	௧௯௮
அல்லத்[illegible]மனும்	௧௯௯
அல்லது-வ[illegible]றுதி	௨௪௦
அல்லதுகிளப்பினெல்	௨௪௮
அல்வழியெல்லாமியல்	௨௧௮
அல்வழியெல்லாமுறழ்	௨௨௧
அல்வழியெல்லாமுறழ்	௨௩௩
அல்வழியெல்லாமெல்	௧௯௩
அவற்றுள்-அஆஆயிரண்	௬௫
அவற்றுள்-அஇஉ	௨௦
அவற்றுள்-இகரவிறு	௧௦௬
அவற்றுள்-இன்னினி	௮௫
அவற்றுள்-ஈரொற்றுத்	௨௪௦
அவற்றுள்-கரமுங்கானு	௯௪
அவற்றுள்-ணனஃகான்	௩௩
அவற்றுள்-நிறுத்தசொல்	௭௫
அவற்றுள்-மெய்யீறெல்லாம்	௭௩
அவற்றுள்-மெல்லெழுத்	௧௦௦
அவற்றுள்-ரகாரழகாரங்	௪௮
அவற்றுள்-லளஃகான்	௩௨
அவற்றுவழிமருங்கிற்	௮௪
அவைதாங்-குற்றியலிகரங்	௧௯
அவைதா-மியற்கைய	௧௩௩
அவைதா-மின்னே	௮௪
அவைதா-முன்னப்	௯௭
அவைதா-மெய்பிறிதாதல்	௭௭
அவையூர்பத்தினும்	௨௭௧
அவ்வழி-பன்னீருயிருந்	௬௫
அவ்வாறெழுத்தும்	௬௭
அவ்வியனிலையும்	௨௬
அழனெனிறுதிகெட	௨௧௬
அழனேபுழனே	௧௩௧
அளந்தறிகிளவியும்	௨௫௮
அளபிறந்துயிர்த்தலும்	௩௭
அளவாகுமொழிமுதல்	௮௬
அளவிற்குநிறையிற்கும்	௧௧௯

சூத்திரம்.	பக்கம்.
அளவுநிறையுமாயியல்-சூற்	௨௭௧
அளவுநிறையுமாயியல்	௨௭௨
அளவுநிறையுமெண்ணும்	௨௩௦
அளவுநிறையும்வேற்று	௧௯௬
அன்றுவருகாலை	௧௬௬
அன்னவென்னும்	௧௪௧
அன்னென்சாரியை	௧௩௨
ஆஈஊஏஐ	௨௧
ஆஎஓஎனும்	௫௫
ஆஎஓஅம்	௩௬
ஆகாரவிறுதி	௧௪௮
ஆடூஉ மகடூஉ	௧௭௨
ஆணும்பெண்ணும்	௧௮௭
ஆண்மரக்கிளவி	௧௮௮
ஆதனும்பூதனும்	௨௧௩
ஆயிரக்கிளவி	௨௬௭
ஆயிரம்வரினும்	௨௫௪
ஆயிரம்வரினே	௨௭௨
ஆயிரம்வருவழி	௨௩௧
ஆய்தநிலையலும்	௨௩௪
ஆரும்வெதிருஞ்	௨௧௯
ஆவயின்வல்லெழுத்து	௧௮௬
ஆவுமாவும்	௧௫௦
ஆவோடல்லது	௫௫
ஆறனுருபினகர	௮௨
ஆறனுருபினும்	௧௧௪
ஆறன்மருங்கிற்	௨௬௮
ஆறென்கிளவி	௨௬௪
ஆனிணகரமும்	௮௭
ஆனொற்றகரமொடு	௧௫௪
ஆன்முன்வருஉம்	௧௫௫
இஈஎஏஐயென	௬௫
இகரயகரம்	௫௩
இகரவிறுதிப்	௧௫௯
இக்கினிகரம்	௮௮
இடம்வரைகிளவி	௧௬௪

சூத்திரம்.	பக்கம்.
இடைநிலைரகரம்	௨௫௬
இடைப்படிற்குறுகும்	௪௦
இடையெழுத்தென்ப	௩௦
இடையொற்றும்	௨௪௩
இதழியைந்துபிறக்கும்	௬௧
இயற்பெயர்முன்னர்	௨௧௨
இரண்டுமுதலொன்பான்	௨௭௫
இராவென்கிளவிக்கு	௧௫௨
இருதிசைபுணரின்	௨௫௨
இருளென்கிளவி	௨௩௫
இலமென்கிளவிக்கு	௧௯௪
இல்லமரப்பெயர்	௧௯௨
இல்லென்கிளவி	௨௨௩
இல்லொடுகிளப்பின்	௧௮௩
இரு அற்றோற்றம்	௨௧௦
இனியணியென்னுங்	௧௫௬
இன்றியென்னும	௧௫௭
இன்னிடைவருஉம்	௧௨௭
இன்னெனவருஉம்	௯௦
ஈகாரவிறுதி	௧௬௩
ஈமுங்கம்மும்	௨௦௩
ஈரெழுத்துமொழியுமுயிர்	௨௪௨
ஈரெழுத்துமொழியும்வல்	௨௪௫
ஈரெழுத்தொருமொழி	௨௩௯
ஈறியன்மருங்கினிவை	௧௧௯
ஈறியன்மருங்கினும்	௪௧
உஊஓஔவென்னு	௫௫
உஊஓஔவென	௬௬
உஊகாரநவவொடு	௫௯
உகரமொடுபுணரும்	௧௧௫
உகரவிறுதி	௩௬௫
உச்சகாரமிரு	௫௯
உச்சகாரமொடு	௬௨
உட்பெறுபுள்ளி	௨௭
உணரக்கூறிய	௨௩௭
உண்டென்கிளவி	௨௫௧

சூத்திரம்.	பக்கம்.	சூத்திரம்.	பக்கம்.
உதிமரக்கிளவி	௧௬௦	எல்லாருமென்னும்	௧௩௦
உந்திமுதலா	௬௩	எல்லாவெழுத்தும்	௭௦
உப்பகாரமொடு	௬௨	எழுத்தெனப்படுப	௧௩
உப்பகாரமொன்றென	௬௦	எழுத்தோரன்ன	௯௭
உம்மையெஞ்சிய	௧௪௯		
உயர்திணைப்பெயரே	௮௩	ஏஓஎனுமுயிர்	௫௮
உயர்திணையாயினம்	௧௨௯	ஏகாரவிறுதி	௧௭௪
உயர்திணையாயினுருபு	௨௦௧	ஏயெனிறுதிக்கு	௧௭௫
உயிரிறுசொன்முன்	௭௪	ஏழனுருபிற்குத	௧௩௫
உயிரீறாகியமுன்னிலைக்	௧௦௩	ஏழென்கிளவி	௨௩௦
உயிரீறாகியவுயர்திணைப்	௧௦௪	ஏனவைபுணரின்	௨௨௭
உயிரும்புள்ளியுமிறுதியாகி	௨௭௭	ஏனவைவரினே	௧௬௫
உயிரும்புள்ளியுமிறுதியாகி	௧௧௫	ஏனைப்புளிப்பெயர்	௧௬௧
உயிர்ஔவெஞ்சிய	௫௭	ஏனைமுன்வரினே	௨௪௮
உயிர்முன்வரினுமாயியல்	௧௪௦	ஏனையெகினே	௨௦௭
உயிர்முன்வரினுமாயியல்	௨௩௨	ஏனைவகரந்	௨௨௮
உயிர்மெய்யல்லன	௫௩	ஏனைவகரமின்னொடு	௧௨௭
உயிர்மெய்யீறும்	௭௪		
உரிவருகாலை	௧௫௯	ஐஒடுகுஇன்	௮௦
உருபியனிலையும்	௧௮௩	ஐஔவென்னும்	௪௩
உருவினுமிசையினும்	௪௧	ஐகாரஔகாரங்	௯௪
உரைப்பொருட்கிளவி	௧௪௪	ஐகாரவிறுதிப்	௧௭௬
		ஐந்தனொற்றேமகாரம்	௨௫௭
ஊகாரவிறுதி	௧௬௯	ஐந்தனொற்றேமுந்தை	௨௬௨
ஊவெனொருபெயர்	௧௭௨	ஐந்தனொற்றேமெல்	௨௬௦
		ஐந்தனொற்றேயகாரம்	௨௬௮
எ-எனவருமுயிர்	௫௮	ஐந்துமூன்றுநம	௨௬௧
எகரவொகரத்	௨௮	ஐயம்பல்லென	௨௩௨
எகரவொகரம்	௧௭௩	ஐயின்முன்னரும்	௮௮
எகின்மரமாயின்	௨௦௭		
எஞ்சியவெல்லாம்	௬௦	ஒடுமரக்கிளவி	௧௬௮
எட்டனொற்றே	௨௫௭	ஒவவுமற்றே	௫௮
எண்ணினிறுதி	௧௩௪	ஒழிந்ததனிலையும்	௧௮௨
எண்ணுப்பெயர்க்கிளவி	௨௪௬	ஒற்றிடையினமிகா	௨௪௨
எப்பெயர்முன்னரும்	௮௯	ஒற்றுநிலைதிரியாது	௨௪௬
எருவுஞ்செருவும்	௧௬௭	ஒற்றுமிகுதகரமொடு	௨௧௦
எல்லாமென்னும்	௧௨௯	ஒன்பானிறுதி-மர	௨௬௯
எல்லாமொழிக்கும்	௯௬	ஒன்பானிறுதி-மொழி	௨௬௪

சூத்திரம்.	பக்கம்.
ஒன்பாலொருகரமிசைத்	௨௫௮
ஒன்பான்முதனிலை	௨௬௬
ஒன்றுமுதலாகப்	௧௩௪
ஒன்றுமுதலாகவெட்டன்	௨௫௩
ஒன்றுமுதலாகிய	௨௭௨
ஒன்றுமுதலொன்பான்	௨௫௫
ஒகாரவிறுதிக்கொன்	௧௨௫
ஓகாரவிறுதியோகார	௧௮௧
ஒளபாகுபிட னும்	௫௨
ஓரெழுத்தொருமொழி	௪௪
ஒளகாரவிறுதிப்	௧௮௩
ஒளகாரவிறுவாய்ப்	௨௪
ஒளவெனவருஉம்	௧௦௪
ககாரஙகாரம்	௬௬
கசதபமுதலிய	௯௭
கசதபமுதன்மொழி	௨௬௦
கண்ணிமைநொடியென	௨௩
கதநபமவெனும்	௫௪
கவவோடியையின்	௫௭
காரமுங்கரமுங்	௯௩
கிளந்தவல்ல	௨௮௦
கிளைப்பெயரெல்லாங்கிளை	௨௦௮
கிளைப்பெயரெல்லாங்கொ	௧௮௯
கீழென்கிளவி	௨௩௩
குமிழென்கிளவி	௨௨௯
குயினென்கிளவி	௨௦௬
குறியதனிறுதிச்	௧௫௫
குறியதன்முன்னரும்	௧௫௧
குறியதன்முன்னர்	௪௦
குறுமையுநெடுமையு	௪௮
குறையென்கிளவி	௧௧௭

சூத்திரம்.	டக்கம்.
குற்றியலிகர	௩௮
குற்றியலுகரக்கின்னே	௧௧௭
குற்றியலுகரத்திறுதி	௧௩௨
குற்றியலுகரமுறைப்	௫௬
குற்றியலுகரமும்	௭௩
குற்றெழுத்திம்பரும்	௩௭௧
குற்றெழுத்தைந்தும	௪௪
குன்றிசைமொழிவயின்	௪௨
கொடிமுன்வரினே	௧௭௯
ஙஞணநமனவெனும்	௩௩
சகரக்கிளவியும்	௫௪
சகாரஞகாரம்	௬௬
சாரென்கிளவி	௨௨௦
சார்ந்துவரினல்லது	௭௦
சாவவென்னுஞ்	௧௪௧
சிறப்பொடுவருவழி	௨௧௩
சுட்டினியற்கை	௧௫௭
சுட்டின்முன்னரும்	௧௬௫
கட்டின்முன்னர்	௧௩௯
சுட்டுச்சினைநீடிய	௨௫௬
சுட்டுமுதலாகியவகர	௨௨௭
சுட்டுமுதலாகியவிகர	௧௧௨
சுட்டுமுதலாகியவையென்	௧௨௪
சுட்டுமுதலிறுதியியல்பு	௧௬௬
சுட்டுமுதலிறுதியுருபியல்	௧௬௯
சுட்டுமுதலிறுதியுருபியல்	௧௭௭
சுட்டுமுதலுகரம்	௬௨௩
சுட்டுமுதல்வகரம்	௩௬
சுட்டுமுதல்வயினும்	௧௦௬
செய்யாவென்னும்	௧௪௯
செய்யுண்மருங்கின்	௧௮௧

சூத்திரம்.	பக்கம்.
செய்யுளிறுதிப்	ருO
சேவென்மரப்பெயர்	கஎசா
ஞகாரையொற்றிய	கஅச
ஞணநமனயரல	சாஉ
ஞநமயவவெனுமுத	கூஅ
ஞநமவவியையினும்	கஅரு
ஞநமவவென்னும்	ஙச
ஞநவென்புள்ளிக்கு	கஉசா
டகாரணகாரம்	சாஎ
டறலளவென்னும்	ஙஉ
ணகாரவிறுதி	கஅஎ
ணளவென்புள்ளிமுன்ட	கOங
ணனவென்புள்ளிமுன்யா	கOக
தகரம்வருவழி	உஉக
தத்தந்திரிபே	சாசா
தமிழென்கிளவியும்	உஉகூ
தம்மியல்கிளப்பினு	சஎ
தாநானென்னும்	கஉஅ
தாயென்கிளவி	உகஎ
தாமென்கிளவி	உஉக
தானும்பேனுங்	உகச
தான்யானெனும்பெயர்	உகரு
தான்யானென்னும்	கஙக
திங்கண்முன்வரின்	கசாஉ
திங்களுநாளும்	கஎகூ
திரிபுவேறுகிளப்பின்	உருஉ
தேறவெகரமுஞ்	கஎங
தேனென்கிளவி	உOகூ
தொடரலிறுதி	கசரு

சூத்திரம்.	பக்கம்.
தொழிற்பெயரெல்லாங்	கஅஅ
தொழிற்பெயரெல்லாங்	உOஉ
தொழிற்பெயரெல்லாங்	உஉரு
தொழிற்பெயரெல்லாங்	உஙரு
நகரவிறுதியும்	கஅரு
நமவவென்னும்	உசாக
நாட்பெயர்க்கிளவி	உOச
நாண்முற்றோன்றுங்	கசாஉ
நாயும்பலகையும்	உஉச
நாவிளிம்புவீங்கி	சாஅ
நான்கனொற்றேலகாரம்	உசாஉ
நான்கனொற்றேலகாரம்	உசாஅ
நான்கனொற்றேறகாரம்	உருஎ
நான்குமைந்தும்	உசாசா
நிலாவென்கிளவி	கருஉ
நிறுத்தசொல்லுங்	எஎ
நிறையுமளவும்	உருரு
நீடவருதல்	கசO
நீட்டம்வேண்டின்	உஉ
நீயெனொருபெயருரு	கசாச
நீயெனொருபெயர்	கஉரு
நீயென்பெயரும்	கசாங
நும்மெனிறுதியியற்கை	கஉஅ
நும்மெனிறுதியும்	ககரு
நும்மெனொருபெயர்	உOக
நுனிநாவணரி	சாஅ
நூறாயிரமுன்	உசாகூ
நூறுமுன்வரினுங்	உசாரு
நூறூர்ந்துவரூஉம்	உஙக
நூறென்கிளவி	உஎO
நெடியதழியல்பா	உஙச

சூத்திரம்.	பக்கம்.
நெடியத-வியல்புமார்	௨௨௨
நெடியதன்முன்னர்	௧௧௩
நெட்டெழுத்திம்பருந்	௩.௯
நெட்டெழுத்திம்பரொற்	௧௩௩
நெட்டெழுத்தேழே	௪௩
நெல்லுஞ்செல்லுங்	௨௨௨
படர்க்கைப்பெயரும்	௧௯௬
பதக்குமுன்வரினே	௧௫௮
பத்தனொற்றுக்கெட	௨௫௪
பத்தென்கிளவி	௨௩௧
பலரறிசொன்முன்	௧௨௦
பலவற்றிறுதிநீடு	௧௪௫
பலவற்றிறுதியுருபியல்	௧௪௮
பல்லவைநுதலிய	௧௨௨
பல்லிதழியைய	௬௯
பனியெனவருஉங்	௧௫௯
பனையின்முன்னர்	௧௭௮
பனையுமரையும்	௧௭௮
பனையெனளவுங்	௧௧௮
பன்னீருயிரும்	௫௩
பாழென்கிளவி	௨௩௦
பீரென்கிளவி	௨௨௦
புணரியனிலையிடை	௩௯
புளிமரக்கிளவிக்கு	௧௬௦
புள்ளியில்லா	௨௮
புள்ளியிறுதியும்-சொல்	௧௩௬
புள்ளியிறுதியும்-வல்	௧௦௮
புள்ளியீற்றுமுன்	௯௫
புள்ளும்வள்ளுந்	௨௩௬
பூல்வேலென்றா	௨௨௫
பூவெனொருபெயர்	௧௭௧
பெண்டென்கிளவிக்கு	௨௪௭
பெயருந்தொழிலும்	௯௧
பெற்றமாயின்	௧௭௬
பொன்னென்கி[illegible]	௨௧௬
மஃகான்புள்ளிமுனாஅ	௯௨௭
மஃகான்புள்ளிமுன் வவ	௩௪
மகப்பெயர்க்கிளவிக்கு	௧௪௭
மகரத்தொடர்மொழி	௬௩
மகரவிறுதிவேற்	௧௯௦
மகன்வினைகிளப்பின்	௨௧௮
மக்களென்னும்	௨௩௬
மரப்பெயர்க்-கம்	௨௪௪
மரப்பெயர்க்கிளவிமெல்	௧௪௭
மருவின்றொகுதி	௭௮
மழையென்கிளவி	௧௮௦
மன்னுஞ்சின்னும்	௨௦௫
மாமரக்கிளவியும்	௧௫௩
மாறுகோளெ-மெண்	௧௭௪
மாறுகொளெ-மைய	௧௮௧
மின்னும்பின் [illegible]	௨௧௧
மீனென்கிளவி	௨௦௮
முதலாவேனதம்	௫௬
முதலீரெண்ணினொற்று	௨௫௯
முதலீரெண்ணின்முன்	௨௬௩
முதனிலைநீடினும்	௨௬௭
முதனிலையெண்ணின்முன்	௨௭௩
முரணென்றொழிற்	௧௯௦
முற்றியலுகரமொடு	[illegible]௭
முன்னுயிர்வருமிடத்	௨[illegible]௮
முன்னென்கிளவி	[illegible]௧௬
மூவளபிசைத்தல்	௨௧
மூன்றனொற்றேநகாரம்	௨௬௫

சூத்திரம்.	பக்கம்.
மூன்றனொற்றேபகாரம்	௨௫௭
மூன்றனொற்றேவகரம்	௨௬௨
மூன்றனொற்றேவகாரம்	௨௬௭
மூன்றனொற்றேவந்தது	௨௫௯
மூன்றன்முதனிலை	௨௬௩
மூன்றுநிலையிட்ட	௭௨
மூன்றுநான்கும்	௨௬௩
மூன்றுமாறும்	௨௫௭
மெய்ந்நிலைசுட்டின்	௩௫
மெய்யினளவே	௨௬
மெய்யினியக்கம்	௪௬
மெய்யினியற்கை	௨௭
மெய்யின்வழியது	௨௯
மெய்யுயிர்நீங்கிற்	௯௫
மெய்யோடியையினும்	௨௫
மெல்லெழுத்தாறும	௬௯
மெல்லெழுத்தி-ணகார	௨௩௩
மெல்லெழுத்தி-னகார	௨௨௧
மெல்லெழுத்தி-னவ	௨௨௭
மெல்லெழுத்தி-னிறு	௨௧௦
மெல்லெழுத்துமிகினும்	௨௦௦
மெல்லெ[illegible]னும்	௨௦௯
மெல்லெழுத்துமிகுவழி	௧௦௯
மெல்லெழுத்துற-செல்	௧௯௨
மெல்லெழுத்துறழும்	௨௧௮
மெல்லெழுத்தென்ப	௩௦
மெல்லொற்றுவலியா	௨௪௪
மென்மையுமிடைமையும்	௯௦
மொழிப்படுத்திசைப்பினு	௫௦
மொழிமுதலாகும்	௧௦௧
யகரமவருவழி	௨௪௧
யகரவிறுதி	௨௧௭
யரழவென்னும்புள்ளி	௩௪
யரழவென்னுமூன்றும்	௪௭
யவமுன்வரினே	௧௪௦
யாதெனிறுதியுஞ்-மன்	௧௩௫
யாதெனிறுதியுஞ்-முரு	௨௪௭
யாமரக்கிளவியும்	௧௫௨
யாவினமொழியே	௨௫௦
யாவென்வினவின்	௧௨௪
யாவென்வினவும்	௧௨௩
ரகாரவிறுதி	௨௧௯
லகாரவிறுதி	௨௨௦
லனவெனவருஉம்-மூன்	௧௦௨
லனவெனவருஉம்-யிறுதி	௨௭௬
வஃகான்மெய்கெட	௮௬
வகரக்கிளவி	௬௨
வகாரமிசையும்	௨௦௪
வடவேங்கடந்தென்	௧
வண்டும் பெண்டும்	௨௪௭
வரன்முறைமூன்றுங்	௭௮
வல்லெழுத்தியற்கை	௧௪௬
வல்லெழுத்துமிகினும்	௧௫௩
வல்லெழுத்து-யொல்	௧௬௧
வல்லெழுத்துமுதலிய	௮௧
வல்லெழுத்தென்ப	௩௦
வல்லென்கிளவி	௨௨௪
வல்லொற்று-வருவழி	௨௪௧
வல்லொற்று-மிகு	௨௪௯
வளியெனவருஉம்	௧௬௦
வன்றொடர்மொழியும	௨௪௩
வாழியவென்னுஞ்	௧௪௪
விசைமரக்கிளவியும்	௧௭௭
விண்ணெனவருஉங்	௧௮௮
வினையெஞ்சுகிளவிக்கும்	௧௭௦
வினையெஞ்சுகிளவியும்	௧௩௮
வெயிலென்கிளவி	௨௨௬

சூத்திரம்.	பக்கம்.
வெரிநெனிறுதி	௧௮௬
வேற்றுமைகுறித்த	௭௯
வேற்றுமைக்கண்ணும்வல்	௧௦௨
வேற்றுமைக்கண்ணுமத	௧௪௬
வேற்றுமைக்கண்ணுமத	௧௫௧
வேற்றுமைக்கண்ணுமத	௧௬௪
வேற்றுமைக்கண்ணுமத	௧௬௭
வேற்றுமைக்கண்ணுமத	௧௭௦
வேற்றுமைக்கண்ணுமத	௧௭௫
வேற்றுமை-யொகர	௧௮௨
வேற்றுமைக்குக்கெட	௧௮௫
வேற்றுமையல்வழிஇஐ	௧௧௧
வேற்றுமையல்வழிக்குறு	௨௧௫
வேற்றுமையல்வழியாய்	௨௨௭
வேற்றுமையல்வழியெண்	௧௯௦
வேற்றுமையாயின்-யிரண்	௨௦௩
வேற்றுமையாயின்-யெதி	௨௧௨
வேற்றுமைவழிய	௮௨
ழகாரவிறுதி	௨௮
ழகாரவுகர	௧௬
ளகாரவிறுதி	௨௩௩
னஃகான்றஃகான்	௮௭
னகாரவிறுதி	௨௦௫
னகாரவிறுவாய்ப்	௨௫
னகாரைமுன்னர்	௫௦